414
1·53
72
N53—1
208419

இதோ......

ஒவோமால்ட்

(REGD. TRADE MARK No. 154050)

- ★ போஷணை மிகுந்த உணவுப் பானம்
- ★ எளிதில் ஜீரணமாகக் கூடியது
- ★ விடாமின் 'B' அடங்கியுள்ளது
- ★ உத்வேகமளிக்கும் பானமல்ல
- ★ முட்டை கலப்பற்றது
- ★ டயாஸ்டேஸ் அடங்கியுள்ளது

எல்லா டி. யு. ஸி. எஸ். பிராஞ்சுகளிலும் இதர பெரிய ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

3	பவுண்டு விலை	ரூ.	6 4 0
1	,,	ரூ.	2 4 0
1/2	,,	ரூ.	1 4 0

போன்: 55192 **ஒவோமால்ட் லாபரேடரி**

தலைமை ஆபீஸ்: 26, கிடங்கு தெரு - மதராஸ்-1

எமது ஜில்லா ஏஜண்டுகள் :

1 பெங்களூர் :- N. நரசிம்மன், 90/A, சேஷாத்திரிபுரம், 2-வது கிராஸ், பெங்களூர்

2 கோயமுத்தூர் :- கோபால் கேம்பர் ஒர்க்ஸ், 181, ராஜ வீதி, கோயமுத்தூர்.

3 திருநெல்வேலி :- சீதாராம் சைகிள் மார்ட். 36. தெற்கு ரதவீதி, திருநெல்வேலி

4 சேலம் :- கிருபாகர் பேப்பர் மார்ட், முதல் அக்ரஹாரம், சேலம்.

5 காகிநாடா :- காடே சும்பசிவ ராவ், ராம ராவ் பெட், காகிநாடா.

6 மதுரை :- K. V சுந்தர ராஜன், B. A. 16, மேற்கு ஆவணி மூல வீதி, மதுரை.

7 குண்டூர் & மேற்கு கோதாவரி :- M/s. ரிலையன்ஸ் டிரேடிங் & கோ, தெனலி

8. விஜயவாடா :- M/s ராதாஷியாம் & கோ, 17/34, காந்தி நகரம், விஜயவாடா

இதர ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

விரைவில்
வருகிறது!
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ் தயாரித்த
செல்லப்பிள்ளை
AVM
புரொடக்ஷன்ஸ்

தந்தி : "வசந்தா" கோயமுத்தூர். போன் : 25.

நாட்டின் துணிப்பஞ்சத்தைப் போக்க நாங்கள் காத்திருக்கின்றோம்.

பொதுமக்களுடைய அன்றாடத் தேவைகளுக்கும், தொழில்முறைத் தேவைகளுக்கும் ஏற்ற முறையில் மிகச் சிறந்த ரகங்களையே வசந்தா மில்ஸ் உற்பத்தி செய்கிறது.



நூல்கள் :—

மிகவும் மிருதுவாயும் உறுதியாயும் உள்ளவை.
20-ம் நெம்பர் முதல்
80-ம் நெம்பர் வரை
ஒத்தை முறுக்கு காரம்,
சலவை நூல்
தயாரிக்கிறோம்.

வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், காடா, ஷர்ட்டிங், மல், மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கிறோம். எங்களுடைய V. 116 நெ. லாங்கிளாத் மார்க்கெட்டில் பெயர் பெற்றது. 600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

வசந்தா மில்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ், சிங்காநல்லூர்.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ் :-
R. K. ஷண்முகம் செட்டி & BROS.

R. K. கந்தசாமி B. A., B. Sc. Tech. A. M. C. T.
ஜெனரல் மானேஜர்.

TEL: "EMMES"
கண்ட உடன் எடுக்கச்செய்யும் நிறம்
எடுத்த உடன் போடச்செய்யும் மணம்
போட்ட உடன்மகிழச்செய்யும் குணம்
மகிழ்ந்த உடன்புகழச்செய்யும் திறம்
இதுவே
M.S
பட்டணம் பொடி
தயாரிப்பவர்:-
மோகன் கம்பெனி
தபால் பெட்டி நெ. 116 . . . . சென்னை-௨
சேல்ஸ் டிப்போ:
கடலூர் N.T... அசோகன் ஏஜன்ஸீஸ் தெப்பக்குளம் திருச்சி....

தந்தி : "JAYAMILL" போன் : 462

திருப்தியே அடையாதவர்களுக்கும் திருப்தி அளிக்கும் ரகங்கள் !



★

உயர்ந்த பருத்தியைக் கொண்டு, 20-ம் நிர். முதல் 40-ம் நிர். வரை ஒத்தை முறுக்கு நூல் மிகச்சிறந்த முறையில் தயார் செய்கிறோம்

★

நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு மிகவும் திறமை வாய்ந்தவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

★

ஸ்ரீ கண்ணபிரான் மில்ஸ் லிமிடெட்

சவுரிபாளையம் போஸ்ட்

கோயமுத்தூர்.

எங்கள் டிப்போக்கள் :

சேலம், ஈரோடு, வேலூர். N. A.

பொங்கல் வெளியீடு



அவர் இந்தியா
பிலிம்ஸ்

என் வீடு

டைரக்ஷன்
நாகய்யா

அவர் இந்தியா பிலிம்ஸ், சென்னை-17.

தந்தி: "JAYAMILL" போன்: 462

திருப்தியே அடையாதவர்களுக்கும் திருப்தி அளிக்கும் ரகங்கள்!

★

உயர்ந்த பருத்தியைக் கொண்டு, 20-ம் நிர். முதல் 40-ம் நிர். வரை ஒத்தை முறுக்கு நூல் மிகச்சிறந்த முறையில் தயார் செய்கிறோம்

★



நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு மிகவும் திறமை வாய்ந்தவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

★

ஸ்ரீ கண்ணபிரான் மில்ஸ் லிமிடெட்

சவுரிபாளையம் போஸ்ட்

கோயமுத்தூர்.

எங்கள் டிப்போக்கள்:

சேலம், ஈரோடு, வேலூர். N. A.

நாகையா
ராமச்சந்திரன்
துரைராஜ்
சீதாராமன்
ராஜகுமாரி
மங்களம்
நடிக்கும்

உமா & ஓம் பிலிம்சாரின்

பணக்காரி

தமிழ்

திருச்சி
தஞ்சை
விநியோகம்

வீயார் பிலிம்ஸ்
புதுக்கோட்டை

ஆல் இந்தியா ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:- **பம்பாய்**

○

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 2,50,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 1,25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 31,25,000
மொத்த ஆஸ்திகள்	ரூ. 1,04,35,000

○

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்,

முதலிய சகல இன்ஷ்யூரன்ஸ்களும் வழங்குகிறோம்.

விபரங்களுக்கு:

'ஆல் இந்தியா ஜெனரல் பில்டிங்'
கோயமுத்தூர்

P. V .K. ஷண்முகம், B.A.,
தென்னிந்திய டிவிஷனல் மானேஜர்

சென்னை நகர ஆபீஸ்:

29, லிங்கிசெட்டி தெரு, சென்னை.

இதர கிளைகள்:

பெங்களூர், பாலாய் (U. S. T. C.) மங்களூர், மதுரை,
ராஜமகேந்திரம், தஞ்சாவூர், கடலூர்,
தூத்துக்குடி முதலியன.

தந்தி: FOUNDRY　　　　போன்: 535

உணவு உற்பத்திப் பெருக்கில்
முன்னணியில் நிற்பது

"சுப்பையா" பம்புகள்



S. F. மோனோ பிளாக் யூனிட் செட்
H. P. 3·5; 7·5 & 10
பம்பு சைஸ் 2" முதல் 4" வரை ரெடிஸ்டாக்.

★ நீண்ட கால உழைப்பிற்கு உத்திரவாதமுள்ளது.
★ மிகச்சிக்கன செலவில் ஓடுகின்றன.

சுப்பையா பவுண்டரி

பாப்பநாயக்கன் பாளையம்,
கோயமுத்தூர்.

கிளைகள்:—

1. 20, லிங்க செட்டி தெரு, சென்னை—1.
2. ஜலால் பில்டிங்ஸ், அருணாசல ஆசாரி தெரு, சேலம் டவுன்.
3. 135, பாண்டி ரோடு, விழுப்புரம்.
4. 8571, கிங்ஸ்வே, செகந்தராபாத் (D.N.).

ஏஜண்ட்:— R. நாராயன் & கோ.,
நெ. 5, டவுன் ஹால் ரோடு, மதுரை.

தந்தி: "SPINNING"

போன்: 70.

இன்று நேற்றல்ல, 1888-ம் ஆண்டு முதற் கொண்டு, நூல் நூற்பதிலும், துணி நெய்வதிலும், கால வேகத்திற்கு ஏற்றவாறு ஏற்படும் நவீன மாறுதல்களுக்கு ஏற்றபடி வளர்ச்சி பெற்று, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து புகழ்பெற்று விளங்குகிறது.

★



நூல்கள் :—

மிகவும் சன்னமானதும், மிருதுவாகவும், உறுதியாகவும் உள்ள ரகங்கள். உயர்ந்த ரகத்துணிகளும் உடைகளும் தயாரிக்க மிகவும் ஏற்றவை. 20, 30, 60, 80 & 100 நெம்பர் வரை.

★

லாங்கிளாத், டவல்கள், வேஷ்டிகள் மற்றும் ஷோசியரி ரகங்கள் தயார் செய்கிறோம்.

★

கோயமுத்தூர் ஸ்பின்னிங் &
வீவிங் கோ., லிமிடெட்,
கோயமுத்தூர்.

ஏஜண்ட்ஸ் & செக்ரட்ரீஸ் :—

R. G. S. நாயுடு & கோ.

பரந்த உலகத்தின் கண்வாழும் மக்கள்யாவரும் பலவிதமான
பழக்கத்தைக் கைக் கொண்டவர்களே. புகையிலைப் பொருட்பழக்
-கங்களுக்கு இடம் ஏற்பட்ட அளவு இதர பழக்கங்களுக்கேற்பட்டதில்லை. நாக்கிலிட்டுச்
சுவைத்து ரசிக்கும் பொருள்கள் பலவற்றிலும், மூக்கிலிட, உணர்ச்சிதரும் மூக்குத்தூள்
எனும் பட்டணம் பொடியே முதன்மையுடையது. பற்பல தேசத்தினரும் பரிவுடன் கொள்ளும்
சிட்டிகைப்பொடி கொடுக்கும் முகமலர்ச்சியை, சித்திரத்தில் காணுங்கள்.
N.V.S. பட்டணம்பொடியானால் எல்லாவிதத்திலும் நல்லது.
MADRAS SNUFF
SHUNMUGAM &
BOX 555 MAD
N.V. ஷண்முகம் கம்பெனியார்
தபால்பெட்டி 555 வண்ணாரப்பேட்டை மதராஸ்

கவியரசர் பாரதிதாசன் நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள்
இரண்டாம் தொகுதி மூவண்ண அட்டையுடன்
புதிய பதிப்பு ரூ. 2-12-0

இசையமுது (இரண்டாம் பகுதி) ரூ. 1-0-0
இரணியன் (நாடகம்) ரூ. 1-0-0

அடுத்து வருவன

காதலா? கடமையா? (காப்பியம்)
தமிழச்சியின் கத்தி ,,
சேரதாண்டவம் (நாடகம்)
படித்த பெண்கள் ,,

பாரதிதாசன் பதிப்பகம்
புதுச்சேரி

சர்ஜீவன் சிலாஜித் லேகியம்

எல்லாக் காலங்களிலும் பலத்தை அளிக்கிறது.

இது ஹிமாலய மலைகளிலிருந்து எடுக்கப்பட்ட சிறந்த லேகியம் இதை உபயோகிப்பதால் தேக புஷ்டியும், தாது விருத்தியும் ஏற்படுவதுடன், வயிற்று வலி, பசியின்மை, க்ஷயம், இருமல், மலச்சிக்கல், வெகு மூத்திரம், வாய்வு, மூலம் முதலிய சகல ரோகங்களும் நிவர்த்தியாகும். மாணவர்கள் ஞாபகசக்தி பெற்று சுறுசுறுப்படைவார்கள். வயோதிகர்கள் பலம் பெறுவார்கள். ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல ரோகங்களும் தீரும். குழந்தைகள் ஆரோக்கியமடைவார்கள்.

விலை:- 44 நாட்கள் டப்பி ரூ. 5-4-0 | தபால் செலவு
22 ,, ,, ரூ. 3-4-0 | இனாம்

நீலகிரி டிப்போ, அரிசிப்பேட்டை சவுக், பெங்களூர் சிட்டி.
NILGIRI DEPOT, AKKIPET SQ., BANGALORE CITY.


பரந்த உலகத்தின் கண்வாழும் மக்கள் யாவரும் பலவிதமான
பழக்கத்தைக் கைக் கொண்டவர்களே. புகையிலைப் பொருட் பழக்
-கங்களுக்கு இடம் ஏற்பட்ட அளவு இதர பழக்கங்களுக்கேற்பட்டதில்லை. நாக்கிற்குச்
சுவைத்து ரசிக்கும் பொருள்கள் பலவற்றிலும் மூக்கிலிட, உணர்ச்சிதரும் மூக்குத்தூள்
எனும் பட்டணம் பொடியே முதன்மையுடையது, பற்பல தேசத்தினரும் பரிவுடன் கொள்ளும்
சிட்டிகைப்பொடி கொடுக்கும் முகமலர்ச்சியை, சித்திரத்தில்
காணுங்கள்.
N.V.S.பட்டணம்பொடியானது எல்லாவிதத்திலும் நல்லது.
ADRAS SNUFF
SHUNMUGAM &
BOX 555 MAD
N.V.ஷண்முகம் கம்பெனியார்
தபால்பெட்டி 555 வண்ணாரப்பேட்டை மதராஸ்

M. C. A.

உங்களுக்குத் தேவையான கலர்
பிளாக்குகளுக்கும், மூந்நிற
அச்சு வேலைகளுக்கும்

போன்:— 3202

எம். சி. அப்பாசாமி செட்டி அண்டு கோ.,

லைன், ஆப்-டோன் & டிரை கலர் பிளாக்குகள் செய்வோர்

14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி, மதராஸ் — 1.

வாடிக்கைக்காரர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
இப் பொங்கல் நாளில்
எங்கள் வாழ்த்துக்கள்
உரியதாகுக

பொன்னி லிமிடெட்
தண்டையார்ப்பேட்டை : சென்னை - 21.

தந்தி: "Strength"　　　　போன்: 465-A

ஸ்டர்லிங் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: புது டில்லி

கோயமுத்தூர் கிளை:
3/54, திருச்சி ரோடு, கோயமுத்தூர்

தமிழ் மக்களின் புனிதத்திருநாளாகிய இப் பொங்கல் நன்னாளில், கம்பெனியின் எல்லா பாலிசிதாரர்கள், டாக்டர்கள், ஏஜெண்டுகள், இன்ஸ்பெக்டர்கள், எல்லா ஆதரவாளர்கள், மற்றும் கம்பெனியின் சார்பாகப் பணியாற்றுவோர் யாவரும், எல்லா நலனும் பெற்று மகிழ எங்கள் உளமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் — கொள்ளுகிறோம் —

கோயமுத்தூர்
14–1–1953

C. சுப்பிரமணியம், B. A.,
பிராஞ்சு மானேஜர்.

எமது இலக்கிய வெளியீடுகள்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

மலரும் மாலையும்	5–0–0
உமார் கய்யாம் பாடல்கள்	1–4–0
ஆசிய ஜோதி	1–8–0
மருமக்கள்வழி மான்யம்	2–0–0

டாக்டர் மு. வரதராசன்

மு. வ. மணிமொழிகள்	0–8–0
சொல்லின் கதை	0-12-0
காதல் எங்கே?	1–8–0

எஸ். வையாபுரிப் பிள்ளை,

தமிழ்ச்சுடர் மணிகள்	5–8–0
இலக்கிய தீபம்	3–0–0

கு. இராஜவேலு

மகிழம்பூ	3–0–0

ரகுநாதன்

க்ஷணப்பித்தம்	1–8–0

சோம. லெ. இலக்குமண செட்டியார்

என் பிரயாண நினைவுகள்	0-14-0
ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்	1–0–0

கி. ஆ. பெ. விஸ்வநாதம்

ஐந்து செல்வங்கள்	0–8–0

மறைமலையடிகள்

தமிழின் தனிச்சிறப்பு	0–4–0

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை–1.

மலரில் உள்ள பெரும்பான்மையான பிளாக்குகள்
— எங்களால் தயாரிக்கப்பட்டவை —

பிளாக்

லைன் & ஆப்டோன்

வின்சன்

பிராசஸ்

187, மௌண்ட் ரோட்.... மதராஸ்-2.



திராவிடத்தின் தலைசிறந்த ஓவியரான "பாலு பிரதர்ஸ்" இந்தியாவின் முதலமைச்சர் நேருவின் புன்னகை தவழும் படத்தை, மிகவும் திறம்பட அழகுறத் தீட்டியுள்ளார்.

விவரங்கட்கு:— ஆர்ட்டிஸ்ட், பாலு பிரதர்ஸ்
2, தாயார் சாயபு தெரு, சென்னை—2.

போன்: 85515.

பொன்னி

பொங்கல் மலர்

1953

பொருளடக்கம்

முகப்புப் படம்	... சாமி	19
சித்திர விளக்கம்	...	21
வணக்கம்	...	
உயிர்ப்புதையல்	... பாரதிதாசன்	23
பொங்கல் வருக!	... தமிழ்ஒளி	26
வாழ்த்து	... கவிமணி	27
தமிழக அரசியல்	... கா. அப்பாத்துரை	28
'கல்கி'	... எஸ். ஆறுமுகம்	31
பொட்டை	... தி. ஜானகிராமன்	38
ஓடும் ரயிலில்...!	... ரெஸாக்	47
கைராசி	... எஸ். ஆறுமுகம்	51
மனத்தெளிவு	... வீர. பழனியப்பன்	61
பொங்கல் விழா	... நா. கி. நாகராசன்	77
சாவதென்ன லேசாமோ?	... சோணசலக் கவிராயர்	77
அந்த நினைவு	... கே. ஆர். கௌசல்யா	79
புறக்கணிப்பு	... மு. வரதராசனர்	87
கரும்பு	... கி. ரா. கோபாலன்	91
நகைச்சுவைச் சித்திரங்கள்	... சந்தனு	100
இலக்கியத் தம்பதிகள்	... ஹேமு — ஆனந்ததீர்த்தன்	102
கருப்ப இசிவு	... 'லக்ஷ்மி'	111
நிழற்பட விருந்து	... சந்தாமியான்	115
எல்லைத்தீ	... பீஷ்மன்	119
வாச்சொல்லடி!	... வாணிதாசன்	126
பொற்காலம்	... எஸ். சதாசிவம்	127
வாழ்க்கை	... 'ஆர்வி'	130
மாயாண்டித் தேவன்	... பி. வி. ஆர்	133
ஊஹூம், சிரிக்காதே!	... பாலா	139
மனிதரைப்போல்!	... அழ. வள்ளியப்பா	147
தியாகம்	... கா. அப்பாத்துரை	148
திரைப்பட விருந்து	...	
சிவாஜி கணேசன்	... கணபதி—ராதா	155
திடீர் பயில்வான்	... சுகி	157
தமிழ்ப் பாடல்	... பெரி. சிவனடியான்	163
ரோஜாத்தி	... ஜெகசிற்பியன்	164
கள்ளும் காமமும்	... பி. எல். சாமி	170

208419

தந்தி: COMFORT போன்: 381

திருச்சி நகரில் தங்குவதற்கு வசதிகள்
நிறைந்த இடம்

யுனைடெட் இந்தியா லாட்ஜ்.

(சாப்பாடு, சிற்றுண்டி கிடைக்கும்)

மெயின் கார்டு கேட், பஸ் ஸ்டாண்டு, ரயில்வே ஸ்டேஷன்
முதலானவைகட்கு அருகில் அமைந்துள்ளது!

எங்கள் தயாரிப்பான
யுனைடெட் இந்தியா காப்பித்தூளை
வாங்கி உபயோகியுங்கள்.

முத்து. மு. முத்துக்கருப்பஞ் செட்டியார், அதிபர்.

இந்தியாவிலும் அயல் நாட்டிலும் தயாராகும் எல்லா சைக்கிள்களுக்கும், ஸ்பேர் பார்ட்ஸ்களுக்கும்

நம்பிக்கையும் நாணயமும்
வாய்ந்த இடம்

டிரை சைக்கிள்கள், மோட்டார் கார்கள், பெரம்புலேட்டர்கள், குழந்தைகளுக்கான புஷ்சேர்கள் யாவும் எம்மிடம் கிடைக்கும்.

பழுது பார்த்தும் தரப்படும்.



RAJA ராஜா
CYCLE CO.,

8, BROADWAY, MADRAS.



காதல் மயக்கம்

சித்திர விளக்கம்

காதல் நினைவு!

காதலன் தொழில் காரணமாகத் தன் இல்லக் காதலியை விட்டுப் பிரிந்து சென்றான். அவன் திரும்பி வந்தபின் அவர்கள் மகிழ்ந்து கூடினர். ஆனால் பிரிவை எண்ணிய சமயமெல்லாம் காதலியின் முகத்தில் வாட்டம் தோன்றியது. 'அவர் இல்லாமல் நான் பட்டபாட்டை அவர் அறிந்திருப்பாரா? அவர் தொழிலில் ஈடுபட்டு என்னை மறந்துதானே இருப்பார்?' என்று எண்ணுகிறாள்.

காதலன் அவள் குறிப்பறிந்தான். "நான் உண்மையில் உன்னைப் பிரிந்து வாழவில்லை. காட்டில் மயில்கள் ஆடின; அந்த ஆட்டத்தில் உன் சாயல் கண்டேன். முல்லை மணத்தில் உன் செவ்வி உணர்ந்தேன். மான்களின் மருண்ட பார்வையில் உன் விழிகள் என்னை நோக்கின" என்றான்.

"நின்னே போலும் மஞ்ஞை ஆல, நின்
நன்னுதல் நாறும் முல்லை மலர,
நின்னே போல மான் மருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென்!"

(ஐங்குறுநூறு)

காதல் மயக்கம்!

வாழைத்தண்டு புணையாக நல்லிளைஞன் வையை ஆற்றில் நீந்திச் செல்கிறான். அவன் செவ்வியில் ஈடுபட்டு ஒரு நங்கை தன்னையும் மறந்து மிதக்கின்றாள். அவன் நீந்துதலை மறந்துவிட்டதனால், ஆற்றொழுக்கை அவனை அவளிடமிருந்து இழுத்துச் செல்கிறது. அவன் தன்னை மறந்து விட்டதால், அவள் உடல் அவன் பக்கமாக மெல்ல மிதந்து செல்கின்றது.

"தண்டு தழுவாத்
தாவுநீர் வையையுள்
நெஞ்சம் அவள் வாங்க,
நீடுபுணை வாங்க
நேரிழை நின்றுழிக்
கண்நிற்ப, நீர் அவன்
தாழ்வுழி உய்யாது தான்
வேண்டுமாறு உய்ப்ப,
ஆயத்துடன் நில்லாள்—ஆங்கு
அவன்பின் தொடரூஉ
தாய் அத்திறமறியாள்...
அரற்றெடுப்பத் தாக்கிற்றே
சேயுற்ற கார்நீர் வரவு."

(பரிபாடல்)

வணக்கம்

தமிழர் தனித்தமிழ்த் திருநாளான பொங்கலன்று தமிழன்பர் அனைவருக்கும் 'பொன்னி'யின் சார்பில் வணக்கம் தெரிவித்துக்கொண்டு, 'பொன்னி'யின் ஆறுவது பொங்கல் மலரை அன்புக் காணிக்கையாக வழங்குகின்றோம்.

மிகக் குறைந்த விலையில், மிகச் சிறந்த கலைப் படைப்பாக—அழகுக் குவியலாக சிந்தித்து, மகிழத் தக்க முறையில் இவ்வாண்டு பொங்கல் மலர் உங்கள் ஆர்வக் கனலைத் தூண்டியவாறு உங்களது கண்ணுக்கும் கருத்துக்கும் ஒப்பற்ற கலை விருந்தாக அமைந்து திகழ்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்; பெருமிதங்கொள்ளுகிறோம்.

இம்மலரில் அணி வகுக்கும் அறிஞர்கள், கவிஞர்கள், கதாசிரியர்கள், அனைவரும் புகழ்மிகுந்தவர்கள்; தலைசிறந்தவர்கள். சித்திரப் பூஞ்சோலையாக மலர் அழகு பெறுவதில் ஊக்கம் நல்கிய ஓவியர்கள் பாலு பிரதர்ஸ், ரொஸாக், ஸாமி, சந்தனு, உகி, ஸுபா, சலம், சுந்தர் ஆகியவர்கள். இவர்களெல்லாம் எங்கள் நன்றிக்கு இலக்காகின்றனர்.

வரும் ஆண்டில் தமிழகத்தில் தமிழ் ஆட்சிக்கு, தனித்தமிழ் முன்னேற்றத்திற்கு, தமிழ்நாடு அமைப்புக்கு, தமிழக மக்கள் செல்வ வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் சீரிய திட்டங்களை அரசியலாரும், மக்கள் தலைவரும், பத்திரிகை உலகும் வகுப்பார்கள் என்று நம்புகிறோம்; விழைகிறோம். அதில் 'பொன்னி' பெரும் பங்கு எடுத்துக்கொள்ளும் என்பதை இதயப் பூரிப்புடன் கூறிக்கொள்ளுகிறோம்.



உயிர்ப் புதையல்!

பாரதிதாசன்

★

தண்ணிலவும் அவள் முகமோ!
தாரகைகள் நகையோ!

தளிருடலைத் தொடும்உணர்வோ
நன்மணஞ்சேர் குளிரும்!

விண்ணீலம் கார்குழலோ!
காணும் எழிலெல்லாம்

மெல்லியின்வாய்க் கள்வெறியோ!
அல்லிமலர்த்தேனின்

வண்டின்ஒலி அன்னவளின்
தண்டமிழ்த்தாய் மொழியோ!

வாழியஇங் கிவையெல்லாம்
எழுதவரும் கவிதை!

கண்டெடுத்தேன் உயிர்ப்புதையல்!
அதோ வந்துவிட்டாள்!

கண்டெழுத முடியாத
நறுங்கவிதை அவளே!

★

23. (1953)


இந்தியா தீவிரமாக முயற்சி செய்கிறது. ஆனால், கொரியாவைப் பிணைத்திருக்கும் கட்டுகள் கொஞ்சமும் தளருவதாகக் காணோம்
கொரிய சமாதானம் பற்றிய இந்திய திட்டம்
கொரியா


"காட்டுமிராண்டித்தனமாய் நடப்பது எங்கள் சுதந்திரம். அதில் எவரும் தலையிட முடியாது" என்று கொக்கரிக்கிறது, ஆப்பிரிக்க மலான் சர்க்கார்
ஐ.நா
மலான்
தென் ஆப்பிரிக்க இந்தியர்


சுதந்திர இந்தியா முன்னேறிக்கொண்டிருக்கிறது
பொதுஜனம்
தேஷ்முக்
டி.டி.கே


காஷ்மீர் சுதந்திரத்தில் தலையிட்டது பாகிஸ்தான்
அதன் பலன்!
பாகிஸ்தான்
காஷ்மீர்
சக்தி

மலர்க் கவிஞர்கள்

புரட்சிக் கவியரசர் பாரதிதாசன் அவர்களைத் தமிழகத்துக்கு அறிமுகப் படுத்துவது தமிழர்கட்கு அறிமுகப் படுத்துவது போன்றது. பெயரே அவர் பாரதியின் பரம்பரையென் பதைக் காட்டுகிறது. ஆனால் அவரே புரட்சிப் பரம்பரையின் முதல்வராகவும் விளங்குகிறார். 'உலகத்தாயி'ன் வீறுமிக்க கற்பனை முதல் 'வண்டிக்கார'னின் சமூக விளக்கம் வரை அவர் தீட்டிக் காட்டாத உணர்ச்சி இல்லை.

★

கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் வாழும் தமிழ் இலக்கியம் ஆக்கித் தமிழை வளர்க்கும் நம் காலக் கவிஞர். அப்பழுக்கற்ற கலையழகுடையன இவர் பாடல்கள். பாரதியையே நாட்டுக்குப் படம் பிடிக்கும் பாட்டுக்கொரு புலவனை அறியாதவர் இரார்.

★

பாரதிதாசன் பரம்பரையின் முதல் வழித்தோன்றல் கவிஞர் வாணிதாசன். 'தொடுவானம்'—'கொடிமுல்லை' இவரது உணர்ச்சியும் உயிர்ப்புங்கொண்ட இரு உயர்வு மிக்க கவிதை நூல்கள்.

★

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா 'பூஞ்சோலை'யின் கௌரவ ஆசிரியர். குழந்தை உலகம் இவரை நன்கறியும். அவர்களுக்கென எத்தனையோ கவிதைகள், கதைகள் புதுப் புது முறையில் காணிக்கை படைத்திருக்கிறாரல்லவா?

★

கவிதைப் பகுதிகளுக்கு பெரி. சிவனடியான் பெயர் அறிமுகமானதே. 'தமிழ்ப் பாடல்' அவரது உயிர்க் கவிதைகளுள் ஒன்று!

★

மக்கள நவீனத்தை வாசிப்பது போல கவிதையையும் வாசிக்க முடியும் என்பதற்கு இலக்கான தற்கால இளங் கவிஞர் 'தமிழ்ஒளி'. 'வீராயி' இவரது சிறந்த காவியப் படைப்பு.

பொங்கல் வருக!

'தமிழ் ஒளி'

பொங்க லெனும் பெண்ணே!
புதுமை விளக்கேற்றி
எங்கள் அகத்தின்
இருள்நீக்க வந்திடுக!
செங்கரும்பு போல் மொழியும்
தேயாப் பிறைநுதலும்
பொங்கலெனப் பொங்கிப்
புரள்கின்ற காற்சிலம்பும்,
நெல்லின் இளந்தாள்
நிகருடையும் பூண்டுவரும்
செல்வீ வருக!
திருமகளே வந்திடுக!
பாடி எழுந்து,
பனியைத் துடைத்து மலர்
சூடி நடந்து
சுடர்கொள்ள நீ வருக!
காதல் இசை பாடக்
காற்றொலியில் காற்சிலம்பு
மாதர் களிக்க,
மனங்களிக்க நற்பசுவும்,
கன்றும் குதிக்கக்
கழுத்துமணி யாட
முன்றிலில் எம்முள்ளம்
காளையெனத் தான்துள்ள,
வந்தாய் உதயம்
வரவேற்க! வாழ்த்துப்பா
'இந்தா' எனமலர்கள்
எங்கும் மலர்ந்தனவாம்!

வாழ்த்து

ஆதி பகவன் அறவாழி அந்தணன்
யாதும் உவமையிலான் இன்னருளால் – ஓதுதமிழ்ப்
பொன்னிமலர் வீசும் புதுமணம் பெற்றுமக்கள்
மன்னுலகில் வாழ்க மகிழ்ந்து.

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

தமிழக அரசியலும் தமிழரும்

கா. அப்பாத்துரை

தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டும்!

திருச்சி மாவட்டத்தில் தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு ஓர் ஆண்டாகிறது. இப்போது எல்லா மாவட்டங்களிலும் நாட்டுமொழியே ஆட்சி மொழியாகவேண்டும் என்று தமிழர் அவாவுகின்றனர். சென்னையில் அதற்காக எல்லாக் கட்சித் தமிழரும் சேர்ந்து ஆட்சிமொழி மாநாடு நடத்தவிருக்கின்றனர். ஆனால் தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டுமானால், ஆட்சியாளர் அதில் உண்மையிலேயே ஆர்வம் காட்டித் திட்டம் வகுக்கவேண்டும். இருக்கும் அமைப்புக்களை அப்படியே வைத்துக் கொண்டு பெயரளவுக்கு ஆட்சி மொழி தமிழ்தான் என்று கூறி, அது வெற்றிபெறத்தக்க பொறுப்பான நடவடிக்கைகளை எடுக்காமலே, அதைக் குறைகூறக் காத்திருப்பவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது.

'முதலாவது மொழிவாரி மாகாணம் அமைக்காமல்' தமிழ்மொழி ஆட்சி மொழியாக மாறமுடியாது. ஏனென்றால் இன்று ஆட்சியரங்கங்களில் வேலை பார்ப்பவர்களில் பலர்-சிறப்பாக உயர்ந்த உத்தியோகங்களில் இருப்பவர்கள் தமிழ் தெரியாதவர்கள். பலர் தமிழராகவே இல்லாத பிறமொழியாளர்கள். மொழிவாரி மாகாணமாகத் தமிழகமும் பிற மொழி நாடுகளும் அமைந்தால்தான் அவர்கள் அவரவர்கள் மொழிக்குரிய மாகாணங்களுக்குப் பரிமாற்றிக் கொள்ளப்பட முடியும்.

இரண்டாவது, தமிழ்மொழி ஆட்சி சரிவர நடக்கவேண்டுமானால், புதிய உத்தியோகஸ்தர்களுக்குத் தமிழ்மொழித் தகுதியும், பழைய உத்தியோகஸ்தர்களுக்கு விசேஷத் தமிழ் மொழிப் பயிற்சியும் தரப்பட வேண்டும்.

கல்வி நிலையங்கள் தமிழ்க் கல்வி நிலையங்கள் ஆகவேண்டும்!

தமிழகம் அமைந்து தமிழ் ஆட்சி மொழி ஆவதுவரை, தமிழகக் கல்வி நிலையங்கள் தமிழக்கல்வி நிலையங்களாக ஆக முடியாது. பிரிட்டிஷ் அன்னிய ஆட்சியில் அன்னிய மொழியாகிய ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்தது. அதற்காகவே ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள், ஆங்கிலக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டன. இப்போதும் ஆங்கிலமே ஆட்சிமொழியா யிருப்பதனால், இந் நிலைமை மாறவில்லை.

ஆங்கில மொழி இன்னும் சிலகாலமாவது இந்தியாவின் பொதுமொழியாக இயங்கவேண்டும், இயங்கும் என்பதை நாம் மறுக்கவிலலை. இன்னும் நீண்டகாலம் இந்தியாவின் உலகத் தொடர்புக்குரிய மொழியாக அது இயங்கவல்லது. இதையும் நாம் மறுக்கவில்லை. ஆனால் மாகாண ஆட்சியளவிலாவது நாட்டுமொழி இடம்பெறாவிட்டால், நம் கல்விச் சாலைகள் தமிழருக்காக நடத்தப்படும் ஆங்கிலக் கல்விச்சாலைகளாகவே நடக்கவேண்டியிருக்கும்.

ஆட்சியைத் தமிழாட்சியாக மாற்றும் வகையிலும், கல்வி நிலையங்க

ளைத் தமிழ்க் கல்வி நிலையங்களாக மாற்றும் வகையிலும், தமிழ்ப்புலவர் பணி மிகவும் தேவைப்படும். தமிழ்ப் புலவர்மீது இப்போது அயல் மொழிப் புலவருக்கு இருக்கும் புழுக்கம் அரசியலாரையும் அரசியல் கட்சியினரையும் தாவிப்பிடித்துவருகிறது. இந்நிலை மாறவேண்டும். தமிழ்ப் புலவர் தேர்வு ஆங்கிலப் பட்டங்களுடன் ஒன்றுபடுத்தப்படவேண்டும். அதாவது தமிழ்ப்புலவர் தகுதியும் உரிமைகளும் பி. ஏ., எம். ஏ. பட்டதாரிகள் தகுதிகளும் உரிமைகளும் ஒன்றாக வேண்டும். அப்போதுதான் கல்வியில் நாம் சுயராஜ்யம் பெற்றவர்கள் ஆவோம். இந்நிலை இன்னும் 20 ஆண்டுகளிலாவது ஏற்படக் கல்வியிலும், அரசியலிலும்திட்டம்வேண்டும்.

பல கல்வி நிலையங்களில் ஆசிரியரும், சில இடங்களில் தலைமையாசிரியரும் கல்லூரித் தலைவர்களும், தமிழறியாதவர்களாகவோ பிறமொழியாளர்களாகவோ உள்ளனர். மொழிநாடுகள் அமைந்து அவ்வம் மொழியாளர் அவ்வம் மாகாணங்களுக்குப் பரிமாற்றப்பட்டாலல்லாமல், தமிழர் உரிமைகள் கல்வித் துறையில் பாதுகாக்கப்படமாட்டா.

மொழிவாரி மாகாணம்

மொழிவாரி மாகாணம் காங்கிரஸால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை. சுயராஜ்யம் வருவதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பே, காங்கிரஸ் அமைப்பில் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்று சென்னை மாகாணக் காங்கிரஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி இல்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திரா காங்கிரஸ் கமிட்டி, கேரளா காங்கிரஸ் கமிட்டிகள்தான் உண்டு. ஆயினும் தமிழ்நாடு காங்கிரஸ், கேரளா காங்கிரஸ் ஆகிய இரண்டுக்கும் குந்தகமாகத் திருவாங்கூர் காங்கிரஸும், கன்னடக் காங்கிரஸுக்குக் குந்தகமாக மைசூர் காங்கிரஸும், ஆந்திரக் காங்கிரஸுக்கும் கன்னடக் காங்கிரஸுக்கும் குந்தகமாக பம்பாய், ஹைதராபாது காங்கிரஸுகளும் நிலவுகின்றன.

காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்று முன் ஆர்வத்துடன் தன் அமைப்பில் செய்த மாறுதலை, அது ஆட்சியை கைப்பற்றி சுயராஜ்யமும் பெற்றபின் செய்யத் தயங்குகிறது. காங்கிரஸ் மேலிடத்திற்கு வரவர அதில் ஆர்வம் குறைந்து வருகிறது என்பதில் ஐயமில்லை. அதை அவர்கள் மறுக்கவில்லையானாலும், பல சாக்குப் போக்குகள் சொல்லி நாள் கடத்தியே வருகின்றனர். மைசூர், ஹைதராபாது, திருவாங்கூர் முதலிய பழங்கால அடிமைச் சின்னங்களைத் தேசிய வாழ்வுக்குக் குந்தகமான தேசப்பிளவைகளை அணைத்துக் கொண்டும், 'மொழிவெறி கூடாது' என்று வேதாந்தம் பேசிக்கொண்டும் வருகின்றனர்.

அத்துடன் காங்கிரஸ் அமைப்பைப் பின்பற்றி மொழிவாரி மாகாணங்களை ஒருசேர அமைக்கத் திட்டமிடாமல், மொழி வெறியும் மொழித் துவேஷமும் வளர இடம் தந்தும் தூண்டியும் வருகிறார்கள். மொழி நாட்டுக்காக கூக்குரலிடுபவர்களுக்கு முதலில் பிரித்துக் கொடுப்பதென்பது கூக்குரலிடுவதற்கான தூண்டுதல் தவிர வேறில்லை. மேலும். முதலில் பிரிப்பவர்களுக்கு முதல் சலுகை கிடைக்கும் என்பதும் அரசியலின் போக்கை அறிந்தவர்கள் எளிதில் காணும் உண்மை. முதலில் பிரிவுற்ற ஒரிஸா, ஆந்திராவிலிருந்து கஞ்சம் விசாகப்பட்டணம் பகுதிகளை எளிதில் கைப்பற்றிக்கொண்டது. ஆந்திரர் கிளர்ச்சி அதற்குப் பின்னுலேயே எழுந்தது. ஆந்திரர் இன்று அதைக் கேட்க முடியவில்லை—பிரிவினைக் கோரிக்கையில் இன்னும் முனையாத தமிழர் உரிமைகளையே மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறார்கள்.

ஆந்திரரைப்போல மலையாளிகளும், கன்னடியரும் கிளர்ச்சி செய்யும் வரை தமிழர் உரிமைக்குரல் எழுப்பாதிருந்தால், திருவாங்கூர்த் தமிழகம், கொச்சித் தமிழகம், நீலகிரி ஆகியவற்றில் தமிழர் உரிமை பறிபோகவே செய்யக்கூடும்!

தமிழர், தமிழ் மாகாணக் கோரிக்கைக்கு இன்றே இப்போதே முயல வேண்டும்.

தமிழர் ஒற்றுமை

மற்ற மொழிப் பகுதிகளைவிடத் தமிழகத்தில் ஒற்றுமைக் குறைவு என்பதைச் சுட்டிக்காட்டத் தேவையில்லை. இது தமிழர் தமிழ்ப்பற்றின் குறைபாடு என்று பலர் கருதுகின்றனர். இது தவறு. தமிழரிடையே தமிழார்வம் கரைபுரண்டு ஓடுகிறது. அரசியல் விழிப்பிலும் தமிழகத்தில் பொதுமக்கள் மற்றைப் பகுதிக்குப் பிற்பட்டுவிடவில்லை. ஆனால் தமிழரிடையே சாதி மத ஒற்றுமை இல்லை. கட்சி ஒற்றுமை இல்லை. பொதுவான நாட்டு நலன் வரும் போதுகூட, தமிழர் தலைவர்கள் தங்கள் தன்னலங்களைக் கட்சிநலனுக்கு மேற்பட்டும், கட்சி நலங்களை நாட்டு நலங்களுக்கு மேற்பட்டும் தழுவுகின்றனர்.

காங்கிரஸ் கட்சி மட்டிலுமன்றி, எல்லா அகில இந்தியக் கட்சியிலுமே தமிழர் உரிமை புறக்கணிக்கப் படுவதற்கும் உள்ள **அடிப்படைக்காரணம் பிறமொழியாளர் ஆதிக்கம் அல்ல, தமிழர் தன்னல வேட்டையும் ஆதிக்க வேட்டையுந்தான்** என்பதைத் தமிழர் எத்தனை நாள் தெரியாதவர்கள்போல் வாய்விட்டுச் சொல்லாமல் இருக்கப்போகிறார்கள்?

வேண்டுவது இந்தி எதிர்ப்பு, ஆங்கில எதிர்ப்பு முதலிய வெறும் எதிர்ப்புக்களல்ல—தமிழ்ப் பற்றும், ஒற்றுமையும் தான் வேண்டும். அவை இருந்தால் தமிழர் உரிமை மதிக்கப்படும்.

அகில இந்தியத் தேசியம்

அகில இந்தியத் தேசியத்தில் தமிழன் குரலுக்கு இடமில்லாததற்குத் தமிழர் ஒற்றுமைக் குறைவுமட்டும் காரணமல்ல. அகில இந்தியத் தேசியத்திலேயே இன்னொரு குறையும் இருக்கிறது. தமிழர் ஒற்றுமைப்பட்டால் அது மாறக்கூடும். அது தான் **தாய்மொழித் தேசியப்பண்பு.** காங்கிரவில் தாய்மொழிப்பற்றிருந்தால்— உலகமொழி, தேசிய மொழி என்று பேசித் தாய்மொழி வாழ்வுக்குச் சறுக்குக்கட்டைகள் போடும் நிலை மாறினால்—ஒவ்வொரு மொழிப்பிரச்சினையாக அவர்கள் கவனிக்கமாட்டார்கள். அகில இந்திய அடிப்படையிலேயே அவர்கள் மொழிமாகாணத் திட்டம் வகுப்பார்கள். மொழிவாரி மாகாணப் பிரச்னைக்கு முந்தி மாகாண எல்லைப் பிரச்சினை எழும்படி விடமாட்டார்கள். எல்லையை அறுதியிடுமுன், அந்த எல்லை தாண்டி வாழ எப்படியும் நேரும் நாட்டுமொழி யல்லாத தாய்மொழியாளர் உரிமைகளை அவர்கள் அகில இந்திய முறையில் வரையறுப்பார்கள். அதன்பின் எல்லைப் பிரச்சினை உயிர்ப் பிரச்சினையாகாது. அது வெறும் மொழிப் பிரச்சினையாகவே நிற்கும். ஒரு மொழியாளர் இன்னொரு மொழியாளரைச் சந்தேகக்கண்ணுடன்பார்க்கமாட்டார்கள். எல்லா மொழியாளரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை முன்பு அண்ணாந்து பார்த்ததுபோல அகில இந்தியக் காங்கிரஸையும் அண்ணாந்து பார்க்கமாட்டார்கள்.

உலகத் தொடர்பு

மாகாண நலங்களை உட்கொண்டதே தேசிய நலன். எல்லா மாகாண நலங்களும் ஒரே கண்ணோட்டத்துடன் கவனிக்கப்படாத இடத்தில் தான் மாகாண மனப்பான்மை வளரும். இந்தியாவில் எல்லா மாகாண நலங்களுங் கூடிய தேசியம்ஏற்பட்டாலன்றி, இந்தியா உலகில் ஒரு வல்லரசாக விளங்க முடியாது. அத்துடன் இந்தியாவைச் சூழ்ந்துள்ள நாடுகளின் நலங்களுடன் இந்தியா இணைந்தாலன்றி, உலகில் அதன் நிலை மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் நிழலின் நிலையாகவே இருக்கும். இந்தியா இன்னும் சமத்துவம் பேணி ஆசியாவின் நலங்களுக்கும் ஆபிரிக்காவின் நலங்களுக்கும் போராடினாலன்றி, உலகம் என்பது மேல்நாட்டு ஏகாதிபத்தியங்களின் ஒரு வேட்டைக் காடாகமட்டுமே இருக்கமுடியும். இந்தியா ஒரு சிறிய உலகம். இந்தச் சிறு உலகத்தின் பிரச்சினைகள் இன்று உலகப் பிரச்சினைகளின் ஒரு முனைமுகம். இந்தியா தன் பிரச்னைகளை உண்மைத்தேசியக் கண்ணுடன் பார்த்துணர்ந்து புதிய இந்தியா அமைத்தால், உலக இயக்கத்துக்கே இந்தியா வழிகாட்டி, ஒருலகம் அமைந்துவிட முடியும்.

இந்தியா அந்த அளவுக்கு உயர உதவ முன்வருமா? ★

கல்கி

பேட்டிக்கட்டுரை

புலவர் என். ஆறுமுகம்

"அகில உலகச் சிறுகதைப் போட்டியில், தமிழ்க் கதை ஒன்று கூடப் பரிசுபெறவில்லையே. இது பற்றிய தங்களின கருத்து யாது?"

"பெயர்பெற்ற புதுமைப்பித்தன், கு. ப. ரா. போன்ற சில எழுத்தாளர்கள் காலமாகிவிட்டனர். சிறுகதை எழுதுவதில் நன்கு பயிற்சி பெற்றவர்களில் சிலர் சினிமாத் துறையில் நுழைந்துவிட்டனர். பெயர்பெற்ற மற்றும் சிலர் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெருவிட்டால் குறையாயிற்றே என்றும் சும்மாயிருந்துவிட்டனர். அகில உலகப் போட்டியின் தீர்ப்புக் குழுவினர் மேலை நாட்டவராதலால், தமிழ் நாட்டின் பண்பு, சூழ்நிலை, அமைப்பு ஆகியவற்றை உணர்ந்து அவர்கள் தீர்ப்புக் கூற முடியாதென்ற நினைவும் பலரைப் போட்டியில் கலக்கச் செய்யாமல் செய்துவிட்டது."

'பொன்னி' எழுத்தாளர்கள் பேட்டி வரிசையில் இந்த தவணை 'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அங்கம் வகிக்கின்றார்.

இந்தப் பேட்டி 'பொன்னி பொங்கல் மலருக்கெனத் தனித்த முறையில் ஏற்பாடானதொன்றாகும்.

முதல் நாள் ஆசிரியர் திரு. அப்பாத்துரை அவர்களும் நானும் திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களைக் கண்டு, பேட்டிக்கான முன் அறிவிப்பைச் சொல்லச் சென்றோம். ஆசிரியர் ரா.கி. யின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தது. அடுத்த வாரம் வருமாறு அன்புடன் கோரினார். சில நாள் நோயுற்றிருந்தும், உடல் நிலை சீர்படாதிருந்தும், அதையும் பொருட்படுத்தாமல் எங்களை இன்முகங் காட்டி வரவேற்றார் 'கல்கி'. இலக்கிய உலகம் எங்கள் மூவரையும் சுற்றிச் சுழன்றது. ஒரே துறைப் பட்டவர்களல்லவா? ஆசிரியர் என்ற வகையில் அப்பாத்துரை அவர்களுடன் பொதுப்படையாகச் சிறிது நேரமும் 'பொன்னி'

'கல்கி'

துணையாசிரியர் என்ற முறையிலும், 'கல்கி' எழுத்தாளரில் ஒருவர் என்ற ஈடுபாட்டிலும் என்னுடனும் சிறிது நேரமும் திரு. கல்கி அவர்கள் அளவளாவியதனால், எங்களிடையே சில பல கணங்கள் உருண்டோடின.

பேட்டியின் குறிக்கோள் எங்களிடையே நினைவுக் குறிப்பாக அமைய ஏதுவாகவிருந்தது கடிகாரம். பேட்டி தொடங்கப் பெற்றது. மேலே தரப்பட்ட வாசகம் எங்களது முதற் கேள்விக்கான அவர்கள் உரையாடல் தொடக்கமேயாகும். பேட்டி தொடர்ந்தது.

"இந்தியப் பத்திரிகைத் துறையில் தமிழகம் அடைந்துள்ள நிலை யாது?"

"இந்தியாவில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குச் செல்வாக்கு மிகுதி. மற்றப் பத்திரிகைகளைவிட நம் தமிழ்ப் பத்திரிகைகளின் வாசகர்கள் மிகப் பலர். வங்காளத்தில் அதிக விநியோகமுள்ளனவாகக் கொள்ளப்படும் 'ஆனந்த பசார்'—'யுகாந்தர்' ஆகிய சில பத்திரிகைகளே உள்ளன. வங்க நாட்டைக் காட்டிலும் ஜனத் தொகையில் குறைந்த தமிழ் நாட்டில் பல பத்திரிகைகள் அந்நிலையை எய்தி உள்ளன. இவை A. B. C. பீரோ மூலம் நன்றாக வெளியாகியிருக்கின்றது. பத்திரிகை உலகுக்கு இப்போதைக்காட்டிலும் நல்ல எதிர்காலம் இனி உண்டு. தமிழ் நாட்டில் புதிய பத்திரிகைகள் போட்டிக்கு வந்து முன்னேறியும், பழைய பத்திரிகைகளின் வளர்ச்சி தடைப்படவில்லை. வாசகர்கள் தொகை அந்த அளவுக்குப் பெருகி வருகிறது."

"தமிழ் வளர்ச்சிக் கழகம் தமிழகத்திற்கு முழுதும் பிரதிநிதித்துவம் உடையதா?"

"பிரதிநிதித்துவம் உடையதல்ல; இது திரு. அவிநாசிலிங்கம் அவர்களது சொந்த முயற்சி; ஆர்வமுள்ள தமிழ்த்தொண்டு. அந்த அளவில் அது சிறப்புடையது; போற்றத்தக்கது. 'தமிழ்க் களஞ்சியம்' தயாரித்துக்கொண்டிருப்பது, தமிழ் விழாக் கொண்டாடுவது, சிறந்த தமிழ்ப் புத்தகங்களுக்குப் பரிசு வழங்குவது—இவை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் போற்றத்தகுந்த சேவைகளாகும். களஞ்சிய முயற்சி முடிவுற்ற பின்பே அதன் முழுச் சாதனைகள் பற்றித் திட்டமாகக் கூறமுடியும். தமிழ் விழாக்கள் பொதுவாகவும், தமிழகத் தலைநகரான சென்னையில் நடைபெற்ற இவ்வாண்டுத் தமிழ் விழா குறிப்பாகவும் அகில இந்தியாவில் சிறப்புப் பெற்றது என்பதும் உண்மையே."

"இன்றையக் கல்வி முறைக்கு 'செலக்ஷன் முறை' தேவையா?"

"தேவையில்லை. இதைப்பற்றி ஏற்கனவே நான் பலமுறை வலியுறுத்தி எழுதியிருக்கிறேன். அரசாங்கப் பொதுப் பரீட்சையில் தேர்வின் சதவிகிதத்தைக் கூட்டிக் காண்பிக்கவும், ஆசிரியர், மாணவர்களிடையே ஒழுங்குக் கட்டுப்பாட்டை நிலை நிறுத்தவும் பின்னணியாகக் கொண்டு, பக்கபலமாக்கிக்கொள்ள உதவும் சாதனம்தான் இந்த செலக்ஷன் முறை. இம்முறை மாணவர்களுக்குப் பாதகமானது என்பதை நாளடைவில் ஆசிரியர்களே உணருமாறு செய்துதான் இம்முறையை ஒழித்தல் மிக்க அவசியமாகும். மாணவரிடை கட்டுப்பாட்டை உண்டாக்க அச்சமும் தண்டனையும் பழங்கால முறைகள். புதிய அன்பு, ஒத்துழைப்பு முறையில் நம்பிக்கை ஆசிரியரிடையே வளரவேண்டும்."

"சினிமா பார்ப்பது தவறு என்ற ராஜாஜியின் கருத்துபற்றிய தங்கள் எண்ணம் யாது?"

"ராஜாஜியவர்களின் கருத்துக்களைப் பொதுவாக நான் மதிக்கும் பக்தன். ஆனால் இக்கருத்தை நான் ஒத்துக்கொள்ளவில்லை. சினிமா இந்நாளில் உலகிலே மாபெரும் பலமிக்க சக்தியாகிவிட்டிருக்கிறது. பெரியவர்கள், அறிஞர்கள் முதல்

சாதாரண பாமரர் வரை சினிமாவை விரும்பாதவர்கள் கிடையாது என்றுதான் கூறவேண்டும். ஆனால் இன்றையச் சினிமாக்களில் கையாளும் முறைகள் பெரும்பாலும் தவறானவையாகவே அமைகின்றன. இவற்றைப் பட முதலாளிகள் சீர்படுத்தியிருந்தால், ஒரு சமயம் ராஜாஜி அவர்கள் இப்படிப்பட்ட கருத்தை வெளியிட்டிருக்கமாட்டார்கள். மக்களின் ஒழுக்கம் கேடுறக்கூடாதே என்ற முக்கிய கவலையே பெரியாராகிய அவருக்கு முதன்மையானதாகும். மதிப்பிற்குரிய ராஜாஜியின் சினிமாக் கருத்தை ஏற்றுக் கொள்ளாவிடினும், அவர்கள்மீது நான் கொண்டுள்ள பக்தியின் காரணமாக நான் இரண்டு உறுதி மொழிகள் எடுத்துக்கொண்டேன். முதலாவது, நான் ஓராண்டுச்குப் படம் பார்ப்பதில்லை; அடுத்தது, பிலிம் சென்ஸார் ஆலோசனை போர்டிலிருந்து நான் ராஜினமாச் செய்து விலகிவிட்டேன்...''

"அரசியல் துறை, ஆன்மீகத் துறை, தமிழ் இலக்கியப் பணி ஆகியவற்றைக் குறித்து ராஜாஜியின் சேவை பற்றி உங்கள் கருத்தை அறிய விரும்புகிறோம்.''

''அரசியல் துறையில் தீர்க்க திருஷ்டியுடன் வரப்போகும் நிகழ்ச்சிகளைமுன்கூட்டியேஉணர்ந்து சொல்லக்கூடியவர் ராஜாஜி. இந்த ஒரு அம்சத்தில் பிரிட்டிஷ் பிரமுகரான வின்ஸ்டன் சர்ச்சிலை ஒத்தவர். பிறர் எதிர்பாராத ஒன்று நிகழும் என்று சொல்லும்போது கேட்பவர்கள் சில சமயம் வியப்பும் வெறுப்பும் அடைகின்றனர் இதனல் சர்ச்சிலைப்போலவே ராஜாஜியும் அவ்வப்போது மற்ற அரசியல்வாதிகளின் கண்டனத்துக்கு உள்ளாக நேருகிறது. அனறியும், அரசியல் துறையில் பட்சபாதமற்ற நேர்மையை 100-க்கு 100 சதவிகிதம் கண்டிப்பாக வற்புறுத்துகிறவர் ராஜாஜி. கட்சிப்பற்றுக் காரணமாகவோ, சொந்த நட்புக் காரணமாகவோ யாருக்கும் எந்த அநுகூலமும் செய்ய மறுப்பவர். இந்த இரு காரணங்களினாலும் ராஜாஜி அடிக்கடி அரசியலிலிருந்து அஞ்ஞாதவாசம் போகநேருகிறது. எனினும், வருங்காலத்தில் ராஜாஜி, 'தீர்க்க திருஷ்டிப் பண்புள்ள உலகத்து இராஜதந்திர மேதைகளில் ஒருவர்' என்று போற்றப்படுவார் என்பது என் கருத்து.

ஆன்மீகத்துறையில் ராஜாஜி ஸ்தானத்தை மதிப்பிடும் காலம் இன்னும் வரவில்லை. 'கடவுளுக்கு உகந்த பணியைச் செய்வதே கடவுளைப் பணிவதாகும்' என்பது ராஜாஜியின் உறுதியான நம்பிக்கை. மதத்தின் பெயரால் வழங்கும் குருட்டு நம்பிக்கைகள், அர்த்தமற்ற சடங்குகள் ஆகியவற்றில் அவருக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. அறிவுக்குப் பொருந்தாத எதையும் சமயம், சாஸ்திரம், சம்பிரதாயம் என்பதற்காக ஒப்புக்கொள்ளமாட்டார். அதேசமயம் தெய்வ நம்பிக்கையை புறக்கணிக்கும் 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்னும் நாத்திகக் கொள்கையும் அவருக்கு உடன்பாடல்ல. தெய்வ நம்பிக்கை என்னும் அடிப்படையின் பேரிலே தான் மக்கட்குலம் ஒழுக்கத்தில் உயர்ந்து உண்மையான உணர்ச்சியும் மேன்மையும் அடையமுடியும் என்பது ராஜாஜியின் கருத்து.

தமிழுக்கு ராஜாஜி சிறப்பான தொண்டு இயற்றியிருக்கிறார். ஆனால் பாரதியார், மகாமகோபாத்தியார், மறைமலையடிகள், திரு வி. க. முதலியவர்களுடைய தொண்டுடன் ஒப்பிட முடியாது. எவ்வளவு கடினமான விஷயங்களையும் யாருக்கும் விளங்கக்கூடிய எளிய தமிழில் சொல்லக்கூடும் என்பதை மெய்ப்பித்திருப்பது அருமையான தொண்டு. மிகச் சிறந்த சிறு கதைகள் சில எழுதியிருக்கிறார். ஆனால் தமிழிலக்கியத்துக்கு ராஜாஜி செய்யக்கூடிய தொண்டு இன்னும் எவ்வளவோ இருக்கிறது. அரசியல் வாழ்விலிருந்து பூரண ஓய்வுபெற்ற பிறகு, ராஜாஜி தமிழுக்கு முன்பு செய்திருப்பதைக் காட்டிலும் பன்

மடங்கு செய்யக்கூடும் என்று நம்புகிறேன்.''

"தமிழுக்கு 'கல்கி' செய்த சேவை என்ன? 'பொன்னி' எந்த அளவில் ஒத்துழைத்துள்ளது? இன்னும் எவ்வாறு ஒத்துழைக்கலாம்?''

''தமிழுக்குக் 'கல்கி' செய்திருக்கும் சேவை குறித்து நான் என்ன சொல்லக்கூடும்? ரஸிகமணி டி. கே. சி. அவர்களின் கம்பர் கட்டுரைகளையும், தனிப் பாடல் கட்டுரைகளையும் வெளியிட்டது பற்றியும், ராஜாஜியின் 'வியாசர் விருந்து' முதலிய பல கட்டுரைகளை வெளியிட்டது பற்றியும் நான் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம். மற்றப்படி, தமிழுக்கு 'கல்கி' செய்திருக்கும் சேவையைத் தமிழகந்தான் மதிப்பிடவேண்டும்.''

'பொன்னி' என்பது என் மனதை நெடுநாளாகக் கவர்ந்த அழகிய தமிழ்ச் சொல். கம்பர் கோதாவரி நதியின் சிறப்பைக் கூறும்போது 'தெய்வப் பொன்னி எனலாய புனலாறு முடி' என்று கூறியிருக்கிறார். பொன்னி நதிக் கரையிலும் வைகை, பொருநை நதிகளின் கரைகளிலும் தொன்று தொட்டுத் தமிழ் வளர்ந்து வந்திருக்கிறது. 'பொன்னி' என்ற பெயர் கொண்ட தங்கள் பத்திரிகை தமிழ் வளர்ச்சிக்குப் பல துறைகளிலும் தொண்டு செய்யுமென்று நம்புகிறேன். உலகம் வியக்கும்படியான உயர்ந்த பண்பாடு தமிழர்கள் குலதனமாகப் பெற்ற செல்வம். அந்தப் பண்பாட்டுக்கு எவ்விதக் குறைவும் நேராத வகையில் தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் நடைபெற வேண்டுமென்பது என் விருப்பம். அவ்வாறு உயர்ந்த இலட்சியங்களுடன் நடக்கும் பத்திரிகைகளுக்குத் தான் தமிழ் நாட்டில் நீடித்த செல்வாக்கு ஏற்படும் என்பது என் நம்பிக்கை. அநுபவத்தில் கண்ட உண்மையுமாகும். பழமையை அடிப்படையாகக்கொண்டு புதிய துறைகளில் 'பொன்னி' தமிழை வளர்க்குமென்று நம்புகிறேன். ஏன்? தற்போது நீங்கள் இம்மாதிரி எழுத்தாளர் சிலரைக் கண்டு பேசி விவரம் வெளியிடுகிறீர்களே, அதுவே தமிழை வளர்ப்பதற்கு ஒரு புதிய நல்ல துறைதான்.''

"இந்நாள் நாவல் வளர்ச்சிபற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன? அனுபவம் யாது? நாவலில் பொதுப்படையாகப் பிரபலமானவர்கள் யாவர்?''

''நானும் நாவல் எழுதுகிறவன் ஆனபடியால், இந்தக் கேள்விக்கு நான் மறுமொழி சொல்ல விரும்பவில்லை.''

"பத்திரிகை ஆசிரியர் என்ற அளவில்—தொடர்பில் பிற பத்திரிகையாளரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''தமிழ்ப் பத்திரிகையாளருக்குள் தொடர்பு இன்னும் அதிகமாக வேண்டுமென்று கருதுகின்றேன். தமிழில் நல்ல பத்திரிகைகள் எவ்வளவு வந்தாலும் வாங்கிப் படிப்பதற்கு வாசகர்கள் இருக்கிறார்கள். ரயிலில் பிரயாணம் செய்யும் போது, புத்தக நிலையங்களில் மூன்று நாலு பத்திரிகைகள் சேர்ந்தாற்போல் வாங்கிக் கொண்டு ரயில் ஏறுகிறவர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆகையால் பத்திரிகையாளருக்குள் மாற்சரியம் வேண்டியதே இல்லை. பத்திரிகையாளரின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். ஏன்? பத்திரிகைகளின் தரமும் உயரத் தான் வேண்டும். அமெரிக்கப் பத்திரிகைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நம் தமிழ்ப் பத்திரிகைகள் இன்னும் எவ்வளவோ தூரம் உயரவேண்டும் என்பதை அறியலாம். இதற்கெல்லாம் பத்திரிகையாளரின் கூட்டுறவு மிக்க உதவியாயிருக்கும். அத்தகைய கூட்டுறவை வளர்ப்பதற்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நல்ல சாதனமாயிருக்கக்கூடும் என்று நம்புகிறேன்.''

* * *

இன்றையத் தமிழின் புத்திலக்கிய மறுமலர்ச்சிக்குத் தொண்டு செய்துவரும் ஒரு சிலருள் 'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கி.

அவர்களின் சேவை பெரிதும் போற்றற்குரியதாகும். தனக் கெனத் தனிநடை வகுத்து அரசியல், ஆடல்பாடல், கட் டுரை, கதை, நாவல் ஆகிய எழுத்தின் பல்வேறு துறைக ளையும் எழுதிப் பொதுமக்களை ஈர்த்திழுக்கும் தனித்த பண்பு 'கல்கி' அவர்களின் பெயருக்கும் புகழுக்கும் மிகப்பெரிதும் உதவி வருகின்றன. 'கல்கித் தமிழ்' என்ற அளவுக்கு அவ ரது நடை சிறப்புப்பெற்றிருக் கிறது என்பதை இங்கு குறிப் பிட வேண்டும். இலக்கியச் சுவை, சிந்தனை நயம், சம்பவச் சிறப்பு, கலையழகு, நேர்மை மிக்க அரசியல் விமரிசனம் ஆகி யவை இவரது சிறந்த எழுத் துப் பண்புகள்.

அரசியல் என்றாலே ஒதுங்கிச் செல்லுபவர்கள்கூட அவரு டைய தலையங்கத்திற்கெனவே 'கல்கி' இதழ்களைத் தொடர்ந்து வாங்கி வருவது நாடறிந்த உண்மை. பம்பாயில் மில்களில் தொழிலாளர்கள் பலர் பலர் 'கல்கி' அரசியல் தலையங்கங்க ளைப் படித்துத் தங்கட்குள் சர்ச்சை செய்யும் அளவுக்கு இன்றைய தொழிலாளர் உலகம் முன்னேறி யிருக்கிறது. இச் செய்தியை கண்முன் கண்ட பம்பாய் எழுத்தாள நண்பர் திரு. மாயாவி 'கல்கி'யிடம் அண்மையில் இதை வியந்து பாராட்டினதாக அறிகிறோம்.

திரு 'கல்கி'யின் கதைகளிலே மேலைநாட்டுத் தலைசிறந்த கதா சிரியர்களான ஓ ஹென்றி. செகாவ், மாப்பஸான், அலெக் ஸாண்டர் டுமோஸ் போன்றவர் களின் சிறந்த கலைத்திற நுணுக் கங்கள் விரவிக் கிடக்கின்றன. கல்கியின் தொடர்கதை என் றாலே அடுத்தடுத்துப் பிறக்கும் இதழ்களுக்கென ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் ரசிகர்கள் இன்றளவும் நிரம்ப உண்டு என் பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

இதே போலத்தான் இவரது நடைமுறை நகைச்சுவைக் கட்டு ரைகளும் சிறப்புற்றவை. 'ஏட் டிக்குப் போட்டி' அழகிய சுவை பொருந்திய கட்டுரை நூல். 'ஆடல் பாடல்' பகுதியில் ஆசி ரியர் 'கர்நாடகம்' ஆகப் பரிண மிக்கின்றார். 'கல்கி' எதை எழுதி னாலும் அதில் ஓர் புதுமை ஒளி வீசும்; அவர் தமிழ் வாழும் தமிழ்.

'சாரதையின் தந்திரம்'— 'வீணை பவானி'— 'ஒற்றை ரோஜாப் பூ'— மாடத் தேவன் சுனை'— 'கணையாழியின் கனவு'— ஆகியவை 'கல்கி'யின், சிறப்பு மிக்க சிறுகதைத் தொகுப்புக்க ளாகும், 'தியாக பூமி'— 'மகுட பதி'— 'கள்வனின் காதலி'— 'பார்த்திபன் கனவு'— 'சிவகாமி யின் சபதம்'— 'மோகினித் தீவு'— 'சோலைமலை இளவரசி'— 'தேவ கியின் கணவன்'— 'பொய்மான் கரடு'— ஆகிய சரித்திரச் சமூகச் சூழல்கொண்ட பெரும் நவீனங் களையும் இவர் படைத்திருக்கின் றார். இப்பொழுது 'கல்கி'யில் தொடர்ந்து வரும் 'பொன்னி யின் செல்வன்' தொடர்கதை வாசகர்களது பெரும் ஆதரவுக் குப் பாத்திரமாகி வருகிறது.

பட உலகில் 'தியாகபூமி' வாயி லாக 'கல்கி'யின் பெயர் பிரபல மடைந்தது. 'மீரா'விலும் இவ ரது கைவண்ணம் வண்ணம் கொண்டு திகழ்ந்தது. இவரது 'பொய்மான்கரடு' 'பொன் வயல்' என்ற பெயரில் விரை வில் திரைப்படமாகப்போகிறது. இவரது 'கள்வனின் காதலி'—

டி. கே. எஸ். சகோதரர்களால் நாடகமாக நடிக்கப்பட்டுப் புகழடைந்துள்ளது.

ஆசிரியர் இசைப்பாடல்கள் சிலவும் புனைந்துள்ளார்.

தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்களின் போதனைபெற்று 'நவசக்தி' மூலம் எழுத்தாளராகி, பின் காந்தி ஆசிரமத்தில் தொண்டாற்றி, பிறகு 'ஆனந்த விகடனி'ல் 'கல்கி'யாகி பதி மூன்று ஆண்டுகள் சேவை காரணமாகத் தன் பெயரை இலக்கிய உலகில் ஸ்தாபிதம் செய்து, பின்னர் சொந்த முயற்சியில் 'கல்கி' என்ற பத்திரிகை தொடங்கி, அதை இந்தியா தேசத்திலேயே ஐந்தாவதாக வினியோகமாகும் பத்திரிகையாக ஆகச் செய்திருக்கிறார் கல்கி அவர்கள். தமிழ்ப் பெரியார்களான ராஜாஜி, டி. கே. சி, போன்றோரின் இலக்கியச் சற்றுச் சார்பில் உரம்பெற்று வளர்ந்து இன்று நாடு போற்றும் பெருமை பெற்றுள்ளார் அவர்.

ஆசிரியர் 'கல்கி' சிறந்த தேச பக்தர்; காந்தி பக்தர். நம் சென்னை முதலமைச்சர் உயர் திரு ராஜாஜி அவர்களிடம் இடையறாத பெருமதிப்பும் உள்ளமார்ந்த பக்தியும் பூண்டொழுகுபவர். நாட்டு நிமித்தம் மூன்று முறை சிறைக்கூடம் சென்றிருக்கிறார். 1941–ல் கடைசி முறை சிறை சென்றதிலிருந்து 'மூன்று மாதக் கடுங்காவல் பிறந்தது',

'கல்கி' தமிழுக்கு, தமிழர்கட்கு, தமிழ்நாட்டுக்குச் செய்து வரும் சேவைக்கு தமிழ் நாடும் தமிழ் மக்களும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்கள். ஆசிரியர் 'கல்கி' அவர்களது தமிழ்த் தொண்டும், பெயரும் புகழும் என்றும் நிலைத்து வாழ விரும்புகிறோம்; வேண்டுகிறோம்! ★

Phone: 55021 Tel: "LEDGER"

எமது வாடிக்கைக்காரர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

அச்சடிப்பதற்கும் இதர உபயோகங்களுக்கும் ஏற்ற எல்லா விதமான காகிதங்கள், அட்டைகள், காலிகோ, நியூஸ் பிரிண்ட், ஸ்ட்ரா போர்டுகள், ஆர்ட் பேப்பர் பாக்கிங்களுக்கு உபயோகமான எல்லா விதமான பேப்பர்கள், ஸ்டேஷனரி சாமான்கள் முதலியவைகள் எங்களிடம் கிடைக்கும்.

பழனியப்பா & கம்பெனி

45, பத்ரையன் தெரு, சென்னை—1.

மதுரை ஸ்டாக்கிஸ்ட்:

பழனியப்பா & கோ.,

38, கீழாவணி மூலவீதி, மதுரை.

எமது பொங்கல் வாழ்த்துக்கள்

"கேவீஸ்"

தாமரை மார்க்கு தேன்

K. V's. LOTUS Brand Honey

பாலர் முதல் விருத்தர் வரை விரும்பிப் புசிப்பதும், ஆரோக்கியத்திற்கு அவசியமானதும், பாலர் வளர்ச்சிக்கும் முகமலர்ச்சிக்கும், இன்றியமையாததுமான **கேவீஸ் தாமரை மார்க்கு தேன்** எல்லா அளவுகளிலும் எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

கேவீஸ் தாமரை மார்க்கு கவனித்து வாங்குங்கள்.

K. வீராசாமி
தேன் வியாபாரம் & சோனல் ஏஜண்ட்,
P. B. 529, கோயமுத்தூர்.

குதூகல பொங்கல் தினத்திற்கு
அனைவருக்கும் நமது மனமார்ந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

இந்தியா லைப் & ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொஸைடி, லிமிடெட்

தலைமைக்காரியாலயம்: கோயமுத்தூர்.

★

ஆயுள், மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் செய்கிறோம்.

★

ஜனவரியிலிருந்து மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் சந்தா குறைக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ M. S. பழனியப்ப முதலியார், B. A.,
சேர்மன் & Mg. டைரெக்டர்.

ஸ்ரீ C. R. சிவசுப்ரமண்யம், B. A.,
காரியதரிசி.

பொட்டை

தி. ஜானகிராமன்

"பொட்டை, ஏ பொட்டை, யாரு உள்ளார? பொட்டை இருக்கானா?"

"யார்ரு அது கட்டை!"

முதல் குரல் வாசலிலிருந்து வந்தது. இரண்டாவது, உள்ளேயிருந்து வந்த பதில். சன்னாசி, சாப்பிட்டுக்கொண்டிருந்தவன் ஆத்திரமாகப் பதில் கொடுத்தான்.

"ஏ பொட்டை"

"யார்ரு பய. மவன் உத்தண்டியாரு தத்துப்பய குரலால்ல இருக்கு. திமிரு பிடிச்ச கழுதை" என்று சன்னாசி முணுமுணுத்தான்.

"ஏ சன்னாசி, காது கூடவா அடைச்சிப்போச்சு".

"எண்டா".

"எண்டாவா ம்ஹ்ம், யாருன்னு தெரியலே போலிருக்கு!"

"தெரியுதே கட்டை யின்னிட்டு," என்று ஒரு புன்சிரிப்புடன் சன்னாசி வெளிப்பட்டான். அந்தப் புன்சிரிப்புக்கு என்ன பொருள் என்று தெரியவில்லை. புன்சிரிப்புக்குப் பொருள் கொடுப்பது கண்தான். ஆனால் சன்னாசியின் முகத்தில் கண் இருந்த இடம்தான் இருந்தது.

கண் இல்லை. உண்மையாகவே அவன் பொட்டைதான்.

"கட்டையுமில்லே, மொட்டையுமில்லே!"

"என்ன சேதி?"

"பெரிய உடையாரு வரச் சொன்னாருடா! முள்ளு அறுக்கனுமாம். போரியா?"

"சரி, போறேண்டா"

"போறண்டாவா? என்னடா டா எல்லாம் வலுத்துப் போச்சு. இன்னமும் யாருன்னு தெரிஞ்சுக்கலியாடா?"

"அதான், தெரியுதேடா, கட்டைன்னிட்டு".

"யாரு?"

"அதான், புத்தி கட்டை. இல்லாட்டி நேத்து ரவைக்கிப் பொறந்த பய இப்படிப் பேசுவானா? உத்தண்டியாரு வீட்டு தத்துச்சோறுல்ல இப்படிப் பேசச் சொல்லுது. நானும் பாத்துக்கிட்டே இருக்கேன். வாறபோதே, பொட்டைன்னுகிட்டே வந்தே. அப்புறம் டாங்கிறே, டேய்ங்கறே. எண்டா தம்பி, நாலு வேலிப் பங்குக்குத் தத்துப் போயிட்டா, நாக்கைக்கூட போன போக்குக்கு நீட்டிக்கிடலாம்னு நெனச்சிட்டியாக்கும்! நீ ஒண்டிப்பயலா பொறந்திருந்தா உன்னை எவண்டா தத்துக் கொடுத்திருப்பான்? அதுவும் உத்தண்டியாரு பொஞ்ஜாதிக்கு ஒரு தம்பி

சன்னாசிக்கு எந்தத் திட்டையும் வசவையும் பொறுத்துக்கொள்ள மனதில் வலுவுண்டு. 'பொட்டை' என்றால் ரோசம் பீறிட்டுக்கொண்டு வந்துவிடும்....!

இருந்தான்னு, அவங்க தத்து எடுத்துக்க உட்டுப்புடுவாங்களா? என்னமோ தரையிலே கெடக்க வேண்டிய பய, பாயிலே கிடக்கே! அதுக்காவ, நிதானம்கூட தலை கீளாப் போயிடணுமா, மரியாதையைக் கூடக் காத்திலே பறக்க விட்டுறணுமா? ஏண்டா தம்பி, உங்கப்பன் பாட்டன் எல்லாம் தெரியாதுன்னு நெனைச்சுக்கிட்டா பேசுறே? எனக்கு வயசு என்னா ஆச்சு தெரியுமா? நல்ல கண்ணோடே போய் கும்மாணத்துலே ரெண்டு மாமாங்கம் பாத்தேன். பொட்டக்கண்ணோடே அஞ்சு மாமாங்கம் பாத்தாச்சுடா, தம்பி. அடாவாம்; டேய்யாம். நுக்கினியூண்டு பய் நீ. மட்டு மரியாதெல்லாம் பணத்துக்குத்தான் உண்டுன்னிட்டு எண்ணிக்காதே. வயசுக்கும் உண்டு, தெரியுமில்ல? பொட்டை பொட்டைன்னு கூப்பிடுறியே. யாரு பொட்டை? வயசு வந்தவனைத் தக்குப்பிக்குனு பொட்டைக் கார்வார் பண்றியே, நீ பொட்டையா, நான் பொட்டையா?"

"சர்த்தாண்டா, சரி, நீ பாட்டுக்குப் பேசிக்கிட்டே போறியே, என்ன? கொட்டிக் கொட்டியளந்தா, பொட்டைக்கண்ணு தாமரைக்கண்ணாப் போயிடும்னு நெனப்புப்போலேருக்கு"

"தம்பி, நிறுத்திக்க. இன்னமே பேசினியோ சின்னத்தனமாப் போயிடும்...ம்! உன்னைச் சொல்லி என்ன? உத்தண்டியாரு உன்னைப் போய்த் தத்து எடுத்துக்கிட்டாரே! உலகத்துலே புள்ளேயே இல்லேல பாரு. தூது வந்த பய சேதியைச் சொல்லிப்பிட்டுப் பளிச்சின்னு போவானா! வம்பு வளத்துக்கிட்டே நிக்கிறியே, என்னடா? போடா, வாரேன்னு சொல்லுடா"

"நான் தூது வல்லேடா. வய வெளிக்குப் போறேன். போறப்போ கண்டு சொல்லச் சொன்னாரு உடையாரு, சொன்னேன். திருதராட்டிர மவாராசா பாரு, உங்கிட்ட தூதல்லெ வருவான். கழுதை பொட்டையா இருந்தாலும்'னிட்டு என்னமோ சொல்லுவாங்களே, அப்படில்ல இருக்கு கதை" என்று சொல்லிக்கொண்டே உத்தண்டியாரின் தத்துப்பிள்ளை முத்துக்கிட்டன் போய் விட்டான்.

"பய மவனுக்கு ஆண்மையேப் பாத்தியா? தப்புப்பண்ணிட்டேன். போனாப் போவுது. மாப்புவிட்டுடுங்கன்னு சொல்லிட்டுப் போகவேண்டிய பய, கன வெறைப்பால்லெ போறான். யாரு தம்பி, அங்கே சுப்பிரமணியனா!'

"ஆமாம், தாத்தா"

"கேட்டுக்கிட்டுத்தானே இருந்தே, உத்தண்டியார் கொள்ளி போட மவன் புடிச்சார் பாத்தியா? தத்தாறிய் பய. என்னை வந்து பொட்டைங்கிறான்"

"உடுங்க தாத்தா, தொலையறாரு, எல்லாம் வயசானா சரியாப் போயிடுது".

"என், இப்ப என்ன வயசு கொறைச்சலோ அந்தப் பயலுக்கு? இருபத்தெட்டு ஆவுதாம். பய படுகைப் பச்சை மூங்கி மாதிரி வளர்ந்திருக்கானும். வயசானாச் சரியாப் போயிடும்கிறியே. பொட்டைப் பயன்னு சொன்னானே அது மட்டும் சரியா?"

"பொட்டைன்னு சொல்லாமே, கண்ணு குருடு, கண்ணு இல்லாதவரு பாவம்னு சொன்னா சும்மாத்தானே இருப்பீங்க"

"யாரு? நானா சும்மா இருப்பேன்? எனக்குக் கண்ணு தெரியாதாப் போல உங்களுக்கெல்லாம் தெரிஞ்சாப் போதும்டா. இந்த எம்பத்தி

ரண்டு வயசுக்கட்டை நடக்கிற நடை அவன் நடப்பானா, இல்லே நீ தான் நடப்பியா? சொல்லேன். ஒரு அடி அடிச்சேனா இந்தக் கையாலெ, அவன் தாங்குவானா? இல்லெ நீதான் தாங்குவியா, சொல்லென். போன வருசம் மன்னார்குடிக்குப் போயிட்டு வந்தேனே, இந்தத் தடிதானே கூட வந்திச்சு. ஒரு பயலைப் பாத்து "யேப்பா, கண்ணு குருடு, கொஞ்சம் அப்பாலே கொண்டு விட்டிடேன்னு சொன்னதுண்டா? இனிமேத்தான் சொல்லப் போறேனா. யோகாம்பா சொத்துப்போயி வருசம் முப்பத்தேழு ஆச்சு. அன்னைலேந்து இப்ப வரைக்கும் நான் தான் பொங்கித் திங்கறேனா! எந்தப் பயமவடா ஆக்கிப் போட்டா? நான் சம்பாரிக்கிறதுதான் உன்னாலெ சம்பாரிக்க முடியுமா? என்னடா தம்பி பேசாம நிக்கிறே, இப்படி வாயேன் ஒரு சேதி"

சுப்பிரமணியன் அருகில் நெருங்கினான். நெருங்கியது தான் தாமதம், "ஐயையோ, தாத்தா விடுங்க தாத்தா" என்று வலி பொறுக்க முடியாமல் கூச்சல் போட்டான். தாத்தாவின் எலும்புக் கையின் இரும்புப் பிடியில் அவனுடைய ஐந்து விரல்களும் சிக்கி நொறுங்கிக் கொண்டிருந்தன. தாத்தா பிடியைத் தளர்த்தினார்.

"இல்லேடா தம்பி. என்னைப் பாத்து பொட்டைப் பயன்னு சொல்றானே! பொட்டப்பய பிடியா இதன்னு கேக்கறத்துக் காவத்தான் பிடிச்சேன். எனக்கே தெரிஞ்சுக்கணும் பாரு"

"போங்க தாத்தா, திருதராட்டி இரும்புத் தூணைக் கட்டிக்கிட்டாப் போலத்தான் இருக்கு. உங்கமாதிரி ஆளுங்களுக்கெல்லாம் நெஞ்சு இப்படித்தான் இருக்கும் போலிருக்கு! யேப்பப்பா, மொளவா அரைச்சுத் தடவினாப்பல்ல இருக்கு"

சன்னாசி சிரித்தான். "பார்றாலே, பேசிக்கிட்டே நழுவிப்பிட்டானே பயமவன். கிட்ட நின்னுல்ல பேசியிருக்கணும்"

சன்னாசிக்கு எந்தத் திட்டையும், எந்த வசவையும் பொறுத்துக் கொள்ள மனதில் வலுவுண்டு. "பொட்டை" யென்றால் ரோசம் பீறிக்கொண்டு வந்துவிடும்.

மேலத் தெருவில் பத்துப் பன்னிரண்டு குடிசைகள் இருந்தன. மேலக் கோடிக் குடிசையில்தான் சன்னாசி எண்பத்துநான்கு வருஷமாக வாழ்ந்து வருகிறான். அவனுக்கு விவரம் தெரியும்போது ஆடு தின்னும் பொட்டலாகக் கிடந்த திட்டு இப்போது வெயிலே அறியாத புளியந் தோப்பாக மாறியிருக்கிறது. தெரு வாசலைத் தவிர மற்றப் பக்கங்களெல்லாம் ஒரே நிழல் தான்.

சிறு பயலாக இருந்தபோது உடையார் வீட்டு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான் சன்னாசி. பதினா

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு திரு தி. ஜானகிராமன் அவர்களுடைய கதைகள் புகழுக்குகந்த பெரும் பங்கைச் செய்திருக்கின்றன. இவருடைய கதைகளில் உரையாடல் அழகும், கதையுறுப்பினர்களின் குணச்சித்திரமும் குறிப்பிடத் தகுந்தன. உயிருள்ள தமிழ் நடையில் பல உன்னதச் சிறுகதைகளை இலக்கிய உலகத்திற்கு அளித்திருக்கிறார். 'ரத்தப்பூ', 'பஞ்சத்துக்கு ஆண்டி', 'கடன் தீர்ந்தது', 'வேறு வழியில்லை', 'ரஸிகனும் ரஸிகையும்', 'வாழ்ந்த நோக்கம்', 'தூக்கம்' முதலியன இவரது சிறந்த அமைப்புக்கள்!

வயது வரையில் அந்த வேலைதான் அவனுக்கு. அந்த சித்திரை மாதம் வெயில் தீயாகக் கொளுத்திற்று. தெருவுக்குப் பின்னால் இருந்த வெகு காலத்து வேப்பமரம் கூட இலை பழுத்துச் சருகாகி, முக்கால் மரம் பட்டுப் போய்விட்டது. வேம்பு வாடுவதென்றால் எப்பேற்பட்ட வெயிலாக இருக்க வேண்டும்! சன்னாசிக்குப் புளியம்பழம் பலாப்பழம் மாதிரி. பத்து அரைக்கல்லை எடுத்து வீசினால் ஒன்னரைத் தூக்குப்புளியங் காய் சட சடவென்று தரையில் கொட்டும். பொழுது சாய்ந்து மாடுகளைத் திரும்பி ஓட்டிப் போவதற்குள் அத்தனை புளியும் அரைக்கால் படி கல்லுப்பும் சன்னாசி வயிற்றில் ஜீரணமாகிக் கொண்டிருக்கும். அமாவாசையன்று சன்னாசிக்கு அப்பன் விரதம் இருந்து பொழுது சாயத்தான் சாப்பிடுவான். சோறு அப்போது தான் ஆக்குவாள், ஆத்தாள். சன்னாசிக்குக் கூடவா பட்டினி! அரைக்கல்லின் உதவியால் தூக்குப் புளியைப் பலகாரம் பண்ணி விட்டான். வெயிலில் தலைமயிரே எரிந்து விடும் போலிருந்தது. உடம்பெல்லாம் எரிந்தது. நன்றாக அமிழ்ந்து முழுக வேண்டும் போலிருந்தது. தண்ணீரைத் தான் காணோம். மேலத் தெருக் குட்டை பாளம் பாளமாக வெடித்து வறண்டு கிடந்தது. கீழத் தெருக் குட்டையில் இருந்த முழங்கால் நீரில் உத்தண்டியார் உடையார் வீட்டு எருமைகள் புதைந்து தண்ணீர்ச் சூடு தாங்காமல் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்தன. குளிக்க இடம் எங்கே? பிடாரி கோயில் ஆலந்தோப்புக்குப் போனான், சன்னாசி. ஆல நிழலில் இருந்த கிணற்றில் இறங்கினான். அப்பாடா! ஜில்லென்றிருந்தது தண்ணீர். தொடை மட்டுத் தண்ணீர் தான். உட்கார்ந்தால் தலை முழுகும். ஐந்தாறு நாழி அப்படியே கிடந்தான். அல்லி இலைகளைப் போட்டுப் படுத்தாற் போல ஜிலு ஜிலுவென்று இதமாக இருந்தது.

"எலே, யார்ரு அது" என்று இருள் கவிகிற நேரத்திற்கு ஒரு குரல் கேட்டது.

"ட்ருவ், நான் தான் தண்ணிப் பிசாசு" என்று குரலை மாற்றிப் பயங்கரக் குரல் கொடுத்தான் சன்னாசி.

"ஓகோ, தண்ணிப் பிசாசா? தண்ணிப் பிசாசுங்களை விரட்ட இந்தத் துணி தோய்க்கிற கல்லுதான் ஆயுதம்", என்றார் பூசாரி. "ஏ பிசாசே, போடட்டுமா இந்தாப் பாரு கல்லை?"

சன்னாசி திடுக்கிட்டு நிமிர்ந்தான். தலை நொருங்கியே போய்விட்டது மாதிரி இருந்தது. சாலையிலிருந்து கிளம்பி, பிடாரி கோவில் துணி தோய்க்கிற கல்லாக மாறிய அம்புக் குறியிட்ட சர்க்கார் வைத்த கருங்கல் கிணற்றுக் கட்டையில் பாதிக்கு மேல் நீட்டி நின்று விழக்காத்துக் கொண்டிருந்தது.

"ஐயையோ, போட்டுறாதையா, ஐயா ஐயா, ஏறிடறேன்" என்று பயக்குரல் கெஞ்சிற்று.

"யார்ரு பய, சன்னாசியா, இஞ்ச வாடாலே" என்று ஏறினவன்கையை உடும்பாகப் பிடித்துக் கொண்டார், பூசாரி.

"என்னடா பண்ணிட்டு இருந்தே"

"குளிச்சேன், மாமா!"

"டேலெ எருமை, முழுகிக்குளிக்க என் கோவில் கிணற்றையா பாத்தே. வண்டாலே" என்று மாக்கு மாக்கு என்று முதுகில் குத்துக்களாகச் சொரிந்தார் பூசாரி. வேறு யாரும் தாங்கமுடியாத குத்து.

"எங்க அப்பன்கிட்டே சொல்லாதீங்க மாமா, என்னை அப்படியே பலி வச்சிடுவாரு. உங்களுக்கு அடிமையாக்கிடக்குறேன்" என்று காலில் விழுந்தான் சன்னாசி.

"சீச்சீ, கழுதெ! ஓடு களுதை"

சன்னாசி எடுத்தான் ஓட்டம்!

கொளுத்தும் சூட்டில் அலைந்த அலைப்பு, புளியங்காய்ப் பலகாரம், ஐந்து நாழிக் கிணற்று முழுகல்—சன்னாசி காய்ச்சலென்று படுத்தான். ஐந்தாறு நாள் காய்ச்சல் அடித்தது. உடலெல்லாம் சிவந்தது,

மூத்துக்கண்டது. பிறகு ஒவ்வொரு மூத்தும்பெரிதாயிற்று. ரத்தின வைத்தியர் "அடி தாயே, காப்பாத்தணும்; யப்பா, இது மாரியாத்தா விளையாட்டு. அம்மை, பெரியம்மை. ஆமாம், நான் போறேன்" என்று வந்த சுருக்கில் எழுந்து போய் விட்டார். வேம்பு வாடுகிற வெயிலில் ஊர் முழுவதுமே பெரிய அம்மை சூரையாடிக் கொண்டிருந்தது. சன்னுசி கண்ணைப் புண் மறைத்தது. இறக்கம் கண்டபோது, கண்ணைத் திறக்க முடியவில்லை.

"ஆத்தா, ஒண்ணுமே தெரியலியே", என்ருன். கண் திறந்துதான் இருந்தது; ஆத்தாள் பார்த்தாள். ஓங்கி வயற்றிலே அடித்துக் கொண்டாள். அலறினுள். பிள்ளைக்குக் கண்ணிரண்டும் போய்விட்டது. போன கண்கள் திரும்பி வரவில்லை. போயே போய் விட்டது. கண்கள் இருந்த இடத்தில் இரண்டு ஆழ்ந்த குழிகள் தாம் மிஞ்சியிருந்தன. புருவத்திலிருந்து சுவரொடுத்தாற் போல் செங்குத்தாக விழுந்தன இமைகள். சவத்தின் முகத்தைக் கழுத்தில் ஒட்டவைத்தாற்போலேதான் இருந்தது.

சன்னுசி நல்ல உயரம். இப்போது பாக்கு மரத்திற்கு முட்டுக் கொடுத்தது போல் அவனத்தனை உயரத்திற்கு ஒரு கழியைத் தேடிக் கொண்டான். அந்தக்கழி இன்னும் அவனை விட்டுப் பிரியவில்லை. அதுவும் கூலி, சோறு கேட்காமல் ஐம்பத்தெட்டு வருஷம் சேவகம் பண்ணிவிட்டது அவனுக்கு. உயிர் இருந்தால் வேலையிலிருந்து ஓய்வு பெற்று மூன்று ஆண்டாகியிருக்கும்.

கழி சாமானியக் கழியில்லை. மூங்கில் கழி. கால் கட்டை விரலால் ஒன்றரை விரல் பருமன் இருக்கும். சன்னுசியின் முகவாயைத் தொடும். அதாவது குறையாமல் நாலு முழம். கண் இரண்டு போனதற்கு மாற்ருக கண்ணிரண்டாயிரமாக அது மாறி விட்டது. எத்தனை குருடர்கள், கைக்கோலின் ஒரு நுனியைப் பற்றிக் கொண்டு, பெயர் தெரியாத ஆளிடம் இன்னொரு கோடியைக் கொடுத்து, சாலையையும் ஊரையும் கடக்கிருர்கள்! சன்னுசி கைத்தடி இந்தக் குபோதித் தடிகளைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டது. குருடனுக்கு ஒரு கோலாம். அந்தக் கோலுக்கு ஒரு ஆளாம். தனக்கோ, தன்னுடைய சன்னுசிக்கோ இந்த இழிவைத் தேடித்தர அது விரும்பவில்லை. அவனுக்கு ஒரு ஆண்மையைக் கொடுத்து விட்டது அது! அது வந்த நாளாக அவன் எந்த மனிதனையும் எதிர்பார்த்ததே இல்லை.

சுண் போனதற்காக எந்த வேலை நின்று விட்டது அவனுக்கு?

அறுபது வயது வரையில் தடியைக் கரையில் வைத்துவிட்டு ஆற்றில் நீச்சல் அடிப்பான். அது வற்றிய கோடையில் கீழக் குளத்தை நீச்சலடித்து இரண்டு பண்ணிவிடுவான். தடியை ஊன்றிக் கொண்டு இருபத்தியோரு வயல்கடைகளை வரப்பில் கால் இடாமல் கடந்து, அப்பன் பயிர்ச் செலவு செய்த அரசாணியிலும் ஓலையாத்தானிலும் இறங்கிக் களை பிடுங்குவான். அப்படியே சுமந்த கட்டாக ஒரு கட்டுப்புல் அறுத்துச் சுமந்து வந்து மாட்டுக்குப் போடுவான். காலையில் அலக்கை எடுத்துப் பிள்ளையார் கோவில் அரசமரத்தில் தழை பிடுங்கி ஆட்டுக்குப் போடுவான். அப்பன் வாதம் வந்து இரண்டு மாதம் படுக்கையாகக் கிடந்தபோது நிலத்தை உழுதது யார்? அவன்தான்! ரயிலில் வேலை பார்க்கிற ஆலங்குடியார் மகன் ஆறுமாதத்திற்கு ஒரு முறை நிலத்தைப் பார்க்க வருவான். பதினுறு வருஷமாகியும் இன்னும் தன்பங்கு எங்கே இருக்கிறதென்று அவனுக்கு நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. "தம்பி, உங்க லட்சுமணன் எங்கே இருக்கு, சொல்லு பார்ப்போம்" என்று அவனைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பான். இந்த வெட்கக் கேட்டைச் சிரித்து மழுப்பி

முழுங்கிற ஆலங்குடிப் பையன் மூஞ்சி சன்னாசிக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரியும். "இஞ்சேருந்து மூணாவது கட்டளை, தம்பி. உடைமைக் காரங்கள்ளாம் இப்படியிருக்கிறீங்க" என்று சன்னாசி, தெரியாத கண்ணைச் சிமிட்டிச் சிரிப்பான். ஆலங்குடிப் பையனுக்கு எல்லா வயலும் தன் வயல் மாதிரி தான் இருக்கும்.

சன்னாசி அலக்குக் கழியைப் பிடித்து மாமரத்தில் எறித் தடவினால் ஒவ்வொரு வடுவையும் கையால் அந்த அலக்கு மூலமாகவே பார்த்த அதிசயத்தை மனிதன் செய்கிற வேலையென்று சொல்லமுடியும்? அவன் மரத்தில் எறி உலுக்கின புளியங்காயை எல்லாம் சேர்த்தால் நாலு வைக்கோல் போர் இருக்கும்.

கடைசியில் சர்க்காரே அவன் பார்வையை ஒப்புக்கொண்டது. அதாவது மணியக்கார வாண்டையார் அவனை வெட்டியானாகப் போட்டு ஏழரைரூபாய் சம்பளம் கொடுத்தார். விடிந்து எழுந்து, ஒன்பது கல் சாலையோடு நடந்து தாசில்தாரிடமிருந்து தபால் வாங்கி வருவான். நாற்பது வயது வரையில் அந்த உத்தியோகம் நிலைத்துவிட்டது. மணியக்காரர் வேட்டியை ஒழிந்த நேரத்தில் தோய்த்துப் போடுவதற்கும் அவன் முகத்தைச் சுளிக்கவில்லை. இரண்டு மைலில் நெல்மிஷின் இருந்தது. நாலுநாளைக் கொருமுறை குடமுருட்டி ஆற்றைக் கடந்து ஆறுமரக்கால் நெல் அரைத்துக்கொண்டு வந்து விடுவான்.

அவ்வளவும் செய்கிறவனைப் பொட்டையென்று யார் சொல்வது? ஆகவே, வெட்டி வேலை கிடைத்த பிறகு யோகாம்பாளைக் கட்டிக் கொடுக்க அவள் அப்பன் தயங்கவில்லை. ஒருகால் வீந்தல் அவளுக்கு. சன்னாசி, "ஆமாம். சதிராடப்போறாளா? சரிதான்னு போத்தா" என்று அவளைக் கட்டிக்கொண்டுவிட்டான். அவனுக்கு உள்ளம் வெற்றியில் விம்மிற்று. அது யாருக்குத் தெரியும்? ஜன்னல்தான் மூடியிருக்கிறதே! அது யோகத்திற்குத்தான் தெரிந்தது. வாசற்கதவைச் சாத்திவிட்டு, "யோகம் நான் ஒண்ணு சொல்றேன். கோவப்படக்கூடாது. நில்லு சொல்றேன் இப்படி. இந்தப் பொட்டையனை ஒரு புருசனா நினைச்சு இந்த வீட்டுக்கு வெளக்கேத்திவச்சே பாரு! நான் சும்மா இருந்திடறதா? இந்த விளக்குத்தான் என் அறிஞ்ச தெய்வம்!"— என்று நெடுஞ்சாண் கடையாக விழுந்து அவள் காலைப் பற்றிக்கொண்டான்.

"அத்தான், அத்தான்" என்று பதறிப்போய் அவள் அவனைத் தூக்கினாள். அவன் தலை நனைந்து சுட்டது; அவள் காலும் நனைந்து சுட்டது. உடல் நடுங்கிற்று. "அத்தான், கண் இருந்தா உலகத்தையே ஆண்டிருப்பீங்க அத்தான், அதான் போயிடிச்சு" என்று நெஞ்சு விம்ம விம்மச் சொன்னாள் அவள்.

கலியாணம் ஆன இரண்டுவருஷம் கழித்து வந்த மாமாங்கத்திற்கும், அடுத்த மாமாங்கத்திற்கும் அவளோடு கும்பகோணம் போய் வந்தான் சன்னாசி. அதற்கும் அடுத்ததற்கு அவன் தனியாகத்தான் போக வேண்டியிருந்தது.

யோகாம்பாள் அணைந்துவிட்டாள். நல்ல வேளையாகப் பிள்ளை குட்டி பிறக்கவில்லை. "மச்சான், மச்சான்' என்று அவள் அணைத்துக் கொண்டிருந்த அந்த அய்யம்பேட்டை மூங்கில் தடி மட்டும் அவனோடு இருந்தது. அந்த மச்சானோடு அவன் மன்னார்குடித்தேர் பார்த்துவந்தான். எட்டுக்குடி கடாவெட்டுப் 'பார்த்து'வந்தான். மாயவரத்துக் கடைமுழுக்குப் போட்டு வந்திருக்கிறான். ஆர்யமாலா சினிமாக்கூடப் பார்த்திருக்கிறான். அப்போது மட்டும் அந்தத் தடி பேசவில்லை. சுப்பிரமணியன்தான் ஒவ்வொன்றாக விளக்கவேண்டியிருந்தது. வாயில்லையே என்று அந்தத் தடி அப்போதுதான் வருந்திற்று! ஆனால் இன்னும் நாலுமைல் சுற்றில் காக்காமுழியான் அரிச்சந்திர நாடகமோ, ஐயனார் நாடகமோ எது போட்டாலும் சன்னாசிக்கு இருப்புக் கொள்ளாது. 'மச்சானை' மட்டும் இட்டுக்கொண்டு பார்த்துவிட்டு வந்துவிடுவான்.

உடையார் வீட்டுக் குழம்பில் கொதிக்கிற புளி அவன் அரிவாள் மணையில் அமர்ந்து கொட்டை எடுத்த புளிதான். அவர் மாந்தோப்பு வேலி அவன் அறுத்துக்கட்டின முள்தான். மணியக்காரர் வீட்டிலேயும் இதே செய்திதான்.

சன்னாசிக்கு முள் அறுக்கிறாப் போலவே இல்லை.

"நானா பொட்டை? பொட்டைதான்! கண்ணு இல்லைதான். எத்தினியோ பேருக்குத்தான் கண்ணு இல்லே. கணக்குப்புள்ளே சேரிக் காடெல்லாம் வாங்கி, சக்கரை வாங்கிக்கிறாராம். அதைப் பார்க்கக் கண்ணு இல்லே ஊராருங்களுக்கு. அதே கணக்குப்பிள்ளெ ஊரிலே கச்சிகட்டி ரண்டு பண்றான். மன்னார்குடியாரு மேலே மைனர்வியாச்சியம் போடறான்னு தனபாலுப்பயல் இருக்கானே—திருட்டுத் தத்தாறிப்பய அவனைக் கிளப்பிட்டு அவுரை வவுரு எரிய எரிய அடிக்கிறான். அவனைப் பார்க்க சாமிக்கே கண்ணில்லெ, நான் பொட்டையாம்..." என்று மூச்சுவிடாமல் பொருமிக்கொண்டிருந்தான்.

முள்ளுக்கட்டைத் தலையில் தூக்கி வரும்போது, கண்ணுக்குள் தெரிந்த சிவப்பு மறைந்து கருத்துவிட்டது. அந்திகூட மங்கி இருள் கவ்விவிட்டதை அறிந்து, சன்னாசி 'மச்சானை' மூன்றாம் காலாக வைத்து நடையை எட்டிப்போட்டான்.

காற்றுகூட உறங்கிக்கொண்டிருந்தது. கார்த்திகை மாதக் கடைசி முன் பனிக் குளிர் லேசாக உடலைச் சிலிர்க்க அடித்தது.

"நானா பொட்டப்பய? கண்ணிருந்தாமட்டும் போதுமா? வார்த்தையிலே சுத்தம், நெஞ்சிலே சுத்தம் வாணுமா'ன்னு கேக்கறேன்! கண்ணில்லாட்டி என்ன? எட்டுக்குடி கடாவெட்டு கண்ணில்லாமத்தான் பாத்தேன். நேரிலே பாக்கறாப்பிலே தான் இருந்திச்சு. அந்த ஊர்லெ எவன் எட்டுக்குடிக்குப் போயிருக்கான். உடையாரே போனதில்லையே எத்தனையோ திருவிளா, எத்தனியோ நாடகம், கண்ணிருக்கறவன் எவன் இவ்வளவு பாத்திருக்கான். வெங்கைப் பயலாயில்ல?"

இடதுகை தலையிலிருந்த முள்ளுக் கட்டைப் பார்த்துக்கொண்டிருந்தது. வலது கைத் தடி தெருவுக்குத் திரும்பும் வாய்க்கால் மதகைத் தட்டிற்று. வாய்க்காலைக் கடந்தவுடன் மணியக்காரர் சத்திரம். எப்போதும் அங்கே கூட்டம். அதாவது பரதேசி, வழிப்போக்கு என்று இரண்டு மூன்று பேராவது தங்கி செங்கல்லில் தீ மூட்டி சோறு ஆக்கிக்கொண்டிருப்பார்கள். ஆனால் முன் கொட்டகை இரண்டு நாளைக்கு முன் விழுந்துவிட்டதாம். திண்ணையை அடைத்துக் கொண்டிருக்கிறதாம். அதனால்தானோ என்னவோ, அங்கு பேச்சு மூச்சில்லை. சத்திரத்தைக் கடந்தான் சன்னாசி. பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் கும்பிட நின்றான். கோயிலுக்குப் பின் சுவரை ஒட்டினாற் போல தஞ்சாவூரார் தோட்டத்தில் பாதிரிமரம் வளர்ந்திருந்தது. மரத்துக் கவட்டியில் திடீரென்று குருவிக் கூச்சல் கேட்டது. அங்கு ஏதோ

குருவி கூடுகட்டியிருந்ததாம். சுப்பிரமணியன் போன வெள்ளிக்கிழமை தான் சொன்னான்.

எல்லாப் பறவைகளும் ஒடுங்கி உறங்குகிற வேளை. என் இந்தக் 'கிசுமுசு' என்று சன்னாசிக்குச் சந்தேகம் வந்துவிட்டது. முள்ளுக்கட்டை கோயில் கதவுக்கு முன்னால் வழியடைத்துக் குந்தினாற்போல வைத்தான். பேச்சுமூச்சில்லே. கோயிலுக்குப் பின்னால் பிராகாரத்தில் யாராவது இருக்கிறானோ என்று நெஞ்சில் அரிப்பு எடுத்தது! அவ்வளவுதான் சரசரவென்று காலடி ஓடிற்று.

ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான் சன்னாசி.

"யார்ரூது? வெளியே ஓட முடியாது. வளியிலே முள்ளுக்கட்டு கிடக்கு."

காலடி பின்னால் நகர்ந்தது. நெருக்கிக்கொண்டே நகர்ந்தான். பிராகாரம் மிகவும் குறுகல். இரட்டை நாடியா இருந்தால் ஒரு ஆள்தான் போகலாம். சுவரை நோக்கிப்போனபோது ஒரு மனிதக் கால் கையில் பட்டது. குரங்குப் பிடியாக அதைப் பிடித்துவிட்டான் சன்னாசி.

"எலே, யார்ரூ பய, தப்பிச்சிக்கிட்டு ஓடலாம்னு பாக்கறே. வாடா இப்படி" என்று காலுக்கு உடைமைக்காரனைக் கீழே தள்ளினான். அதற்குள் வாசலில் வளையல் சத்தம் கேட்டது. முள்ளுக்கட்டு சற்று நகரும் ஓசையும் வந்தது. அதுவும் சன்னாசியின் காதில் விழுந்தது.

"ம்...ஹ்ம். அப்படியா சேதி. யார்ரூ பய நீ, சொல்லு"

"மாமா மாமா, இரையாதீங்க நான்தான், நான்தான்..."

"நான் முதலில் உலகத்தைச் சார்ந்தவன்; பிறகு இந்தியன்; அப்பால் தமிழன். உலகம் என் உடல்; இந்தியா என் உள்ளம்; தமிழ்நாடு என் உயிர்."

—திரு. வி. க.

"அட, நீயா! அட பாவிப் பயலே உத்தண்டியாரு காதிலே உளுந்திச்சோ, நாக்கைப்பிடுங்கிச் செத்துப் பூடுவாங்களே. மானிடார் அவரு."

உத்தண்டியாரின் தத்துப்பிள்ளை முத்துக்கிட்டனின் உயிரும் உடலும் இருண்டுகொண்டிருந்தன.

"எலே, யாருடா அது குட்டி? பயமவ ஓடிப்போயிட்டாளே. உள்ளதைச் சொல்லிப்பிடு, செஞ்சத்தைச் சொல்லிப்பிடு"

"மாங்குளத்தான் மக"

"யாரு, காளிமுத்தாடா! அட பாவி"

"ஆமாம், மாமா, மாமா"—பாம்பு வாயில்பட்ட தேரைமாதிரி முனகினான் முத்துக்கிட்டன்.

"டெலே, சேரியிலே பூந்து விளையாட ஆரமிச்சிட்டியா. எண்டாலெ, யார்ரூலெ பொட்டை? தெய்வம் குடியிருக்கிற இடமாப் பாத்து இந்த விளையாட்டு விளையாடலாம்னிட்டு வந்தியாடா? தெய்வம் என்னமாடா இருக்கும் இஞ்ச? எண்டாலெ, தெய்வம் இருக்குதே தெரியலியே உனக்கு? எண்டாலெ, யார்ரூ பொட்டை? நானா, நீயா? அக்கிரமக்காரக் களுதெ...இந்தத் தொண்டைதானே சொல்லிச்சி, பொட்டைன்னிட்டு! இப்படி நசுக்கினா என்னடா ஆகும்"

கழுத்துப் புடைத்து மூச்சுவிட முடியாமல், மரணக்குரல் கொடுத்தான் முத்துக்கிட்டன். பிடி தளர்ந்தது.

"யார்ரூ பொட்டை, சொல்லுடா!"

"நான்தான் மாமா, நான்தான் மாமா, என்னைக் கொன்னுடாதிங்களேன்...மாமா, மாமா தாங்கலியே! இனிமே சொல்லமாட்டேன். ஐயோ, ஐயோ" என்று அழுதான் பயல். வலது கைக் கட்டை விரலைப் பின்னுக்கு வளைத்து ஒடித்துக்கொண்டிருந்தான் சன்னாசி.

"ஐயோ, அப்பா, மாமா மாமா!" செத்துப்போய்விடுவான் போல் இருந்தது.

"வாடா இபபடி, உளுடா கால்லெ"

காலில் விழுந்தான் அவன்.

“சீச்சீ களுதெ, என் கால்லெ வாணும்டா, இந்த தெய்வத்துங் கால்லெ உளுடா. மறுபடியும் இந்தக் கல்லுலெ வந்து பூந்துக்கன்னு அவரைப் பார்த்து அளுடா”

மூத்துக்கிட்டன் மரம் மாதிரி விழுந்தான். இன்னும் வலது புஜம் சன்னாசியின் பிடியிலேதான் இருந்தது.

“சொல்றுலெ, இன்னமே இதெல்லாம் செய்யலேன்னு சொல்லு. யாரையும் பொட்டைன்னு சொல்லலேன்னு சொல்லு”

“இல்லை, இன்னமே சொல்லலே! உங்களை ஒண்ணும் சொல்லமாட்டேன்!”

மறுபடியும் சன்னாசியின் காலில் விழுந்து கெட்டியாகப் பற்றிக் கொண்டான் மூத்துக்கிட்டன்.

“மாமா, உங்களைக் கெஞ்சிக்கெஞ்சிக் கேட்டுக்கறேன். அப்பாருக்கிட்ட சொல்லி, ஊரிலெ சொல்லி, என் மானத்தைப் போக்கிடாதிங்க”

“இந்தப் பாரு இன்னம் மூணுமாசம் இந்த ஊர்லெ தலைகாட்டப்படாது, தெரியுதா? எண்டாலெ, கலியாணத்துக்கு இருக்கற பொண்ணையா கெடுக்க வந்தே! ஓடிப்போயிடு உங்க ஆயி ஊட்டுக்கு. திருவாரூரைவிட்டு, மூணுமாசத்துக்குள்ளார அசைஞ்சேன்னு தெரிஞ்சிச்சோ, உயிரை எடுத்துப்பிடுவேன்”

“போயிடறேன் மாமா. நாளைக்கு கருக்கல்லியே போயிடறேன். எனக்கு வெளக்கு எத்தி வைங்க, மாமா” என்று அழுதான் மூத்து.

“தொலைடா போ...எலே எங்க நழுவறே, எ பொட்டைப்பயலெ, முள்ளுக்கட்டைத் தூக்கித் தலையிலே வச்சுட்டுப்போடா, பொட்டைப் பயலே” என்றான் சன்னாசி!

முள்ளுக் கட்டைத் தூக்கிவிட்டான் மூத்துக்கிட்டன்.

“இன்னமே ஒளுங்கா இர்று பொட்டைப்பயலே. உத்தண்டியாரை நொந்து சாக அடிச்சிப்பிடாதே” என்று அவனைத் திட்டிக்கொண்டே சன்னாசி நகர்ந்தான். ★

திராவிடர் இலக்கியங்கள்

●

அறிஞர் அண்ணா

காதல்ஜோதி	2—8—0
ரங்கோன் ராதா	2—8—0
வள்ளிநாயகியின் கோபம்	1—4—0
தமிழகம்	1—0—0
தீழ்நிலை	1—0—0

மு. கருணாநிதி

பள்ளி வாழ்க்கை	1—0—0
களத்தில் கருணாநிதி	1—0—0
பெருமூச்சு	1—0—0

புலவர் குழந்தை

திருக்குறளும் பரிமேலழகரும்	2—0—0

கவிஞர் பாரதிதாசன்

குடும்ப விளக்கு—I	0—6—0
இசையமுது	0-12—0

தில்லை – வில்லாளன்

மல்லிகைத் தோட்டம்	1—0—0
மனப்போர்	1—0—0
தங்கத்தாமரை	1—0—0

இராதாமணாளன்

அன்னம்	1—0—0
இளவரசி	2—0—0
அரக்கு மாளிகை	2—0—0
சபதம்	1—0—0
பொற்சிலை	1—4—0

ஆசைத்தம்பி

மனித தெய்வம்	1—4—0
கிழக்கும் மேற்கும்	1—0—0
வெறுங்கூடு	1—0—0
நினைவுச்சுழல்	0-12—0
தியாகச்சுடர்	0-12—0

பாரி நிலையம்

59, பிராட்வே — சென்னை—1.

லன், ஆப்டோன், கலர் பிளாக்குகள்நல்ல முறையில்
குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

பொங்கல் வாழ்த்து

SPARTAN & CO.
BLOCK MAKERS

ஸ்பார்ட்டன் அண் கோ.,
10, பிராட்வே — சென்னை - 1.

பெரிய பிச்சைக்காரன் : (சிறியவனைப் பார்த்து "என்னுத் தம்பி, இப்பிடி பயந்து சாவுறயே. கீழே இறங்குன்னுத்தான் நம்ப எறங்கிக்கிரேமே! ரயிலு என்ன அந்த டிக்கட் பரிசோதனைக்காரரு தாத்தாவூட்டு ரயிலா.......?"

பொன்னி பொங்கல் மலர் 1953

கைராசி

எஸ். ஆறுமுகம்

அன்பு உள்ளம் அமைவதென்பது மரபுக்குணம். வடிவேலுவின் மாறாத, மாற்ற முடியாத அன்பின் இதயத்தை மாணிக்கம் கண்முன் காண முடிந்தது. அதுவேதான் வடிவேலுவின் கைராசி! பார்வதி தாலிப் பாக்கியம் பெற்றதும் அந்தக் கைராசியினால்தானே......!

மாணிக்கம்: யாரு வடிவேலுவா, வாங்க, வாங்க. அத்தி பூத்தாப்பிலே இருக்கே உங்க தரிசனம். ஏது, வேலை அதிகமோ?

வடிவேலு: கல்யாணகாலம் பாருங்க. வேலை மும்மரம்தான். நேத்து சாயந்திரத்திலிருந்து கொஞ்ச நேரம் கிடைச்சது; உங்களைப் பாத்து நாளாச்சேன்னு இப்படி வந்தேன்.

மாணிக்கம்: மீனாட்சி ஒருநாலு நாளா விடாம கேட்டுக்கிட்டு இருந்தா...

வடிவேலு: ஏன்! என்ன விசேஷம்? எங்கேயாவது கல்யாணப் பரிசுக்கு அர்ஜண்ட் ஆடர் ஏதாவது இருக்கா?

மாணிக்கம்: அதெல்லாம் ஒண்ணுமில்லே. பார்வதிக்கு ஒரு செட் வளையல் பண்ணணும்; அவ்வளவுதான். புது மாதிரி வளையெல்லாம் ஊரிலே வந்திருக்காம். அந்தமாதிரி வேணும்னு ஒரே தொந்தரவு. மீனாட்சி, அப்படியே வரபோது இன்னொரு தம்ளரிலேயும் காப்பி எடுத்திட்டு வா.

மீனாட்சி: இதோ, ஒரு நிமிஷத்திலே! ஆமாம், ராமசாமி எங்கே போயிட்டான்? அவன் காப்பி சாப்பிடல்லியா?

மாணிக்கம்: நான் வந்ததிலிருந்து அவனைப் பாக்கலியே.

வடிவேலு: யாருங்க, அது ராமசாமி?

மாணிக்கம்: ராமசாமியை உங்களுக்குத் தெரியாதா? அவன் தான் மீனாட்சியோட தம்பி. கல்கத்தாவிலே ஒரு கம்பனியிலே வேலை செய்யறான்.

வடிவேலு: அப்படியா, உங்க மச்சினன் கல்கத்தாவிலே ஒருத்தர் இருக்காரா, எனக்குத் தெரியாதே!

மாணிக்கம்: அவன் இங்கே வந்தாக்கூட ஒண்ணு ரெண்டு நாள் இருந்துட்டுப் போயிடுவான். இந்தத் தடவைதான் கொஞ்ச அதிக நாள் தங்கிருக்கான்.

மீனாட்சி: இந்தாங்க, இந்தச் சங்கிலி என் அம்மாவைப் பெத்த பாட்டி என் கல்யாணத்துக்குச் செஞ்சு போட்டது.

வடிவேலு: இதிலே ஏதாவது புதிசா முகப்புப் போடணுமா—இல்லாட்டி பதக்கம் ஏதாவது...

மீனாட்சி: இல்லீங்க. இதை அளிச்சு பார்வதிக்கு புது பாஷனிலே ஒரு செட் வளை பண்ணுங்க இதிலே. ஊம், இந்தாங்க காபியை முதலிலே சாப்பிடுங்க.

வடிவேலு: எனக்கா, வேண்டாம்—வேண்டாம். இப்பத்தானே சாப்பிட்ட கையோடு ஓடியாறேன்.

மாணிக்கம்: ஊம்...சும்மா சாப்பிட்டு வையுங்க.

வடிவேலு: உங்களுக்கு...

மாணிக்கம்: இதோ இருக்கே...

வடிவேலு: ஏன் இதை அழிச்சு செய்யணுங்கிறீங்க. பாட்டியம்மா ஞாபகமா இருக்கட்டுமே. புதுசாவே வேறே செஞ்சுட்டாப் போச்சு.

மீனாட்சி: அவங்க ஞாபகத்துக்கு வேறே நகைங்க இருக்குது. சும்மா இதிலேயே செய்யுங்க. நல்லமாதிரியா இருக்கணும்னுதான் உங்க கிட்ட நேரிலே சொல்லி, குடுக்க நினைச்சேன். இல்லாட்டா கடைக்கு அனுப்பிச்சிருப்பேன்.

ராமசாமி: (வந்துகொண்டே) அத்தான், நீங்க வெளியே கிளம்பணும்னு சொல்லிக்கிட்டிருந்தீங்களே—பின்னே புறப்படுங்களேன்.

மாணிக்கம்: நான், நம்ம வடிவேலுவைப் பார்க்கத்தான் போகணும்னு நினைச்சேன், அவரே வந்துட்டாரு.

மீனாட்சி: ராமசாமி, காப்பி காபின்னு கேட்டுட்டு எங்கேயோ போயிட்டியே நீ.

ராமசாமி: கடைக்குப் போயிருந்தேன்.

மாணிக்கம்: வடிவேலு, இவர்தான் நம்ப மச்சினப்பிள்ளையாண்டான்—கல்கத்தா ஆசாமி. ராமசாமி, இவர்தான் வடிவேலு. நம்ப குடும்பத்துக்கும் அவங்க குடும்பத்துக்கும் ரெண்டு தலைமுறையா சொந்தக்காரங்கபோல பழக்கம் உண்டு.

ராமசாமி: அப்படியா, வணக்கம்!

வடிவேலு: வணக்கம் தம்பி. கல்கத்தாவிலிருந்து எப்ப வந்தீங்க?

ராமசாமி: போன மாசம் கடைசியிலே வந்தேன்.

வடிவேலு: அங்கேயெல்லாம் தங்கம், வெள்ளி நிலவரம் எப்படிங்க?

ராமசாமி: எனக்கும் அதுக்கும் ரொம்ப தூரமுங்க. பழக்கம் கிடையாது. இது என்ன சங்கிலி, ஏதாவது விலைக்கு வந்திருக்கா?

மீனாட்சி: விலைக்கு இல்லேப்பா. என் சங்கிலி. அதை அழிச்சு பார்வதிக்குப் புதுமாதிரியா ஒரு செட் வளை பண்ணச் சொல்லறேன்...! ஐயா, அப்புறம் பார்வதி நீங்க செய்யறதிலே ஒரு குறையும் சொல்லப்படாது.

வடிவேலு: குழந்தைக்கு முழுத்திருப்தியாச் செஞ்சு தரதைவிட வேற வேலை எனக்கு என்னுங்க. நானே செய்யறேன். போதுமா?

மாணிக்கம்: அதெல்லாம் நீ ஒண்ணும் சொல்லவேண்டாம், மீனாட்சி.

வடிவேலு: ஊம். குழந்தையோட கையளவு வேணுமே—பழைய வளை ஏதாவது இருக்குங்களா...?

மீனாட்சி: அவ வளையெல்லாம் சின்னதாத்தான் இருக்குது. வெளியே போயிருந்தா. வந்துட்டாளோ, என்னவோ. பார்வதி, பார்வதி!

பார்வதி: (தூரத்திலிருந்து) ஏம்மா! இதோ வந்துவிட்டேன். (சற்றுப் பொறுத்து) என்ன ஓ—வளையலா—இந்தாங்க. புதுமாதிரியிலே ஸ்வஸ்திக் பாஷனிலே... நல்ல டிசைனு இருக்கணும்!

வடிவேலு: அதெல்லாம் எனக்குச் சொல்லவேண்டாம், பார்வதி. நான் செய்து அனுப்பறேன். உனக்குப் பிடிக்கலேன்னு அப்புறம் சொல்லு. எப்ப வேணும்? ஏதாவது அவசரமா?



பார்வதி: அவசரம் ஒண்ணும் இல்லே; இந்த வளையெல்லாம் சின்னதாப்போச்சு. ரொம்பச் சீக்கிரமா அனுப்புங்க.

வடிவேலு: அப்ப நான் வர்ரேன். இன்னொரு இடத்துக்கு அவசரமாப் போகவேண்டியதிருக்கு. வர்ரேன் தம்பி—கல்கத்தா தம்பி, உங்ககிட்டத்தான் சொல்றேன்.

ராமசாமி: ஆ, அதுக்கென்ன, போய்வாங்க!

(காட்சி மாற்றம்)

2

ராமசாமி: என்ன அத்தான், அதிசயமா இருக்கே!

மாணிக்கம்: எது அதிசயமாயிருக்கு?

ராமசாமி: அந்தச் சங்கிலியை நிறுத்துப் பார்க்காம, அந்த ஆளுக்கிட்டே பொத்தாம்பொதுவா அப்படியே தூக்கிக் கொடுத்ததைத்தான் சொல்லறேன்.

மாணிக்கம்: ராமசாமி, உனக்கு அவரைப்பத்தி தெரியாது. அவர் என் கூடத்தான பிறக்கலீயே தவிர, மத்தபடி எனது வலது கை மாதிரி. அதோட பெரிய ஷராப் வியாபாரி. பத்துப் பேரு அவர் பட்டறையிலே வேலை பார்க்கிறாங்க. ரொம்ப ரொம்ப நாணயமான புள்ளி. அவர்கிட்ட ஒரு சிறு குழந்தைகூட வியாபாரம் செய்யலாம், அவ்வளவு நாணயமான புள்ளி! சாதாரணமான பட்டறையை வச்சுக்கிட்டிருந்தவரு இன்னிக்கு இவ்வளவு பெரிய ஷராப் கடைக்குச் சொந்தக்காரரா இருக்கிறதுன்னு, அது அவரோட நாணயத்தினால்தானப்பா.

ராமசாமி: அத்தான், நீங்க என்னதான் சொல்லுங்க, நான் நம்ப மாட்டேன். தங்க நகைகளை இப்படி நிறுத்துக் கொடுக்காத ஆள்கள் இருந்தா, அவர் குபேரனா ஆகிறதுக்கு யார்கிட்ட கேக்கணுங்கிறேன்!

மாணிக்கம்: அவசரப் படாதே, ராமசாமி! வடிவேலு மனசு, குணம் எல்லாம் எனக்குத் தெரியும். உன் கண் முன்னேயே அவர் செய்துகொண்டு வரும் வளையல்களை நிறுத்துக் காட்டிட்டாத் திருப்திதானே...?

ராமசாமி: சரி, பார்ப்போம்.

(காட்சி மாற்றம்)

'இந்தாங்க, முதலிலே காபி சாப்பிடுங்க......'

3

மாணிக்கம்: வடிவேலு, வாங்க! இப்பத்தான் மீனாட்சி சொன்னா.

வடிவேலு: வளையல் தயாரா யிட்டுதுன்னு உங்ககிட்டே சொல்லிட்டுப்போகலாமின்னு தான் இப்படித் திரும்பினேன். ரொம்ப துரிதப்படுத்திச் செஞ்சிருக்கு. இவ்வளவு நேரம் மெருகு கூடப் போட்டிருப் பானுங்க. புது மோஸ் தரிலே ரொம்ப அழகா வந் திருக்கு. நீங்க பார்த்தாச் சொல்லுவிங்க! நம்ம கணக்கப் பிள்ளை இன்னும் கொஞ்ச நேரத்திலே கொண்டு வருவாரு. நான் அவசரமா வேறே ஒருத்த ரைப் பார்க்க ரயிலுக்குப் போறேன்; வரட்டுங் களா!

மாணிக்கம்: ஆகட்டும்...

(காட்சி மாற்றம்)

4

கணக்கப்பிள்ளை: ஐயா, இந்த ஜோடி வளையலை உங்கக்கிட்டே கொடுத்துட்டு வரச் சொன்னாங்க.

மாணிக்கம்: கொஞ்ச முந்தித் தான் வடிவேலு சொல்லிட்டுப்

போனார். எங்கே கொடுங்க பார்க்கலாம்......ஏது ரொம்ப நல்லா செய்திருக்கீங்களே! பார்வதி, பார்வதி! மீனாட்சி...! உன் வளையல் செய்து வந்திருக்கு, பாரு!

பார்வதி: எவ்வளவு அழகா இருக்கு, அம்மா! எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இந்த மாதிரிதான் நான் கேட்டேன்!

மீனாட்சி: பார்வதிக்குக் கச்சிதமா இருக்கும்.

மாணிக்கம்: நம்ம விஷயத்திலே வடிவேலுக்கு ஒரு தனிப் பிரியந்தான்!

பார்வதி: ஆமா, அப்பா.

ராமசாமி: (குறுக்கிட்டு) வளையல் வர்ணனை எல்லாம் இருக்கட்டும். முதல்லே அதை நிறுத்துப் பாருங்க.

மாணிக்கம்: நிறுத்தாப் போவுது. கணக்கப்பிள்ளை, எங்கே நிறுங்க பார்க்கலாம்!

கணக்கப்பிள்ளை: இம்மி குறையாமல் நாலேமுக்கால் பவுன் எடை இருக்குங்க.

மாணிக்கம்: என்ன, நாலே முக்காலா...அப்படின்னா கால் பவுன் எடை குறையுதே. சங்கிலி சரியா அஞ்சு பவுனுக்சே...?

மீனாட்சி: நான் சங்கிலியைச் சரியாக்கூடப் போட்டுக்கிறதில்லையே!

கணக்கப்பிள்ளை: எசமான், பழைய நகைகளை உருக்கிச் செஞ்சா எப்படியும் கொஞ்சம் எடை குறையத்தான் செய்யும்.

ராமசாமி: (இடைமறித்து) எடை ஏன் குறையணும், அத்தான்? பார்த்தீங்களா, நான் சொன்னது சரியா நடந்து விட்டது. நம்பிக்கை மோசம்...

மாணிக்கம்: ராமு நீ சும்மா, இரு. அவசரப்பட்டுக் கண்டபடி பேசாதே.

> இன்பங்கள் இணையாக வருவதில்லை. துன்பமோ தனித்து வருவதில்லை.
>
> —சீனப் பழமொழி
>
> காதல் என்பது வேறொன்றும் அல்ல; புரட்சியின் மறுபெயர்.
>
> —காண்டேகர்

மீனாட்சி: அவனை எதுக்கு கோவிக்கிறீங்க நீங்க......? தம்பி சொன்னது சரியாத்தான் நடந்திருக்கு. கால் பவுனைக் காணலையே; இப்போ யார் கொடுக்கிறது?

மாணிக்கம்: (கோபமாய்) ஏய் நீ சும்மா இருக்கிறயா, இல்லையா?

மீனாட்சி: உங்களுக்கு என் மேலதான் கோவம் வரும்.

கணக்கப்பிள்ளை: நான் போய் வாரேனுங்க...

மாணிக்கம்: சரி, கூலி எவ்வளவு சொன்னாரு?

கணக்கப்பிள்ளை: கூலிக்கு இப்ப என்னுங்க அவசரம்...?

மாணிக்கம்: அட, சொன்னதைச் சொல்லுய்யா.

கணக்கப்பிள்ளை: பதினைந்து ரூபாய்ங்க.

மாணிக்கம்: இந்தாரும், கொண்டுபோய்க் கொடுத்திடும்...! (காட்சி மாற்றம்)

5

மாணிக்கம்: மீனாட்சி, உன் மகள் சம்மதத்தைக் கேட்டியா? குழந்தை சம்மதமில்லாம ஒண்ணும் செய்யப்படாது.

அன்பற்ற நெஞ்சுதான் விரோ தத்தை நீடிக்க வைத்துக் கொள்ளும். பிரிந்து போனதை என்றைக்குமே பிரிவாகச் செய்து கொள்ளவைக்கும் அன்புள்ள மனதுக்கோ அக்கணம் மட்டுமே சச்சரவு. பிறகோ யாவும் மறந்து மறுபடியும் கூடிக் கொள்ளும். —ஞானி

மீனாட்சி : அந்தப் பட்டணத்து மாப்பிள்ளையையே முடிச்சிடுங்க. பார்வதிக்கு ரொம்ப பிடிச்சிருக்குது...

மாணிக்கம் : அதான் நானும் கேட்டது. ரொம்ப நல்லதாப் போச்சு; கலியாண ஏற்பாட்டை கவனிக்க வேண்டியதுதான். அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை நடத்திடலாமா?

மீனாட்சி : அவ்வளவு சீக்கிரம் நடத்தறதா இருந்தா இப்பவே ஆகவேண்டிய காரியங்களைக் கவனியுங்க. நகை நட்டெல்லாம் கோடி வீட்டுக் குப்புசாமியிடம் செய்யக் குடுத்திடுங்க...

மாணிக்கம்: அப்படின்னா...வடிவேலுவை வேண்டாம்னு ஒதுக்கி வைக்கிறயாக்கும்...?

மீனாட்சி : நம்பிக்கையான மனுசன், தெரிஞ்சவர்னு பார்த்துக் கொடுத்ததுக்கு, நமக்கு நல்ல உபகாரம் செய்தார், பாத்திங்களே? இன்னும் அவ்ரை விடறதுக்கு உங்களுக்கு மனசு வ்ரலையா?

மாணிக்கம் : சரி, சரி—நீ பிரசங்கம் பண்ண ஆரம்பிச்சிடாதே. உன் இஷ்டப்படியே செய்யறேன். இம்மாதிரி சமயத்துக்கு உன் தம்பி ராமு இல்லாமப் போனனேன்னு எனக்கு வருத்தமா இருக்கு!

மீனாட்சி : அவன் பேச்சை எடுக்கலேன்னாத்தான் உங்களுக்குத் தூக்கம் வராதே...... அவன் எங்கேயோ போயிருக்கிறான்! அவனை ஏன் வம்புக்கு இழுக்கறீங்க?

மாணிக்கம் : இல்லே, உனக்கு சப்போர்ட்டுக்கு ஆளில்லையேன்னுதான் சொல்ல வந்தேன். அவன் ரொம்ப சாமர்த்தியசாலியாச்சே...!

மீனாட்சி: அவன் சாமர்த்தியத்துக்கு என்ன குறைச்சல்? சிறு பிள்ளையானலும் அவன் சொன்னபடி நடந்தது... பாத்திங்களே ......?

மாணிக்கம் : அதைத்தானே நானும் சொல்லறேன்...அவன் கெட்டிக்காரன்...!

மீனாட்சி : அதை மெதுவாச் சொல்லணுமா? அவனுக்கு இருக்கிற புத்தியும் சாமர்த்தியமும் யாருக்கு வரும்......?

மாணிக்கம் : ஏன்? உனக்கு இருக்கே! தம்பின்னு அப்படியே பொங்கிப் பூரிச்சுப் போயிடறியே?

மீனாட்சி : நான் மாத்திரம் என்ன? ஊர் உலகத்திலே உள்ளமாதிரி உங்களுக்குத் தான் அவன் பெரிய மனுசனாத் தெரியலே...

மாணிக்கம் : சரி, போதும் யுத்தத்துக்கு புறப்பட்டுவிடாதே. நான் வெளியே போயிட்டு சில முக்கியமானவங்களைப் பார்த்து விட்டு வ்ர்ரேன்

மீனாட்சி: முதல்லே அந்த குப்பு சாமியைப் பார்த்து நகை எல்லாம் செய்யறதுக்கு ஆர்டர் கொடுங்க.

மாணிக்கம்: உன்னுடைய ஆர்டரைத்தான் முதல்லே முடிக்கப்போறேன். போதுமா?

(காட்சி மாற்றம்)

"நாங்க ரெண்டுபேரும் பொங்கல் திருநாளுக்கு வருகிறோம்....."

6

வடிவேலு: வணக்கமுங்க.

மாணிக்கம்: வாங்க வடிவேலு. ஏது இவ்வளவு தூரம்?

வடிவேலு: உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன். குழந்தைக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்குண்ணு கேள்விப்பட்டேன். ரொம்பச் சந்தோஷம்.

மாணிக்கம்: ஆமாம். அடுத்த முகூர்த்தத்திலே நடத்த ஏற்பாடு!

வடிவேலு: குழந்தைக்கு நகை எல்லாம் செய்ய வேண்டாமா?

மாணிக்கம்: அதெல்லாம் நம்ம குப்புசாமிகிட்டே ஆர்டர் கொடுத்திருக்கு.

வடிவேலு: என்ன? குப்புசாமியா? நான் ஒருத்தன் இருக்கும்போது புதுசா குப்புசாமி கிட்ட ஏங்க கொடுத்திங்க?...என்மேலே ஏதாயினும் வருத்தமா?

மாணிக்கம்: உங்கமேலே வருத்தமா,—ஏதுக்குங்க?

வடிவேலு: பின்னே ஏன்? தலைமுறை தலைமுறையா நடந்து வந்ததை திடுதிப்புன்னு நிறுத்திப் பிட்டிங்களே...?

மாணிக்கம்: அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க; நீங்க ஒண்ணும் வருத்தப்படாதிங்க.

வேற சமயம் வராமலா போவுது...?

வடிவேலு: அப்படின்னு, மற்ற தில்லாவிட்டாலும் ஒரே ஒரு உரிமையாகிலும் கொடுங்க. குழந்தைக்குப் பிறந்ததுமுதல் இந்தக் கையினுலே எல்லா நகைகளும் செய்து போட்டி ருக்கேன். இப்ப அதுக்கு மங்கள காரியம் நடக்கப் போவுது. அந்த மாங்கல் யத்தையர்வது நான் செய்ய ணும்னு பிரியம். அந்த ஒண்ணை யாகிலும் செய்யறதுக்கு உரிமை கொடுங்க...

மாணிக்கம்: எல்லாத்தையும் சேர்த்து மொத்தமாச் செய்யக் கொடுத்தாச்சு. இனி ஒண்ணும் செய்ய முடியாதே......?

வடிவேலு: அப்படின்னு, எனக்கு இடமில்லேன்னு சொல் லுங்கோ?

மாணிக்கம்: வருத்தப்படா தீங்க, வடிவேலு, போனது போகட்டும். இன்னொரு சமயம் பாத்துக்கிடலாம். கல்யாணத் துக்கு பத்திரிகை அனுப்பி வைக்கிறேன். வந்து சேருங்க.

வடிவேலு: இவ்வளவு காலம் பழகியும் நீங்க இன்னும் என் னைச் சரியாத் தெரிஞ்சுக்க லேயேண்ணுதான் வருத்தம். நான் வரேனுங்க.

மீனுட்சி: (மெதுவாக) என்ன வாம்? இன்னும் ஏதாவது சுருட்டலாம்னு வந்து பாத்தாரு போலிருக்கு. ஒரு தடவை தான் ஏமாந்து கொடுத்துட்டேன்!

பார்வதி: அப்பா, அவரு கேட் டது ரொம்ப வருத்தமா இருக் கப்பா. அவ்வளவு உரிமை யோட கேக்கறப்போ தாலியை மட்டுமாவது அவர் செய்யக் கொடுத்தா என்ன? நம்ப குடும் பத்து நன்மைகளுக்கெல்லாம் அவர் கை ஆகி வந்துச்சே— இப்போ எவ்வளவு வருத்தப் படுருர்...?

மீனுட்சி: பார்வதி, நீ போ. ரொம்ப பெரிய மனுஷியாட்டம் பேச வந்துட்டா?

மாணிக்கம்: பார்வதி நீ போம்மா.

(காட்சி மாற்றம்)

7

குரல்: ஸார்...போஸ்ட்!

மீனுட்சி: இந்தாங்க—நம்ப பார் வதி கையெழுத்து மாதிரி இருக்கு—குழந்தை எப்படி இருக் காளோ?

மாணிக்கம்: (கடிதத்தைப் பிரித்துப் படிக்கிருர்) அப்பா, இந்த லெட்டர் உங்களை ரொம்பவும் வேதனைப்படத்தான் வைக்கும். எனக்கு கல்யாணமாகி இவ் வளவு சீக்கிரம் இப்படிப்பட்ட சோதனை வருமின்னு நான் நினைக்கவே இல்லை...நேத்தி லேருந்து அவருக்கு நினைவு தெரியவில்லை....

மீனுட்சி: ஐயையோ......மாப் பிள்ளைக்கு என்னமோ தெரி யலையே. கடவுளே, என் குழந் தையை நீதான் காப்பாத் தணும்!

மாணிக்கம்: கொஞ்சம் பொறேன்!— (படிக்கிருர்) ஜுரத் தின் வேகத்திலே கண்டபடி பிதற்றுகிருர். காய்ச்சல் குறையவில்லை, அப்பா, புகுந்த வீட்டிலே அவரைப் பார்த்துப் போக வருகிறவங்க எல்லாம், என்னை கரிச்சுக் கொட்டருங்க. 'இந்த மகராஜி அடி எடுத்து வச்ச வேளையோ என்ன வோன்னு' பேசிக்கருங்க.

இதையெல்லாம் கேட்டா என் உயிரே போயிடும் போலிருக்கு. சில பேருங்க 'கூரையிலே தோஷமோ, தாலியிலே தோஷமோ'ன்னும் வேறே சொல்ருங்க. தாலியிலே தோஷமின்னு கேக்கறப்போ என் மனசு வேதனையாலே வெடிச்சுப் போகும் போலே இருக்கு... அதனுலே தான் இருக்குமோன்னு எனக்கு மனசிலே ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கு. அன்னிக்கு நானும் சொன்னேன் — வடிவேலு ஐயா அவ்வளவு உரிமையோடு கேட்டாரு — வேண்டாம்னு சொல்லிட்டோம். இப்ப அவர் கையாலே புதுசா ஒரு மாங்கல்யம் செய்து கட்டிக்கிட்டாத் தான் மனசு நிம்மதிப்படும் போலே இருக்கு. டாக்டர் வந்து அடிக்கடி பார்த்துக்கிட்டு இருக்கார். தெய்வம் விட்ட வழி. மற்றதுக்கு நாளைக்கு எழுதறேன்.

மீனுட்சி: தெய்வமே! ஒரே குழந்தை. அவள் மாங்கல்யத்தைக் காப்பாத்து. உனக்கு அவள் கையாலேயே பொங்கல் போடறேன்.

மாணிக்கம்: பகவானே, ஒண்ணும் அறியாத குழந்தை. எங்க வயத்திலே பாலை வார்த்திடு.

(காட்சி மாற்றம்)

8

வடிவேலு: ஐயா, நேற்றுத் தான் கேள்விப்பட்டேன். மாப்பிள்ளைக்கு உடம்பு இப்பொழுது எப்படி இருக்கு?

மாணிக்கம்: ஒருநாளுக் கொருநாள் குணம் தெரியல்லை. கொஞ்சம் குணமாகுது. பிறகு மோசம் ஆகுது. எவ்வளவோ மருந்தெல்லாம் கொடுக்குருங்களாம். ஒண்ணும் குணப்படலைன்னு பொண்ணு நேற்று எழுதியிருக்குது. இன்னிக்கு இன்னும் கடிதம் வரலை. அதைப் பாத்துட்டு நாங்களே புறப்படறதுன்னு யோசிச்சிருக்கோம்.

வடிவேலு: ஐயா, நேத்து இந்தச் சேதியைக் கேட்டதிலேருந்து என் மனசு ரொம்ப சங்கடப் பட்டது. பார்வதி எழுதின சங்கதி எல்லாம் என் காதுக்கு எட்டிச்சு. எனக்கு மனம் கேக்கல்லே. இதோ பாருங்க, நானே ராத்திரி பூரா முழிச்சிருந்து இதைச்செய்து அம்பிகைக்கு வச்சு வேண்டி எடுத்து வந்திருக்கேன்.

மாணிக்கம்: என்னது, தாலியா?

வடிவேலு: ஆம். இப்பொழுதாவது இதை மறுக்காதிங்க. இதைக் கொண்டுபோய் குழந்தைக்குப் போடுங்க. தேவி அருளாலே சுபமாக முடியும்.

குரல்: ஸார்—போஸ்ட்...!

மீனுட்சி: அதோ, லெட்டர் வந்துட்டது.

மாணிக்கம்: (கடிதத்தைப் பிரித்துப் படிக்கிருர்)

அப்பாவுக்கு,

என் மனசு பட்ட வேதனையிலே நேற்று அப்படியே உங்களுக்கு எழுதிட்டேன். இன்னிக்கு புதுசா ஒரு டாக்டர் வந்து பார்த்து மருந்தும் ஊசியும் போட்டார். பயப்படவேண்டியதில்லையென்று சொல்லியிருக்கார். இப்பொழுது கொஞ்சம் குணமாயிருக்கு. பலவீனம் தான் காரணமாம். நன்றாக ஓய்வெடுத்து டானிக்கும் சாப்பிட்டால் சௌகரியமாயிடும் என்று சொன்னார்.

அம்மாகிட்டேயும் சொல்லி, கவலைப்பட வேணடாமின்னு சொல்லுங்க. நாங்க ரெண்டுபேரும் இந்தப் பொங்கலுக்கு அங்கே புறப்பட்டு வருகிறோம்...

மீனாட்சி: தெய்வமே, எங்கள் வயிற்றில் பாலைவார்த்தே.

மாணிக்கம்: கடவுள் கண் திறந்து பார்த்திருக்கிறார்! குழந்தை—அதற்கு இக்கதி வரக்கூடாதே என்று சொல்ல முடியாத கவலை.

வாடிவேலு: ஐயா, எல்லாம் அம்பிகையின் அருள்தாள். இந்த மாங்கல்யத்தின் அருள். இன்னிக்கே இதைக் கொண்டுபோய் குழந்தைக்குக் கட்டுங்க. இனி ஒரு குறையும் வராது.

மாணிக்கம்: (தழுதழுத்த குரலில்) வடிவேலு, என்னை மன்னிச்சிடுங்க. எல்லாம் உங்க கைராசிதான். நீங்க மாங்கல்யத்தைக் கொண்டு வந்ததுக்கும் சுப செய்தி வந்ததுக்கும் பாருங்க, பகவானைப் பார்த்துத் தான் இந்தச் சோதனையைச் செய்திருக்கிறாரு.

மீனாட்சி: நாம் ஆத்திரத்திலே ஏதோ தவறிட்டோம்.

மாணிக்கம்: வடிவேலு, உங்க மனம் நோவும்படி நடந்திட்டோம். தயவுசெய்துஎதையும் மனசிலே வச்சுக்காம என்னை மன்னிச்சுடுங்க. உங்க மன்சு மாசு மறுவற்ற புடமிட்ட பொன். உங்கள் அன்பிற்கு அளவே இல்லை.

வடிவேலு: உங்க அன்பும் ஆசையும் என்னிக்கும் போல மாறாம இருந்தா அதுவே போதும். நாழிகை ஆச்சு...... நான் வரேன்.

(திரை)

[சென்னை, புதுடெல்லி அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பப்பட்ட இந் நாடகம் மலருக்கெனத் தனியே உரிமைபெற்றுப் பிரசுரிக்கப்படுகிறது]

★

ஒரு சிறு நிகழ்ச்சியை மையமிட்டுச் சுழல, அதனைச் சுற்றிச் சிந்தனைக் கற்களாலும் கற்பனைக் காரையாலும் ஒரு சிறு வீட்டைக் கட்டி முடிக்கும் கலைதான் சிறுகதை.

—ஷா

★

நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமுண்டு; அது இல்லாதவனுக்கு ஒன்றுமே இல்லை.

—இராமகிருஷ்ணர்

மனத்தெளிவு

வீர. பழனியப்பன்

அவன் யாழின் நரம்புகளை விரல்களால் வருடினான். இனிமையான இசை அருவி சலசலத்தது. அவன் யாழின் இசையோடு தன் குரலின் நயத்தையும் கலந்து சுவை மிகுந்த அமுதக் கலவை சமைத்து அள்ளி வழங்க ஆரம்பித்தான்.

மாறவர்ம குலசேகர பாண்டியனின் சபையில் உள்ள எல்லோரும் அந்தப் பாணனின் உதட்டிலிருந்து உதிரும் இசை வெள்ளத்திலே தங்கள் எண்ணங்களை மறந்து இருந்தனர்.

அரியாசனத்தில் அமர்ந்திருந்த பாண்டியன் விழித்த கண் வாங்காமல் அந்தப் பாணனையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வையில் எதிரிலிருந்து பாணன் மறையத் தொடங்கினான். கொஞ்ச நேரத்தில் பாணன் அமர்ந்திருந்த இடம் காலியாகி விட்டது. அந்தக் காலியான இடத்திலே...........

ஒரு ஒளி பொருந்திய முகம் மெல்ல மெல்லத் தோன்ற ஆரம்

காதல், பாசம், மத உணர்ச்சி — இவைகளுடன் பின்னப்பட்ட பொருள்கள் சில சமயம் சமுதாயத்தையே, அரசியல்களையே விலைகொண்டுவிடுகின்றன. பிறருக்குச் சாரமற்ற அப்பொருள்கள் உரியவருக்கு உயிரினும், உலகிலும் அரியவை ஆகின்றன. புத்தர் பிரானின் திருப்பற்கள் பாண்டிய மன்னனுக்கு ஈழ நாட்டை வென்ற திறை—வெற்றிப் பரிசு. ஆனால் ஈழ மன்னனுக்கு அவை வாழ்வின் இலட்சியம், குருதேவரின் பக்திச் சின்னம். கடையில் முடிவு!

பித்தது. அப்பப்ப...... அந்த முகத்திலே தான் எவ்வளவு அமைதி......! அந்தக் கண்கள் என் இவ்வாறு விரிகின்றன? அன்பு...... அன்பு...... அன்பு...அந்த உதடுகள் முணு முணுக்கின்றன. கூம்பிய தாமரையின் நிலையில் உள்ள உலகு மலர்கிறது... அந்த மலர்ச்சியிலே பேதங்கள் மறைகின்றன. பிறகு அமைதி பிறக்கிறது. உலகு அமைதியை அணைத்துத் தாலாட்டுகிறது. அந்த முகம் ஆனந்தக் கண்களால் அவனியைப் பார்க்கிறது.

'புத்தம் சரணம் கச்சாமி......'

பாண்டியன் தன்னிலை அடைந்தான். அவன் எதிரில் பாடிக்கொண்டிருந்த பாணன், தன் பாடலை முடித்து விட்டுச் சபையினருக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தான். சபையினர் ஆரவாரித்துக் கொண்டிருந்தனர். பாண்டியனின் முகத்திலே களிப்புப்பரவியது.

"பாணரே! உமது பாடல் கேட்டு மகிழ்ந்தோம். இவ்வளவு உயரிய முறையில் நீங்கள் பாடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை! எங்கே இன்னொரு பாட்டுப் பாடுங்கள் கேட்போம்..."

"தங்கள் கட்டளை என் பாக்கியம்..."—பாணன் யாழைக் கையில் எடுத்து மீட்டத் தொடங்கினன்.

அரண்மனை வாயில்காப்போன் ஒருவன் அவசரம் அவசரமாக உள்ளே நுழைந்து மாறவர்ம குலசேகர பாண்டியனின் காதுகளில் ஏதோ கூறினன்.

"சரி, வரச் சொல்..."என்று அவனிடம் சொல்லிவிட்டுப் பாண்டியன் பாட்டில் தன்னுடைய கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தான். ஒரு தூதுவன் கையில் ஒரு ஓலைச் சுருளை ஏந்திக்கொண்டு பாண்டியனை வணங்கி அந்த ஓலைச் சுருளை அவன் கையில் கொடுத்தான்.

பாண்டியன் அந்த ஓலைச் சுருளை வாங்கிப் பார்த்தான். அதன் மேல் புறத்தில் 'மிக்க அவசரம்' என்று வரைந்திருந்தது. அதை அவன் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். அதில்......

'சந்திரகுலத் தோன்றல், ஈழம் கொண்ட எழுமுடி வேந்தர் மாறவர்ம குலசேகர பாண்டியன் திவ்விய சமூகத்திற்கு,

இப்பவும், இவ்விடம் மலைச்சாரல்களில் பதுங்கி நின்று நமக்குத் தொந்தரவு கொடுத்து வந்த புவனேகபாஹுவின் படை வீரர்கள் மறுபடியும் தலை தூக்கி எதுவும் செய்வார்கள் போலத் தென்படுகிறது. இந்த நிலையில் இவ்விடமிருந்து பாணன் உருவிலே ஒரு ஆள் பாண்டி நாட்டிற்குள் நுழைந்திருப்பதாகத் தெரிகிறது. அவன் நமது விரோதிகளின் ஒற்றனாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

அவனுக்கு வயது இருபது இருக்கலாம்! நல்ல வசீகரமான முகத்தோற்றம் உடையவனும்! இது விபரம் அறிந்து ஆவன செய்யுமாறு பிரார்த்திக்கிறேன். அநேக கோடி வணக்கங்கள்.

இப்படிக்கு,
ஈழத்தின் மேன்மை தங்கிய தங்கள்,
பிரதிநிதி,
ஆர்ய சிங்க சக்கரவர்த்தி,

என்று எழுதப்பட்டிருந்தது.

பாண்டியனின் கண்கள் அகல விரிந்தன. அவன் எதிரில் பாடிக்கொண்டிருந்த பாணனைக் கவனித்துப்பார்த்தான்.

அவனுக்கும் வயது இருபது தான்

முன்னேறி வரும் எழுத்தாளர்களில் வீர. பழனியப்பனுக்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு. உயிர்த்துடிப்புக்கொண்ட சம்பவங்களுடன், உணர்ச்சி அடிநாதமிடும் தமிழில் ஒரு சில சுவை பொழிந்த சிறு கதைகளை 'பொன்னி'யில் ஏற்கனவே எழுதியுள்ளார். 'மனத் தெளிவு' சரித்திரப் பின்னணி கொண்ட நல்ல கதை.

இருக்கும்! வலிமை மிகுந்த அவன் உடலுக்கு வாலிபம் வேறு மெருகேற்றி இருந்தது. வட்டவடிவமான முகம். அதிலே வசீகரத்தை வீசும் நீலக் கருவிழிகள்; எடுப்பான மூக்கு; அழகு அமுங்கிக் கிடக்கும் அதரங்கள்; முத்துச்சரப் பற்கள் அவன் முகத்திற்கு யோகனத்தை முத்திரையிட்டு வைத்திருந்தது.

பாண்டியனின் விழிகளிலே சந்தேகம் சுழியிட்டது.

"பாடியது போதும் நிறுத்து!"—கடுமையான குரலில் அவன் கட்டளை இட்டான். பாணன் ஆச்சரியத்தால் பாண்டியனை வாய் பிளந்தபடி பார்த்தான். சபையில் இருந்த எல்லோருக்கும் பாண்டியனின் கட்டளை ஒரு புதிராக இருந்தது.

"கைது செய்யுங்கள் இந்த ஒற்றனை!"—கடுமையான குரலில் கூறி விட்டு கையில் இருந்த ஓலையை அமைச்சரிடம் கொடுத்தான்.

"ஹா...நானு,ஒற்றன்,அரசே..." பாணனல் மேலே பேச முடியவில்லை.

பாண்டியன் பயங்கரமாகச் சிரித்தான். அவன் கண்களில் தீப்பொறி பறந்தது.

"கையிலே யாழ் ஏந்திஇருந்தால், உன்னுடைய கருத்திலே ஒளிந்திருக்கும் கள்ளம் மறைக்கப்பட்டு விடுமா? வாளினல் சாதிக்க முடியாத காரியத்தை நீ இந்த யாழினல் சாதிக்க வந்து விட்டாயா? ஈழத்து மலையில் ஒளிந்து திரியும் எலியே...... புலிக் குகையிலே உன்னுடைய புத்திசாலித்தனத்தை அரங்கேற்ற வந்திருக்கிருயா?"

"அரசே! நீங்கள் என்னைத் தவருக எண்ணி விட்டீர்கள்! நான் ஈழத்து மலை நாட்டைச் சேர்ந்தவன்தான். ஆனல் ஈன எண்ணம் கொண்டு இங்கே வந்தவன் அல்ல! பண்ணல் தங்களை மகிழ்வித்துத் தங்களிடம் பரிசுபெற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இங்கு வந்தேன்."

"பரிசு...இம்ம்...பாடி மகிழ்விக்கும் பாணர்களுக்கு மட்டும் பரிசு வழங்குபவர்களல்ல நாங்கள். உன்னைப் போன்ற ஒற்றர்களுக்குக்கூட நாங்கள் பரிசு வழங்குவதுண்டு..."—பாண்டியனின் பேச்சிலே பரிகாசம் கலந்து இருந்தது.

"சந்தர்ப்பங்கள் என்னைச் சதிகாரன் என்று எண்ணும்படி செய்யலாம்! அரசே, உண்மையில் நான் ஒற்றனல்ல. யாழேந்திப் பாடிப் பரிசு பெற வந்த ஒரு ஏழைப் பாணன். என் உள்ளத்திலே கள்ளம் கிடையாது! கபடமும் கிடையாது! ஆனல் நான் இன்று ஒற்றனென்று உங்களால் சந்தேகிக்கப்படலாம்... உண்மை என்பது ஒரு நாள் வெளிப்பட்டுத்தான் தீரும். அப்பொழுது நீங்கள் வருந்துவீர்கள்..." அவன் நிதானமாகப் பதில் சொன்னன்.

"கைப்புண்ணுக்குக் கண்ணடி கொண்டு பார்க்கும் பண்புடையவனல்ல பாண்டியன். நீ ஒற்றன். எங்கள் பாண்டிய நாட்டுச் சட்டப்படி ஒற்றர்களுக்கு மரண தண்டனை! ஆனலும் உன்னுடைய இளமையைக் கருதி உனக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறேன்! பிழைத்துப் போ..."

அந்தப் பாணன் தண்டனையை அறிந்தும் இலேசாகப் புன் முறுவலித்தான்.

"அரசே! நான் தங்களிடமிருந்து நீதியைத்தான் எதிர்ப்பார்த்தேன். என் இளமைக்காகச் சலுகையை எதிர்பார்க்கவில்லை! உங்கள் நீதிப்படி எனக்கு உங்களிடம் தன் வித்தையைக் காட்டிப் பரிசு பெற வந்தவனுக்கு மரணதண்டனைதான் பரிசு என்ருல் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன். நான் சாகலாம்...ஆனல் உண்மை என்றுமே சாவதில்லை!"—அவன் முகத்தில் ஒருஅலாதிக் கம்பீரம் தென்பட்டது.

பாண்டியன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

"நீ சொல்ல வேண்டியது எல்லாம் முடிந்து விட்டனவா? உன் விருப்பப்படியே உனக்கு மரண தண்டனை விதித்திருக்கிறேன். நாளைக் காலை உன் தண்டனை நிறைவேற்றப்படும். இழுத்துச் செல்லுங்கள் இவனை..."

உன் நாவலில் உபயோகிக்கும் ஒவ்வொரு வார்த்தையையும் தந்தியில் அனுப்பும் வார்த்தைகளாக மாற்றிக்கொள்.

—ஷா.

இரண்டு வீரர்கள் பாணனின் கரங்களில் விலங்கிட்டனர். பாணன் யாழை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். அவன் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

"அரசே......தங்கள் அன்பிற்கு நன்றி. புத்தம் சரணம் கச்சாமி!"

சபையில் உட்கார்ந்திருந்தவர்களுக்குப் பாணனின் பேச்சும் போக்கும் விசித்திரமாக இருந்தது. அவர்கள் பார்வையிலே ஆச்சரியம் அலையெனச் சிறியது.

பாண்டிய வீரர்கள் பாணனை இழுத்துக் கொண்டு சென்றனர்.

2

வானம் கறுத்துக் குமுறிக்கொண்டிருந்தது. அதனிடையிலேயே குளிர் காற்று அன்ன நடை பயின்று கொண்டிருந்தது. மழைக் கன்னி இவை இரண்டுக்குமிடையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய மானத்தை மறைத்துக் கொண்டிருந்த மேகப் புடவையை மின்னல் சாட்டை வேகமாகத் துள்ளித் தாக்கியது. மேகப் புடவையின் ஓரம் கிழிந்தது. மழைக்கன்னியின் உள்ளம் குமுறியது. ஒரு பலமான இடி இடித்தது. இந்தக் கூத்தையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த காற்றுக்கு வெறி கிளம்பி விட்டது.

'விர்ர்ர்......'—காற்று மேகப் போர்வையை உருட்டி அவளை நெட்டித் தள்ளியது; மழைக் கன்னியின் உள்ளத்திலே தடுமாற்றம். நடையிலே ஒரு தளர்ச்சி. அவள் கண்களிலிருந்து நீர்த்துளிகள் சிதறின.

வானத்தில் நடக்கும் இந்த வைபோகங்களையெல்லாம் அரண்மனையில் அம்சதூளிகா மஞ்சத்தில் அமர்ந்து இருந்த பாண்டியன் கவனிக்கவில்லை.

அவனுடைய கவனமெல்லாம் காற்றிலே அலை அலையாக மிதந்து வரும் யாழின் ஒலி லயத்திலே ஈடுபட்டிருந்தது.

எங்கேயிருந்து இந்த யாழ் ஒலி கிளம்பி வருகிறது? அவனுடைய சிந்தனையில் ஒரு கேள்விக் குறி. ஒலி வரும் திசையைக் கவனித்தான். தெற்கு மூலை. அங்கு...அங்குதான் சிறைச்சாலை இருக்கிறது.

'ஒரு வேளை யாழ் இசைப்பது காலையில் பாடிய பாணனாய் இருக்குமோ!'—அவனுக்கு ஒரு சந்தேகம்.

'டணர்.....டணர்......டணர்....' மதுரை மீனாட்சியம்மன் கோவில் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. பாண்டியன் எழுந்து அங்கும் இங்கும் உலாவினான்.

டிங்...டிங்......டிங்......மறுபடியும் யாழின் ஒலி கேட்டது. தென்றலில் இலயித்துப் பாடும் குயிலின் குரலினிமை அந்த யாழின் ஒலியிலே இருந்தது.

பாண்டியன் திடுக்கிட்டான்.

'சிறையிலிருக்கும் பாணனா இவ்வளவு இனிமையாக யாழ் இசைக்கிறான்!'-அவனுக்கு ஒரே ஆச்சரியம். அவன் அவ்வொலியைக் கூர்ந்து கேட்டான்.

'இசைப்பது அவனேதான்! காலையில் சபையில் கேட்டபோது இருந்த அதே இலயம் தான்? நாளைக் காலையில் மரண தண்டனை ஏற்கப்போகும் இந்தப் பாணன் இப்பொழுது எவ்வளவு அமைதியோடு யாழ் இசைக்கிறான்!'— அவன் நினைவிலே ஒரு பிரமை அவனைக் கவ்வி உலுக்கியது.

சோலையிலிருந்து ஒரு மாங்குயில் கூவியது. அந்தக் குரலிலே ஒரு சோகம் கப்பி இருந்தது. பாண்டியன் சோலைப்பக்கம் பார்வையை திருப்பினான். பிசு பிசு வென்று மழை தூறிக்கொண்டு இருந்தது.

'குயிலிடம் இயற்கையாக அமைந்து வெளிவரும் இன்பமய

மான கீதம் எங்கே?'—பாண்டியனின் உள்ளத்திலே ஒரு கேள்வி.

சாரல் காற்று சீறியது. அவனுக்கு உண்மை புரிந்தது.

'சூழ்நிலை தான் குயிலிடத்திலிருந்து சோக கீதத்தைக் கிளப்பியது!'- அவன் ஊகம் எப்படியோ சரியான வேலை செய்தது.

யாழினின்று கிளம்பிவரும் நாதம் கேட்டது. அதிலே சோகத்தின் சுவடே தெரியவில்லை!

'நாளைக் காலையில் சாகப்போகிறான்! அவன் இசைக்கும் யாழிலிருந்து இன்பம் பொங்கி வருவதேன்?'— பாண்டியனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவனுக்கு ஒரே திகைப்பு?

'சந்தர்ப்பங்கள் என்னைச் சதிகாரன் என்று எண்ணச் செய்யலாம்! அரசே, உண்மையில் நான் ஒற்றனல்ல... யாழேந்திப் பாடிப் பரிசு பெற வந்த ஒரு ஏழைப் பாணன். என் உள்ளத்திலே கள்ளம் கிடையாது...கபடமும் கிடையாது...'— பாணன் கூறிய சொற்கள் பாண்டியனின் நினைவிலே மின்னின.

'ஆமாம், அவன் உள்ளத்தில் கள்ளம் இருக்க வழியில்லை! அப்படியிருந்தால் அவனால் இவ்வளவு நிம்

மதியோடு இருக்கமுடியாது.'... பாண்டியன் பெருமூச்செறிந்தான்.

அவனுடைய பார்வை மேஜையின் பக்கம் திரும்பியது. அங்கே ஆர்ய சிங்கன் அனுப்பிய ஓலை கிடந்தது. அதைத் பார்த்ததும் பாண்டியனுக்கு மூளை குழம்பியது. அவன் நெற்றியை அழுத்திக்கொண்டான். கண்களைக் கசக்கினன்.

'அரசே, நான் தங்களிடமிருந்து நீதியைத்தான் எதிர்பார்த்தேன். என் இளமைக்காகச் சலுகையை எதிர்பார்க்கவில்லை! உங்கள் நீதிப்படி எனக்கு—உங்களிடம் தன் வித்தையைக் காட்டிப் பரிசு பெற வந்தவனுக்கு மரணதண்டனை தான் பரிசு என்றால் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் சாகலாம்! ஆனல் உண்மை என்றுமே சாவதில்லை...'

பாணன் பேசிய சொற்கள் அவன் காதுகளில் ரீங்கரித்தன.

'நீதி...இம்ம்... இம்... உண்மை...' பாண்டியனின் நெஞ்சு சிரித்தது! அவனுக்குத் தான் வழங்கிய நீதியில் கொஞ்சம் சந்தேகம் தட்டியது.

'அப்படியானல் உண்மை?'—அவனுடைய மூளையில் ஒரு கேள்வி! அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுடைய பார்வை சுவரில் மாட்டப்பட்டிருந்த சித்திரங்களில் விழுந்தது. அவன் சோர்வோடு அவைகளை பார்க்கத் தொடங்கினன். அவன் பார்வையிலே ஒரு அதிர்ச்சி! அவன் மாட்டியிருந்த சித்திரத்தின் அருகில் வந்தான். அந்தப் படத்திலே...கண்களிலே கனல் பறக்க எதிரே உடைந்து கிடந்த சிலம்பைச் சுட்டிக் காட்டிக்கொண்டு கண்ணகி நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கு எதிரில் அரியணையில் அமர்ந்து இருந்த பாண்டியன் நெடுஞ்செழியன் நெற்றியில் கைவைத்துக்கொண்டு மூர்ச்சையாகித் தள்ளாடிக் கொண்டிருந்தான்.

மாறவர்ம குலசேகர பாண்டியனின் தொண்டைக் குழியில் நீர் வரண்டது. அவன் கண்கள் சுருங்கி அவனுக்கு எதிரில் நீதி சிரித்துக் கொண்டிருந்து!

'நான் சாகலாம்! ஆனல் உண்மை என்றுமே சாவதில்லை...'—பளிச் பளிச்சென்று பழைய நினைவுகள் மின்னி முழங்கின.

'உண்மை...உண்மை...'—அவனது உள்ளம் அரற்றியது. அவன் எழுந்து நடந்தான்.

வெளியில், வான அரங்கிலே அள்ளித் தெளித்திருந்த நட்சத்திரப் புள்ளிகளைத் தவிர, மதியைக் காண வில்லை! துள்ளித்திரிந்த அவ்வெள்ளிச் சிறு மீன்கள், அள்ளும் இருளை அகற்றிடும் சக்தி உடையனவா?

3

'டிங் டிங்!...'—யாழின் ஒலி துவண்டு போய் நின்றது. பாணன் சிறைச் சாளரத்தின் வழியாக வானத்தைப் பார்த்தான். வானத்தில் கண்ணீருக்கு இரங்கிச் சந்திரன் முகில் திரையை விலக்கி முகம் காட்டினன்.

சந்திரனின் ஒளிக்கோடுகள் சாளரத்தின் வழியாக சிறையறைக்குள் விழுந்தன. பாணனின் முகத்திலே ஒரு இலேசான முறுவல் பூத்தது.

'குருதேவா...'—ஒரு மகிழ்ச்சிப் பெருமூச்சு சொல்லோடு இணைந்து வெளிவந்தது. அவன் நெஞ்சிலே ஒரு விவரிக்க முடியாத பூரிப்பு!

"நாளைக் காலையிலே நான் இறந்து விடுவேன்! அப்புறம் என்னல் இயற்கையின் எழிலைப் பருக முடியாது! ஆயினும் என்ன? நான் எடுத்துக்கொண்ட முயற்சியை, நேரிய வழியிலேயே சென்று முடிக்க முயனறேன் என்ற அமைதி எனக்குக் கிடைத்து விடடது! அது போதும்!"— அவனுடைய உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஒரு குரல் பேசியது.

சற்றுநேரம் அமைதி. பிறகு திடீரென்று ஒரு சூறுவளி. "நீ இறக்கலாம் அமைதியோடு. ஆனல் உன் குறிக்கோள்? அது இப்போது ஆதரிப்பாரற்ற அனதை!..." ஒரு பேய்ச்சிரிப்புக் கேட்டது.

"ஆ......என் குறிக்கோள்...என் இலட்சியம்..."—அவன் பைத்தியம்

பிடித்தவன் போலத் தலைமயிரைக் கைகளால் பிய்த்துக்கொண்டான்.

“குருதேவா...” — அவனையறியாமல் அவனுடைய வாயினின்று வெளிவந்தது. அந்த ஒரு சொல் அந்த அறையின் மற்ற மூலைகளில் மோதி எதிரொலித்தது. அவனுக்கு எல்லாமே வீணாகத் தோன்றியது. ஒரே சூனியம்! அந்தச் சூனியத்தின் மத்தியிலும்......அவனுடைய இலட்சியம் அமைதியாகக் கிடந்தது! பாணனுக்கு மனதிலே ஒரு ஆவேசம். அவனுடைய விழிகள் அகல விரிந்தன.

அவனுடைய பார்வைக்கும் அவனுடைய இலட்சியத்திற்கும் இடையிலே ஒரு அகண்ட இடைவெளி. அந்த இடைவெளியின் மத்தியில்... ஒரு பௌத்த பிட்சு சிரித்துக் கொண்டிருந்தார்.

'குருதேவா'—அந்தப் பாணன் பாய்ந்தான். இரண்டு அன்புக் கரங்கள் அவனை அணைத்துக்கொண்டன. அவனுக்கு உடலெல்லாம் புல்லரித்தது. அவன் அந்த அணைப்பிலேயே ஒன்றிவிட்டான்.

* * *

பௌத்த பிட்சு சிரித்தார். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என் சிரிக்கிறீர்கள், குருதேவா? என் வேண்டுகோளின் பைத்தியக்காரத் தன்மையை எண்ணிச் சிரிக்கிறீர்களா? ஆம். நான் பைத்தியக்காரன்தான்! ஆசையை அறுத்து பௌத்த பிட்சுவான தங்களிடம், என்ன தங்களுக்கு விருப்பமான பொருள் என்று கேட்டது என்னுடைய பைத்தியக்காரத் தனம் தான்!"—அவன் பெருமூச்செறிந்தான்.

"பராக்கிரமா, வீணாக மனதை அலட்டிக்கொள்ளாதே! என்னுடைய விருப்பத்தை அறிந்து, எனக்குக் காணிக்கை அளிக்க உத்தேசித்த உன் நோக்கத்தில் எந்தத் தவறும் இல்லை! நானும் ஆசையை அறுக்க வேண்டும் என்று தான் பௌத்த பிட்சுவாக மாறினேன். ஆனால் என்னால் இன்னும் ஆசையை அறுக்க முடியவில்லை! என் உள்ளத்தில் கூட ஆசை இருக்கிறது! அதை எண்ணும் போதுதான் எனக்குச் சிரிப்பு வந்தது. சிரித்தேன். இன்னமும் சிரித்துக்கொண்டே இருக்கிறேன்"-அவர் மேலும் சிரித்தார்.

"குருதேவா, நான் பாக்கியசாலி! தங்கள் விருப்பம் என்ன சொல்லுங்கள். என் உயிர் போவதாக இருந்தாலும் அதை நிறைவேற்றி வைக்கிறேன்! அவனுடைய குரலிலே இளமை துடிதுடித்துக்கொண்டிருந்தது.

பௌத்த பிட்சு மௌனமாக இருந்தார். அவர் முகத்தில் கவலை அலைகள் மோதின.

"குருதேவா! என்ன யோசிக்கிறீர்கள். ஒருவேளை...? குருதேவா, தாங்கள் எனக்குக் கற்பித்த ஒப்பற்ற இசைக் கலைக்கு—யாழ் இசைக்கும் திறமைக்கு நான் ஏதாவது காணிக்கை அளித்தால்தான் என் மனம் அமைதியடையும்!"—அவன் அவருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் வடித்தான்.

"பராக்கிரமா! என்னுடைய ஆசை அன்பிலே மலர்ந்தது. அதை அன்பினாலேயே நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் நீ வாளேந்திப் போர் புரியும் வீரன். உன்னால் என் ஆசையை வாள் முனையினால்தான் நிறைவேற்றித் தர முடியும். இரத்தச் சேற்றின் மத்தியிலே தன்னுடைய ஆசை நிறைவேற்றப்படுவதை எந்த பௌத்தனும் விரும்ப மாட்டான். வேண்டாம், பராக்கிரமா..."

"குருதேவா! தங்கள் விருப்பத்தை நான் அன்பினாலேயே நிறைவேற்றி வைக்கிறேன். சொல்லுங்கள், குருதேவா!"—ஒரே பிடிவாதமாகக் கேட்டான்.

"கேள் பராக்கிரமா! பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, பாண்டியப் படை வீரர்கள் இலங்கையைப் பிடிக்கும் போது, அநுராதபுர பௌத்த விஹாரத்திலிருந்து எடுத்துச் சென்றார்களே, அந்த புத்தர் பெருமானின் திருப்பற்கள்—அது தான். என்னுடைய ஆசை......"—பௌத்த பிட்சுவின் கண்களிலிருந்து நீர் கசிந்தது.

"குருதேவா! இது உங்கள் ஒருவருடைய விருப்பம்மட்டுமல்ல. ஈழத்திலே இருக்கும் ஒவ்வொரு மனிதனுடைய விருப்பமும் அது தான்...ஆனால்..."—அவனால் மேலே பேச முடியவில்லை. அவனுடைய தொண்டையை ஏதோ ஒன்று அடைத்தது.

"ஆனால் என்ன பராக்கிரமா?"—பிட்சுவின் குரலில் ஒரு படபடப்பு.

"ஒன்றுமில்லே! அப் புத்தரின் திருப்பற்களைப் பாண்டியன் படை வீரர்கள் இங்கே தாங்கள் அடைந்த வெற்றிக்கு அறிகுறியாக எடுத்துச் சென்ருர்கள். அதை நாம் அவர்களிடமிருந்து கெஞ்சிக் கூத்தாடியாவது பெற்று விடவேண்டும்"

"பராக்கிரமா! அவர்கள் அந்தத் திருப்பற்களை தங்கள் வெற்றிச் சின்னமாக எடுத்துச் சென்ருர்கள்...அதை நீ திரும்பவும் போரில் வெற்றியடைந்தே திரும்பிக் கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிருய்...... சரி...நீ போகிற வழியிலே சென்று வெற்றி பெற்று அத் திருப்பண்டத்தை மீட்டுக் கொண்டு வந்தால், பாண்டிய நாட்டார் தாங்கள் இழந்த அவ்வெற்றிச் சின்னத்தைத் திருப்பி அடைய முயற்சி செய்ய மாட்டார்களா? அப்பொழுது நிலைமை என்னுகும்? மீண்டும் மீண்டும் போர்! மீண்டும் மீண்டும் பிணக் குவியல்!! அப்பப்பா...வீரம் என்ருல் கொலே என்றுதான் பொருளா? அன்பையும் அறத்தையும் பேணும் மனத் திண்மைக்குத் தானே வீரம் என்று பெயர்! கொலே வழி செல்லாது தன்னையே சோதனைக்குள்ளாக்கி, பாண்டியனின் மனதை மாற்றி அத் திருப்பற்களை மீட்டுக்கொண்டு வரக் கூடாதா? அதுபோல செய்வது அறவழி நிற்கும் வீரமில்லேயா?"— பௌத்த பிட்சு உணர்ச்சியில் பேசிக் கொண்டே போனுர்.

"குருதேவா! தாங்கள் கூறும் வழி சரிதான்! ஆனல் வெற்றி...?"

"நீ ஒரு வீரன்...! நீ முடிவைப் பற்றிச் சிந்திக்கக்கூடாது. கடைசி வரையில் முயற்சி செய்யவேண்டியது உன் கடமை. உன் கடமையை நீ செய்..."

"என் கடமையை நான் செய்கிறேன், குருதேவா!"—அவன் கண்களில் ஒரு ஒளி மின்னியது.

"நான் வீரன்! நான் முடிவைப் பற்றிச் சிந்திக்கக்கூடாது. கடைசி வரையில் முயற்சி செய்யவேண்டியது என் கடமை! என் கடமையை நான் கண்டிப்பாகச் செய்வேன்..."— அவன் விழித்து எழுந்தான். யாரோ அவன் தலேயைத் தாங்கிக்கொண்டு இருப்பதுபோலத் தெரிந்தது. அவன் திரும்பிப் பார்த்தான்.

"என்ன தம்பி, உன்னுடைய கடமை? பாணனுக உருமாறி உளவறிய வருவதா உன் கடமை!"— ஒரு ஆள் சிரித்துக்கொண்டு இருந்தான். பாணன் அவனே உற்றுப் பார்த்தான். உயர்ந்த உருவம். அகன்ற மார்பு. திரண்ட தோள்கள். முறுக்கிவிடப்பட்ட மீசை. சுருக்கம் நிறைந்த முகம்.

"யார், சிறைக் காவலனு?"

"ஆமாம்.......உன்னைப்போன்ற ஒற்றர்களுக்கு நாங்கள்தானே பாதுகாப்பாக இருக்கவேண்டியிருக்கிறது..."—அவன் மேலும் சிரித்தான்.

பாணனின் முகம் சுருங்கியது.

"தம்பி.........கோபித்துக்கொள்ளாதே! காலேயில் தூக்கில் தொங்கி உயிரை விடப்போகிருய்! இப்பொழுது நான் எது சொன்னுலும் உனக்கு வருத்தமாக இருக்கும். இம்ம்...இல்லேயா?"

"எனக்கு என் வருத்தம் வருகிறது? நான்தானே விரும்பி இந்தத் தூக்குத் தண்டனையைப் பெற்றுக்கொண்டேன்! எனக்குச் சாவதற்குக் கொஞ்சம்கூட அச்சமில்லே!"—என்று சொல்லிப் பாணன் சிரித்தான்.

"என்ன தம்பி? நீயாகவா உனக்குத் தூக்குத்தண்டனே வேண்டுமென்று அரசரிடம் கேட்டுக் கொண்டாய்? உனக்கு ஏன் தம்பி இந்தச் சிறுவயதிலே இவ்வளவு மன விரக்தி?"—சிறைக் காவலன் பரிதாபத்தோடு கேட்டான்.

"மனிதனுக்குத் தன்னுடைய ஆசை நிறைவேருமல் போனல் விரக்தி ஏற்படுகிறது சகஜம் தானே!"—அவன் அமைதியாகப் பதில் சொன்னுன்.

"இது என்ன தம்பி, பைத்தியக்காரத்தனம்! மனிதன் வாழ்வதுக்காக ஆசையா? அல்லது சாவதற்காக ஆசையா? நீ என்ன தம்பி! ஆசைக்காக என் அநியாயமாக உயிரை விடுகிருய்?"

"என்னுடைய ஆசையின் தன்மை உனக்குத் தெரியாது! அது தெரிந்தால் நீ இப்படிப் பேசமாட்டாய்?"

"அப்படிப்பட்ட அந்த ஆசை தான் என்ன தம்பி?"

"அதுவா? பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்திலிருந்து வெற்றிச் சின்னமாக இங்கே கொண்டுவரப்பட்ட புத்தர் பெருமானின் திருப்பற்களைத் திரும்பவும் அங்கே கொண்டு செல்லவேண்டும் என்பதுதான் என் ஆசை...!"

"அதை எப்படி உன்னால் திரும்பிக் கொண்டுபோக முடியும்?"- சிறைக் காவலனின் கண்களில் ஆச்சரியம் பரவியது.



"மாறவர்ம குலசேகர பாண்டியன் சங்கீதத்திலேநல்ல இரசிகர் என்று கேள்விப்பட்டேன். அவரிடம் என் திறமையைக் காட்டி அத்திருப்பற்களைப் பரிசாகப் பெறலாம் ;என்றுதான் இங்கு வந்தேன்! ஆனால் எனக்குக் கிடைத்த பரிசு இன்று இரவு சிறைவாசம்! நாளை தூக்குத்தண்டனை! ஆனால் ஒன்று, நான் நாளை இரவுக்கு முன்பு என்னுடைய ஆசையைச் சொல்லிவிட்டுத்தான் சாவேன்! அது நிச்சயம்!" என்று உறுதியாகச் சொல்லிச் சிரித்தான்.

சிறைக் காவலன் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தான் அவன் முகத்திலே அநேக ஆயிரம் எண்ணங்கள் சுழியிட்டு மறைந்தன.

"தம்பி! உன்னைப் பார்க்கும் போது எனக்கு உடலெல்லாம் புல்லரிக்கிறது! நீ ஒரு விசித்திரமான மனப்போக்குடைய வீரன்— உனது நெஞ்சுத் துணிவு பதினாயிரம் போர்க்களங்களைப் பார்த்தவனுக்கும் ஏற்படாது..."—சிறைக் காவலன் பாணனின் முதுகில் தட்டினான்.

"இந்த வீரம் எனக்குத் தானாக உண்டாகியது அல்ல! எனது குருநாதர் அமலானந்த அடிகள் போதித்த போதனையின் விளைவு!"— அவன நெஞ்சு பூரிப்பால் உயர்ந்து தணிந்தது.

"தம்பி, உன்னுடைய குருபக்தி போற்றுவதற்குரியது! கடைசியாக உன்னை ஒன்று கேட்கிறேன். பதில் சொல்லுகிறாயா?"

"கேளுங்கள்...முடிந்தால் சொல்கிறேன்"

"உன்போன்ற ஒரு வீரனைப் பெற்றெடுத்த அன்னை, தந்தையார், தம்பி!"

பாணனின் முகம் சுருங்கியது. அவன் யோசனையில் ஆழ்ந்தான். ஒரு பெருமூச்சு வெடித்து வெளிக் கிளம்பியது.

"என்ன, தம்பி? நான் கேட்டது உனக்குப் பிடிக்கவில்லையா?"—மிகவும் வினயமாக அந்தக் காவலான் கேட்டான்.

"உன்மீது எனக்கு வருத்தமில்லை...என் தந்தையாரின் பெயரைக் கேட்டால், உனக்குத் திகைப்பு ஏற்படலாம். அதுதான் யோசனை செய்கிறேன்..."

"அதனாலே என்ன? சும்மா சொல்லு தம்பி?"—சிறைக் காவலன் பாணனின் உதடுகளையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான்.

"யாருடைய அலட்சியத்தினால் ஈழம் இன்று பாண்டிய நாட்டிற்கு அடிமையாய் கிடக்கிறதோ—யாருடைய முட்டாள்தனத்தினால் அநுராதபுரத்திலுள்ள புத்தரின் திருப்பற்கள் இங்கே வெற்றிச் சின்னமாகக்

புன்னகை பூத்திடும் வேளை — ஒரு
புதுமையும் காண்பதேனோ குழந்தாய்!
முன்னம் அரம்பையர்கள் மூவர் — ஒன்றாய்
முத்தம் அளித்த குறி அம்மா!

—கவிமணி

கொண்டு வரப்பட்டதோ அந்த புவனேகபாஹு மன்னரின் மகன்தான் நான்.........." பாணன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

"நீங்கள் காலம் சென்ற புவனேகபாஹு மன்னர் மகன் பராக்கிரம பாஹுவா? தங்களைப் புரட்சிக்காரர்களின் தலைவர் என்றல்லவோ சொன்னார்கள்" — சிறைக் காவலனின் கண்களில் ஆச்சரியம் பொங்கியது.

"ஆமாம்... நான்தான் அந்தப் பராக்கிரமன்! முன்பு பாண்டியனின் படை வீரர்கள் என்னுடைய வாளின் வலிமையை மட்டும் அறிந்திருப்பார்கள்...இன்று அவர்கள் என்னிடத்தில் இருக்கும் யாழ்த் திறமையையும் தெரிந்துகொள்ள வைத்துவிட்டேன்...நாளை..."

"ஈழத்து இளவரசே, நாளை நீங்கள் அநியாயமாக இறந்துவிடுவீர்கள்; நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் இங்கிருந்து தப்பிப் போவதற்கு வேண்டிய உதவிகளை நான் செய்கிறேன்! தாங்கள் தப்பிச் சென்றுவிடுங்கள்! தாங்கள் யாரென்று அறியாதபோதே தங்களைக் கைது செய்திருக்கிறார்கள். தாங்கள்தான் பராக்கிரமபாஹு இளவரசர் என்று தெரிந்தால்...வேண்டாம்! என் சொல்படி கேளுங்கள்' என்று பராக்கிரமனின் பேச்சில் இதைக் குறுக்கிட்டுச் சொன்னான் காவலன்.

"சிறைக் காவலரே! உங்கள் அன்பிற்கு நன்றி...ஆனால் உங்கள் விருப்பப்படி என்னால் நடக்க முடியாமைக்கு மன்னிக்கவும்! என்னை ஒற்றன் என்று பாண்டியன் எற்கனவே முடிவு செய்திருக்கிறான். இப்பொழுது நான் ஓடிவிட்டால் அவருடைய சந்தேகம் சரியாய்விடும்! என்மீது அதுபோன்ற ஒரு பழி எற்படும்படி செய்துகொள்ள நான் விரும்பவில்லை! யாழின் மூலமாக பாண்டியனின் மனதைப் மாற்றிப் புத்தரின் திருப்பற்களை மீட்டு, அதை என் குருநாதருக்குக் காணிக்கையாக்குவது என்ற எண்ணத்தில்தான் நான் இங்கு வந்தேன். என்னுடைய இந்த விருப்பத்தைச் சாவைக் கண்டு அஞ்சி நான் மாற்றிக்கொள்ளத் தயாராய் இல்லை! சாகும்போதும் இதை மட்டும் சொல்லிவிட்டுத்தான் சாவேன்! என்னுடைய சாவாவது பாண்டியன் மனதை மாற்றுகிறதா என்றுதான் பார்க்கப்போகிறேன். அதுதான் என் கடைசி ஆசை!"— அவனுடைய முகத்தைத் தியாகம் ஒளியேற்றியது.

சிறைக் காவலனின் முகத்திலே ஒரு சிறு நகை பூத்தது.

"நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன்—பிறகு உங்கள் இஷ்டம்."

"சத்திய வழியிலே நடக்க விரும்புபவன் சாவைக்கண்டு மருளமாட்டான். நீங்கள் எனக்காக வருந்த வேண்டாம்."

'டணார்...டணார்...டணார்...' மூன்றாம் சாமத்தைக் குறிப்பிடும் மணி அடித்தது.

"நான் வருகிறேன் தம்பி!"— சிறைக் காவலன் எழுந்து சென்று சிறைக் கதவைப் பூட்டினான். பிறகு அந்த அறையிலே அமைதி சூழ்ந்தது.

பாணன் சாளரத்தின் வழியாக வானத்தைப் பார்த்தான். வானத்திலே ஒரு தெளிவு. மப்பும் மந்தாரமும் கலைந்துவிட்டது.

4

கூண்டிலிருந்து வெளிக் கிளம்பிய குருவிக் கூட்டம் இரை தேடி வெளிக் கிளம்பியது. கருமை கப்பியிருந்த வானிலே ஆதவன் கறை

நீக்கி அழகளித்துக் கொண்டிருந்தான்.

முதல் நாள் இரவு பெய்த மழையினால் நிலம் சதசதத்து மிருதுத் தன்மை அடைந்திருந்தது.

பாண்டியப் படை வீரர்கள்—பாணனை—ஈழத்து இளவரசன் பராக்கிரமனைச் சோலை வழியே அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

பாணனின் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. அமைதி குடிகொண்டிருந்தது. அவன் உதடுகள் 'புத்தம் சரணம் கச்சாமி' என்று ஜபித்துக் கொண்ருடிந்தது.

அந்தச் சோலையின் மத்தியில் இருந்த புல்வெளியிலே கவசம் தரித்த வீரர்கள் அணிவகுத்து நின்றனர்.

பராக்கிரமன் அவர்களைப் பார்த்தான். அவன் முகத்திலே மகிழ்ச்சி. 'இன்னும் சற்று நேரத்தில்... ஊம்ம்...'—அவன் கண்களை இறுக மூடிக்கொண்டான். அவன் எதிரில் தூக்குக்கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. சாவுப்பெண் அவனை நோக்கிச் சிரித்துக்கொண்டிருந்தாள்.

"ஈழத்து இளவரசே வருக!..."—ஒரு கம்பீரமான குரல் கேட்டது.

பராக்கிரமன் திடுக்கிட்டுக் கண் விழித்துப் பார்த்தான். அவனுக்கு எதிரில் மாறவர்ம குலசேகர பாண்டியன் சிரித்துக்கொண்டிருந்தான்.

பராக்கிரமனுக்குத் தான் காண்பது கனவா, நனவா என்று புரியவில்லை. அவன் ஆச்சரியத்தால் திணறினன்.

"இளவரசே, நான் தங்களைத் தவருக எண்ணி, தங்களுக்கு ஏற்படுத்திய சிரமத்திற்கு என்னைப் பொறுக்கவும்"

"ஒறுப்பதும், பொறுப்பதும் உங்கள் கையில் இருக்கிறது. நான் தங்களைப் பொறுப்பது..."—பாணனின் முகத்திலே ஆனந்தக்கூத்தாடியது. அவனுக்குப் பாண்டியனின் திடீர் மாறுதலுக்குக் காரணம் புரியவில்லை!

மாறவர்ம குலசேகர பாண்டியன், பராக்கிரமபாஹுவைத் தன்னருகில் அமர வைத்துக்கொண்டான். அவன் முகத்திலே ஒரு தனிப்பட்ட தெளிவு காணப்பட்டது.

"ஈழத்து இளவரசே! நேற்று நீங்கள் சொன்னீர்கள் 'உண்மை என்றும் சாவதில்லை' என்று. ஆனல் நான் இப்போது சொல்கிறேன், 'உண்மையை எவ்வளவுதான் அழுத்தி வைத்தாலும் அது மேலே கிளம்பிவிடும்' என்று. என்ன நான் சொல்வது சரியா?" பாண்டியன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

பராக்கிரமபாஹு பதில் ஒன்றும் பேசவில்லை! அவன் பாண்டியனை ஏறஇறங்கப் பார்த்துக்கொண்டிருந்தான. அவன் மனதிலே ஒரு சந்தேகம்...?

"என்ன இப்படிப் பார்க்கிறீர்கள், இளவரசே?"

"ஹும்...அதே குரல் தான்! அரசே நீங்கள் நேற்று இரவு..."

பாண்டியன் சிரித்துக்கொண்டே தலையை ஆட்டினன். பராக்கிரமபாஹுவின் மனதிலே தெளிவு ஏற்பட்டது.

அதற்குள் ஒரு சேவகன் பராக்கிரமபாஹுவின் யாழை அவன் எதிரில் கொண்டுவந்து வைத்தான். பராக்கிரமனின் விரல்கள் யாழின் நரம்புகளைத் தடவ ஆரம்பித்தன.

"இளவரசே, இனிமேலும் என்னை மயக்கவேண்டாம்! என் மனம் நேற்றே மாறித் தங்கள் அன்புச் சோதனையில் இலயித்துவிட்டது" என்றுகூறி, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு படைத் தலைவனிடம் கையை நீட்டினன். அவன் ஒரு தந்தப் பேழையைப் பாண்டியனின் கையில் வைத்தான்.

"இதோ உங்களுக்கு என் அன்புப் பரிசு!"—என்று அதைப் பராக்கிரமனிடம் அளித்தான். பராக்கிரமபாஹு அதைத் திறந்து பார்த்தான். அதில் புத்தர் பெருமானின் திருப்பற்கள் இருந்தன.

பராக்கிரமபாஹுவின் கண்களில் நீர் பொங்கியது.

"புத்தம் சரணம் கச்சாமி!"—அவன் அதைத் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டான். பாண்டியனின் முகத்திலே பூரிப்புப் பொங்கி வழிந்தது! ★

பொங்கல் விழா

— நா. கி. நாகராசன் —

சோர்வகற்றும் திருநாள்

தமிழகத்தின் தனித் திருநாளான பொங்கல் உலகுக்கு உணவளிக்கும் உழவனும், தேவையான பொருளைத் தயாரிக்கும் தொழிலாளியும் தமது வேலையினின்று ஓய்வு பெற்றுப் பண்டிகை கொண்டாடும் விடுமுறை நாள். தொழிலாளர் உரிமைக் கிளர்ச்சியும், வார முறைச்சட்டமும் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பண்டிகைகளைச் சாக்காகக் கொண்டு விடுமுறை பெறும் வழக்கம் நம்நாட்டில் இருந்துள்ளது. வேலை செய்து களைக்கும் உள்ளமும், உடலும் அவ்வப்போது ஓய்வு பெறவேண்டும் என்ற உண்மையை உள நூலும், மருத்துவமும் கண்டறியுமுன்னரே அனுபவத்தின் அடிப்படையில் இது அறியப்பட்டிருந்தது.

மானிடனது உழைப்பைக் குறைக்கும் இயந்திரங்கள் பெருகி வரும் இந்தக் காலத்தில் நமது மூதாதையரைப்போல் நாம் உடல் சோர உழைக்க வேண்டியதில்லை என்றும், கடும் உழைப்பில் முன்னர் கழித்த நேரத்தைப் பயனுள்ள வகையில் இப்போது செலவழிக்கலாம் என்றும் தற்காலத் தொழில் நாகரிகத்தின் புகழ் பாடுவோர் பறைசாற்றுகிறார்கள். ஆனால், இந்நாளில் வழக்கத்திலுள்ள இயந்திர சாதனங்களால் மானிடனது உழைப்பும், உழைப்பினால் விளையும் சோர்வும், உண்மையிலேயே குறைந்திருக்கின்றனவா என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே கார்ல் மார்க்ஸ் ஆராய்ந்தார். 'இயந்திரங்கள் மானிடனது சோர்வைக் குறைப்பதற்கு மாறாக, அதை அதிகரிக்கவே பயன்பட்டிருக்கிறது. இயந்திரங்களை ஓட்ட மிகுதியான வலிமையோ, திறமையோ தேவையில்லை. இதனால் குழந்தைகளையும், பெண்களையும் தொழிலில் ஈடுபடுத்தி அதிக நேரம் உழைக்குமாறு செய்ய முடிகிறது. இப்போது தோன்றியுள்ள சமுதாயத்தில் உடற் சோர்வு குறைவது போய், அது இன்னும் ஆபத்து நிறைந்ததாகவும், உடலுக்குக் கேடு விளைவிப்பதாகவும் ஆய்விட்டது' என அவர் கூறினார். ஆகையால் எந்திர யுகமான இக்காலத்தில் சோர்வு என்ற பிரச்சினை இன்னும் முக்கியமானதாய் விட்டது.

சோர்வு ஏதனால் ஏற்படுகிறது?

நெடுநேர உழைப்பினால் உடலில் சோர்வு விளையக் காரணமென்ன என உடல் நூலறிஞர்கள் இரண்டு நூற்றாண்டுகளாகவே ஆராய்ந்து வருகிறார்கள். உடலிலுள்ள தசைகளின் சுருக்கத்தால் அதன் உறுப்புக்கள் இயங்குகின்றன. தசையின் சுருக்கம் மிகச் சிக்கலான ரசாயன விளைவொன்றை அடிப்படையாகக் கொண்டது.

நடைமுறை வாழ்வை விஞ்ஞானத்துடன் இணைத்துச் சித்தரிப்பதில் திரு நா. கி. நாகராசன் அவர்கள் சிறப்பானவர். 'பொங்கல் விழா' கட்டுரை இதற்கு எடுத்துக் காட்டு. ஆசிரியர் 'தமிழ்க்கலைக் களஞ்சிய'த்தின் துணையாசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் குழந்தைகளுக்கு எழுதிய 'ராமுவும் நானும்' என்ற நூல் அனைவருக்கும் பெரிதும் பயன்படும்.

பிறர் குணங்களை மெச்சும் இயல்பை விட அதிகமாக வேறெதுவும் நமக்கு நண்பர் களைத் தேடிவிடாது.

—பாஸ்வெல்

'உயிரானது சூரியனின் வளர்ப்புக் குழந்தை' என மாஸோ (*Mosso*) என்னும் இத்தாலிய உடலிய லறிஞர் அழகுபடக் கூறினர். உயிர்களுக்குத் தேவையான சக்தி அனைத்தையும் சூரியன் தந்துதவு கிறது. நாம் உணவை உட்கொள்ளும் போது அதில் அடைபட்டிருக்கும் சூரிய சக்தியைப் பெறுகிறோம். நாம் உட்கொள்ளும் உணவு தசைகளிலும் கல்லீரலிலும் கிளைகோஜன் (*Glycogen*) என்ற பொருளாகச் சேமித்து வைக்கப்படுகிறது. உட லுறுப்புக்களின் இயக்கத்தின் போது இப்பொருள் சிதைந்து லாக்டிக் அமிலம் (*Lactic Acid*) என்ற நச்சுப் பொருளாக மாறுகிறது. இப் பொருள் இரத்தத்தில் கலந்து உட லின் பல பகுதிகளிலும் பரவுகிறது. உடலின் இயக்கம் குறிப்பிட்டதோர் எல்லைக்குள் இருக்கும் போதும், உறுப்புக்கள் அவ்வப்போது போதிய ஓய்வு பெறும் போதும் இந்த நஞ்சு நமது மூச்சிலுள்ள ஆக்சிஜன் வாயு வுடன் கூடி எளிய பொருள்களாகச் சிதைந்து வேர்வையிலும், வெளி மூச்சிலும், சிறு நீரிலும் வெளியேறி விடுகிறது. நமது மூச்சில் வெளி வரும் 'கார்பன் டையாக்சைட்' என்ற வாயு இவ்வாறு வெளி யேற்றப்படும் பொருள்களுள் ஒன்று. ஆனால் வரம்பு கடந்த முயற்சியாலும், இரத்தத்திலுள்ள நஞ்சுகளின் அளவு அதிகமாகிறது. நஞ்சு நிறைந்த தசைகள் சுருங்கும் தன்மையை இழந்துவிடுகின்றன. சோர்வுக்குக் காரணம் இதுவே. குறிப்பிட்டதோர் அளவிற்கும் அதிகமாக இப்பொருள்கள் இரத் தத்தில் சேர்ந்துவிட்டால் உடல் நலம் கெடுகிறது. அப்போது வெறும் ஓய்வினால் மட்டும் நமது உடல் சீர்ப் படுவதில்லை.

ஓய்வு தேவை!

இதில் இன்னொரு முக்கியமான உண்மையையும் நாம் கவனிக்க வேண்டும். சோர்வடைந்த தசை வேலை செய்யும் போது அதன் திறமை கெடுகிறது என்பதோடு, இப் போது அதில் தோன்றும் நச்சுப் பொருள்கள் சாதாரண நிலையிலுள்ள தசையைவிடச் சோர்வுற்ற நிலையில் அதை அதிகமாகப் பாதித்துக் கேடிற்குள்ளாக்கும். ஆகையால் சோர்வு என்பது ஓர் உடலுக்கு ஓய்வு தேவை என்ற உண்மையை அறி வுறுத்தும் அபாய அறிவிப்பே ஆகும். இதை மதியாது வேலை செய்வது உடலுக்கு நிலையான தீங்கை விளை விக்கும்.

உடற் சோர்வின் போது நிகழும் இன்னொரு விளைவும் குறிப்பிடத் தக்கது. ஒருவன் தனது கைகளால் நெடுநேரம் வேலை செய்து கொண் டிருந்தால், கைகளின் தசைகளில் நச்சுப் பொருள்கள் தோன்றி இரத் தத்தின் வழியே மிக விரைவாக மற்றப் பகுதிகளையும் அடைகின்றன. இதனால் மற்ற உறுப்புக்களின் இயக் கமும் பாதிக்கப்படுகிது. நாள் முழு தும் அச்சுப் பதிவில் (*Type-writer*) வேலை செய்து களைக்கும் குமாஸ்தா மாலையில் வீடு திரும்பும் போது அவன் கால்களும் தள்ளாடுவதை நாம் பார்க்கிறோம் அல்லவா? இரத்த ஓட்டத்திற்கும், சோர் விற்கும் நெருங்கிய தொடர்புள்ளது.

தொழிலாளர் சோர்வின் விளைவுகள்.

உடற் சோர்வு என்பது தசைகள் அடையும் மாறுபாட்டினால் விளை வது என்றும், இம்மாறுதல்கள் தோன்றும் இடம் தசைகளில் முடியும் நரம்புகளின் நுனியே என் றும் சோதனைகள் தெளிவாக்கி யுள்ளன. ஆகையால் உடற் சோர் வினால் நரம்புகளும், மூளையும் சோர் வடைகின்றன. இதனால் சோர் வின் அறிகுறிகள் உடலைவிட உள் ளத்தில் இன்னும் விரைவாகத் தோன்றுகின்றன. சோர்வடைந்த

தொழிலாளிக்குத் தன் வேலையில் கவனக் குறைவு ஏற்படுகிறது. அவன் பொறுமை யிழந்து காரண மின்றிக் கோபம் கொள்ளும் நிலையை அடைகிருன்; அவனது சிந்தனைத் திறன் குறைகிறது. அவனது அவயவங்களின் ஒருமித்த ஒத்துழைப்புக் கெட்டு அவை தாறுமாருக வேலை செய்கின்றன. ஆகையால் அவன் தன் வேலையில் தவறுகள் செய்கிருன். சிக்கலான இயந்திரங்களை ஓட்டும் தொழிலாளருக்கு நேரும் விபத்துக்களில் பெரும் பான்மையானவை சோர்விஞல் விளைபவையே என்பதைத் தற்கால ஆராய்சிகள் ஐயமறத் தெளிவாக்கியுள்ளன.

சோர்வுற்ற நிலையில் வீடு திரும்பும் தொழிலாளியின் நரம்புகள் ஒரு வகைக் கிளர்ச்சி பெற்றிருக்கும். இக் கிளர்ச்சி பல வடிவங்களில் வெளித் தோன்றலாம். களைத்துப் போய்வரும் தொழிலாளி தனது மனைவி மக்களைக் காரணமின்றி வைவதும், சாராயம் போன்ற லாகிரிப் பொருள்களில் அமைதி காண்பதும் நாம் அறிந்ததே அல்லவா? கிளர்ச்சியுற்ற உள்ளமானது காமத் தீக்கு எண்ணெய் போன்றது என்பதையும் உளநூலாராய்ச்சி காட்டியுள்ளது. ஆகையால் களைப்பினுல் தோன்றும் காம வேட்கையில் ஒருவன் தனது பொருளாதார நிலையையும், குடும்ப நலனையும், மனைவியின் உடல் நலத்தையும் கருதிப் பார்க்கவும் முடியாது. கருத்தடைப் பிரசாரம் அரசாங்க ஆதரவில் நடைபெறுகிறது. இதற்காக அமெரிக்காவிலிருந்து மருத்துவ நிபுணர்கள் இறக்குமதி செய்யப்படுகிருர்கள். மக்கட் தொகைப் பெருக்கத்தில் இந்த அம்சத்தை யாராவது ஆராய்கிருர்களா?

மூளைச் சோர்வின் முக்கியத்துவம்.

ஆகையால் உடற் சோர்வைவிட உள்ளச் சோர்வே முக்கியமானது என்பது தெளிவாகிறது ஆனுல் இதுபற்றி மேனுடுகளிலுங்கூட இன்னும் விரிவான ஆராய்ச்சிகள்

சத்தியத்தைப் பேசுவது, சத்தியத்தை எண்ணுவது, சத்தியத்தைச் செய்வது — இவையே சரியான பாதையின் முதல் படிகள். —மகாத்மா காந்தி

செய்யப்படவில்லை. நமது மூளையிலுள்ள உயிரணுக்கள் சில விநாடிகளுக்குள் சோர்வடையுமாறு அவ்வளவு மென்மையானவை என அறியப்பட்டுள்ளது. ஆனுல் மூளையில் கோடிக்கணக்கான உயிரணுக்கள் இருப்பதால் நாம் நெடுநேரம் தொடர்ந்து வேலை செய்யமுடிகிறது. மூளையின் இரத்த ஓட்டம் களைப்பினுல் பாதிக்கப்படுவதைக் கொட்டாவி, தலைவலி முதலிய அறிகுறிகள் காட்டுகின்றன. சிறுவர்களுக்கு உள்ளச் சோர்விஞல் உடல் வளர்ச்சியே தடைப்படுகிறது. ஆகையால் பள்ளிக்கூடங்களில் பாடங்களின் தன்மையும், அவை ஒன்றையொன்று தொடரும் வகையும், பள்ளி நேரமும் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். நீடித்த உழைப்பினுல் பசியின்மை, தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி முதலிய கோளாறுகள் தோன்றுகின்றன. உடற்சோர்வின் போது தோன்றும் உள்ளக்கிளர்ச்சி, உள்ளம் களைப்பெய்தும்போது இன்னும் தீவிரமாகத் தோன்றுகிறது. ஆகையால் களைத்த உள்ளத்தில் அர்த்தமற்ற கற்பனைகளும், பொய்யான அச்சங்களும் தோன்றி உள்ளத்தை வருத்துகின்றன.

ஒரு வேலையின் தன்மையும், சூழ்நிலையின் அமைப்பும் சோர்வு தோன்ற முக்கியமான காரணங்களாகும். தனக்குப் பிடித்தமில்லாத வேலையை ஒருவன் செய்யும் போது விரைவில் களைத்துவிடுவான். உள்ளத்தின் எதிர்ப்பைக் காட்டும் ஒரு காப்புணர்ச்சியாக இது அமைகிறது. களைப்பைத் தவிர்க்கத் தொழிற்சாலையின் வெப்ப நிலையும், வெளிச்சமும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும். அதிகமான இரைச்சலினுலும் உள்ளச் சோர்வு விரை

உயர் ரகத்தைச் சேர்ந்தது...

சாமிஸ் காபி

இதன் உயர்ந்த ரகத்திற்காகவே புகழப்படும் காபி இது. பல ரகங்களிலும் கிடைக்கும். அவரவர்களுக்கு வேண்டிய தரங்களில் பெறலாம்.

வறுக்காதது, வறுத்தது, பொடி

வில் தோன்றி உடலின் இயக்கத்தைத் தடை செய்கிறது. நூற்றிற்குச் சுமார் முப்பதுபேர் வரையில் தேவையற்ற களைப்பை விளைவிக்கும் வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை மேனாட்டு ஆராய்ச்சிகள் தெளிவாக்கியுள்ளன. ஒவ்வொரு தொழிலாளியும் வேலை செய்யும்போது அவனது அங்க அசைவுகளை ஆய்ந்து அவற்றில் தவிர்க்கக்கூடியவை எவை எனக் கண்டுபிடித்து அவனது வேலை முறையை ஏற்றவாறு திருத்தியமைப்பதால் சோர்வைக் குறைக்கலாம். தக்க ஆசனங்களை அளிப்பபதாலும் வேலைத் திறன் அதிகமாவதோடு, சோர்வு தோன்றும் காலமும் ஒத்திச் செல்லுகிறது. வேலை நேரத்தைக் குறைப்பதாலும், சரியான இடைவேளைகளைத் தருவதாலும் உற்பத்தி பெருகுவதோடு தொழிலாளருக்குப் போதிய ஓய்வும் கிட்டுகிறது.

தொழிலுடன் நேரடியான தொடர்பற்ற வேறு சில காரணங்களாலும் தொழிலாளியின் உள்ள நிலையும், அதனால் அவனது வேலைத் திறனும் பாதிக்கப்படலாம். தொழிலாளியின் வேலைக்குப் போதிய ஊக்கமில்லாததாலும், குடும்பக் கவலைகளாலும், வேலையின் நிலையின்மையாலும், தொழிலாளி—முதலாளி உறவின் சீர்கேட்டினாலும் தொழிலாளியின் உள்ளத்தில் அதிருப்தி தோன்றலாம். நிறைவற்ற உள்ளத்தோடு வேலையில் ஈடுபடும் ஒருவன் மிக விரைவில் களைத்துவிடுவான். தொழிலாளியின் உணவு, இருப்பிடம் அதில் அவன் பெறும் ஓய்வு முதலியவற்றை அவனது சமூகச் சூழ்நிலை முடிவு செய்கிறது. இதற்கும் அவனது வேலைத்திறனுக்கும் நேரடியான தொடர்பு உண்டு. ஆனால் இதைச் சீர்படுத்தி அமைக்க விஞ்ஞானத்தினால் முடியுமா? இதைச் செய்வது நாட்டின் அரசியல், பொருளாதார அமைப்பை அல்லவா சார்ந்துள்ளது?

★

சாவதென்ன லேசாமோ?

ஈழத்துச் சோணுசலக் கவிராயர்

- எழுத்தையே நம்பி வாழ முயன்றவர்கள் செத்தார்கள்.

- எழுத்தையே நம்பி வாழ முயல்கிறவர்கள் சேத்துக்கொண்டுதானிருக்கிறுர்கள்.

- எழுத்தையே நம்பி வாழ முயல்வோரும் பட்டினியை உணர்ந்து சாகத்தான் போகிறுர்கள்!

- சாவார்கள் !!

எழுதிப் பிழைக்க முடியாத நான் புத்தகம் போட்டுப் பிழைக்க முயல்கின்றேன்.

இப்படிப் புதுமைப்பித்தன் ஓரிடத்திலும் எழுதிவிட்டுப் போகவில்லை. புதுமைப்பித்தன் பிறந்த தமிழ்நாட்டில் வாழும் எழுத்தாளர் ஒருவர்தான் ஈழத்திலுள்ள கவிராயருக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இனி, கவிராயர் அவருக்கு எழுதியதைத் தைரியத்துடன் படியுங்கள்:

"ஏனப்பா! இந்த விதி" என்று நீர் கேட்கின்றீர்;
சாகத்தான் வேணுமென்றால் சாவதென்ன லேசாமோ?
காசைக் கரியாக்கிக் கலைப்பணிகள் பலபுரிந்து
வேசியர்போல் விலைபேசும் வீணர்களின் மத்தியிலே
தோசைக்கு மதிப்புண்டு; சொல்லுழவர்
சொல்லுக்கோ மதிப்பில்லை;
பாசி படர்ந்து பாழடைந்த சமூகத்தில்
நேர்மை வழியென்றால் நிட்டூரப் படவேண்டும்.
கார்மேகக் கூட்டங்கள் கவிந்துள்ள கலைவானில்
"சார்" என்று தண்டனிட்டுச் சபைநடுவிற் கும்பிட்டால்
"ஆரப்பா நீ இங்கு?, அப்புறம் வா" என்பார்கள்.
"ஓதக்கேள், என் நண்பா!" ஒன்று நான் சொல்லுகிறேன்.
"வாதைமிக்க இவ்வுலகில் வாழவழி பலவுண்டு.
காதற் கதையெழுதிக் கஞ்சத்தனமாகப்
பாதை தடுமாறிப் பல்லிளிக்கும் பாவையரின்
ஆபாசம் அத்தனையும் "ஆஹா, அற்புதம்!" என்றால்
பூலோகம் ரசிக்கும்; பொற்காசுங் கைக் கெட்டும்.
இப்படி உண்மை இழிவுபடக் கூறவில்லை;
செப்படி வித்தை செயும் சிற்றறி வாளரிடை
புத்தகம் போட்டுப் பொன்முலாம் பூசுகினும்
இச்சைபல பேசி எம்மையெலாம் ஏய்த்திடுவர்.
"ஏனப்பா! இந்த விதி" என்று நீர் கேட்கின்றீர்;
சாகத்தான் வேணுமென்றால் சாவதென்ன லேசாமோ?

* * *

'ஈழகேசரி' ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் சிறந்த கவிஞர் என்பதை அறிந்தால் உண்மையிலேயே நீங்கள் ஆச்சரியப் படுவீர்களா, என்ன?

அந்த நினைவு

கே. ஆர். கௌசல்யா

"அப்புறம் உன் முடிவான தீர்மானந்தான் என்ன...?"—மூன்றாம் முறையாகச் சற்றுக் கோபமாகவே கேட்டார் சாம்பமூர்த்தி.

"அதான் அப்பவே சொல்லிட்டேனே... ஆயிரத்துக்கு ஒரு தம்படி குறைஞ்சாக்கூட முடியாதுன்னுட்டு! என் வெறும்மனே கேட்டுத் தொணப்பறீங்க?"— பீரோவைப் பூட்டிச் சாவியை இடுப்பில் செருகிக் கொண்டே சொன்னாள் மீனாட்சி. அவள் குரலில் உறுதி தொனித்தது; அதில் அவள் எண்ணத்தின் முடிவும் குரல் கொடுத்து நின்றது.

நாற்காலியை விட்டு 'விறுக்' கென்று எழுந்தார் சாம்பமூர்த்தி.

"இதோ பாரு மீனாட்சி!..நம்ப நடராஜனுக்கு என்னவோ பெண்ணைப் பிடிச்சிருக்கு!... அந்தப் பொண்ணுக்கும் அவனைப் பண்ணிக்கிறதிலே ஆசை தெரிகிறது. பெண் பார்க்க அழகா அடக்க வொடுக்கமா இருக்கு! பாட, படிக்க எல்லாம் தெரிஞ்சிருக்கு!...இவ்வளவு அம்சங்களிலும் மனசுக்குத் திருப்தியா அமைந்திருக்கிறபோது ஒரு ஆயிரம் ரூபாய்

ரோக்கத்துக்காகத் தகராறு பண்ணிட்டு இந்த இடமே வேண்டாம்னு தள்ளறது கொஞ்சமாவது நல்லாயிருக்கா!... உனக்கே உன் பிடிவாதம் நியாயமாத் தோணுகிறதா?...”—கெஞ்சும் பாவனையில் இருந்தது அவர் குரல். பெரிதாக எதையோ எதிர்பார்த்திருக்கும் கனவு அவர் குரலில் நாதமிழைந்திருந்தது.

‘உர்’ ரென்று முகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மீனாட்சி பதிலெதுவும் சொல்லாமல் மௌனம் சாதித்தாள். அவள் முகம் மாறிவிட்டிருந்தது கலவை சரியில்லாத சித்திரம்போல.

சாம்பமூர்த்தி மேலும் தொடர்ந்தார்:

“நானும் பார்த்துக்கொண்டே தான் வருகிறேன்!...அழகு, குணம் எல்லாத்தையும் விட்டுட்டு, பணம் சீர்வரிசைகள்னு சொல்லி அதுக்கெல்லாம் மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து அதிலே ஒண்ணு நீ கேட்கிற அளவுக்குக் கொஞ்சம் குறைஞ்சுட்டாக்கூட அந்த வரனைத் தள்ளிடறதுன்னு வச்சுட்டு, வருற வரனையெல்லாம் ஒவ்வொண்ணுத் தள்ளிட்டே வருரே!...உம் பிள்ளை மாத்திரம் என்ன?...பச்சைக் குழந்தையா?... எத்தனை நாளைக்குத்தான் உன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுப் பேசாம இருப்பான்னு நெனச்சிக்கிட்டிருக்கே!...ஒரு நாளைக்குத் திடீர்னு மனசு ஒடிஞ்சுபோய் அவன் ஒருவர்கிட்டேயும் சொல்லாமக் கொள்ளாமப் பம்பாய், கல்கத்தான்னு எங்கேயாவது கண்காணுத ஊருக்குப் போயிட்டான்னு என்ன செய்வே?... கேவலம் பணத்துக்கு ஆசைப்பட்டு ஒரு பிள்ளையை உசிரோட துறக்கத் தயாராய் இருக்கியா?...” —உரத்த குரலிலும் தாழ்ந்த குரலிலும் நயமும் பயமும் தொனிக்கக் கூறினுர் சாம்பமூர்த்தி.

“ஆமா!... இப்போ அதுக்காக என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?...”

“இன்னிக்கு வந்து ரெண்டுலே ஒண்ணு முடிவாச் சொல்ருேம்னு சொல்லிட்டு வந்திருக்கேன்...பையனும் நானும் என்னவோ பெண்ணைப் பாத்தாச்சு!...நீ ஒருத்திதான் பாக்கி. நீ இப்போ உடனே புறப்பட்டியாஞ நாம் இரண்டு பேருமப் போய் விஷயத்தை முடிச்சிட்டு வாதுடலாம்...”

“உம்” என்று வேண்டாவெறுப்பாகச் சொல்லிக்கொண்டே சோபாவிலிருந்து எழுந்தாள் மீனாட்சி.

சிறிது நேரத்திற்கெல்லாம் வாசலில் வந்து நின்ற டாக்ஸியில் ஏறிக்கொண்டு மீனாட்சியும், சாம்பமூர்த்தியும், பெண்ணைப் பார்த்துவிட்டு வரப் புறப்பட்டனர்.

★

டாக்ஸியிலிருந்து இறங்கிய சாம்பமூர்த்தி தம்பதிகளை வரவேற்று உபசரித்து உள்ளே அழைத்துச் சென்றனர் பெண்ணின் பெற்ருேர். கூடத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் இருவரும் அமர்ந்தனர் டிபன், காபி முதலிய உபசாரங்கள் நடந்தபின்னர், பெண் சுசீலா அடக்கவொடுக்கமாக வந்து இருவரையும் வணங்க விட்டு இரண்டு பாட்டுக்களும் பாடிவிட்டு எழுந்தாள். பெண்ணின் தாயார் தான் முதலில் பேச ஆரம்பித்தாள்.

அண்மையில் எழுத்துலகில் புகுந்து, பெயர் பெற்றுவரும் **கே. ஆர். கௌசல்யா**வின் கதைகள் பெரும்பாலும் குடும்பத்தை நிலைக்களனுகக்கொண்டு எழுதப்படுவனவாகும். நடை அழகும், சம்பவச் சுவையும் இவரது கதைகளைச் சிறப்பிக்கும் பகுதிகளாகும். இவரின் கதைகள் தமிழ் நாட்டின் பிரபலமான பத்திரிகைகளிலெல்லாம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ‘பிரிந்த பாதை’ இவரது முதல் நாவல்.

“பெண்ணை என்னவோ நீங்க எல்லோரும் பார்த்தாச்சு...மேலே நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றி உங்க அபிப்பிராயத்தைச் சொன்னீங்களானு...”

“அதான் அன்னிக்கே சொல்லியாச்சே!...நாங்க முதல்லே கையிலே ஆயிரத்தைந்நூறு கேட்டோம்... நீங்க அவ்வளவு முடியாதுன்னு சொன்னீங்களென்று ஆயிரத்திலே வந்து நின்றோம். அதுக்கும் நீங்க ஒத்துக்கலேன்னு தெரியறது...மேலே என்ன பேச இருக்கு?...”— கம்பீரமான குரலில் கூறி அவர்களை மிடுக்குடன் ஏறிட்டுப் பார்த்தாள் மீனாட்சி.

“ஒரேயடியா நீங்க அப்படிச் சொல்லிடலாமா?... எங்க நிலைமையையும், கஷ்டத்தையும் கொஞ்சம் பார்க்க வேணுமா?...கையிலே ஐந்நூறு கொடுக்கறோங்கறோம்...அதிலேதான் கொஞ்சம் குறைச்சுட்டோமே தவிர மற்ற சீர்வரிசைகளை நீங்க கேட்கிற அளவுக்குக் குறைவில்லாம செஞ்சிடுறோம். மற்றபடி பெண்ணைப் பொருத்தமட்டில் அவளுக்கு என்ன குறைச்சல்!...பாட்டு படிப்பு, அழகு, குணம் எல்லாம் அவகிட்ட அமைஞ்சிருக்கு. வீட்டுக் காரியங்களை விதரணையாச் செஞ்சு குடும்பத்துக்குப் பாங்கான பெண்ணாக இருப்பாள். நிறைய சீர் வரிசைகள் கிடைக்கறதுப்பலே உங்களுக்கு எத்தனையோ இடங்கள் வந்திருக்கலாம்; வரலாம். ஆனா எங்க சுசீலாவைப்போல் மற்றெல்லா அம்சங்களும் ஒண்ணச் சேர்ந்து அமைஞ்ச இடமா இருக்கறது எங்கோ ஒண்ணுதான் அபூர்வமா இருக்கும். எங்க பொண்ணைப்பத்தி நாங்களே பெருமையடிச்சுக்கறோம்னு நீங்க நெனச்சுக்கப்படாது. நீங்களே அவளோடு பழகிப் பார்த்தால் தெரிஞ்சுப்பீங்க...”

சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்த பெண்ணின் தந்தை பசுபதி இடையே குறுக்கிட்டார்.

“காலச் சக்கரத்தின் சுழற்சியின் வேகத்திலே இன்று நாங்கள் கைநொடித்துப் போய் நிற்கிறோமே

தவிர, இருக்கிற நிலைமையிலே இருந்தா நீங்க கேட்கிற அந்த ஆயிரம் ரூபாய் எங்களுக்கு ஒரு பிரமாதம் இல்லே...”—வயது, உடல் பலவீனம் ஆகியவற்றின் காரணமாக நிதானமாகப் பேசினார் அவர்.

அவர்களுடைய பணிவான, பரிதாபமான பேச்சு சாம்பமூர்த்தியின் இதயத்தைப் பிழிந்தெடுத்தது. கோபமும், வெறுப்பும் பிரதிபலிக்கும் விழிகளால் மீனாட்சியை ஏறிட்டுப்பார்த்தார் அவர். வீட்டுக்குப் போய்ச் சொல்லியனுப்புவதாகக் கூறி எழுந்துவிட்டாள் மீனாட்சி.

டாக்ஸி வீட்டை நோக்கிப் புறப்பட்டது. சாம்பமூர்த்தி அவளிடம் எதுவும் பேச்சுக் கொடுக்க விரும்பாமல் மௌனமாக இருந்தார். மீனாட்சி சிந்தனைதேங்கிய விழிகளால் தனக்கெதிரே வளைந்து வளைந்து செல்லும் நீண்ட தெருவழியையே வெறித்து நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் மனத்திரையில் கடந்த ‘அந்த நினைவு’ நிழலாடிற்று.

★

அப்போது மீனாட்சி ஒரு கன்னிப் பெண். அழகின் உரு அவள்; பருவம் அவளை அழகுப்படுத்தியது மணப்பருவத்தை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த அவளுடைய விவாகத்தைச் சீக்கிரத்தில் முடித்துவிட அவள் பெற்றோர் முழு மூச்சுடன் முனைந்து கொண்டிருந்தனர். வரன்மேல் வர

ளுக வந்துகொண்டுதானிருந்தன. ஒவ்வொன்றும், ஒவ்வொரு விதத்தில் தட்டிப் போய்க்கொண்டிருந்தன. 'எங்க மீனுட்சிக்கும் கல்யாணம்னு ஒருநாள் ஆகுமா?...'என்றுவங்க ஆரம்பித்துவிட்டனர் மீனுட்சியின் தாய் தந்தையர். கடைசியில் எப்படியோ தொல்லேப்பட்டு, எங்கெங்கோ அலேந்து பாடுபட்டு ஒரு வரனேப் பிடித்துக்கொண்டு வந்தார் மீனுட்சியின் தந்தை சுப்பிரமணியம். பையனுக்குச் சொந்த ஊர் செங்கல்பட்டு. பூர்வீகமாகவே அவன் தந்தைக்குச சொத்துச் சுதந்திரங்கள் நிறைய இருந்தன. பையனுக்கு அத்தை ஒருத்தி சென்னேயில் சுப்பிரமணியம் இருந்தவீட்டிற்குப் பக்கத்து வீட்டில் இருந்தாள். அங்கு வந்து தங்கிப் பெண்ணேப் பார்க்க வருவதாக இருந்தனர் பையனின் பெற்ருேர்.

குறிப்பிட்ட நாளில் எதிர்பார்க்கப் பட்டவர்கள்—பையனும் அவன் பெற்ருேரும் வந்து சேர்ந்தனர். உபசாரங்களுங்குப் பின், பெண் மீனுட்சி வந்து வணங்கினுள். நல்ல கீர்த்தனே ஒன்றைக் குரலெடுத்துக் கணீரென்று பாடி முடித்தாள். பையனுக்குச் சம்மதம் என்பதை அவனுடைய முகபாவமே காட்டியது. மீனுட்சியின உள்ளம் குதூகலத்தால் துள்ளியது. எப்படியாவது இந்த இடம் முடிந்துவிட வேண்டுமே என்று தெய்வங்களே எல்லாம் தன் தரப்பாக்கிக் காணிக்கை செலுத்தி வேண்டிக்கொண்டாள் அவள்.

சீர் முதலியவற்றைத் தரன் போட்டு வந்த பட்டியல்படி ஒப்புவித்தாள் பையனின் தாயார். 'இந்த வரனும் தட்டிப்போய்விட டால் என்ன செய்வது' என்ற பயத்தில் தம் சக்திக்கு மீறியவை என்று தோன்றினுலும் அவற்றிற்கெல்லாம் மௌனமாகத் தலேயாட்டினுர் சுப்பிரமணியம்.

"என்னுடைய முதலிரண்டு மருமகளும் வைரத்தோடு போட்டுக் கொண்டிருக்கிருர்கள். அதன்படியே அவர்களுக்குச் சமமாக என் மூன்ருவது மருமகளும் இருக்கவேண்டும். ஆதலால் உங்கள் பெண்ணுக்கும் ஒரு வைரத்தோடு செய்து போட்டு விடுங்கள்..." என்று கடைசியாக ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டாள் பையனின் அன்னே. சுப்பிரமணியமும், அவர் மனேவியும் இடி விழுந்தவர்போலாகிவிட்டனர். சீர் வகையருக்களே அவர்களுடைய சக்திக்கு நிரம்பவும் அதிகம். அதற்கே சுப்பிரமணியம் ரூபாய் இரண்டாயிரம் கடன் வாங்கியாகவேண்டும். இன்னும் ஒரு வைரத்தோடு வேறு செய்து போடவேண்டும் என்றவுடன் அவர் கதிகலங்கிப் போய் விட்டார். அவர் எவ்வளவோ மன்ருடியும், கெஞ்சியும் பார்த்தும்கூட "வைரத்தோடு செய்துபோட ஒப்புக்கொள்ளுவதானுல் மேமேல பேசும்!" என்று வெட்டொன்று துண்டிரண்டாகக் கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டாள் பிள்ளேயின் தாய்.

'கைவசம் இருந்த ஒரு வரனும் நழுவிவிட்டதே. இனி என்ன செய்வது' என்ற திகிலிலும், வருத்தத்திலும் தலேயில் கைவைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார் சுப்பிரமணியம். மீனுட்சியும் அவளுடைய தாயும் புடவைத் தலேப்பில் முகத்தைப் பதித்துக்கொண்டு விம்மினர்.

அன்றிரவெல்லாம் நித்திரை வராமல் படுக்கையில் புரண்டுகொண்டிருந்த மீனுட்சி, மறுநாள் விடியற் காலேயிலேயே எழுந்துவிட்டாள். கையில் குடத்துடன் தோட்டத்துக் கதவைத்திறந்துகொண்டு சென்ருள். அவள் பக்கத்துவீட்டுக் கிணற்றடியில், முதல்நாள் அவளேவந்து பார்த்த மாப்பிள்ளேப் பையன் பல்தேய்த்துக் கொண்டு நின்றிருந்தான். ஒருகணம் திக்பிரமையுடன் நின்றுகொண்டிருந்தாள மீனுட்சி. திடீரென்று அவளுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு துணச்சல் வந்ததோ! மெள்ளக் குடத்தை வைத்துவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே இடிந்திருந்த தன் வீட்டுச் சுவரைத் தாண்டிப் பக்கத்து வீட்டுத் தோட்டத்தை அடைந்தாள் அவள். நல்ல வேளேயாக அங்கு வேறு யாரும் இல்லே. காலேக்கன்னி அப்பொழுது

புன்னகைக் கீற்றுக்களை இழைக் கோலமாக்கிக்கொண்டிருந்தாள் வையத்திலே.

“...கடைசியில் இப்படி நேர்ந்துவிடும் என்று நான கனவில்கூட எதிர்பார்க்கவில்லை...”— தைரியமாகவே பேசவும் ஆரம்பித்துவிட்டாள் மீனாட்சி. அவள் குரல் வருத்தத்தால் தழுதழுத்தது. அவள் கண்களில் ஏதோ ஓர் கனவு...!

பேச்சுக்குரல கேட்டுத் திடுக்கிட்டுப் பின்னால் திரும்பினான் அவன்— மீனாட்சியை முதல்நாள் வந்து பார்த்தவன்.

நம் விவாகம் நிச்சயம் நடந்துவிடும் என்று கனவு கண்டிருந்த எனக்கும் இது ஒரு திடீர் ஏமாற்றம் தான். நான் அதற்காக உண்மையில் வருந்துகிறேன்...”

மெதுவான குரலில் சொன்னான் அவன். அவனுடைய முகத்திலும் துயரச்சாயை படர்ந்தது. அவன் விழிக்கடையிலும் அவளது கனவின் சாயலே நிழலாடியது.

மீனாட்சியின் கண்ணிமைகள் ஆச்சரியத்தினால் படபடத்தன.

தவன். அவளை அந்நேரத்தில் அங்கு சற்றும் எதிர்பாராத—அதிலும் அவ்வளவு துணிச்சலுடன் அவள் தன்னிடம் பேச வருவாள் என்பதைக் கொஞ்சங்கூட நினைத்துப் பாராத அவன் வியப்பினால் ஒரு கணம் மலைத்து நின்றுகொண்டிருந்தான். பிறகு பரபரப்புடன் வாயைக் கொப்பளித்துவிட்டு, முகத்தைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தான்.

“நான் கூடத்தான் மீனாட்சி...! உன்னைப் பார்த்தவுடன் உண்மையில் எனக்கு நிரம்பப் பிடித்து விட்டது.

“அப்படியானால்—என்னை மணந்து கொள்ளாததனால் நீங்கள் மனம் வருந்துவது உண்மையானால் ‘வைரத்தோடு இல்லாவிட்டால் ஒன்றும் பிரமாதமில்லை...’ என்று உங்கள் தாயாரிடம் கூறி, நின்றுபோய்விட்ட இந்த விவாகத்தை நடத்தி வைக்கலாமே!... இப்போது எனக்கும், என் பெற்றோருக்கும் இதனால் எவ்வளவு ஏமாற்றம், மனவருத்தம் தெரியுமா?”

“மீனாட்சி, நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்!...அப்போது உனக்கே உண்மை புலப்படும்.

உன்னை மணந்து கொள்வதில் எனக்குப் பரிபூரண சம்மதம்தான்; ஆசைதான்! அதை மீண்டும் ஒருமுறைகூட நான் கூறுகிறேன். ஆனால் இதற்கு இடையே நிற்கிறது என் தாயார் கேட்ட அந்த வைரத்தோடு. இப்போது நான் வேண்டுமானால், அது இல்லாவிட்டால் பரவாயில்லை என்று உன்னை மணந்துகொண்டு விடலாம். ஆனாலும் திருமணம் முடிந்த பிறகு நீ எங்கள் வீடு வந்து மற்ற மருமகப் பெண்களோடு குடித்தனம் நடத்தும்போது அவர்களாலும், என் தாயாலும் எத்தனை ஏச்சுப் பேச்சுக்கள் கேட்கவேண்டி வரும் தெரியுமா? 'வைரத்தோடு செய்து போட்டுக்கொள்ள வக்கற்றவள்' என்று அவர்களைவிட ஒருபடி தாழ்வாகவே நீ மதிக்கப்பட்டு வருவாய். அப்படி வேண்டாத ஒரு மருமகளாக நீ இருந்துவா ஆசைப்படுகிறாயா?... அது உனக்கு மட்டுமல்ல, எனக்கும் அளவற்ற துயரத்தைக் கொடுக்கும். நான் வேறு எந்த ஊருக்காவது உன்னை அழைத்துச் சென்று குடித்தனம் நடத்தினால் எனக்கும் என் பெற்றோர், சகோதரர் ஆகியவருக்குமிடையே ஒரு தீராத மனக்கசப்பு—பிளவு ஏற்பட்டுவிடும்... இவற்றையெல்லாம் சிந்தித்துத்தான் மீனாட்சி நான்...''—மேலே பேசமுடியாமல் பொங்கிக் குமுறும் துக்கத்துடன் நிறுத்திவிட்டான் அவன்.

வருத்தம், ஏமாற்றம் முதலியவற்றினால் உள்ளம் உடைந்துவிட்ட மீனாட்சி அதற்கு மேலும் அங்கே நின்றுகொண்டிருக்கப் பிடிக்காதவளாய், கண்களிலிருந்து ஆறாய்ப்பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே வேகமாக வீட்டுக்கு வந்துவிட்டாள்.

மாதங்கள் பல கடந்தன.

சென்னையிலிருந்த கம்பெனியொன்றில் சாதாரணச் சம்பளத்தில் இருந்த சாம்பமூர்த்தியின் ஜாதகத்தை சுப்பிரமணியத்திடம் கொண்டுவந்து கொடுத்தார் ஒரு தரகர். வேளையும் பிராப்தமும் ஒன்று கூடிவிடவே ஒரு நல்ல நாளில் மீனாட்சிக்கும், சாம்பமூர்த்திக்கும் விவாகம் நடந்தேறிவிட்டது. தன் கணவனுடன் குடித்தனம் நடத்தச் சென்றுவிட்டாள் அவள். அப்போது தான் தம் தலைமேலிருந்த பெரிய பாரம் ஒன்று கீழே இறங்கிவிட்ட நிம்மதியை அனுபவித்தனர் மீனாட்சியின் பெற்றோர்.

மீனாட்சி கால்வைத்த வேளையின் மகிமையினால் கம்பெனியொன்றில் சாதாரண சம்பளத்திலிருந்த சாம்பமூர்த்திக்கு இரும்புத் தொழிற்சாலையொன்றில் நல்ல சம்பளத்தில் உத்தியோகம் கிடைத்தது. இளமையில் ஏழ்மையில் வாடித் தவித்த மீனாட்சியின்மேல் அதிர்ஷ்ட தேவதையின் கடைக்கண் பார்வை பரிபூரணமாக விழுந்துவிட்டது. செல்வத்தின் சுகத்திலே தன் கணவன் சாம்பமூர்த்தியுடன் மிதந்துகொண்டிருந்தாள் அவள். அவர்களுடைய இல்வாழ்க்கையை இன்னும் அதிகமாகச் சோபிக்கச் செய்யப் பிறந்தான் நடராஜன். அவனைக் கண்ணில் வைத்து இமையால் மூடிக் காத்தனர் தம்பதிகள் இருவரும்.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. படிப்பை முடித்துவிட்ட நடராஜன் ஒரு கம்பெனியில் உதவி மானேஜர் பதவி ஏற்றான். நல்ல சம்பளம். சிறந்த செல்வாக்கு. பெரிய இடத்து வரன்கள் அவனுக்காகப் போட்டியிட்டுக்கொண்டு வந்தன. ஆனால் அழகு, அந்தஸ்து ஆகிய எல்லாம் ஒருங்கு சேர்ந்து விளங்கும் தன் மகனுக்காக மீனாட்சி கேட்ட வரதட்சிணை, சீர் செனத்திகள் காரணமாக அவை ஒவ்வொன்றும் தட்டிப் போய்க்கொண்டே வந்தன. இறுதியில் பசுபதியின் பெண் சுசீலாவைப் பற்றிய செய்தி வந்தது. வீணாக பணத்திற்காசைப் பட்டு ஒவ்வொரு வரனையும் தட்டிக்கழிக்க விரும்பாத சாம்பமூர்த்தி இந்தப் பெண் சுசீலாவை எப்படியாவது முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் நடராஜனுடன் ஒருநாள் போய்ப் பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தார். அது விஷயம் இருவருக்கும் மனம் ஒத்துப்போய்விட்டது. மீனாட்சி கூறியபடி சீர் முதலியவற்றைச்

சொல்லியபோது பசுபதியும் அவர் மனைவியும் துவண்டுவிட்டனர். வரதட்சணையில் ஒரு ஆயிரத்தை மட்டும் குறைத்துவிடும்படி மன்றாடினார்கள். சாம்பமூர்த்தியின் உள்ளம் அவர்களிடம் இரங்கிவிட்டது. ஆனால் மீனாட்சி என்ன சொல்வாளோ என்று பயந்த அவர் வீட்டுக்கு வந்து அவளிடம் செய்தியைச் சொல்லிக் கெஞ்சினார். முதலில் இரக்கமற்று முடியாதென மறுத்த மீனாட்சி, அவர் வற்புறுத்தலுக்காக வேண்டா வெறுப்பாக, பெண்ணையும் பார்த்துவிட்டு அந்த இடத்தை முடிப்பதா வேண்டாமா என்பதை இரண்டில் ஒன்று தீர்மானித்து வரவும் சாம்பமூர்த்தியுடன் புறப்பட்டாள்.

மீனாட்சிக்குப் பெண்ணைப் பிடித்துவிட்டது. ஆனால் பணத்திற்கு ஆசைப்பட்ட அவள் உள்ளம் விட்டுக்கொடுக்க மறுத்தது. பெண்ணின் தாயும், தகப்பனார் பசுபதியும் அவளிடம் மன்றாடியதைப் பார்த்தபோது அவளுக்குக் கண்டிப்பாக 'முடியாது' என்று சொல்லவும் மனம் வரவில்லை. வீட்டுக்குப போய் சொல்வதாகக் கூறிவிட்டு மனக்குழப்பத்துடன், டாக்ஸியில் ஏறி உட்கார்ந்த மீனாட்சியின் உள்ளம், ஒரு காலத்தில்தான் கன்னிப்பெண்ணாக இருந்தபோது, தன் வாழ்க்கையிலும் இதைப்போன்றே நடந்த அந்தச் சம்பவத்தை எண்ணிப் பார்த்தது.

" மீனாட்சி—மீனாட்சி... நீயும் ஒரு காலத்தில் இந்த சுசீலாவின் நிலையில் இருந்தவள் தானே!... ஒரு வைரத் தோட்டிற்காக அந்தப் பிள்ளை வீட்டார் உன்னை மணக்க மறுத்தபோது உன் உள்ளம் எப்படி வாடியது?... எத்தகைய ஏமாற்றமடைந்து சாம்பியது?... 'நமக்குப் பிடித்த அந்தப் பையனை கேவலம் ஒரு வைரத்தோட்டிற்காக மணக்கமுடியாமல் செய்துவிட்டாளே அந்தப் பிள்ளையின் தாயார்!...' என்று அவளை உன் உள்ளம் எப்படிச் சபித்தது! அது போன்ற ஒரு பரிதாபப்படத்தக்க நிலையில்தானே இருக்கிறாள் இப்போது அந்தப்பெண் சுசீலா. உன்னை முதலில் மணக்கவேண்டுமென்று விரும்பிய அந்தப் பையனின் நிலையில்தானே உன் மகனும் இப்போது இருப்பான்!... அப்போது வைரத்தோடு! இப்போது ஐந்நூறுரூபாய்... அவ்வளவுதானே?... தற்போது நீ நல்லதொரு நிலைமைக்கு வந்துவிட்டாய் என்பதனாலேயே, ஆதியில் நடந்த—காலம் விழுங்கிவிட்ட அந்தச் சம்பவத்தை நீ மறந்துவிடலாமா?..."

'டக்' என்று டாக்ஸி வீட்டின் முன் நின்றதும் சுய உணர்வு பெற்றாள் மீனாட்சி. அவளுடைய மனச்சாட்சி அவளைக் குழப்பியடித்துக் கொண்டிருந்தது.

கடவுளின் சிருட்டியெல்லாங்
காதலினுள்ளே—வரக்
கண்டதொரு காட்சியல்லாம்
வேறொன்று மில்லை.

—ச. து. சு. யோகி

சிந்தனை தோய்ந்த முகத்துடன் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த சாம்பமூர்த்தி, காலடியோசை கேட்டு நிமிர்ந்து பார்த்தார். உள்ளேயிருந்து வந்த மீனாட்சி ஊஞ்சலிலே சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

"பேசாம இந்த இடத்தையே நம்ப நடராஜனுக்கு முடிச்சுடுங்க... அவர்களை நாம் கேட்ட அந்த ஆயிரத்துக்கு அவர்கள் கொடுக்கறதாகச் சொன்ன ஐந்நூறு ரூபாய்க்குக்கூட அவர்கள் தங்கள் பெண்ணுக்கு வேண்டுமானால் ஏதாவது நகையாகச் செய்து போட்டுக்கொள்ளட்டும். நமக்கு அதுகூட வேண்டாம். பாவம் அவர் கொடுத்துத்தானா நமக்குத் தாங்கப்போறது? சீக்கிரம் அவர்கள் கிட்டப்போய் இதைச் சொல்லி கலியாணத்துக்கு நாள் குறிப்பிடச் சொல்லுங்கள்..."—ஆனந்தப் பெருக்கில் கூறிய மீனாட்சியின் விழிக்கை.

யில் உணர்ச்சிப் பெருக்கால் நீர் முத்துக்கள் அரும்பிநின்றன. அவள் முகத்தில் ஒரு அசாதாரண அமைதியும், சாந்தமும் குடிகொண்டிருந்தன. அவள் புன்னகையில் பூரித்திருந்தாள்.

முதலிலெல்லாம் அவ்வளவு பிகுவுடன் பிடிவாதமாகப் பேசிய மீனாட்சியின் கல் நெஞ்சம் அதற்குள்—அவ்வளவு எளிதில் எப்படிக் கரைந்துவிட்டது என்று புரியாமல் வியப்பு, திகைப்பு முதலிய உணர்ச்சிகளால் ஒருங்கே தாக்கப்பட்டு விழித்தார் சாம்பமூர்த்தி. அடுத்த கணம், "இதோ!... இப்போதே போய்ச் சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன். இன்னிக்குவெள்ளிக்கிழமை. நாளும் நல்லநாள்...'" என்று சொல்லிக்கொண்டே ஊஞ்சலிலிருந்து மகிழ்ச்சியுடன் இறங்கி பசுபதியின் இல்லத்தை நோக்கிக் கிளம்பினார் சாம்பமூர்த்தி.

நடராஜன்—சுசீலாவின் விவாகத்திற்கான ஏற்பாடுகள் வேகமாக நடைபெற்றன. ஒரு சுபமுகூர்த்தத்தில் சிறப்பான முறையில் அவர்களுடைய விவாகம் நிறைவேறியபோது பசுபதி, சாம்பமூர்த்தி தம்பதிகள் ஆனந்தத்தால் பூரித்துப் போய்விட்டனர்.

அன்று மாடியறையில் குதூகலத்துடன் பேசிக்கொண்டிருந்தனர் நடராஜனும் சுசீலாவும். தற்செயலாக மாடிப்பக்கமாக வந்த மீனாட்சியின் காதுகளில் அவர்களுடைய சம்பாஷணை வந்துவிழுந்தது.

"அந்த ஆயிரம் ரூபாய்க்கு உங்க அப்பா அம்மா சம்மதிக்காமல்போனதும், இந்த விவாகம் நடக்காது என்று நான் முடிவுசெய்துவிட்டேன். சுசீலா!...அப்போது என் உள்ளம் எவ்வளவு வருத்தமும் ஏமாற்றமும் அடைந்தது தெரியுமா?..."

"எனக்குமட்டும்?... நான் வேண்டாத தெய்வங்கள் இல்லை. முதலில் அவ்வளவு நிர்த்தாட்சண்யமாக முடியாதென்று கூறிய உங்க அம்மாவுக்கு நல்ல வேளையாக எங்கள் குடும்ப நிலைமையைப் பார்த்து மனசு இரங்கிப் போச்சுபோலிருக்கிறது. எங்க அப்பா அம்மா தருவதாகச் சொன்ன ஐநூறுகூட வேண்டாமென்று சொல்லிவிட்டார்..."

'அவர்களுடைய குடும்ப நிலைமையைப் பார்த்து மனசு இரங்கித்தான் நான் இந்த விவாகத்துக்குச் சம்மதிச்சதாக எல்லோரும்—பெண்ணின் தந்தை பசுபதி உள்பட—நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! வயதினால் ஏற்பட்ட தளர்ச்சி காரணமாக அவர் என்னை அடையாளம் கண்டுகொள்ளாதது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று!... அவர்தான் என்னை முதலில் வந்து பார்த்து என் உள்ளத்தையும், என் பெற்றோரின் உள்ளத்தையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்ட பசுபதி என்பதும்,பணத்தின் காரணமாகப் பின்வாங்கிக்கொண்டு அவர் அன்று செய்யத் துணியாத ஒரு காரியத்தை, நான் இன்று மனமுவந்து செய்தேன் என்பதும் இந்த மீனாட்சி ஒருத்திக்குத்தானே தெரியும்!'—மீனாட்சியின் மனடைரியில் மேற்கண்ட வரிகள் அவளது உள்ளத்தின் உள்ளமாக எழுதப்பட்டு எதிரொலித்துக்கொண்டிருந்தன. அவள் கண்கள் நீரை உமிழ்ந்தன. அவள் பெருமூச்சு விட்டாள். சுய நினைவுபெற்று மீனாட்சி கண்களை மலரத் திறந்தாள். அப்போது பொங்கல் வைத்துக் கும்பிட்டுக்கொண்டிருந்த தன் மகனையும் மருமகளையும் புதுமணக் கோலத்தில் கண்ட மீனாட்சிக்கு உலகமே அப்போது புதுமையும் பூரிப்பும்கொண்டு திகழ்ந்துகொண்டிருந்ததில் வியப்பேதும் இல்லைதானே!... ★

புறக்கணிப்பு

டாக்டர் மு. வரதராசனார்

அண்ணன் ஒருவன்; தம்பியர் பலர். அண்ணன் தம்பியரை அடக்கியாள்கின்றான். மெல்ல மெல்ல எதிர்ப்பு வளரும். அடக்குமுறைக்கும் எதிர்ப்புக்கும் இடையே வாழ்வின் அமைதி கெடும். ஆயின், அண்ணனும் தன்னைக் காத்துக்கொண்டு எதிர்காலத்திற்கு வேண்டிய ஆக்கங்களைத் தேடுவான். தம்பியரும் தற்காப்புணர்ச்சியோடு வேண்டியவற்றைத் தேடிக்கொண்டு வலிமை பெறுவர். நாளடைவில் இருவரும் வாழ்வதற்கும் வழி ஏற்படும்.

அண்ணன் அடக்குமுறையைக் கையாளாமல், தன் நன்மைகளை மட்டும் பெருக்கிக்கொண்டு தம்பியரின் நன்மைகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் மறந்து திரிந்தால், அதனைப் புறக்கணிப்பு என்று கூறல் வேண்டும். அவ்வாறு அவன் புறக்கணிப்பை மேற்கொண்டால், நிலைமை என்ன ஆகும்? தம்பியர் மெல்ல மெல்ல அண்ணனுடைய உறவை விட்டு அகல்வர்; அண்ணனைப் போல் தாமும் வாழ வழி வகுத்துக்கொள்வர். அன்பு நெஞ்சம் இல்லாமற்போகும். ஒருகால் அண்ணன் ஏதேனும் துன்பம் உற்றபோது தம்பியர் உதவி செய்யச் செல்லமாட்டார். அண்ணன் வாழ்வில் வீழ்ச்சி உற்றபோது தம்பியர் கை கொடுத்து உதவமாட்டார். தம்பியர் உயர்தலும் அண்ணன் தாழ்தலும் இயல்பாக அமைந்துவிடும்.

அடக்குமுறை போலவே புறக்கணிப்பும் கொடியது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. அடக்குமுறை செய்யும் கொடுமையில் போராட்டத்திற்கும் தற்காப்புக்கும் இடம் உண்டு. புறக்கணிப்பின் கொடுமையில் இவ்விரண்டிற்கும் இடம் இல்லை. இவ்வகையில் நோக்கினால், அடக்குமுறையைவிடப் புறக்கணிப்பே கொடியதாகவும் உள்ளது.

அரசியல் துறையிலும் இந்த உண்மையைக் காணலாம். புறக்கணிக்கப்பட்ட இனம் ஒரு காலத்தில் முன்னேறி உயர்வு பெறுவதுண்டு.

டாக்டர் மு. வ. பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர். இவர் படைத்த 'ஔவச் செய்தி', 'கள்ளோ காவியமோ?' ஆகிய நூல்கள் சென்ற இரண்டு ஆண்டுகளில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் பரிசைப் பெற்றன. சிறுகதை, நவினம், இலக்கியம், வரலாறு, மொழி ஆராய்ச்சி ஆகிய பல்வேறு துறைகளிலும் ஆசிரியர் எழுதிய நூல்கள் கிட்டத்தட்ட முப்பது ஆகின்றன.

அப்போது புறக்கணித்த இனம் உதவிபெற வழி இல்லாமல் திக்கற்றுப்போவதும் உண்டு.

இலக்கியத் துறையிலும் இது உண்மையாகவே உள்ளது. ஒரு காலத்தில் சங்க இலக்கியத்தையும் காவியங்களையும் கற்ற புலவர்கள், புலமை பெற விரும்பியவர்க்கு அந்த நூல்களின் பொருளையும் நயத்தையும் கற்பித்துவந்தனர். ஆகவே கற்ற புலவர்கள் தம் அறிவை ஒரு சிலர்க்குமட்டும் பயன்படுத்திப் பெரும்பாலான மக்களைப் புறக்கணித்து வந்தனர். பெரும்பாலான மக்கள் கல்வி யறிவு குறைந்தவர்கள், கல்வியறிவே இல்லாதவர்கள். அவர்களுக்கு அந்த இலக்கியங்களின் சிறந்த பொருளையும் நயத்தையும் விளக்க முடியாது. விளக்குவதற்கு முயன்றாலும் அது பெரு முயற்சியாகவே முடியும். ஆகவே ஓரளவுக்குக் கற்றுத் தேறிய மாணவர் சிலர்க்குமட்டும் புலவர்கள் அவற்றை எடுத்துரைத்து விளக்கி மகிழ்ந்தனர். அந்தக் காலத்தில் அவர்களால் அவ்வளவுதான் தொண்டு செய்ய முடியும் எனலாம். அதனால் விளையும் விளைவு மாறிவிடாது.

நயமும் கருத்து நுட்பமும் மிக்க சங்க இலக்கியமும் காவியங்களும் பெரும்பாலான தமிழ் மக்களுக்குத் தெரியாத நூல்களாக நின்றன. இவ்வகையில் அவர்கள் புறக்கணிக்கப்பட்ட மக்களாக நின்றனர். இந்தப் புறக்கணிப்பால் விளைந்தது என்ன? உயர்வு இல்லாத—இழிவான—வருணனைகளும் கற்பனைகளும் நிறைந்த மட்டமான நூல்கள் தோன்றியபோது, புறக்கணிக்கப்பட்ட மக்கள் அவற்றைப் போற்றிக் கொண்டாடத் தலைப்பட்டனர். கருத்துவளம் இல்லாத—உடல் உறுப்பு வருணனைகள் நிறைந்த பாட்டுக்களை விரும்பிப் போற்றினார்கள். உள்ளத்தின் உணர்வுகளை நுட்பமாக எடுத்துக் கூறும் சங்கப் பாட்டுக்கள் மூலையில் ஒதுங்க நேர்ந்தது. சிறப்பற்ற உலா, தூது முதலானவை பல வாழ்வு பெற்றன. உயர்ந்த கற்பனைச் செல்வங்களுக்குப் பாராட்டுக் குறைந்தது. பொருளற்ற வெறுங் கற்பனைப்பாட்டுக்களுக்குப் போற்றுதல் மிகுந்தது. சிறந்த காவியங்கள் மூலையில் ஒடுங்க நேர்ந்தன. சில நூற்றுண்டுகளுக்கு முன் தமிழ் இலக்கியங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இருந்த தொடர்பு இத்தகையது. இதனால் யாருக்குத் தீமை? புறக்கணித்த புலவர் மரபுக்கே தீமை விளைந்தது! அவர்கள் போற்றிய நூல்களுக்குச் செல்வாக்குக் குறையவே, அவர்களுக்கும் செல்வாக்கும் சிறப்பும் குறைந்தன.

எனவே, பெரும்பான்மையான மக்கள் உணர்ந்து போற்றும் வகையில், எளிய நடையில் எளிய முறையில் உயர்ந்த நூல்களின் கருத்துக்களைப் பரப்பும் தொண்டு முதன்மையானதாகும். அவ்வாறு உணர்த்தும் நூற் கருத்துக்களை எளிமையாக்குவதோடு சுவைபடவும் அமைத்து உதவ வேண்டும். பெரும்பான்மையான மக்கள் வாழும் எளிய உலகத்தை நன்கு உணர்ந்து அதற்கு ஏற்றவாறு அமைத்திட வேண்டும். முந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஆங்கில இலக்கியத்தை வளப் படுத்

திய புலவர் ஷேக்ஸ்பியர், அக்காலத்திலேயே இந்த உண்மையை உணர்ந்து இலக்கியத் தொண்டு செய்துள்ளார். அவர் எழுதிய நாடகங்களில் அறிஞர் வியக்கும் நயங்களும் நுட்பங்களும் உண்டு. அவற்றோடு பொதுமக்கள் விரும்பும் கதைப் பகுதிகளும் கற்பனைகளும் உண்டு. தத்துவ அறிஞர்களும் உள நூல் அறிஞர்களும் ஆழ்ந்து உணரத் தக்க சிறந்த கருத்துக்களும் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் உள்ளன. அவற்றோடு கூடவே, பொதுமக்கள் சுவைக்கத் தக்க மந்திரம் சூனியம், பேய் பிசாசு, பைத்தியம், ஆவி முதலியவைகளும் அவருடைய நாடகங்களில் உள்ளன. காரணம் என்ன? கற்றுணர்ந்த ஒரு சிலரை மட்டும் நம்பி அவர் இலக்கியத் தொண்டு செய்யவில்லை. கல்லாத பெரும்பான்மையோரைப் புறக்கணித்தல் கூடாது என்று உணர்ந்து, அவர்களையும் கவரத் தக்க சுவைகளைக் கலந்து எழுதியுள்ளார். தமிழ் இலக்கியமும் எதிர் காலத்தில் ஒதுங்கிடப் பெறுமல் எங்கும் ஒளி வீச வேண்டுமானால், பெரும்பான்மையான மக்களின் உள்ளங்களில் அவை இடம்பெறுமாறு செய்யவேண்டும். அதுவே இன்றுள்ள முதல் கடமை எனலாம்.

ஏன்? இலக்கிய உலகிலும் புறக்கணிப்புப் பொல்லாதது; அடக்குமுறையை விடப் பொல்லாதது. புலவர் சிலர்; ஏனையோர் பலர். பலரைப் புறக்கணித்தல் பெருந் தீங்கு; முற்காலத்தை விட இக் காலத்தில் அது பெருந் தீங்காய் முடியும். காரணம், முற்காலத்தில்

ஜெர்மனி அழிந்துவிட்டால், உலகத்தில் விஞ்ஞான அறிவு அழிந்துவிடும். பிரான்ஸ் அழிந்துவிட்டால், உலகத்தில் நாகரிகம் அழிந்துவிடும். கிரீஸ் அழிந்துவிட்டால், உலகத்தில் இலக்கியம் அழிந்துவிடும். ரஷ்யா அழிந்துவிட்டால், உலகத்தில் பொதுவுடைமை அழிந்துவிடும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அழிந்துவிட்டால் உலகத்தில் பொய்யும் புரட்டும் அழிந்துவிடும்!

—பெர்னார்ட்ஷா

தோள் வலியும் அறிவு வன்மையும் உலகத்தை ஆண்டன. இக்காலத்திலும் இனி வருங் காலத்திலும் எண்ணிக்கை—மக்களில் பெரும்பாலோரின் தொகையே ஆட்சிக்கு உரிமை உடையது. ஆகவே புறக் கணிப்பு இனி மிகப் பெருந் தீங்காகும்.

இன்றைய நிலைமையும் ஏறக்குறைய இது போன்றதாகவே உள்ளது. பெரும்பான்மையான தமிழ் மக்கள் இலக்கியத் துறையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். கற்பவை கற்ற புலவர்கள், அவர்களுக்கு இலக்கியச் செல்வத்தை வாரி வழங்குவதில்லை; அந்தப் பெரும்பான்மை மக்களின் எளிய உள்ளங்கள் விரும்பும் வகையில் எடுத்து விளக்குவதில்லை. கற்ற சிலர்க்கே அறிஞர்களின் எழுத்தும் பேச்சும் பயன்படுகின்றன. இதனால் பெரும்பான்மையான மக்கள் புலவர்களை விட்டு விலகித் தொலைவில் நிற்கின்றனர். தமக்கு என்று வேறு வகையான எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தேடிக்கொள்கின்றனர். நாட்டின் புகழையும் பெருமையையும் காத்து

வரும் நல்ல நூல்களின் பெயரும் தெரியாமல் வாழ்கின்றனர். அதனால் அவர்களுக்குத் தீமை இல்லை. அந்த நூல்களின் செல்வாக்குக்கும் அவற்றை நன்கு கற்ற புலவர்களின் வாழ்வுக்குமே ஊறு ஏற்படுகின்றது. அந்தப் பெரும்பான்மை மக்கள் அவற்றைப் பற்றிக் கவலை இல்லாமல் தனியான இலக்கிய உலகம் அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். மட்டமான அந்த இலக்கிய உலகத்தில் ஒரு காலத்தில் இழிந்த உலா முதலான பிரபந்தங்களும், அல்லியரசாணிமாலை, புலந்திரன்தூது முதலான கற்பனைகளும் இருந்தன. இந்தக் காலத்தில் இழிவான காமச் சுவைக் கதைகளும், காதல் குப்பைகளும், வசையெழுத்துக்களும் அவர்களின் இலக்கிய உலகில் இடம்பெற்றுள்ளன. பத்திரிகையுலகிலும் இவைகளின் வழித்தோன்றல்களே உள்ளன.

குறை யாருடையது? பெரும்பான்மையான மக்களைப் புறக்கணித்தவர்களின் குறையே ஆகும். ஒரு சிலரை நம்பி உயர்ந்த நூல்களை வாழவைத்திட முடியாது என்னும் உண்மையை அவர்கள் உணர்தல் வேண்டும். ஒரு சிலரைப் புலவராக்குதல் மட்டும் போதாது; மிகப் பலரை இலக்கியச் சுவை உணர்ந்தவர்களாக உயர்த்தல் வேண்டும். அதற்குப் பெருமுயற்சி—நெடுங்கால முயற்சி தேவை என்பது உண்மைதான். அந்த முயற்சி செய்து வெற்றி பெறும் வரையில் மட்டவகையான நூல்களும் இதழ்(பத்திரிகை)களும் வாழ்ந்து வரும் என்பதை மறத்தல் கூடாது. ★

நடை

புதுமைப்பித்தன்

"…நடத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்புச் சாதனமாக மட்டும் கொண்டு, தாவித் தாவிச் செல்லும் நடை ஒன்றை நான் அமைத்தேன். அது நானாக எனக்கு வகுத்துக் கொண்ட ஒரு பாதை. அது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் புதிது; அதைக் கையாண்ட நானும் கல்வி கற்றதின் விளைவாகப் பாஷைக்குப் புதிது; இதனால், பலர் நான் என்ன எழுதுகிறேன் என்பது பற்றிக் குழம்பினார்கள். சிலர் 'நீங்கள் எழுதுவது பொது ஜனங்களுக்குப் புரியாது' என்று சொல்லி அனுதாபப்பட்டார்கள். அந்த முறை நல்லதா, கருத்து ஓட்டத்திற்கு வசதி செய்வதா என்பதை அதே முறையில் பலர் எழுதிய பின்புதான் முடிவு கட்ட முடியும். அந்த முறையை நானும் சிறிது காலத்திற்குப் பிறகு கைவிட்டுவிட்டேன். காரணம், அது சௌகரியக் குறையுள்ள சாதனம் என்பதற்காக அல்ல; பல முறைகளில் கதைகளைப் பின்னிப் பார்க்க வேண்டுமென்ற ஆசையினால் அதைக் கைவிட்டு வேறு வழிகளைப் பின்பற்றினேன். இன்று திரும்பிப் பார்க்கும்போது அவை உலக வளர்ச்சியில் பரிணாம வாதத்தினர் சொல்வதுபோல இலக்கிய வளர்ச்சியின் தெருவடச் சான் சந்துகளாக அங்கேயே வளர்ச்சித்தன்மை மாறி நின்றுவிட்டன. இன்று அவற்றை ஆர அமரப் பார்த்துத்தான் முடிவு கட்ட வேண்டும். எனது முயற்சி பலிக்காமல் போயிருக்கலாம்; அதனால் முறை தப்பானது என்று முடிவு கட்டிவிடக்கூடாது…"

கரும்பு

கி.ரா. கோபாலன்

வடிவேலு ஓரடி நீளமுள்ள கரும்புக் கழி ஒன்றைத் தோல் சீவாமல் பல்லில் வைத்துக் கடித்துச் சாற்றை உறிஞ்சிக்கொண்டிருந்தான். கரும்பஞ்சாற்றின் சுவையில் அவன் மனது மயங்கி நின்றது. அவனுக்குப் பின்புறத்திலிருந்து கல கலவென்று ஒரு சிரிப்பொலி கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். அகிலம் நின்றுகொண்டிருந்தாள். அவளது முகம் பொங்கல் பானையைப்போலிருந்தது. அதாவது பொங்கிப் பூரிப்படைந்திருந்தது. புதிதாக வாங்கியிருந்த பச்சை நார்ப் பட்டுச் சேலையை மினுக்காக உடுத்தியிருந்தாள். மஞ்சள் நிறப்பட்டு நூலினால் நெய்யப்பட்டிருந்த அந்தச் சேலையின் பூக்கரை காலைச் சூரியனின் ஒளியில் ஜரிகையிலும் மேலாகப் பளபளவென மின்னியது. நாகரிகமான முறையில் தலைக் கேசத்தைப் பின்னவிட்டு வட்டமாகச் சுற்றி பொன்னிறமான சாமந்தி மலரைக் கோர்த்து வளைவாக வைத்திருந்தாள். நெற்றியில் இடப்பட்டிருந்த திலகத்திலிருந்து நட்சத்திர ஒளிபோல் ஜிகினாக்கள் மின்னின. சிறு சிறு வெண்ணிறச் சோழிகளை வரிசையாக அடுக்கி வைத்ததுபோல் பூரணமான சிரிப்பிடையே அவளுடைய பல்வரிசை மின்னியது.

கரும்பின் சுவையில் மதிமயங்கியிருந்த வடிவேலு அந்த அழகரசியைக் கண்டதும் அந்தக் கரும்பின் சுவையை அனுபவித்தது போலவே ஆர்வம் நிறைந்த கண்களுடன் அவளைப் பார்த்தான்.

அகிலம் மறுபடியும் கலகலவெனச் சிரித்தாள். "இது என்ன?......" என்றாள் அதிசயத்தோடு.

"என்ன......இதுதானே......? கரும்பு..." என்றான் சிரித்துக் கொண்டே வடிவேலு.

"அது தெரியுது......ஆனா அதை இப்படித்தான் திங்கணுமா...? சீவி நறுக்கி நிம்மதியாத் திங்கக் கூடாதா...?"

"அப்படியெல்லாம் தின்னா சுவாரசியப்படாது!..."

"சரிதான்—அதை நான் என்ன கண்டேன்...?" என்றாள் குறும்பாக அகிலம்.

"இது எப்படி இருக்குது தெரியுமா...?" என்றான் வடிவேலு அவளுக்குச் சமீபமாக நெருங்கி நின்றுகொண்டு.

"கரும்பு எப்படி இருக்கும்?... புளிப்பா இருக்கும்...?" என்றாள் அவனை ஒருவிதமாகப் பார்த்துக் கொண்டே அகிலம்.

"இல்லே, ரொம்ப தித்திப்பா இருக்குது—அதாவது உம்மாதிரி..."

அகிலம் ஒரு பெருமூச்சுவிட்டாள்.

"ஹூம்......என்மாதிரியா இருக்குது...? கரும்பிலே சாறுதான் முக்கியம். சக்கையைத் திங்க முடியுமா...? அப்படித்தான் நானும்! இந்தக் கரும்பே ஒருகாலத்திலே வேம்பாயிடும்..." என்று சொல்லிவிட்டுப் பரபரப்போடு அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள்.

வடிவேலு அவள் சென்ற திசையையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கையில் அரைகுறையாக சுவைத்துக் கடிக்கப்பட்ட கரும்பு

இருந்தது. அவன் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே சுற்றிலும் பார்த்தான். மாட்டுக் கொட்டகையில் கட்டப்பட்டிருந்த கிழக் காளை மாட்டின்மீது திடீரென்று அவன் கண் பார்வை சென்றது. ஆயுள் பூராவும் உழைத்ததினால் இரத்தம் சுண்டித் தோலும் சக்கையுமாகப் பரலோகத்திற்குப் பயண நாள் பார்த்துக் கொண்டிருந்தது அந்த மாடு. சாகப் போகிறவனின் கடைசி ஆசைக்காக ஆடை ஆபரணங்கள் அணிவித்து அனுபவிப்பதுபோல் மாட்டுப்பொங்கலை உத்தேசித்து அதற்கு வேப்பிலைத் தழையும் நெட்டி மாலையும் கோர்த்து அணிவிக்கப்பட்டிருந்தது.

"என்ன வடிவேலு, காளை மாட்டையே கண்கொட்டாமே பார்த்துக்கிட்டிருக்கே. அதுதான் இப்பவோ, செத்தெயோன்னு இருக்குதே" என்று சொல்லிக்கொண்டே சாமிக்கண்ணு வந்து நின்றான். முதல் நாள் இரவு நெடுநேரம் வரையில் ஊரில் நடந்த நாடகத்தில் கண் விழித்ததினால் அவன் அப்போது தான் தூக்கம் விழித்து பல்துலக்க முயற்சிக்கிறான் என்பதை அவன் கையிலிருந்த சாண் நீளமுள்ள வேப்பங்குச்சி நிரூபித்தது.

"மாட்டைப்பத்திய கவலைதான் இருக்குதே. இப்பவேறே எதையோ பத்தி யோசித்துக் கொண்டிருந்தேன் அண்ணே..." என்றான் வடிவேலு.

"எனக்குத் தெரியுந் தம்பி, தெரியும்...வேப்ப மரத்தடியிலேயிருந்து பார்த்துக்கிட்டுத்தானே இருந்தேன்...வெங்கிடேசன் மகளோடே பேசிக்கிட்டேயிருந்தே. என் அவள் பேச்சு கரும்புபோல இல்லையோ...?" என்றான் வேப்பங்குச்சியைப் பல்லிடையே கடித்து நிறுத்திக்கொண்டே.

"அவ மனசைத் தெரிஞ்சுக்கறதே கஷ்டமாயிருக்கு, அண்ணே" என்றான் வடிவேலு.

"எப்படித் தெரிஞ்சிக்க முடியும்...? சீமான் வீட்டுப் பெண்ணல்ல...? உன்னைப்போல இந்த ஊரிலே எவ்வளவு பேர் அவபேர்லே ஆசைவைச்சு தடுமாறுறாங்கன்னு தெரியும் தம்பி. என்—எல்லாம் பணம்... கரும்பை எறும்பு மொய்க்கறப்பலே—ஆனா கரும்பிலேயே மனுஷன் மனசைவிட்டுத் தடுமாறக் கூடாது" என்று சொல்லிவிட்டு வேப்பங் குச்சியால் பல்லைக் குடைந்து தேய்க்கலானான் சாமிக்கண்ணு.

வடிவேலு கையிலிருந்த கரும்புத் துண்டைத் தூக்கி எறிந்துவிட்டு "உள்ளபடியே என் மனசுலே இருக்கற ஆசை பணத்துக்காக இல்லே..." என்றான்.

"எனக்குத் தெரியுந் தம்பி. ஆனா உலகம் அப்படி நினைக்காதே. பணம் படைச்சவங்ககூட மத்தவங்க தங்களை நெருங்கினா பணத்துக்காகத்தான் நெருங்கறான்னு நெனைக்கறாங்களே. உலகத்திலே பணக்காரனைத்தான் பணக்காரன் விரும்புவான்"

வடிவேலு பதில் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

"போகட்டும். உன் மாமன் மகளை மறந்துடாதே...அவ உன்னைத்தான் நம்பியிருக்கிறா...வேம்பு கசப்பாத்தான் இருக்குது—ஆனா அதிலேயும் குணம் இருக்குது..." என்று சொல்லிவிட்டு ஏரிக்கரையை நோக்கி நடந்தான் சாமிக்கண்ணு.

வடிவேலு யோசித்தான். அகிலம் பணக்கார வீட்டுப் பெண்...ஆனால் அழகி அல்ல. குணத்தைப்பற்றியும்

'கல்கி' முதலாண்டில் நடத்திய சிறுகதைப் போட்டியில் பெற்ற முதற் பரிசின் மூலம் எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் திரு கி. ரா. கோபாலன். 'ராஜாளி மடம்' 'ராணி மாதவி' இவரது சுவையுள்ள நாவல்கள். 'காட்டூர்க்கண்ணன்' என்ற பெயரில் சிறந்த கிராமிய நாடோடிப் பாடல்கள் புனைந்து வருகிறார்.

பிரமாதமாகச் சொல்லிவிட முடியாது. பணம் படைத்த பெருமையும் கர்வமும் கொஞ்சம் இருக்காதா...! அவள் தகப்பனுக்கு ஒரே பெண். அவளைத் தவிர அவளுடைய தகப்பனுடைய சொத்திற்கு தொட்ட குறை, விட்ட குறையாகக் கூடப் பாத்தியமுடையவர்கள் கிடையாது. அகிலத்தைக் கலியாணம் செய்து கொள்ள நான்தான் உரிமையுடையவன் என்று சொல்லிக்கொள்ளவும் ஒருவனுமில்லை. இதன் காரணமாக அந்த ஊரிலுள்ள பல வாலிபர்களுக்கு அவள்மீது கண் இருந்தது. அந்த வரிசையில் வடிவேலுவும் ஒருவன்.

அவன் மனது அவனுக்குத்தான் தெரியும். உள்ளபடியே அவனுக்கு அகிலத்திடம் காதல் இல்லை. அவள் அவன் மனதைச் சொக்குப் பொடி போட்டு மயக்கிவிடவில்லை. அவனுக்குப் பணத்தில்தான் குறி. அதில்தான் மோகம். என்ன செய்வான் பாவம்! உழவு மாடு உயிரோடு போராடிக்கொண்டிருந்தது. அவனுக்குச் சொந்தமான மூன்றுமா நிலமும் மேடடித்து வெட்டிப் பழுது பார்த்தால் தான் விளையும் என்ற நிலையிலிருந்தது. தாயும் தகப்பனும் இறந்த சமயத்தில் வாங்கிய 'கடன் வேறு கழுத்தில் ஏறி அழுத்தியது. என்ன உழைத்துச் சம்பாதித்தாலும் கடனெல்லாம் தீர்ந்து வசதியாக வாழ்வதற்கு நிலைமை ஏற்படாது போலிருந்தது. இதனால் அவன் 'அகிலத்தைக் கலியாணம் செய்து கொண்டால் தன்னுடைய கஷ்டத்திற்குப் பரிகாரம் காணலாமோ...' என்று எண்ணியதில் தவறு என்ன? அப்படி எண்ணங்கொண்ட வாலிபர்

கள் எத்தனையோ பேரில் அவனும் ஒருவன்.

வாய்த்த சமயத்திலெல்லாம் அகிலத்தோடு நெருங்கிப் பழகித் தன் மனதில் உள்ள பிரியத்தைக் காட்டலானான். ஆனால் அவனைப்போல் எவ்வளவு வாலிபர்கள் அகிலத்தோடு பழகுகிறார்கள். அவளுக்குத் தெரியும் தன்மீது அவர்கள் வைத்திருக்கும் மோகமெல்லாம் பணத்திற்காகத்தான் என்று. அவள் ஒருவரையுமே நம்பவில்லை. பலரிடமும் பலவிதமாகப் பேசிக் கணநேரத்தில் நம்பிக்கையும், மறு கணத்தில் அவநம்பிக்கையும் ஏற்படுத்திய வண்ணமிருந்தாள்.

வடிவேலுவின் மாமன் ரத்தினம் மிகவும் எழ்மை நிலையில் உள்ளவன். பெரிய சம்சாரி. மூன்று பெண்கள்; இரண்டு பிள்ளைகள். பெண்களில் மூத்தவள் சாலம்மா. சாலா அழகி; அடக்கமான பெண். அவளைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டிய உரிமையுள்ளவன் வடிவேலு. ஆனால் கொஞ்ச நாளாய் வடிவேலுவின் மன ஆவலும் போக்கும் ரத்தினத்திற்குத் தெரிந்தது. அவன் என்ன செய்வான்? வடிவேலுவுக்கு ஏற்பட்ட வறுமையின் நெருக்கடியால் தான் அவன் பணக்கார வீட்டுப் பெண்ணை மணக்க விரும்புகிறான் என்பதை உணர்ந்துகொண்டான். இது எப்படி முடிகிறது என்று பார்ப்பதைத் தவிர வடிவேலுவைத் தடுத்து நிறுத்தும் சக்தியற்றவனாயிருந்தான் ரத்தினம்.

அன்று கன்னிப் பொங்கல். சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களிலுள்ள பெண்களெல்லாம் காவிரியாற்றங்கரையில் கூடியிருந்தனர். பரந்து கிடந்த மணல் வெளியில் பெண்கள் அங்குமிங்கும் கூட்டமாகக் கூடிக் கும்மியடிப்பதும், பாட்டுப் பாடுவதுமாக, இருந்தனர். சிறு குழந்தைகளெல்லாம் ஓடி விளையாடிக்கொண்டிருந்தன. வாலிபர்களில் பலர் சடுகுடு, பச்சைக்குதிரை போன்ற ஆட்டங்களை விளையாடுவதும் பெண்களைப் பார்த்து ரசிப்பதுமாகக் காலம் கழித்தனர்.

காவிரியாற்றின் கரையில் ஓரமாக நாணற்புதரை ஒட்டினாற்போல் மணலின் மேல் கண்ணாடி இட்டதுபோல் தண்ணீர் தெளிந்து ஓடிக்கொண்டிருந்தது. ஜன சந்தடியே இல்லாத இடத்தில் தண்ணீருக்குச் சமீபமாக இரு பெண்கள் உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் வேறு யாருமில்லை. அகிலமும் வடிவேலுவின் மாமன் மகள் சாலாவும்தான்.

“அகிலம், உன்னை நான் என் தனியாக அழைச்சிக்கிட்டு வந்து பேசறேன் தெரியுமா...?” என்றாள் சாலா.

“ஏன், எனக்குத் தெரியாதே...?” என்றாள் அகிலம்.

“நீ யாரைத்தான் கலியாணம் செய்துக்கப்போறே......? இந்த ஊரிலே இத்தனைப்பேர் உன்னைக் கலியாணம் செய்துக்க இச்சைப் படறாங்களே. சுப்பன் மகன் பழனியையா. வேதாசலம் மகன் கோதண்டத்தையா ?... பட்டாமணியாரு மகன் சப்பாணியையா...?”

“இன்னொரு பேரை என் விட்டுட்டே. அதைமாத்திரம் என் மனசுலே வைச்சுக்கிட்டுத் தடுமாறுறே...? அதையும் கேட்டுடேன்? சொல்லிப்பிடறேன்” என்றாள் அகிலம், கிண்டலாகச் சிரித்துக் கொண்டே.

“ஆமாம், எங்க அத்தான். அவரும் உம்மேலே ஆசைப்படறாரு. ....” என்று இழுத்தாள்.

“பாவம், அதுதான் உன் மனசே இப்படி உறுத்தது. நமக்குப் போட்டியா இவ ஒருத்தி வந்துட்டாளேன்னு...இல்லியா...!”

“நீ போட்டியா வந்துட்டியேன்னு எனக்குப் பொறாமையில்லை. உள்ளபடியே உனக்கு அவரைக் கலியாணம் செய்துக்கணுமுன்னு ஆசையிருக்குன்னு தெரிஞ்சா நான்

அவரைப்பற்றி நெனக்காம இருந்துடலாம் அல்லவா...?'' என்றாள் சாலா கீழே குனிந்து கொண்டே, மணலைக் கிளறிய வண்ணம்.

அகிலம் சாலாவின் முகத்தை உற்றுப்பார்த்தாள். அந்த முகத்தில் ஒரு சோகக் குறியும், ஆயாசமும் தென்பட்டது. "என்? நான் அவரைத்தான் கலியாணம் செய்துக்கணுமுன்னு உத்தேசித்து இருக்கிறேன்'' என்றாள் வேறு எங்கோ பார்த்துக்கொண்டே.

சாலா அப்போதுதான் அகிலத்தின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அகிலம் சாலாவின் முகத்தைப் பார்க்க இஷ்டப்படாததுபோல், வேறு எங்கேயோ திரும்பிப் பார்த்த வண்ணமிருந்தாள்.

"சரி; அதைக் கேட்டுத் தெரிஞ்சிக்கிலாம்ன்னுதான்! என்னைக் கலியாணம் செய்துக்கிறதுனாலே அவருக்குத்தான் என்ன புண்ணியம். அவர் மிகவும் கஷ்ட நிலையிலே இருக்காரு. உழவு மாடு சாகும் நிலையிலே இருக்குது. உழற வயல் மேடிட்டுக் கிடக்குது. தாய் தகப்பன் சாவுக்கு வாங்கின கடன் தலைமேலே நிக்குது. இந்த நிலையிலே உன்னைப் போல இருக்கறவளைக் கலியாணம் செய்துகிட்டா, அவருக்கு நன்மை தானே. அகிலம், நீ மாத்திரம் அவரைக் கைவிட்டுடாதே......சரி நான் போறேன்'' என்று சொல்லி விட்டு சாலா எழுந்தாள்.

அகிலம் சட்டென்று பாய்ந்து அவள் கையைப் பிடித்து இழுத்துத் தன் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டு, "என் அதுக்குள்ளே ஓடறே...? எனக்கு நீ ஒரு உபகாரம் செய்யணும்...'' என்றாள்.

"என்ன...!''

"உன் அத்தான் இவ்வளவு கஷ்டப்படறாருன்னு எனக்குத் தெரியாது. இதைக் கேட்க, கேட்க எனக்கு வருத்தமாயிருக்குது. நாளைக்கு நான் உன்னிடம் கொஞ்சம் பணம் தரேன். அதை நீ அவரிடம் கொடுக்கிறயா!''

"பணமா...? என் அதை நீயே அவரிடம் கொடுத்தால் என்ன'' என்றாள் ஆச்சரியத்துடன் சாலா.

"இல்லே...நான் கொடுத்தா வாங்கிப்பாரோ, மாட்டாரோ...... தவிர நான்தான் கொடுத்தேன்னு அவருக்குந் தெரியக்கூடாது. வெளியேயுந் தெரியக்கூடாது. நீயே அவர் கஷ்டத்தை அறிஞ்சி கொடுத்தாப்போல இருக்கணும்''

"இதை யாரு நம்புவாங்க...என்னிடம் எது பணமுன்னு கேட்டா...?''

"அதற்கு நீதான் ஏதாவது யோசனை செய்து சொல்லணும். ஆனா என் பேரையே எடுக்கக் கூடாது.''

சாலா சிறிது நேரம் யோசித்தாள்—கடைசியில் 'சரி,' என்று ஒப்புக்கொண்டாள்.

மறுநாள் அகிலம் சாலாவின் வீட்டிற்கு வந்து இருபது பத்து ரூபாய் நோட்டுக்களையெண்ணிக் கொடுத்து வடிவேலுவிடம் கொண்டுபோய்க் கொடுக்கச் சொன்னாள். இருநூறு ரூபாய் வரை கொண்டு வந்து கொடுப்பாள் என்று சாலா நினைக்கவேயில்லை. அவளுக்கு அது திகைப்பாகவும் வியப்பாகவும்தான் இருந்தது. அவள் இவ்வளவு பெருந்தொகையைக் கொண்டுவந்து கொடுத்தது அவள் வடிவேலுமீது எல்லையற்ற காதல் வைத்திருக்கிறாள் என்பதைத்தான் எடுத்துக் காட்டியது.

"இருநூறு ரூபாயா...? இவ்வளவு பணம் உனக்கு எது...?''

"எனக்கு இது பிரமாதமில்லை.'' இந்த ரூபாயை எப்படி வடிவேலுவிடம் கொடுப்பது என்பதைத்தான் சாலா யோசிக்கவேண்டியிருந்தது.

"அத்தான் உழவு மாடு சாக நாள் பார்க்குதே...அதற்கு என்ன செய்யப்போறீங்க...?'' என்றாள் சாலா.

"என்ன செய்யறது? வேறே மாடு வாங்க நீ பணம் கொடுத்திடப் போறீயோ" என்றான் வடிவேலு அலுப்போடு.

"ஏன் தரமாட்டேன்...? நூறாகுமா.......இருநூறாகுமா... ?" என்றாள் சாலா.

"அடெடே நூறும், இருநூறும் உனக்கு அவ்வளவு அலட்சியமாப் போச்சுதா. இந்தா பணத்தையெல்லாம் பேசி என் வயிற்றெறிச்சலைக் கிளறாதே" என்றான் வடிவேலு, வெறுப்போடு.

சாலா அவனுக்கு எவ்வித பதிலும் சொல்லாமல் தன் புடவைத் தலைப்பில் முடிந்திருந்த ரூபாய் நோட்டுக்களை அவிழ்த்தெடுத்து ஒவ்வொன்றாய்த் தரையில் எண்ணி வைத்தாள்.

வடிவேலு இதைப் பார்த்துத் திகைப்படைந்து நின்றுவிட்டான். "ஏது உனக்கு இவ்வளவுபணம்...?" என்றான் பதட்டத்தோடு.

"ரொம்பநாளாக் கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து வைச்சிருந்தேன். உங்க கஷ்டத்திற்கில்லாத பணம் எனக்கு எதற்கு அத்தான்?" என்றாள் சாலா.

வடிவேலுவால் இதை நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அவன் அப்போது இருந்த நிலையில் பணம் கிடைத்ததே பெரிதாக நினைத்தானே தவிர, அது எப்படி வந்தது என்று கவலைப்படச் சித்தமாக இல்லை. மெதுவாக அந்த ரூபாய் நோட்டுக்களைத் தொட்டுப் பார்த்தான். ஆவலோடும் ஆர்வத்தோடும் சாலாவின் முகத்தைப் பார்த்தான்.

"சாலா..." என்று குரல் தழுதழுக்க அவள் கையைத்தொட்டான்.

சாலா ஒரு பெருமூச்சு விட்டாள். ஆனால் அடுத்த கணம் அவன் கையை உதறித் தள்ளிவிட்டு "நான் போய் வாரேன் அத்தான். பணத்தை எடுத்துப் பத்திரமா வைச்சிக்கிடுங்க" என்று சொல்லிவிட்டு, சட்டென்று எழுந்து அதிவேகமாகப் போய் விட்டாள்.

நூற்றறுபது ரூபாய்க்கு பக்கத்துக் கிராமத்திலிருந்து புதிதாக ஒரு உழவுமாடு வாங்கிக்கொண்டு வந்து விட்டான் வடிவேலு. பாக்கியிருக்கும் பணத்தில் 'நிலத்தை சீர்திருத்தம் செய்யலாமா, கடனை அடைக்கலாமா' என்று யோசனை செய்தான்.

வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. "யாரது?" என்று உரத்தக் குரலில் கேட்டான் வடிவேலு.

"யாரா...? நான்தான் கரும்பு"

"கரும்பா...?"

சட்டென்று எழுந்துபோய்க் கதவைத் திறந்தான். அகிலம் வாசற்படிக்குச் சமீபமாக நின்றுகொண்டிருந்தாள்.

"நீதானா...? ஏன்? எங்கே வந்தே...?"—முகத்தைச் சுளித்துக்கொண்டே கேட்டான் வடிவேலு.

"ஹூம்...எனக்குத் தெரியும் உங்களுக்குக் கரும்பாயிருந்த நான் வேம்பாயிடுவேன்னு... எல்லாம் பணம் படுத்தறபாடு. இல்லாட்டி எங்கே வந்தே; ஏன் வந்தேன்னு கேட்கத்தோணுமா? புது உழவு மாடு வேறே வாங்கிட்டீங்க..."

"ஆமாம், புதுமாடு வாங்கிட்டேன். இல்லாட்டி ஊரிலே இருக்கிற பசங்கமாதிரி நான் உன் முகத்தையே பார்த்துகிட்டு இருக்கமாட்டேன்!" என்றான் வடிவேலு விறைப்போடு.

"அது சரிதான்! பணம் கிடைச்சாத்தான் ஒருத்தர் முகத்தைப் பார்க்கணும். பணம் கிடைக்காட்டி எதற்காகப் பார்க்கணும்? சரி, பணம் கொடுக்கரவங்க முகத்தையே பார்த்துக்கிட்டிருங்க" என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்து மறைந்தாள் அகிலம்.

* * *

"என்ன அத்தான் யோசிச்சிகிட்டு இருக்கீங்க" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் சாலா.

"நீ கொடுத்த இருநூறு ரூபாயிலே மாடுவாங்கினது போக நாற்

Regd. Tade Mark. No. 155456.

Regd Star Coffee

ஸ்டார் காபி ஒர்க்ஸ்.
ரங்கேகவுடர் வீதி கோவை,

அனைவருக்கும்
எமது
பொங்கல்
வாழ்த்துக்கள்

சுவைமிக்க
ஸ்டார் காபியை
உபயோகியுங்கள்.

பது ரூவா இருக்குது. இதிலே நிலத்தை சீர்திருத்தம் செய்யறதா. கடனை அடைக்கிறதா என்று யோசிச்சிகிட்டேயிருக்கேன்."

"அதைத்தான் யோசிச்சிக்கிட்டிருப்பீங்கன்னு எனக்குத் தெரியும். அதுக்குத்தான் மீதியாயிருந்த நூறு ரூவாயையும் எடுத்துகிட்டு வந்தேன்" என்றாள் சிரித்துக் கொண்டே சாலா.

"இன்னும் நூறு ரூவா கொண்டாந்திருக்கயா? உங்க வீட்டிலே எதாவது புதையல் இருக்கிறதா" என்றான் வடிவேலு ஆச்சர்யத்தோடு.

"அதெல்லாமில்லே—நானே சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்திருக்கதுதான்" என்றுசொல்லிக்கொண்டே, தான் கொண்டுவந்திருந்த ரூபாய் நோட்டுக்களை அவன் எதிரே வைத்தாள். வடிவேலு பணத்தைப் பார்க்கவேயில்லே. சாலாவின் முகத்தையே ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டு "சில சமயம்கரும்பு வேம்பாகிவிடுது? வேம்பு கரும்பாகிவிடுது? இது ஏன்?" என்றான் அன்பு நிறைந்த குரலில்.

"எல்லாம் மனசுதான் அத்தான் காரணம்"

"மனசு இல்லே...இந்த மனசையே குருடாக்கிடுது பணம்" என்றான் வடிவேலு.

"இருக்கலாம்...சரி நான் போய் வரேன். பணத்தை எடுத்து வைச்சிக்கிட்டு வேண்டிய காரியத்தைப் பாருங்க" என்று சொல்லிவிட்டுப் போகப் புறப்பட்டாள் சாலா. ஆனால் இந்தச் சமயம் அவளை விட்டு விடுவதாக இல்லே வடிவேலு. சட்டென்று அவளுடைய கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "ஏன் வந்தசோடு தெரியாமல் தப்பி ஓடப் பாக்குறே...? இதோ பாரு எந்தப் பணம் என் கண்ணைக் குருடாக்கிச்சோ அதுவே கண்ணையும் திறந்துவிட்டிடுச்சு. பணம் கிடக்குது...சாலா, உன்னை நினைத்தால், இதோ பாரு, நீ எனக்கு கிடைச்சதுதான் பெரிய அதிர்ஷ்டம். உன்னைத் தெரிஞ்சிக்காமேத்தான் குருட்டுத் தனமா அலைஞ்சேன்" என்றான் தழுதழுத்த குரலில்.

"என்னை நீங்க தொட்டா தோஷம்! என் கையை விட்டுடுங்க! என்னை மனசாலேகூட நீங்க நினைக்கக்கூடாது" என்று பொருமலோடு சொல்லிக்கொண்டே, அவன் கைப்பிடியிலிருந்து உதறிக் கொண்டாள் சாலா.

"ஏன்...? நான் உன்னை அலட்சியமாக நினைச்சதை எல்லாம் பெரிசா நினைக்காதே...என் வறுமையினுடைய கொடுமைதான் மனசை கெடுத்துத் தகாத இடத்திலெல்லாம் ஆசைவைச்சுத் தடுமாற வைச்சுடுச்சு" என்றான் வடிவேலு, கெஞ்சும் குரலில்.

"இல்லே...நான் உங்களைக் கலியாணம் செய்துக்க உரிமை இல்லே. நீங்க அகிலத்தைத்தான் கலியாணம் செய்துக்கணும். அதுதான் தெய்வ சம்மதமாகும். அவ உங்களைக் கலியாணம் செய்துக்க ஆசைப்படறா. உங்களுக்கும் அவள்மேல் ஆசை இருந்திருக்குது..." என்றாள் சாலா.

"நான் அவளைக் கலியாணம் செய்துக்க ஆசைப்பட்டேன். அது உண்மைதான். ஆனா அது எவ்வளவு முறைப் பிசகுன்னு இப்போதான் தெரியுது. பணத்துமேலே வைச்ச ஆசைதான் அவளைக் கலியாணம் செய்துக்கணுங்கிற ஆசையைத் தூண்டிவிட்டது".

"இப்போது நான் பணம் கொண்டு வந்து கொடுத்தவுடனே அந்த ஆசை என்மேலே மாறிடிச்சாக்கும்" என்றாள் சாலா கேலியாக.

"ஆமாம், நீ பணம் கொண்டு வந்து கொடுத்து என் கண்ணைத் திறந்துட்டே".

"பணம் உங்க கண்ணைத் திறந்திருக்கலாம். ஆனா அது என்னைக் கட்டுப்படுத்திடுச்சு. உங்க மேலே ஆசைவைச்சு அதற்காக எதுவும் செய்யத் தயாராக இருக்கும் பெண்ணுக்கு நான் துரோகம் செய்யவே மாட்டேன்..."

"எனக்காக அகிலம் என்ன செய்துட்டாள், அவளுக்குப் பணக்காரிங்கற கர்வங்வான் தலைகொழுத்து ஆடுது".

"அப்படிச் சொல்லாதீங்க, அது உங்களுக்குத் தெரியாது. நான் கொடுத்த பணத்திலே ஒரு தம்பிடி கூட எனக்குச் சொந்தமானது இல்லே. எல்லாம் அவள் கொடுத்ததுதான். உங்களிடம் நேரில் கொடுக்க அஞ்சி, என் மூலமாக உங்களுக்குக் கொடுக்கச் சொன்ன" என்றாள் சாலா.

வடிவேலு "அப்படியா"? என்றான் ஒரு பெருமூச்சோடு.

"அப்படியிருந்தாலும் அவளை நான் கலியாணம் செய்துக்கப் போறதில்லே. என் நிலம் நீச்சை வித்தாவது பணத்தை உன்னிடம் கொடுத்து விடறேன். அதை அவளிடம் நீயே திருப்பிக் கொடுத்துடு. பணத்திற்காக உன்னை நான் விட்டுட்டு உயிர் வாழ முடியாது என்ற ரகசியம் இப்போதான் எனக்குப் புலனுச்சு" என்றான், சாலாவின் இரண்டு கரங்களையும் பற்றிக்கொண்டு கெஞ்சுகிற குரலில்.

சாலாவின் கண்கள் கலங்கின. "அத்தான்..." என்றாள் தழுதழுத்த குரலில். அதற்குமேல் அவளால் எதுவுமே பேச முடியவில்லை.

*   *   *

வடிவேலு ஆற்றங்கரையில் அகிலத்தைப் பார்த்தான். அவள் தனிமையிலிருந்ததால் அவளோடு நெருங்கிப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"அகிலம், நான் கலியாண விஷயமா ஒரு முடிவுக்கு வந்துட்டேன்" என்றான் தீர்மானமாக.

"எனக்குத் தெரியும், நல்ல முடிவுக்குத்தான் வந்திருப்பீங்கன்னு" என்றாள் சிரித்துக்கொண்டே.

"எனக்குப் பணங் காசிலே எல்லாம் மோகம் இல்லே. அதுக்காக என் மனச்சாட்சியை வித்துடமாட்டேன்..." என்றான்.

"இப்படித்தான் இந்த ஊரிலே ரொம்பப் பேரு சொல்லி என்னை ஏமாத்திடப் பார்க்கறாங்க" என்றாள் கேலியாக, அகிலம்.

"நான அப்படிப்பட்டவனில்லே. நீதான் பணத்தைக் கொடுத்து என்னை ஏமாத்திடப் பாத்தே..."

"நான் அப்படியெல்லாம் ஒண்ணும செய்யல்லேயெ. நீங்கதான் என்னைக் கலியாணம் செய்துக்க விரும்பினீங்களே தவிர, நான் உங்களைக் கலியாணம் செய்துக்கவே விருமபல்லே. அதுவும் தவிர, பணத்தைக் கொடுத்து உங்களை மயக்கப் பார்த்தேன்னு சொல்றது பச்சைப் புளுகு..." என்றாள் அகிலம்.

"புளுகா? நீ சாலாவிடம் எனக்காகப் பணம் கொடுத்தனுப்பல்லே...? அவள் சொன்னாளே—அது பொய்யா...?"

"ஒஹோ அதுவா? அது நிஜந்தான். அந்தப் பணம் எனக்காகக் கொடுக்கல்லே. அவளுக்காகத்தான் கொடுத்தேன். உங்களைப் போல இருக்கிற ஆண்பிள்ளைக மனசுதான் பணம் இருககிற இடத்தை நோக்கிப் பாயுது. ஆனா என்னைப் போல இருக்கிற ஒரு பொண்ணு, ஒரு பெண்ணின் மனசை அறிஞ்ச பிறகும் இரக்கப்படாமே இருக்க முடியாது. உங்களுக்கு எது வேம்பாகப் படுதோ அதைக் கரும்பாக்கணும்னு எனக்கு ஆசை. உங்க மனசை தெளியவைக்க இன்னும் கொஞ்சம் பணம் செலவானாலும் நான் கவலைப் படமாட்டேன். உள்ளபடியே கரும்பு யாருன்னு இப்போ உங்களுக்குப் புரிஞ்சுதா? நீங்க ரெண்டுபேரும் கலியாணம் செய்துகொண்டு சுகமா இருக்கணும்னுதான் என் ஆசை. என்னைக் கலியாணம் பண்ணிக்கத் தான் ஊரிலே போட்டிக்கு மேலே போட்டியா இருக்காங்களே..." என்று சிரித்துக்கொண்டே சொல்லி விட்டு மெதுவாக நடந்தாள் அகிலம்.

வடிவேலு அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

ஒரு பெண்ணின் இருதய ஆழத்தில் உள்ள இரகசியத்தை, கரும்பிலிருந்து சுவையை அறிந்துகொள்வது போல அவ்வளவு எளிதாக அறிந்துகொள்ள முடியாது என்பதை, அப்போது தான் உணர்ந்து கொண்டான் வடிவேலு. ★

நண்பர்:- "என்ன சார்! மணி எவ்வளவு இருக்கும்?"
மற்றவர்:- "அட! அதை ஏன் கேட்கிறீர்கள் இந்தக்காலத்திலே 'மணிமேட்டர்' ரொம்ப மோசம்.... பாருங்கோ.... கையிலே கம்பிடின்று தம்பிடி கிடையாது........"
நண்பர்:- "அடடே! நான் அதைக்-கேழ்க்கவில்லை சார்! உங்க 'வாட்ச்'சிலே மணி என்ன ஆச்சுன்னுதான் கேட்டேன்!"



தாயார்:- (கணவரிடம்) "அங்கே பாருங்க உங்க பிள்ளையை! முருங்கை மரத்திலேறிண்டு கீழே இறங்கமாட்டேன்னு அட்ம் பண்றது"
கணவர்:- (பிள்ளையைப்பார்த்து) "அடவேதாளமே! இறங்குடா கீழே!"



தகப்பனார்:- (புதிதாக பாட்டு சொல்-லிக்கொடுக்க வந்திருக்கும் பாட்டு வாத்தியாரைக்கண்டு பயப்படும் பெண்ணைப்பார்த்து)
"ஏம்மா பயப்படரே? பாகவதர் வெறுமனேதானம்மா உட்கார்ந்தி-ண்டு இருக்கிறார். இன்னும் பாட ஆரம்பிக்கவே இல்லையே!"
பாகவதர்:- "???!!!......"

முதல் திருடன்:- 'அண்ணே! பெரிய தப்பு செய்துட்டோம்! அந்த குத்துச்சண்டை வீரன் குப்புசாமி வீட்டுக்கல்ல வந்து விட்டோம் அவன் பார்த்தால் நம்ப பாடு 'சட்னி' தான்!" இரண்டாவது திருடன்:- "சும்மா கிட தம்பி! அவன் ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்து சண்டைக்கே வரமாட்டான்!"
தகப்பனர்:- டேய் அம்பி! சிங்கப்பெருமாள் கோவிலிலேயிருந்து நரசிம்மமாமா வந்திருக்கார்... வந்து பார்டா...
போலீஸ்காரர். "இந்தாப்பா உனக்கு பாக்கட் அடிக்கத் தெரியுமா?" டைலர்:- "எனக்கு அந்த வழக்கம் இல்லீங்களே! போலீஸ்காரர்: அடடே! அதைச் சொல்லவில்லேய்ப்பா! என் ஷர்ட் பாக்கட் கிழிஞ்சிருக்கு அதை தைத்துத் தரத்தான் கேட்டேன்.

இலக்கியத் தம்பதிகள் இணை உலகிலே மிக அரிது. அந்த வாய்ப்பு ஹேமா — ஸ்ரீதரன் இருவருக்கும் கிட்டியது. இடையில் பல இடைஞ்சல்கள். கடைசியில் எல்லாவற்றையும் தாண்டி நின்ற அந்தத் திரைமறைவு ரகசியம்......!

இலக்கியத் தம்பதிகள்

சிறுகதை:

ஹேமு ஆனந்ததீர்த்தன்

மணி ஐந்தடிக்க ஐந்து நிமிஷம் இருக்கும்போதே ஆபீஸ் பியூன் மேஜை மீது கிடந்த 'பைல்'களையெல்லாம் எடுத்து ஒழுங்காகக் கட்டி அலமாரிக்குள் வைக்க ஆரம்பித்து விட்டான். மணி ஐந்தடிப்பதற்கும் சிப்பந்திகள் ஒவ்வொருவராகக் காரியாலயத்தை விட்டு வெளியேறுவதற்கும் சரியாக இருந்தது.

நானும் இரண்டு டிராயர்களையும் இழுத்துப் பூட்டிவிட்டு நாற்காலியை விட்டு எழுந்திருந்தேன். வழக்கம்போல் என் கண்கள் ஸ்ரீதரனின் இருப்பிடத்தை நாடின. ஸ்ரீதரன் அப்பொழுதுதான் கோட்டுப் பையிலிருந்து சிறிய சீப்பு ஒன்றை எடுத்துத் தலையை வாரிவிட்டுக்கொண்டார். பிறகு கைக்குட்டையை எடுத்துமுகத்தைத் துடைத்துக்கொண்டார். அவர் முகம் சோப்பிட்டுக் கழுவியது போல, அழகுடன் மிளிர்ந்தது. அதில்தான் எவ்வளவு மோகனக் கவர்ச்சியும், உள்ளங் கொள்ளை கொள்ளும் எழிலும்! லேசாக ஒரு புன்முறுவலை வரவழைத்துக் கொண்டே அவர் மேஜையருகே சென்றேன். அவரும் இளநகையரும்ப என்னை நோக்கி, "புறப்பட்டுவிட்டாயா, ஹேமு" என்று கேட்டார். அவர் குரலில் பரிவின் அன்பு பிணைந்திருந்தது.

"ஹூம், நீங்கள்?"

"இதோ, புறப்பட்டுக் கொண்டே இருக்கிறேன்."

"ஏதும் சினிமா கினிமா போகும் உத்தேசம் உண்டோ?"

"இல்லையே! ஏன்?"

"வேறு என்கேஜ்மெண்ட் ஒன்றும் இல்லாமலிருந்தால் கொஞ்சம் அடியாளுடைய குடிசைக்கு வந்துபோக முடியுமா என்று தெரிந்து கொள்ள ஆவல்?"

"குடிசையா? ஒஹோ, உன் இல்லத்தைத் தானே சொல்கிருய்? ஆஹா! தாராளமாக! இதற்கா இவ்வளவு தயக்கம்? கரும்பு தின்னக் கூலியா?"

"அப்படியானல் நீங்கள் வர வேண்டாம்!" என்றேன் நான் முகத்தைக் கொஞ்சம் கடுமையாக வைத்துக் கொண்டு. எல்லாம் காரணமாகத்தான்!

அவர் முகத்தில் கலவரம் தோன்றியது. என் கோபத்தின் காரணம் விளங்காமல் கொஞ்சம் திணறினர் அவர்.

"எங்கள் வீட்டில் கரும்பு கிடையாது. பிஸ்கட்டும் டீயும் தான் கொடுப்பேன். சம்மதமானால் வாருங்கள்" என்று சிரித்துக் கொண்டே சொன்னேன். காரணம் புரிந்து விட்டதா?

ஹேமா ஆனந்ததீர்த்தன் ஆக்கிய பல சிறந்த கதைகள் பலரது ரசிக உள்ளங்களை நிறைவுறச் செய்துள்ளன. காதல் பின்னணியுடன், குடும்பச் சூழலில் அமையும் இவரது கதைகள் தரத்தில் சிறப்புப் பெறும். 'பெண்ணா, பதுமையா?' என்பது ஆசிரியரின் உயர்ந்த குறுநாவல்.

"விஷயம் வேறொன்றுமில்லை. நான் ஒரு சிறு கதை எழுதியிருக்கிறேன். அதை உங்களுக்கு வாசித்துக் காட்டப் போகிறேன்."

"அப்பப்பா! என்ன குறும்புக்காரியாகி விட்டாய் நீ வரவர. ஏதோ என்னவோ என்று நான் ஒரு கணம் கலங்கிப்போய் விட்டேன்"

அவர் முகத்தில் அந்தி ஒளி அடிவர்ணமிட்டிருந்தது. நான் அவர் எழில் பெருக்கில் லயித்துப்போனேன்.

வீட்டையடைந்து சிற்றுண்டியருந்திய பின் நான் என் கதையை வாசிக்க ஆரம்பித்தேன். அவர் கேட்டுக் கொண்டே இருந்தார். நடு நடுவே வாசிப்பதை நிறுத்தி அவர் முகத் தோற்றத்தைக் கவனித்தேன். ஆனால் அவரோ ஒன்றையும் வெளிக்காட்டாமல், "ஊம், மேலே படி. கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்" என்றார் குறும்பும் குதூகலமும் கலந்த குரலில்.

நானும் ஒரே மூச்சில் கதையைப் படித்து முடித்தேன்.

கதை முடிந்ததும் ஸ்ரீதரன் "கங்க்ராசுலேஷன்ஸ்! ஹேமா! அற்புதமான கதை" என்று தன் வலக்கரத்தை நீட்டினார். என் கையும் என்னையறியாமலேயே உயர்ந்தது. கரத்தோடு கரம் உராய்ந்தது; என் கையை மாத்திரம் அல்லாமல் என் உள்ளத்தையே ஒரு உலுக்கு

"அப்பாடா! பயந்தே போய் விட்டேன்!" என்று கூறி அவர் பெரிதும் ஆறுதலடைந்தார். அவர் இதயம் பெருமூச்சை நெட்டித் தள்ளி விட்டது.

பிறகு இருவரும் வீடு நோக்கி நடையைக் கட்டினோம்.

"என்ன திடீரென்று இந்த விருந்தோம்பல்?" என்று கேட்டார் ஸ்ரீதரன் நடந்து கொண்டே.

"தானாகத் தெரிகிறது. வாருங்களேன். அதற்குள் என்ன ஆத்திரம்?"

"இல்லை......எனக்கென்னமோ......காரணம் தெரிந்து கொள்ளாமல்..." என்று இழுத்தார் அவர். நல்ல காரணம்...!

"ஒன்றுமில்லை, பயப்படாமல் வாருங்கள். இன்றைக்கு ஒரு நாள் வந்து அநுபவம் பெற்று விட்டீர்களானால் இனி ஏழேழு பிறப்பிற்கும் இந்தப் பக்கம் தலைகாட்ட மாட்டீர்கள்!" என்றேன்.

பாவம், மீண்டும் அவர் முகம் பீதியுற்றது. அவரின் அழகிய முகத்திடைத் தோன்றிய கிரகணம்—ஊஹூம்; நான் ஏன் அப்படி அவரைத் தொந்தரவிற்குள்ளாக்க வேண்டும்?

உலுக்கிவிட்டதாக நான் உணர்ந்தேன்.

என் கன்னங்களில் ரத்தம் 'குபு குபு'வெனப் பாய்வதை என்னல் நன்ருக உணர முடிந்தது. என் இதயம் எங்கணும் மின்னலுணர்வு கிளர்ந்தெருந்தது. நான் மெய் சிலிர்த்தேன். ஆஹா!

"நீங்கள் சும்மா சொல்லுகிறீர்கள!" என்றேன், அவர் கண்களையே ஊடுருவிப் பார்த்தவாறு.

"இல்லையே உண்மையாகத்தான சொல்கிறேன், ஹேமா. கதையை வெகு நன்ருக எழுதியிருக்கிருய். என்னல் கூட இவ்வளவு நன்ருக எழுத முடியுமா என்பது சந்தேகம்."

"ஹூக்கும்! கேலி பண்ணுகிறீர்கள்!"

"சரி, நான் சொன்னுல் அப்படித்தான் இருக்கும். நீ நாளைக்கே இதை எந்தப் பத்திரிகைக்கு வேண்டுமானுலும் அனுப்பு. உடனே பிரசுரமாகிறதா இல்லையா, பாரேன்."

"நான் எந்தப் பத்திரிகைக்கு அனுப்பப் போகிறேன். சொல்லுங்கள் பார்ப்போம்?" என்றேன் என் இரண்டு கைகளையும் சேர்த்து முகவாய்க் கட்டையில் இடித்துக்கொண்டு, தலையைச்சிறிது சாய்த்த வண்ணமாக.

"தாமரை தேதுவெக்கா?"

"ஊஹூம்!"

“தமிழ்த் தொண்டுவுக்கா?”

“ஊ... ஹூம்!”

“பின்னே! எதுக்கு என்று நீதான் சொல்லேன்!”

“நந்தன் பத்திரிகைக்குத் தான் அனுப்பப்போகிறேன்!”

‘சரிதான். எனக்குப் போட்டியா?” என்று கூறி அலட்சியமாகச் சிரித்தார் நண்பர். ஆம்! அந்தச் சிரிப்பிலே அவரது ஆழ்ந்த தன்னம்பிக்கையும்

ரேடியோவைத் திருப்பிக் கொண்டிருந்தபோது அவர் வந்து......

சிறிது கர்வமும் ஒலித்ததை நான் நன்ருக அறிய முடிந்தது.

பிறகு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். ரேடியோ வைத்தோம். விளக்கு வைக்கும் நேரம் வந்தது. ஸ்ரீதரன் விடை பெற்றுக்கொண்டார்.

அன்றைக்கே அந்தக் கதையை மறுபடியும் நல்ல தாளில் அழகாக எழுதி மடித்து ஒட்டி 'நந்தன்' பத்திரிகைக்கு அனுப்பி விட்டுத்தான் நான் தூங்கப் போனேன்.

டாக்டர், வைத்தியம் பார்க்க வந்தவிடத்து நோயாளிப் பெண்பால் கொண்ட காதல் மனத்தத்துவ விளக்கம் பற்றியது அக்கதை. அழகான துள்ளு தமிழில் எழுதினேன், கதைக்கு வேண்டிய கரு, சூழ்நிலை, குணச்சித்திர அமைப்பு முதலிய உபகரணங்களுடன். என் முதல் கதை எனக்கு நிரம்பவும் பிடித்து விட்டது. என் அன்பர் ஸ்ரீதரனே நற்சாட்சிப் பத்திரம் வழங்கி விட்டதால் எனக்கு உள்ளுக்குள் மலர்ந்த ஆனந்தத்துக்கு எல்லேயே இருக்காது.

'நந்தன்' அரசியல் வாரப் பத்திரிகை. ஒரே ஒரு சிறு கதைதான் அதில் வாரந்தோறும் வெளிவரும். அது அநேகமாக ஸ்ரீதரன் எழுதிய கதையாகத்தான் இருக்கும். ஸ்ரீதரனின் கதைகள் எப்பொழுதுமே எனக்குப் பிடிக்கும். அவர் கதைகளைப் படித்ததனுலேயே தான் எனக்கும் கதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று. 'நந்தன்' பத்திரிகையில் என் கதை பிரசுரமாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கவில்லை. இருந்தாலும், ஒரு சபலம்; ஒரு ஆசை. எல்லோருக்கும் உள்ளதுதானே இது?

அந்த வாரம் 'நந்தன்' வெளியானதும் ஆவலுடன் வாங்கிப் பார்த்தேன். அப்பொழுது ஸ்ரீதரனும் என் பக்கத்தில் இருந்தார். படபடக்கும் உள்ளத்துடன் பத்திரிகையைப் பிரித்தேன். பக்கங்களைப் புரட்டும்போதுதான் கைகளில் எத்தனை உணர்ச்சி வேகம்! 'ஆசையும் ஆசியும்' என்ற தலைப்பையும் அதன் கீழே என் பெயரையும் பார்த்ததும், எனக்குப் பூமியில் கால் பாவவே இல்லை. ஆகாயத்தில் பறந்தேன். மேக மண்டலத்தில் சஞ்சரித்தேன். உடலெங்கும் இன்பக் கிளர்ச்சி, ஆனந்த அலைகள்! எனக்கு என் நினைவே கிடையாது? நான் ஹேமுவேதானு...?

"நான் சொல்லவில்லையா, ஹேமு? பார்! அன்றைக்கு நான் சொன்னபோது கேலி செய்கிறேன் என்ருயே?" என்று கேட்டார் ஸ்ரீதரன்.

புது நம்பிக்கை பிறந்தது உள்ளத்தில். புது உள்ளம் பிறந்தது என்னுள். உற்சாகம் கரை புரண்டது.

நான் அன்றிரவே மீண்டும் உட்கார்ந்து இன்னெரு கதை எழுதினேன்.

தலை கால் புரியவில்லை எனக்கு. எழுதிக் கொண்டே போனேன். எழுதி எழுதிக் குவித்தேன். ஒவ்வொன்றையும் ஸ்ரீதரனுக்குப் படித்துக் காட்டி விட்டுப் பிறகுதான் பத்திரிகைக்கு அனுப்புவேன்.

'நந்தன்' பத்திரிகையில் இப்போது வாரம் தவருமல் என்னுடைய கதைகளே வரலாயின. நான் எழுத்தாளர் பட்டியலுக்

குரியவளாக ஆகிவிட்டேன். என் கனவு பலித்துவிட்டது!

முதல் கதை வெளி வந்து சுமார் ஒரு மாதத்துக்கெல்லாம் 'நந்தன்' காரியாலயத்திலிருந்து எனக்கு ஒரு கவர் வந்தது. ஆவலுடன் உடைத்துப் பார்த்தேன். "சென்ற மாதம் நந்தனில் வெளியான தங்கள் இரண்டு கதைகளுக்கான அன்பளிப்பு" என்ற குறிப்புடன் எழுபது ரூபாய்க்கு ஒரு 'செக்' வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் நான் ஆனந்த நடனமாடினேன்.

ஸ்ரீதரனிடம் அந்தச் 'செக்'கைக் காண்பித்தபோது அவர் திகைப்படைந்து போனார்.

"ஒரு கதைக்கு முப்பத்தைந்து ரூபாயா? அடேயப்பா!" என்று ஆச்சரிப்பட்டார்.

"உங்களுக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள்?"

"எவ்வளவு கொடுத்தார்கள் என்று கேள்"

"அப்படித்தான் இருக்கட்டுமே, சொல்லுங்களேன்."

"பெண்கள் என்றாலே அவர்களுக்குத் தனிச் சலுகை காட்டுகிறது என்பது வழக்கமாகப் போய் விட்டது" என்று முணுமுணுத்தார் அவர்.

"என்ன திட்டுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"பின்னென்ன? எனக்கு ஒரு கதைக்கு இருபது ரூபாய். உனக்கு முப்பத்தைந்து ரூபாயா? அக்கிரமம்" என்றார்.

"சன்மானம் கதையின் தரத்தைப் பொறுத்திருக்கலாம்!" என்று வேண்டுமென்று அவர் வாயைக் கிண்டினேன்.

"ஆ...மாம், பெரிய கிரந்தம் எழுதிக் கிழிச்சுப்புட்டே" என்றார் ஸ்ரீதரன்.

ஸ்ரீதரனின் சுபாவத்திலும் பேச்சு வார்த்தைகளிலும் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு மாறுதலைக் கண்டேன். முன்பெல்லாம் என் கதைகளை நான் படித்துக் காட்டியபோது ஆர்வத்துடன் கேட்பார். நன்றாக இருக்கிறதென்று பாராட்டுவார். ஆனால் வர வர அவ்வழக்கம் நின்றுபோய் விட்டது. கதைகளைப் படித்துக் காட்டுவதற்காக அழைத்தால், வேறு ஏதோ காரியம் இருப்பதாகச் சொல்லித் தப்பித்துக்கொள்ள ஆரம்பித்தார். அப்படி ஓரிரு முறை கதையைக் கேட்க ஒப்புக்கொண்டாலும் அதிலே ஆயிரம் குற்றம் குறைகள் சொல்ல ஆரம்பித்தார்.

"நீங்கள் ஏன் இப்போதெல்லாம் கதையே எழுதுவதில்லை." என்று நான் அவரிடம் கேட்டேன் ஒரு நாள்.

"ஓரவஞ்சகம் செய்யும் அந்த 'நந்தன்' பத்திரிகைக்கு இனி நான் கதை எழுதுவதில்லை யென்று சபதம் செய்திருக்கிறேன்" என்றார் அவர், வெறுப்பு தாண்டவமாடும் குரலுடன்.

"நந்தனுக்கு இல்லாவிட்டால் வேண்டாம், வேறு பத்திரிகைக்கு அனுப்பக் கூடாதா?" என்று கேட்டேன்.

"எனக்கு நேரம் எங்கேயிருக்கிறது கதை எழுத? மற்றவர்கள் எழுதி வாசிக்கும் கதையைக் கேட்கத்தான் பொழுது சரியாயிருக்கிறது" என்று கூறிச் சிரித்தார் அவர். அப்படிச் சிரித்தபோதிலும் அதிலிருந்த வறட்சியும் உள்ளக் குமுறலும் எனக்குத் தெரியாமற் போகவில்லை. கதை எழுதுகிறவளுக்குப் பிறர் உள்ளத்தை உணரவா முடியாது?

சிறிது சிறிதாகப் பயங்கரமான அந்த உண்மை எனக்குப் புலப்படலாயிற்று.

ஸ்ரீதரன் என் மீது பொருமை கொண்டுள்ளார் என்ற உண்மை தான் அது!

ஒரு நாள் அவசரமாக எனக்கு 'இரேசர்' வேண்டியிருந்தது. என்னுடைய 'இரேசர்' எங்கோ காணவில்லை. ஸ்ரீதரனிடமிருந்து வாங்கிக் கொள்ளலாமென்று போனேன். ஸ்ரீதரன் நாற்காலியில் இருக்கவில்லை. ஆனல் டிராயரின் சாவி மாத்திரம் டிராயரிலேயே இருந்தது. அவரிடமுள்ள சலுகையினல் நான் டிராயரைத் திறந்து 'இரேசர்' எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்து டிராயரைத் திறந்தேன். இரேசரைத் தேடும்போது தற்செயலாக என் கைகளில் அகப்பட்டன கட்டுக் கட்டாக ஏழெட்டுக் கதைகள். எல்லாம் 'நந்தன்' காரியாலயத்திலிருந்து வருத்தத்துடன் திருப்பி அனுப்பப்பட்டவை!

அவசர அவசரமாக அவைகளையெல்லாம் இருந்தது இருந்தபடி வைத்துவிட்டு என் நாற்காலிக்கு வந்துவிட்டேன்.

அன்று முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. ஸ்ரீதரனை நினைத்து நினைத்து மனத்தை வருத்திக் கொண்டேன். பாவம், அவர் மனம் எவ்வளவு புண்பட்டிருக்குமோ? தீட்டின மரத்தில் பதம் பார்ப்பது என்று சொல்லுவார்களே, அந்த மாதிரியல்லவா என் செய்கை அமைந்து விட்டது? இதனல் அவருக்கு என் பேரில் உள்ள பிணைப்பு எவ்வளவு அறுந்து போய்விட்டது என்பதை நினைத்தபோது என் நெஞ்சு துணுக்குற்றது. நான் வாய்விட்டு அழுதுவிட்டேன்.

"ஹேமு, ஸ்ரீதரன் இப்போதெல்லாம் வருவதே இல்லையே. உங்களுக்குள் ஏதாவது மனஸ்தாபமா?'' என்று என் தாயார் வேறு பல முறை என்னைக் கேட்க ஆரம்பித்து விட்டாள்.

ஸ்ரீதரனை முதன் முதலில் பார்த்ததுமே அவள் நிச்சயித்து விட்டாள் அவர்தான் எனக்குகந்த மணளனென்று. அவளென்ன, நானும் இவ்வளவு நாளாக அப்படித்தானே நினைத்துக் கொண்டிருந்தேன்! அப்படியிருக்க, இப்போது அவர் மனத்தை இப்படி நோகச் செய்து அவ்வரை விரோதித்துக் கொண்டு விட்டதை நினைத்தபோது எனக்குக் கண்களில் கண்ணீர் ஆருகத் துளும்பியது.

மீண்டும் அவர் அன்பை நான் சம்பாதித்துக் கொண்டாக வேண்டும். அவருக்கு என் மீது ஏற்பட்டிருக்கும் மனக் கசப்பு நீங்க வேண்டுமென முடிவு செய்து கொண்டேன்.

என் இதயத்தின் துயர் என்னைப் படுக்க வைத்தது. டாக்டர் வந்தார். அவர் சோதனையும், சோதனையின் விளைவான இஞ்செக்ஷன், மருந்து முதலியனவும் எனக்குப் பலன் காட்டின. ஆபீஸ் என் லீவ் லெட்டரை உள்ளடக்கிக் கொண்டது. ஸ்ரீதரன் செய்தி அறிந்து என்னைக் கண்டுபோக வந்தார். எனக்குக் கொள்ளை மகிழ்ச்சி. ஆனலும் என் கண்கள் அவரிடம் இன்னமும் பழைய இடைவெளியைக் காட்டின. நான் விம்மினேன்.

ஒரு மாதம் சென்றது. ஒரு நாள் ஸ்ரீதரனின் முகத்தில் பழைய அன்பையும் விசுவாசத்தையும் கண்டேன்.

"என்ன ஹேமா, நீயும் இப்போது கதைகள் எழுதுவதையே விட்டு விட்டாய்? நந்தனில் உன் கதைகள் நாலைந்து வாரமாகக் காணோமே? ஏன், என்ன காரணம்...?" என்று கேட்டார் அவர் மிகுந்த ஆர்வத்துடன். அவர் விழிகள் என்னையே துழாவின.

"நான் விடவில்லை; எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன். இரண்டு மூன்று கதைகள் நன்றாயில்லையென்று ஆசிரியர் திருப்பி அனுப்பிவிட்டார். அதனால் ஆர்வமே போய்விட்டது' என்றேன் நான்.

அவர் சிரித்தார். உண்மையிலேயே மகிழ்ச்சியுடன் சிரித்தார். அவர் சிரிப்பிற்குக் காரணம், பொருள் என்ன?...

"அப்படித்தான், ஹேமு! எழுத்தாளனுக்கு எப்போதுமே ஒரே மாதிரி தசை இருக்காது. எல்லாம் ஒவ்வொரு காலம். என் காலம் முடிந்து உன் காலம் ஆரம்பித்தது. இப்பொழுது உன் காலமும் முடிந்து 'ஆனந்தப் பிரியை'யின் காலம் ஆரம்பித்திருக்கிறது. வருத்தப்படாதே..." என்று தேற்றினர் ஸ்ரீதரன்.

பொருமை என்ற வியாதி அவரை விட்டு நீங்கி விட்டது என்பதைத் தெளிவுற்ற அவர் முகம் விளக்கிக் கொண்டிருந்தது. நான் புத்துயிர் பெற்றேன். அப்போதுதான் அவரை என்னுடைய உரிமையாளராகக் காணமுடிந்தது என்னால்.

"இனிமேல் நான் கதைகளே எழுதப் போவதில்லை" என்றேன் நான் உறுதி தொனிக்கும் குரலில்.

"சேச்சே! அப்படியெல்லாம் சொல்லாதே என்றார்" ஸ்ரீதரன்

சொல்வதென்னவோ அப்படிச் சொன்னாலும், அவர் மனம் நான் சொன்னதைப் பரிபூரணமாக வரவேற்றதென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. எனக்கு அவரது உள்ளம் தலைகீழ்ப்பாடம். நீங்கள் சிரிப்பீர்கள்!

"இன்றைக்கு எங்கள் வீட்டிற்கு வர முடியுமா?" என்று கேட்டேன்.

"ஓ! ஆனால் கதை கிதை ஒன்றும் படிக்க மாட்டாயே?" என்று சிரித்தார்.

"இல்லை இல்லை" என்று கூறி நானும் முறுவலித்தேன். ஆண்களுக்குக்கூட இவ்வளவு பொருமையா என்று வியந்த என் உள்ளம், ஸ்ரீ தரனின் அன்பை மீண்டும் பெற்று விட்டதில் உவகை அடைந்தது.

ஆனால், என்றைக்காவது ஒரு நாள், 'ஆனந்தப் பிரியை' என்ற புனைப்பெயரில் ஒளிந்துகொண்டிருப்பதும் நான்தான் என்பது அவருக்குத் தெரிந்து விட்டால்......என்பதை நினைக்கும் போதுமாத்திரம் எனக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது!

தெரிந்தால் தெரிந்து விட்டுப் போகட்டுமே! அதற்குள் என் ஸ்ரீதரனால் என் கழுத்தில் மூன்று முடிச்சுக்கள் ஏறி விடாதா? அப்போது எங்களது இயக்கியத் தம்பதிகள் இணை பற்றி எங்கள் இலக்கிய உலகம் எவ்வளவு புகழ்ப்புராணம் பாடுமோ...? அந்த இன்பமிகு நன்னாள் தானே எங்கள் வாழ்வின் ஓர் திருநாள்...! ★

உத்திரவாதமுள்ள

பவுன், வெள்ளி

நகைகளுக்கு

ஏற்ற இடம்

●●

ஜைன் ஜுவல்லரி கம்பெனி

1, நாகேஸ்வர ராவ் ரோட்

தியாகராயநகர் — சென்னை - 17

அழகான கூந்தலுக்கும் ஆரோக்கியத்துக்கும் அருமையானது

பிரசிடெண்ட்

வெஜிடபிள்

ஹேர் ஆயில்

அனைவராலும்
உபயோகிக்கப்படுகிறது

ராதோட் டிரேடிங் கம்பெனி,

சௌகார்பேட்டை, சென்னை-1.

கருப்ப இசிவு

'தாய்மை' பெறும் பெண்களுக்குப் பயன்படும் வகையில் விளக்கங்கள் சிலவற்றை ஆராய்கின்றது இக்கட்டுரை.

எழுதியவர்: 'லக்ஷ்மி'

கருப்ப காலத்திலே சில பெண்களிடம் அபூர்வமாகக் காணப்படும் அபாயகரமான ஒரு கோளாறை 'கருப்ப இசிவு' என்று கூறுவார்கள். இதை வைத்தியர்கள் ஆங்கிலத்தில் 'எக்ளாம்சியா' என அழைக்கிறார்கள்.

இந்நோய் சாதாரணமாக முதல் பிரசவத்தின்போது கருப்பிணிகளிடம் காணப்படும். ஆனால் சில சமயங்களில் இரண்டாவது, அல்லது மூன்ருவது பிரசவத்தின்போதும் கருப்பிணியிடம் ஏற்படலாம். கருப்பம் ஏற்பட்ட முதல் ஆறு மாதங்களுக்கு முன்பு இந்நோய் வருவதில்லை. ஏழாவது மாதத்திற்குப் பின்னரேதான் கருப்பிணியிடம் வருகின்றது. அநேகமாக, கருப்பமாக இருக்கையிலேதான் வளப்பு ஏற்படத் துவங்குகிறது என்ருலும், சில சமயங்களில், பிரசவ வேதனையின்போதும் இது ஏற்படலாம். பிரசவித்த பின்பும் ஏற்படலாம்.

முதன்முதலாகக் கருப்பிணியிடம் இசிவு நோய் திடீரென்று எப்பொழுது வேண்டுமானுலும் ஏற்படலாம் என்ருலும், இந்நோய் ஏற்படப்போவதற்கான அறிகுறிகள் சில, கருப்பிணியிடம், சில தினங்களுக்கு முன்னரேயே காணத் துவங்கிவிடுகின்றன. இசிவு வருவதற்கு இரண்டு அல்லது நான்கு வாரங்களுக்கு முன்பே, இரத்த அழுத்தம் அதிகரித்து விடுகின்றது.

கருப்பிணியின் மூத்திரத்தில் ஆல்புயுமின் எனும் புரதம் வெளியேறத் துவங்கிவிடுகின்றது. இத்துடன், கருப்பிணியின் கை, கால், முகம் முதலிய இடங்களில் லேசானதொரு வீக்கமும் ஏற்படுகின்றது.

ஆருவது மாத முடிவிலேயே வைத்தியரிடம் பரிசோதனை செய்துகொண்டால், அவர், கருப்பிணியிடம் காணப்படும் இந்த அறிகுறிகளைச் சட்டென உணர்ந்துகொண்டு, வரப்போகும் அபாயகரமான கோளாறைத் தடுக்க தக்க சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். ஆனால் நடைமுறையில் அநேக பெண்கள், தாங்கள் கருப்பமாக இருக்கையில் கை, கால்களில் வீக்கம் காணப்பட்டால், சிறிதும் பொருட்படுத்துவதேயில்லை. இவ்வாறு அசட்டை செய்வது மிகவும் தவறு. கருப்ப காலத்திலே ஏற்படும் பல கோளாறுகளில், இசிவு என்பது உயிருக்கே மிகவும் ஆபத்தை விளைவிக்கும் அபாயகரமான நோய். ஆதலால், இதைப்பற்றி கருப்பிணி ஒரு பொழுதும் அசட்டை செய்தல் கூடாது.

இசிவு வருவதற்கு முன்பு கருப்பிணிக்கு, உடலில் லேசான வீக்கத்துடன் வேறு சில அறிகுறிகளும் தோன்ற ஆரம்பிக்கின்றன. பொறுக்க முடியாத தலைவலி ஏற்படுகின்றது. பார்வையில் குறைவு ஏற்படுகிறது. மேல் வயிற்றில் நல்ல நோவும், நெஞ்சில் படபடப்பும் ஏற்படலாம். இரவு முழுவதும் தூக்கமின்றிப் படுக்கையில் கருப்பிணி புரண்ட வண்ணம் கஷ்டப்படலாம்.

மேற்கூறிய இந்த அறிகுறிகளையும் கவனிக்காது அசட்டை செய்துவிட்டால், நோய் நன்ருக முத்திக் கொண்டுதனது உக்கிரத்தைக் காட்ட ஆரம்பித்துவிடும். தலைவலியையும், கண்கள் இருட்டுவதையும் லட்சியம் செய்யாது வேலை செய்துகொண்டிருக்கும் இளம் கருப்பிணி, திடீரென்று மயக்கம்போட்டுக் கீழே விழுந்து விடுவாள். விழுந்த அதிர்ச்சியில் சில சமயங்களில் உடம்பிலே காயங்கள் கூட ஏற்பட்டுவிடலாம். கண்மூடி இமைப்பதற்குள் உடனே வலிப்பு ஆரம்பித்துவிடும்.

முதலில் கைகளும், கால்களும் உதறிக்கொள்ளும். பிறகு உடலில் உள்ள தசைகள் யாவும் முறுக்கிக் கொள்ளும். கண்கள் திறந்த நிலையில் இருக்கும். வாய் ஒரு பக்கம் கோணி இழுத்துக்கொண்டுவிடும். உதறல் சில நிமிஷங்களில் அடங்கிவிடும். ஆனல் கருப்பிணி, மயக்கத்தினின்று சட்டென நினைவு வராது சிறிது நேரம் கட்டைபோல் அசைவற்றுக் கிடப்பாள். சிறிது நேரம் சென்றதும், நினைவு வந்து கருப்பிணி, உறவினர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில், மறுபடியும் அடுத்த வலிப்பு, மீண்டும் திடீரென்று ஏற்படலாம். சில பெண்களுக்கு, வலிப்பு, ஒன்றின் மேல் ஒன்ருக விடாது ஏற்பட்டு, மயக்கத்தினின்று நினைவு ஏற்படாது மரணம் சம்பவிப்பதும் உண்டு. வலிப்பு காணத் துவக்கிய உடனே பிரசவ வேதனையும் அநேகமாக ஏற்பட்டு விடுகின்றது. வலிப்புக் கண்ட பின்பு வெளிப்படும் குழந்தை பெரும்பாலும் கருப்பையிலே இறந்துதான் பிறக்கிறது. பிரவசம் ஏற்பட்டவுடன், வலிப்பு, படிப்படியாக குறைந்து வருவதைக் காணலாம்.

'லக்ஷ்மி' என்ற புனைப் பெயரில் இலக்கிய உலகில் பிரசித்தமாகியிருக்கும் டாக்டர் திரிபுரசுந்தரி, எம்.பி.பி.எஸ். அவர்கள் டாக்டராகப் பணிபுரிவதுடன், இலக்கியப்பணியும் புரிந்து வருகிருர். 'தாய்மை' என்ற கட்டுரை நூல் இவரது நுண்ணிய ஆராய்ச்சிக்கு எடுத்துக்காட்டு. சிறுகதை, நாவல்கள் பல இவரது படைப்பில் உற்பத்தி பெற்றுள்ளன. 'பெண் மனம்' என்ற நாவல் அண்மையில் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசைப் பெற்றது,

சிகிச்சை:—வலிப்பு நோய் ஏற்படு முன், அதைத் தக்க சிகிச்சைகளால் வராது தடுப்பதுதான நல்ல சிகிச்சையாகும். இரத்த அழுத்தம் ஒட்டியிருந்தாலும், மூத்திரத்தில் புரதம் வெளிப்பட்டாலும், கருப்பிணி, வீட்டில்

அதிகம் நடமாடாது, படுக்கையிலே ஓய்வாக இருக்க வேண்டும். தினசரி, ஒரு அவுன்ஸ், பேதி உப்பை, ஒரு அவுன்ஸ் வெந்நீரிலே கலக்கி, இரத்த அழுத்தம் குறைந்து சரியான நிலைக்கு வரும்வரை பேதிக்குச் சாப்பிட வேண்டும். பார்லி தண்ணீர், பழரசம், குளுகோஸ் சர்க்கரை கலந்த நீர் இவைகளையே ஆகாரமாக உட்கொள்ள வேண்டும். இதைத்தவிர, கால்ஷியம், குளுகோஸ், வைடமின்—பி, முதலியவைகளை ஊசிமூலம் உடலில் செலுத்திக்கொண்டு தைராய்டு மாத்திரைகளை உட்கொண்டு இரத்த அழுத்தத்தை மிதப்படுத்த வேண்டி வரும்.

வளப்பு ஏற்பட்ட பின்பு, கருப்பிணியை, தாமதம் செய்யாது உடனே, அருகில் உள்ள பிரசவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுவிடவேண்டும். கிராமங்களில், ஆஸ்பத்திரி அருகில் இல்லாவிடில், தாமதம் செய்யாது உடனே வைத்தியரை அழைத்து வந்து தக்க சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டும். வைத்தியர் வரும் வரை, கருப்பிணியை, வெளிச்சம் அதிகம் இல்லாத அறையில் மிருதுவான படுக்கையில் கிடத்திவிட்டு, அருகில் யாரும் கூச்சல் போடாது கவனித்துக் கொள்ளவேண்டும். அதிக சத்தம் வலிப்பு நோயைத் தூண்டிவிடக்கூடாது. இசிவு ஏற்படும் போது கருப்பிணி தவறிப்போய் பற்களால் தன் நாக்கைக் கடித்துப் காயப்படுத்திக் கொண்டு விடுவாள். வைத்தியர் வருவதற்கு முன்பு அடுத்தடுத்து இசிவு ஏற்பட்டால், வீட்டிலுள்ள, கரண்டி ஒன்றை

> சோம்பலும் சோர்வும் கொண்டு ஒரு நூற்றுண்டு உயிர் வாழ்வதை விட, ஒரு நாளேனும் பெரு முயற்சியோடு வாழ்ந்திருத்தல் மேலானது.
>
> —புத்தர்

எடுத்து அதன் மீது ஒரு கைக்குட்டையைச் சுற்றி, பற்களின் இடுக்கிலே நுழைத்து, முட்டாக வைத்துப் பிடித்துக்கொண்டால், நாக்கின் மீது காயம் ஏற்படாது காப்பாற்றலாம். கை கால்களை உதறும்பொழுது, அருகில் அமர்ந்து அவற்றை லேசாக அழுத்திப் பிடித்துக் கொள்ளவேண்டும்.

மயக்கத்தினின்று கருப்பிணி விழித்துக்கொண்டால், வைத்தியர் உத்திரவின்றி ஆகாரம் ஏதும் கொடுத்தல் கூடாது. வளப்பின்போது வாயில் நுரை பெருகி வழியும். அது திரும்பவும் தொண்டை வழியே, சுவாசக் குழலுக்குள் சென்று, மூச்சு முட்டலை ஏற்படுத்திக் கருப்பிணிக்கு இன்னும் தொந்தரவு கொடுக்கலாம். ஆதலால், வலிப்பின்போது முகத்தை ஒரு புறமாகச் சாய்த்துப் பிடித்துக் கொள்வது நல்லது.

இசிவானபோது தாமதம் செய்யாது வைத்தியரை அழைத்துச் சிகிச்சை செய்தால் அநேகமாக தாயார் பிழைத்துக் கொண்டு விடுவாள். தாமதம் செய்து, பிறகு அழைத்து வந்து எவ்வளவு வைத்தியம் செய்தாலும், நோய் முற்றிவிட்டால் பயன் இல்லாதுபோகும். ஆகவே கருப்ப இசிவை ஒரு வரும் அசட்டை செய்தல் கூடாது. ★



குறைந்த விலையில்
நீடித்த உழைப்புக்கு
"ஸ்பைடர்"
பனியன்கள் மிகவும்
சிறந்தவை.

பனியன்கள், கலர் ஷர்ட்டு, T. ஷர்ட்டு முதலிய எல்லா ரகங்களும் எல்லா சைஸ்களிலும் தயார்செய்கிறோம்.

தமிழ்நாடு, ஆந்திர தேசங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

விவரங்கட்கு :-

Spider Knitting Company & Co.

TIRUPUR.

டெலிபோன் நெ. 192.

ரோஜா மார்க் நெய்

புத்தம் புதிய வெண்ணெயால் தயார்செய்யப்பட்டது. உத்திரவாதமானது. எல்லா ஊர் கோவாப்பரேடிவ் ஸ்டோர்களிலும், நம்பகமுள்ள வியாபாரிகளிடமும் 12 வீசை, 3 வீசை புதிய டின்களில் கிடைக்கும்.

லிங்கம் அண்டு கோ

கோயமுத்தூர்



காலைக் கதிரவனின்
கதிர்முத்தத்தில்,
மலர்க் கன்னியின்
முதற்காதல்!

மேல் : குழந்தை உலகிலே 'மணல்வீடு' விளையாட்டு வாழ்வின் அச்சாணி மண்டபம் போலே!

கீழ் : தெய்வக் குழந்தைகள்—ஆனால் இருக்கவோ இடமில்லை; நிற்கவோ நிழலில்லை!

புகைப்படங்கள் : சந்தாமியான்

பாட்டாளி
உழைப்பிற்குக்
கட்டாயம் பலன்
கிட்டத்தான்
போகிறது!

அடிக்கும் காற்றிலே துடிக்
கும் வலையைக்கண்டு ஏனோ
இத்தனை வெடிக்கும் சிரிப்பு
என்கிறீர்களா?



சிந்தனையின் விழிப்பும்,
சிந்தனையின் தூக்கமும்!

எல்லைத் தீ

"பீஷ்மன்"

"அப்பா இப்ப எப்படி இருக்குதோ...?"—பறவையின் சிறகடிப்பைப்போல அந்த அமைதியில் அவன் நெஞ்சில் இந்த வார்த்தைகள் விநாடிக்கொருமுறை படபடத்தன. அதன் உறைப்பில் ஏதோ பயங்கரம் அவன் முன் தோன்றித் தோன்றி வதைத்தது.

களத்து மேட்டின் வாசலிலுள்ள மூங்கில் பட்டைக் கதவு திறக்கப்படும் 'கிறீச்'சொலியும் ஐயரின் கனைப்புச் சத்தமும் கேட்டன.

நின்று ஒலி வந்த திசையில் பார்வையைச் செலுத்தினான் கருப்பன்.

சுப்பராம அய்யரும் இன்னொருவரும் வந்துகொண்டிருந்தார்கள். அய்யர் வேறு 'ஹரிகேன் லைட்' கொண்டு வந்திருந்தார்.

கூட வந்தவர் உள்ளே வந்ததும், பட்டைக் கதவை நன்றாக அழுத்திச் சார்த்திவிட்டு "டே, கருப்பா...!" என்று உரக்கக் குரல் கொடுத்தார் அய்யர்.

"ஓ!" என்று எதிர்க் குரல் கொடுத்தான் கருப்பன்.

"இருக்கயா...? எங்கே, சொல்லாமப் போயிட்டயோன்னு பார்த்தேன்!" என்று முனகினர் அய்யர்.

அவர் கையிலிருந்த 'லைட்'டையும் வாங்கிப் பிடித்துக்கொண்டான் கருப்பன்.

"நீ ஒருத்தன்தான் இருக்கயா? மத்தவங்க எல்லாரும் போயிட்டாங்களா...?—ஆமாம் முனியனுக்கென்ன அவ்வளவு அவசரம்? பக்கத்திலேதானே வீடு! இத்தனைக்கும் நான் அவன்கிட்டே சொல்லிட்டு வேறே போயிருந்தேனே!"

கருப்பன் இந்த உலகத்திலேயே இல்லை. அய்யர் சொன்னவை அவன் காதில் விழுந்தன. மனசில் தான் பதியவில்லை.

"ஊ...ம்!" என்று இழுத்தான் அவன், அர்த்தமில்லாமலே!

"நீ ஒருத்தன் என்னடா செய்ய முடியும்? கோணி பிடிக்கவாவது ஆள் வேண்டாம்? விளக்குகளைக் கீழே வச்சுட்டுப் போய் முதல் காரியமா முனியனைக் கூட்டிக்கிட்டு வா!" என்று இரைந்தார் அவர்.

கருப்பன் பதில் பேசவில்லை. விளக்குகளைக் கீழே வைத்துவிட்டு ஓடினன். அவன் நினைவெல்லாம் தன் ஓட்டைக் குடிசையில் போய்த் தான் ஒண்டிக் கிடந்தது. எப்படியாவது அன்று இரவு படுக்கக் குடிசைக்குப் போய்விடத்தான் அவன் துடித்தான்.

"அப்பா இப்ப எப்படி இருக்குதோ...?" என்று அவன் மனம் படபடத்துக்கொள்ளும்பொழுதெல்லாம் அவன் உடம்பை என்னவோ செய்தது. கை கால்களெல்லாம் திடீரெனச் சில்லிட்டுப்போவது போலிருந்தது. 'சே! இந்த ஒரு வாரந்தான நமக்கு இவ்வளவு வேலை வந்து சேரவேண்டும்?' என்று அவன் மனது அலுத்துக்கொண்டது. 'நல்லவேளை! முனியன் வீடு பக்கத்தில் இருக்கிறதே' என்று நினைத்துக் கொண்டு ஓடினன் அவன்.

* * *

கருப்பனின் பாட்டனுக்குப் பாட்டன் காலத்தில் அந்த ஊர்ச் சேரியிலேயே செல்வாக்குள்ள குடும்பம் அவர்கள் குடும்பந்தான். குடியிருக்க வீடும் பொன்னன ஒரு ஏக்கர் நிலமும் அவர்களுக்குச் சொந்தமாயிருந்தன. அப்பொழுதும் சுப்பராமய்யர் குடும்பத்து வயல் வேலைகளையெல்லாம் அவர்கள்தான் கவனித்து வந்தனர். ஆனல் அதை நம்பித்தான் வாழவேண்டும் என்ற நிலையில்லை. கருப்பனின் பாட்டன் குழந்தையாயிருந்தபோதுதான் அவர்கள் சொந்தமாக இந்த மண்ணையெல்லாம் இழக்க நேர்ந்தது. அப்போதிருந்த ஏதோ அவசரமுடையில், அவன் பாட்டனுக்கு— அப்பன் சுப்பராம அய்யரின் தாத்தாவுக்குத் தனது நிலத்தையெல்லாம் அடமானமாக எழுதிவைத்து ஏகப்பட்ட பணம் கடன் வாங்கிவிட்டான். திரும்பிக் கொடுத்து நிலத்தை மீட்கும் வசதி அந்தச்சந்ததிக்கு அப்புறம் ஏற்படவேயில்லை. இதன் விளைவாய் இப்பொழுது அவர்கள் குடியிருக்கும் குடிசைகூட அய்யர் குடும்பம் மனமுவந்தளித்த தானமாகத்தான் கருதப்பட்டது. கருப்பனின் அப்பன் காலத்தில்—சுப்பராமய்யர் வீட்டுப் பண்ணை அடிமைகளாக அவர்கள் ஆகிவிட்டார்கள். அல்லது ஆக்கப்பட்டார்கள். எப்படியோ, அவர்களுக்குச் சொந்தம், பந்தம், எஜமான் எல்லாம் அய்யரின் கட்டளைகள் தான்.

பரம்பரைக் குணமோ என்னவோ, கருப்பனிடமும் அவன் தகப்பனிடமும் 'எஜமான விசுவாசம்' கரை புரண்டுதான் நின்றது. இரவு, பகல் ஓய்வு ஒழிச்சலில்லாமல் அய்யர் இடும் ஆக்கினைகளுக்கு அடிவணங்கி நிற்றல் தங்கள் கடன் என்ற அளவுக்கு அவர்கள் பண்பு உயர்ந்திருந்தது.

தன்னல் இனி அதிக தூரம் நடக்கக்கூட முடியாது என்ற நிலைக்கு உடம்பு தளர்ந்து போகும் வரை உழைத்துவிட்டுத்தான் ஓய்வு எடுத்துக்கொண்டான் கருப்பனின் தகப்பன். அதுவும், கருப்பன் தானே எல்லா வேலைகளையும் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்ட பின்தான்! ஆனல் அப்படி ஓய்வு

தமிழ்நாட்டின் பிரபல பத்திரிகை வாசகர்கட்கு நண்பர் பீஷ்மன் பெயர் புதிதல்ல. இவருடைய தமிழ் நடை கவிதை நயம் வாய்ந்தது. இவரே ஒரு கவிஞர்தான். நா. சீ. வரதராசன் என்ற இவரது இயற்பெயரில் பல சிறந்த கவிதைகளை இயற்றியுள்ளார். இவருடைய படைப்புக்களில் குறிப்பிடத்தக்கது: 'கன்னி' 'நாதக்கனல்' 'காக்காய் முள்' 'பழுத்த இலை'! அகில உலகச் சிறுகதைப் போட்டியில் 'கல்கி' தேர்ந்தெடுத்தனுப்பிய நான்கு தமிழ்க் கதைகளுள் இவர் எழுதிய 'மனக்குரங்கு' என்ற கதையும் ஒன்ருகும்.

எடுத்துக்கொண்டவனை ஒய்வை நன்ருக அனுபவிக்க விடவில்லை காலம். ஓய்வில் அவதிப்படத்தான் வைத்துவிட்டது.

அய்யர் வயல்களில் அறுவடை ஆரம்பமாகியிருந்த சமயம் அது. கருப்பனுக்கு ஒய்வு ஒழிச்சலே கிடையாது. இரவு நேரங்களில்கூட அவன் வயல் கரையில்தான் படுத்துக்கொள்ளவேண்டியிருந்தது. இதன் காரணமாய் மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல அவன் குடிசைப்பக்கம் போகவேயில்லை. வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொள்ளத் தங்கை செல்வியிருக்கிருள் என்ற நினைப்பில் அவன் அதைப்பற்றி அதிகம் கவலைப்படவுமில்லை.

நான்காம் நாள் காலையில் அய்யரிடம் சொல்லிவிட்டு அவன் குடிசைப்பக்கம் சென்றபோது இதற்கெல்லாம் வட்டி சேர்த்துக் கவலைப்படும்படி ஆகிவிட்டது.

ஈரித்துக்கிடந்த தரையில் கோரைப் பாயில் அவன் தகப்பன் படுத்துக்கிடந்தான். அவன் குதிங்காலில் பெரிதாகத் துணியால் கட்டுப்போட்டிருந்தது. கவலையே உருவாக அவன் தங்கை செல்வி தகப்பனின் கால்மாட்டில் உட்கார்ந்திருந்தாள். சேரி வைத்தியர் முத்துசாமிப் பண்டிதரும், பக்கத்து வீட்டு நம்பியாண்டானும் சுவரோரமாய் என்னவோ பேசிக்கொண்டிருந்தனர்.

அப்பாவுக்கு என்னவந்துவிட்டது? கருப்பன் கதிகலங்கிப் போனுன்.

பேய் பிடித்தவன்போல திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் மௌனமாய்த் தந்தையின் அருகில் போய் உட்கார்ந்தான். அப்பனின் உடம்பில் சூடு இல்லை. கண்ணை மெதுவாகத் திறந்து மகனைப் பார்த்தான்.

"அறுப்பு எல்லாம் ஆயிடுச்சா...?" என்றுதான் அந்தக் கிழவன் மகனைப் பார்த்துக் கேட்டான்.

"உம்..." என்று தலையசைத்துவிட்டுச் சுற்றிலும் பார்த்தான் கருப்பன். நம்பியாண்டானும் முத்துசாமிப் பண்டிதரும் நடந்ததையெல்லாம் சொன்னுர்கள். விஷயத்தை எப்படி ஆரம்பித்துச் சொல்வது என்று விளங்காதவள் போல செல்வி தகப்பனின் கால் கட்டைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

முந்திய தினம் இரவு குடிசையில் ஒரே புழுக்கமாக இருந்திருக்கிறது. கிழவனுக்கு வயதாகிவிட்டதாலும், கருப்பன் அங்கே என்ன செய்கிருனே என்ற கவலையாலும் தூக்கமே வரவில்லை. செல்வி ஒரு ஓரமாகச் சுகமாய்த் தூங்கிக்கொண்டிருந்தாள்.

கிழவன் மெதுவாகக் குடிசைக் கதவைத் திறந்து, காற்றுக்காக வெளியே வந்தான். அமாவாசை இருட்டு. சேரியின் ஒரு மூலையில் முனிசிபல் லாந்தர் மூச்சுவிடத் துடித்துக்கொண்டிருந்தது. வெளியேகூடக் காற்று வீசவில்லை.

என்ன நினைத்துக்கொண்டோ கிழவன் தெருவில் இறங்கி எதிரே நின்ற ஆலமரத்தடிக்கு நடந்திருக்கிருன்.

காலில் ஏதோ வழவழவென்று ஒட்டி, 'சுரீர்' என்றது.

"ஐயய்யோ! பாம்பில்லா...!" என்று அலறிக்கொண்டே கீழே விழுந்துவிட்டான் கிழவன்.

அவன் அலறலைக்கேட்டுச் செல்வி கண்ணை விழித்துக்கொண்டுவிட்டாள்.

சிம்னியில்லாத சுவரொட்டி விளக்கை ஏற்றிக்கொண்டு நெஞ்சு படபடக்க வீதிக்கு வந்தாள். தெருவில் தகப்பன் விழுந்து கிடப்பதைக் கண்டதும் கையில் இருந்த விளக்கையும் நழுவவிட்டு விட்டு "நம்பி அண்ணே!" என்று அலறிவிட்டாள் அவள்.

செல்வியின் அலறலிலும், கிழவனின் கூச்சலிலும் அண்டை அயலில் உள்ளவர்கள் விழித்துக் கொண்டு விட்டனர். அடுத்த வீட்டு நம்பியாண்டான் கையில் ஹரிகேன் லைட்டும் தடியுமாய் ஓடிவந்திருக்கிறான். அருகே சென்று பார்த்தபோது, "கிழவனைப் பாம்பு கடிக்கவில்லை. கண்ணாடி காலை அறுத்து விட்டிருக்கிறது" என்று தெரிந்தது.

நாலைந்து பேராய்ச் சேர்ந்து எப்படியோ கிழவனை குடிசையுள் கொண்டு சேர்த்து விட்டனர். சேரி வைத்தியர் முத்துசாமிப் பண்டிதர் தனக்குத் தெரிந்த முறையில் கால் ரத்தத்தைக் கழுவி பச்சிலைச் சாறு தடவித் துணியினால் 'பாண்டேஜ்' போட்டிருக்கிறார். இந்தத் தள்ளாத வயதில் கிழவனால் இந்த ரணத்தைத் தாங்க முடியவில்லை.

விஷயத்தை முழுவதும் அறிந்தபோது

கருப்பனுக்கு மனசை வேதனை பிடுங்கித் தின்றது. இந்தத் தருணத்தில் தகப்பனின் அருகில் இருந்து கவனித்துக்கொள்ள முடியாதபடி அவனுக்கு ஏகப்பட்ட வேலைகள் சுப்பராமய்யரின் வயல் கரையில் காத்துக்கிடந்தன.

"நீங்கதான் எப்படியும் அப்பாவைக் கவனிச்சுப் பார்த்துக்கிடனும். எனக்கு இங்க வரப் பொளுது கிடைக்குதோ, என்னமோ...?" என்று கவலையுடன் பண்டிதரிடம் கேட்டுக்கொண்டான் அவன்.

"அதுக்கென்ன தம்பி! ஒரு வாரத்திலே சரியாப்போயிடுது! நீ போயி ஒன் வேலையைப் பாரு கவலைப்படாதே!" என்று அபயம் அளித்துவிட்டார் மருத்துவர்.

ஆனால் அந்த அபயத்தை அவரால் காப்பாற்றத்தான் முடியவில்லை.

நாட்கள் ஓடின. கருப்பன் வயல் கரையே கதியாய்க் கிடக்கும்படியான காலங்கள் — அறுவடை; புணையலடிப்பு என்று தினம் ஏதாகிலும் வேலைகள். வீடு வந்து தகப்பனைப் பார்த்து அரைமணி நேரம் சாவகாசமாகப் பேசக்கூட அவனுக்குப் பொழுது கிடையாது.

நாட்களின் வேகத்தில் அவன் தகப்பனின் கால் ரணம் புரையோடிப் போய்விட்டது. உள்ளே சிக்கியிருந்த சிறு கண்ணாடித் துண்டைக் கவனியாமல் மேலே மேலே என்ன என்னவோ வைத்தியங்கள் செய்து வந்த மருத்துவர், கிழவனின் கால் ரணம் புரையோடிப் போய் அவனுக்கு ஜுரம் கண்டதும் தான் தன் தவற்றை உணர்ந்து விழித்துக்கொண்டார். ஆனால் அவர் கண்விழிக்கும் தருணத்தில் கிழவனின் நிலை படுமோசமாகியிருந்தது. என்ன செய்வது என்று அவருக்குப் புரியவில்லை. கருப்பனுக்கு, இருக்கும் நிலையைத் தெளிவாய் அன்று காலை சொல்லியனுப்புவதைத் தவிர அவரால் வேறொன்றும் செய்யமுடியவில்லை.

* * *

பண்டிதர் அனுப்பிய ஆள் வந்து தன் தகப்பனின் அபாயகரமான நிலைமையை அறிவித்ததிலிருந்து கருப்பனுக்கு நிலைகொள்ளவில்லை. இருட்டுவதற்குள் எப்படியும் வீட்டுக்குப் போய்விடவேண்டும் என்றுதான் அவன் எண்ணியிருந்தான்.

அய்யரின் நெல்லுக்கு வந்திருந்த கிராக்கியினால் அவன் அன்று இருட்டுப் பரவிய பின்பும் தங்கும்படி நேர்ந்துவிட்டது. சாயங்காலம் ஐந்து மணிக்குத்தான் அய்யர் அவனிடம் விஷயத்தைத் தெரிவித்தார்.

"கருப்பா, இந்தத்தடவை எந்த நேரத்திலே அறுப்புத் தொடங்கித்தோ, அது நல்ல வேளையாத்தான் இருக்கணும். சரியான புள்ளி ஒண்ணு வந்திருக்கு. களத்திலேயே நெல்லை அளந்து இன்னிக்கு ராத்திரியே வண்டியிலேற்றி அனுப்பிச்சுடணும். ஊரிலே இன்னிக்கு வித்த விலை நாளைக்கு இல்லே பாரு. ரொக்கமாப் பணத்தையும் மனுஷன் கொடுத்துட்டான். ஆசாமி இன்னிக்கே ஊருக்குப் போறானும். அதினாலே நீயும் முனியனும் மட்டும் இருந்து நெல்லளந்திட்டு அப்புறம் வேணா வீட்டுக்குப் போங்கோ...!" என்று கூறிவிட்டுச் சென்றார் அய்யர்.

அவர் வார்த்தையைத் தட்டிப் பேசுவதற்கு அவனுக்கு நாக்கு எழவில்லை. பேசாமல் தலையை அசைத்துவிட்டான்.

ஆனால் தகப்பனைப்பற்றி நினைப்பு மட்டும் அடிக்கடி எழுந்து அவன் உள்ளத்தை என்னவோ செய்து கொண்டிருந்தது.

முனியனின் வீடு வரை அவன் போகும்படி நேரவில்லை. ஏனென்னில், அவனுக்கு எதிரேயே அவன் வந்துவிட்டான். பரபரவென அவனையும் அழைத்து களத்துக்கு ஓடிவந்தான்.

சுப்பராமய்யரும்—அந்த மனிதரும் அவர்கள் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

"உம்...அந்தக் கோடியிலே இருக்கிற அம்பாரம்தானேடா ஆனைக்கொம்பன்? அதையேதான் பிரிச்சு அளந்து போடு!" என்று அவர்கள் வந்ததும் வராததுமாய்க் கட்டளையிட்டார் சுப்பராமய்யர்.

நாகமென நினைந்தென்னை—இங்கு
நடுங்க வைக்கும் பாம்பே!
மோகமுள்ள பாம்பே—பெரும்
வேகமுள்ள பாம்பே—கொடுந்
தாகமுள்ள ஒருவன்—உன்னைத்
தனி மாலையாக அணிவான்!

—செந்தாமரை

அவரைவிடக் கருப்பன் வேலையில் அவசரம் காட்டினான். அவன் நெஞ்சுத் துடிப்பு அவனுக்குத்தானே தெரியும்! அம்பாரத்தின் மேலே போர்த்தியிருந்த கோணிப் பைகளையும் வைக்கோலையும் வாரிச் சுருட்டித் தூர எறிந்தான்.

கோணியைப் பிரித்துப் பிடித்துக் கொண்டு முனியன் தயாராய் நின்றான். இரண்டு ஹரிகேன் லைட்டுகளையும் அருகே கொண்டு வைத்துவிட்டு அய்யரும், நெல் வாங்க வந்த மனிதரும் அளவைக் கவனிக்கத் தொடங்கினர்.

"திருவாங்க...ம்...லா...பம்... நாலு..." என்று ராகத்துடன் மடமடவென நெல்லை அளந்து கோணியில் கொட்டிக்கொண்டிருந்தான் கருப்பன். இரவின் இருள் மோனத்தில் அவனது குரல் மட்டும் கணீர் என ஒலித்தது. அந்த அமைதிக்கு அது ஏதோ சோக சுருதியாகத்தான் இருந்தது.

இயந்திரம்போலக் கருப்பன் அளந்து கொட்டிக்கொண்டிருந்தான். முனியன் கோணி நிரம்பியதும், அடுத்த கோணியைப் பிரித்து எதிரே வைத்துக்கொண்டு நின்றான்.

அளவின் துல்லியத்தை ஆராயும் நோக்கில் மௌனமாய் அளவு மரக்காலையே சுப்பராமய்யரும் அந்த மனிதரும் கவனித்து நிற்கும் அந்த வேளையில்...

இருள் மோனத்தைக் கலைத்துக் கொண்டு யாரோ ஓடிவரும் தடதட சத்தம் கேட்டது.

நான்கு பேரும் ஒருங்கே திரும்பிப் பார்த்தனர்.

கண்ணும் கண்ணீருமாய், மேல் மூச்சு வாங்க அவர்கள் எதிரே கருப்பனின் தங்கை செல்வி நின்றாள்.

"அண்ணாச்சி, அப்பா போயிடுச்சு அண்ணாச்சி...!" என்று அழுது கொண்டே அலறினாள் அவள்.

கருப்பன் கையிலிருந்த பாதி நிரம்பியிருந்த அளவு மரக்கால் நழுவி விழுந்து தரையில் உருண்டது. இதயத்தில் சுருண்டு வந்த வேதனை கண்களைப் பொத்துக்கொண்டு களகளவென நீராய் வடிந்தது.

தந்தை சாகும் தருணத்தில்கூட அவரருகில் தான் இல்லாது போனதை நினைக்க நினைக்க, அவன் துக்கம் மடை உடைந்து பொங்கியது.

"நான் போறேன் சாமீ...!" என்று குழறினான் அவன்.

புதிதாக நெல் வாங்க வந்திருந்த மனிதர் சுப்பராமய்யர் காதில் ஏதோ கிசுகிசுத்தார்.

"அதுக்கென்ன பண்றதுடா? கிழவன் காரியம் ஆயிடுத்து. நீ இன்னம் பாக்கி இருக்கிறதையும் அளந்து போட்டுட்டுப் போயிடேன். இப்போ நீ அவசரமா ஓடித்தான் என்ன பிரயோசனம்?" என்று குரல் கனியப் பேசினார் அய்யர்.

கருப்பனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. கையைப் பிசைந்து கொண்டே நின்றான்.

"உம். வீணா நேரம் ஆகிறது பார். சீக்கிரமா மடமடென அளந்து முடிச்சுட்டுப் போயிடு! எந்த சமயத்திலே என்ன நடக்கிறதுன்னு நமக்கென்ன தெரியறது? உம். உம். காரியத்தைப் பாரு சீக்கிரம்." என்று முடுக்கினார் அய்யர்.

"இல்லே சாமீ...! நான் போறேன் சாமீ...! என்னாலே இனிமே ஒண்ணுமே...'!—அவன் இன்னும் குழறத்தான் செய்தான்.

"நான் சொல்லறதைக் கேளு, கருப்பா! அவாளுக்கு இப்போ ராத்திரியே போகணுமாம். பாதி அளவை ஆயிடுத்து. இன்னும் அரைமணி வேலை. இனிமே நீ போய் அப்பாகிட்டே பேச முடியப் போறதா...? எப்போ போனா

லென்ன...? அவன் காலம் ஆயிடுத்து!'' என்று இன்னும் வேதாந்தம் பேசினர் அவர்.

கிறுகிறென ஏதோ ஒரு நெருப்புக் கம்பி கருப்பன் நெஞ்சில் கவிந்திருந்த பொறுமையை, குழைவையெல்லாம் எரித்துக்கொண்டு ஓடியது. இத்தனை நாளும் இல்லாத புதிய படபடப்பு அவன் நாக்கில் துடித்தது.

"உங்க அப்பா செத்துப்போயிருக்கிறப்போ நீங்க நெல் அளந்துக்கிட்டு நிப்பீங்களா? ஏளெங்கன்னு அவங்களுக்கு மனசு, மரியாதை ஒண்ணும் இல்லியா...?'' என்று இரைந்தான் கருப்பன்.

தன் மதிப்புக்குரிய மற்ருெருவர் முன்னிலையில் தன் வீட்டுப் பண்ணையான் தன்னை இவ்வாறு இகழ்ந்து பேசுவதைச் சுப்பராமய்யரால் சகிக்க முடியவில்லை.

நிலைமை என்ன என்பதைக்கூட அவர் மறந்துபோனர். கண்கள் கனல் கக்கக் கையிலிருந்த பிரம்பைச் சுற்றிக்கொண்டே, "டேய், நாக்கை அடக்கிப் பேசுடா! என்னமோ ரொம்ப மிஞ்சிப்போயிட்டயே'' என்று அலறினர் அவர்.

ஐயர் சுழற்றிய பிரம்பு தன்மீது விழாது தடுக்கக் கையை வீசினன் கருப்பன். பிரம்பு அவன் கையில் அடிபட்டு எதிர்த்து அய்யரின் முகத்தில் நன்ருய் அறைந்தது. அவர் கன்னத்தின் ஓரத்தில் ரத்தக் கோறையே ஏற்பட்டுவிட்டது.

கருப்பன் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனல், அது நடந்தது.

* * *

அய்யர் போட்ட கூச்சலில் அருகே இருந்த தெருவே விழித்துக்கொண்டு ஓடிவந்துவிட்டது.

சற்றும் எதிர்பாராத நிலையில் ஏற்பட்டுவிட்ட இந்த விபரீதத்தைக் கண்டு கருப்பன் கலங்கிப்போய் உன்மததனய் நின்ருன். செல்லி அலறித் துடித்தாள்.

அய்யரின் பக்கத்தில் நின்ற மனிதர், நெல் விலைக்கு வாங்க வந்திருந்த ஆசாமி பேசினர்:

"வேறே ஒண்ணும் சொல்லலை ஸார்! 'குறை நெல்லையும் அளந்திட்டுப் போடா' அப்படீன்னுதான் சொன்னர். உடனேவெறிபிடிச்சவன் போல ஓடிவந்து பிரம்பைப் பிடிங்கி அறைஞ்சுட்டான். இந்தப் பசங்களையெல்லாம சும்மா விடக்கூடாது ஸார்! இந்தமாதிரி ஒரு களை இருந்தா வயற்காடே பாழாயிடுமே!''

கருப்பன் தன் குற்றமின்மையைச் சொல்ல வாயைத் திறக்கத்தான் செய்தான். வியப்பிலும் சோகத்திலும் சொற்கள் தொண்டைக் குழியிலேயே அடைத்துக்கொண்டன.

கூட்டம் வலுத்தது. அய்யரின் கன்னத்தில் இருந்த ரத்தக் கோறை கருப்பனுக்கு எதிராகச் சாட்சியம் கூறியது. அதற்குள் யாரோ ஒரு புண்ணியாத்மா போலீஸை அழைத்து வந்துவிட்டார்.

"நான் ஒண்ணுமே செய்யலியே!'' என்று இப்பொழுது இரைந்துவிட்டான் கருப்பன்.

"என்னடா ஒண்ணும் செய்யலே? அய்யர் கன்னத்திலே என்னடா இது?''—கருப்பன் முதுகில் குத்து விழுந்தது. அவன் நெஞ்சில் விழுந்த நிரந்தரமான குத்தின் வேதனையை விட, அது அவனுக்குப் பெரிதாயில்லை.

பின்னல் திரும்பினன். செல்லி தரையில் விழுந்து புழுவாய் துடித்துக்கொண்டிருந்தாள்.

"எங்கப்பா செத்துக்கிடக்குது சாமீ! நான் சொல்லறதைக் கேளுங்க!'' என்று கல்லும் கனியக் கதறினள் அவள்.

"நடடா ஸ்டேஷனுக்கு. அங்கே எல்லாம் கேட்டுக்கலாம்!'' அவன் முதுகில் மறுபடியும் ஒரு இரும்புக் கரம் இறங்கியது.

அந்தக் கணத்தில் அவனுள் ஏதோ ஒன்று எரிந்து சாம்பலாகிக்கொண்டிருந்தது.

அவன் சிறைவாசம் செய்யத்தான் நேர்ந்தது. ஆனல் சிறையிலிருந்து திரும்புகையில் அவன் பழைய கருப்பனய் இல்லை. பொறுமையின் எல்லையில் தன்னுள் வளர்ந்த தீயில் கலந்து அவனே ஒரு தீயாகத்தான் மாறியிருந்தான். ★

வரச்சொல்லடி!

வாணிதாசன்

அந்தி ஒளி இழக்கும்! பொற் கதிரைச் செவ்வானம்
சிந்தி மரக்காட்டைச் செங்காடாய் ஆக்கும்!
அணையாப் பெருந்தீ மலை உச்சி எங்கும்!
துணை அழைக்கும் பெண்மான்! துணையழைக்கும்
பெட்டை!
முணுமுணுக்கும் நீள்ஓடை! மந்தி முணுமுணுக்கும்!
தேன்பாயும் சாரல்! திசைபாயும் நல்லருவி!
மான்தேடி வந்தான்! உயிர் பறித்தான்! நாணிழந்தேன்!
நாணோ டுடன்பிறந்த நான்!

நொச்சி மணக்கும்! நுணு மணக்கும் வேலியிலே!
உச்சிக்குக் கீழே உயரும் விடிவெள்ளி!
கீழ்வான் இருள் நழுவும்! கீற்றுக் கீற்றாய் வானில்
செம்மை படரும் விடியற் சிறு காலை
இன்பக் குளிர் காற்றுப் போல எனதருகில்
வந்தான்; உயிர் பறித்தான்! வாழ் வளிப்பதாய்ச்
சொல்லிச்
சென்றான்! எனதுயிரும் சென்ற தவனோடே!
கண்டால் வரச் சொல்லடி!

வளைந்தோடும் ஆற்றின் மணற் கரையில் தாழ்ந்த
கிளையூசல் ஆடிற்றுப் பச்சைப் பசுங்கிள்ளை!
கோணற் கிழவி தலைபோலப் பூத்திருக்கும்
நாணற் பெருங்காட்டில் நாரை குரல் காட்டும்!
அன்றலர்ந்த பூவை அணைத்துவரும் தென்றல்போல்
வந்தான்; உயிர் பறித்தான்! வாழ் வளிப்பதாய்ச்
சொல்லிச்
சென்றான்! எனதுயிரும் சென்ற தவனோடே!
கண்டால் வரச் சொல்லடி!

பொற்காலம்

எஸ். சதாசிவம்

●

மனித இனத்தை நோக்கி ஒரு புதிய பொற்காலம் காத்துக் கிடக்கின்றது என்பதைக் கேட்க நம்மில் பலர் ஆச்சரியப்படலாம். இன்று மக்களை அரித்துத் தின்று வரும் வறுமை, பிணி, பயம், அறியாமை ஆகிய கொடுமைகளிலிருந்து விடுபட்டு மக்களனைவரும் இன்பமாக வாழுங் காலம் நம்மை நோக்கி விரைந்தோடி வந்துகொண்டிருக்கின்றது. அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அத்தகைய நற்காலம் வரவிருக்கின்றது. புது நூற்றாண்டு ஒரு புது யுகத்தையே இழுத்துக்கொண்டு வரவிருக்கின்றது. அந்த நாள் இன்னும் அதிக தூரத்திலில்லை. இன்றைக்குச் சரியாக நாற்பத்தேழு ஆண்டுகள் தான் கழியவேண்டியிருக்கின்றது. நமது குழந்தைகள் அந்தப் புது யுகத்தைக் காணுவது உறுதி. நமது பேரப் பிள்ளைகள் அந்த இன்பங் கொஞ்சும் புதுவாழ்வை அனுபவிக்கப் போவது உறுதி. நமது வழித்தோன்றல்களாவது எதிர்காலத்தில் இன்பமாக வாழ்வார்கள், என்பதைக் கேட்க நமக்கு எவ்வளவு ஆறுதலாகவிருக்கின்றது. வரவிருக்கும் புதுயுகம் மனித இனத்திற்கே புதுமையையும், புது வாழ்வையும் நல்கவிருக்கின்றது!

நாம் எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் இந்தப் பொற்காலத்திற்கு அணு சக்திதான் தனது முழு ஆற்றலையும் அளித்து உதவப் போகின்றது. இயற்கையில் மண்டிக்கிடக்கும் தனது எல்லையற்ற ஆற்றலை அது உலகிற்களிக்கவிருக்கின்றது. அப்பொழுது நிலைமை என்னவாகும் தெரியுமா? நிலக்கரியும், பெட்ரோலும் உள்ள நாடுகள்தான் தொழில் துறையில் முன்னேற முடியும் என்ற நிலை முற்றிலும் மாறிவிடும். எல்லா நாடுகளும் அணுவின் ஆற்றலைக்கொண்டு தொழில்துறையில் முன்னேற முடியும்.

அணுசக்தி, யுரேனியம் அணுவிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒரு கிலோ கிராம் எடையுள்ள அணுசக்தி ஒரு சிறு எலுமிச்சம்பழம் அளவிருக்கும். ஆனல் அது 3300டன் நிலக்கரியின் மூலம் கிடைக்கும் ஆற்றலுக்குச் சரியாகும்! அணு சக்தியைச் சுலபமாகவும், அதிக செலவின்றியும் எல்லா நாடுகளிலும் உற்பத்தி செய்துகொள்ள முடியும். ஆகவே அணுவின் ஆற்றலைக் கொண்டு தென் அமெரிக்க நாடுகளிலே எஃகு தொழில் நிலையங்களும், எகிப்து நாட்டிலே பஞ்சாலைகளும், நம் நாட்டிலே ரசாயனப் பொருள்கள் உற்பத்தி நிலையங்களும் ஏற்படுத்த முடியும்!

அணுவாற்றலின் மூலம் குளிர் மிகுந்த நாடுகளிலே வெதுவெதுப்பான நிலையையும், வெப்பம் மிகுந்த நாடுகளிலே தண்மையான நிலையையும் ஏற்படுத்திக்கொள்ளலாம். உலக முழுதும் இரவைப் பகலாக்கிவிட முடியும்! பெரும் பெரும் அணைகளைக் கட்டி நீரைத் தேக்கி, பாழ் நிலங்களையும், பாலைவனங்களையும் செழிப்பான விளைநிலங்களாக்கலாம். பெரும் பெரும் காடுகள் நிறுவி அவை பாதுகாக்கப்படும். காடுகளின் வளத்தைப் பொறுத்ததுதானே நாட்டின் வளம். புதுப்புதுச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு சுரங்கத் தொழில் பெருகும். போக்குவரத்திற்கான நீண்ட பெரும் பாதைகள் எங்கும் அமைக்கப்படும். மின்சார ரயில் வண்டிகள் பெருகும். இவ்வளவும் செய்த பின்பு மனித வாழ்வு வளம்பெறுவதில் வியப்பென்ன?

திரு. எஸ். சதாசிவம் அவர்கள் நல்லதொரு சிந்தனையாளர். அதன் அளவுகோலாக அவரது ஆக்கங்கள் 'ஏழையின் அரசியல்' 'காரல்மார்க்ஸ்' 'முதலாளித்துவம் ஒழிக' முதலியன சிந்தித்து அனுபவிக்கத்தக்க வகையில் உருப்பெற்றிருக்கின்றன.

ஒரு இழுக்கும் பொறி (*Tractor*) நூறு குதிரைகளின் ஆற்றலையுடையது. ஆனல் நூறு குதிரைகளுக்காகும் தீனிச் செலவு இதற்குத் தேவையில்லை. சிறிது எரிபொருள் மட்டுமிருந்தால் போதும். ஒரு புகை வண்டித் தொடரை இழுக்கும் பொறியானது ஆயிரம் குதிரைகளின் ஆற்றலையுடையது. இவ்வளவு ஆற்றலும் குறைந்த செலவில் நிலக்கரியிலிருந்து பெறப்படுகின்றது. இன்றைய உலகம் இந்தச் சக்தியின் அடிப்படையில்தான் இயங்குகின்றது. நிலக்கரிக்குப் பதிலாக அணுவின் ஆற்றலை உபயோகிப்பதின் மூலம் இன்னும் குறைந்த செலவில் அதிக ஆற்றலைப் பெறமுடியும். அப்பொழுது பத்தாயிரத்திற்கதிகமான குதிரைகளின் ஆற்றலைக்கொண்ட பொறிகளையமைத்து, பெரும்பெரும் தொழில் நிலையங்களை நிறுவலாம். அவை இரவும், பகலுமாக ஓயாது சுழன்று மனித இனத்திற்குத் தேவையான பண்டங்களை மலைமலையாக உற்பத்தி செய்து குவிக்கும்.

அணுவின் ஆற்றலால் இயக்கப்படும் பொறிகள் பற்றி மேலை நாடுகளிலே வேகமான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வான ஊர்திகளுக்கு அணுவின் ஆற்றலைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுவிட்டால் வானவூர்திப் போக்குவரத்திலே ஒரு புரட்சிகரமான புதுயுகம் தோன்றிவிடும்! நெடுந்தொலை செல்லும் இன்றைய வானவூர்திகள் ஒவ்வொன்றும் சுமார் முப்பது டன் எடையுள்ள பத்தாயிரம் காலன் எரிபொருளைத் தன்னுடன் சுமந்து செல்லவேண்டியிருக்கின்றது. எரிபொருளுக்கு மாற்ருக அணுவின் ஆற்றலைப் பயன்படுத்துவது என்ற நிலை ஏற்பட்டுவிட்டால் ஒரு அவுன்சுக்கும் குறைவாயுள்ள பத்து அல்லது இருபது கிராம் எடையுள்ள அணுசக்தி போதும்! அப்பொழுது அதே வானவூர்தி முப்பது டன் எடையுள்ள வேறு பொருள்களைச் சுமந்து செல்லலாம். இல்லையேல் முன்னூறு பேர்களை அதிகமாகச் சுமந்து செல்லமுடியும்! அப்பொழுது கட்டணம் மிகமிகக் குறைந்துவிடுமல்லவா? அந்த நிலையேற்பட்டால் மக்களனைவரும் வானிலே பறக்கமுற்பட்டுவிடுவர். மனித இனம் இறக்கை கட்டிப் பறக்கத் தொடங்கிவிட்டதுபோலாகிவிடும். அதுமட்டுமல்ல, உலகம் மிகமிகச் சுருங்கிவிடும். உலகின் மூலை முடுக்குகளிலுள்ள நாடுகளுடன்கூட மிக நெருங்கிய தொடர்பு கொள்ள முடியும்.

அணுவின் ஆற்றலால் இயங்கும் ஆற்றல் மிக்க பொறிகள் இன்னும் உருவாக்கப்படவில்லையென்பதென்னவோ உண்மைதான். ஆனல் ஐம்பதாண்டுகளுக்கு முன்பு வான ஊர்தியில் பறந்து செல்வதென்பது கனவாகவிருந்ததென்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல; அட்லாண்டிக் மாகடலை முதல் முறையாகக் கடந்து முப்பத்திரண்டு ஆண்டுகள் தாஞகின்றன. இவ்வளவு குறுகிய காலத்தில் எவ்வளவு முற்போக்கு!

மனித வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அணுவின் ஆற்றல் பயன்படுத்தப்படும். அதன் காரணமாக அடுத்த நூற்ருண்டின் வாழ்க்கை முறை இந்த நூற்ருண்டின் வாழ்க்கை முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுவிடும். வெடி மருந்து திடீரென்று உலகில் தோன்றியவுடன் இடைக் காலமென்னும் இருண்ட காலத்திற்குச் சீட்டுக் கொடுத்துவிட்டு, ஒருபுதுயுகத்தையே தோற்றுவித்துவிடவில்லையா? அது சமூகத்தில் ஆற்றல் வாய்ந்த பல மாறுதல்களுக்குக் காரணமாகவிருந்தது. புதிய ஒரு சமூதாய அமைப்பையே நிறுவிவிடவில்லையா? அணு சக்தியும் ஒரு புதுயுகத்தைத் தோற்றுவித்து, அதற்குப் பொருத்தமான ஒரு புதிய சமுதாய அமைப்பை நிறுவத்தான் போகின்றது.

மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகியவைகளனைத்தும் கதிரவனின் ஒளியின் மூலம்தான் உயிர் வாழ்கின்றன என்பது யாவரும் அறிந்ததே. ஆனல் ஒரு மரமோ அல்லது ஒரு செடியோ கதிரொளியின் எந்தப் பகுதியை மரத்திற்கும், எந்தப் பகுதியைத் தண்டிற்கும், எந்தப் பகுதியைத் தழைகளுக்கும், எந்தப் பகுதியைப் பூவிற்கும், எந்தப் பகுதியைக் காய்க்கும் கொடுத்து உதவி

வளர்ந்து வளம் பெருகின்றனவென்பதை இன்னும் எவரும் கண்டறியவில்லை. அதுபோலவே, மரம், செடி, கொடிகளில் பழுக்கும் பழங்கள் எப்படித் தண்ணீரையும், காற்றிலிருந்து கரியமல வாயுவையும் ஏற்றுப் பழுத்துக் கனிகின்றனவென்பதையும் இன்னும் எவரும் ஆராய்ந்தறியவில்லை. இப்பொழுது இந்த மரம், செடி, கொடிகளின் வாழ்வுபற்றிய உண்மைகளை அறிய அறிஞர்கள் இடைவிடாது முயன்று வருகின்றனர். ஒரு கரித்துண்டில் அணுவின் ஆற்றலைப் பாய்ச்சி அதன் மூலம் என்ன சக்தி வெளிப்படுகின்றதென்று ஆராயப்படுகின்றது. அக் கரித்துண்டு கரியமல வாயுவாக மாற்றப்பட்டு செடிகளின் மீது ஏவப்படுவதன் மூலம் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றனவென்று ஆராய்ந்து வருகின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் மரம், செடி, கொடிகளின் வாழ்வுபற்றிய உண்மைகள் ஆராய்ந்தறியப்பட்டுவிடும். அப்பொழுது பயிர்களின் திறமையை நம் விருப்பம்போல் பல மடங்கு பெருக்க முடியும். அதுமட்டுமல்ல. அவை பலன்தரும் கால அளவையும் குறுக்கிவிடமுடியும். அப்பொழுது உணவுப் பஞ்சத்திற்கும், பட்டினிச் சாவிற்கும் இடமேது?

அணுவின் ஆற்றல் மற்றுமொரு துறையில் புரட்சிகரமான மாற்றங்களைப் புகுத்தவிருக்கின்றது. புற்றுநோய் போன்ற கொடுநோய்களுக்கு அணுவின் ஆற்றலொளியைப் பாய்ச்சி ஆராய்ந்து வருகின்றனர். அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்குள் சாவும், மூப்பும் வெகுதூரம் தள்ளிப் போட்டுவிடப்படும்! பெரும்பாலான மக்கள் எண்பதாண்டுகள் நிறைய வாழ்வர். முதுமையின் தளர்ச்சி சாவு நெருங்கும்போதுதான் தலைகாட்டும். உலகில் பிறக்கும் பெரும்பாலோரும் வளர்ந்து, வாழ்ந்து, தளர்ந்து, மடிவர். இதையெல்லாம் பார்க்கும்பொழுது இப்படிப்பட்ட பொற்காலம் இப்பொழுதே வந்து தொலையக்கூடாதாவென்று என் மனம் ஏங்குகின்றது! உங்களுக்கும் அப்படித்தானே? ★

இதோ! உங்களுக்குப் பொங்கல் விருந்து

தமிழ் இங்கிலீஷ் போதினி



தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்த புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புத்தகம் விலை. ரூ. 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்

இப்புத்நகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம்.

விலை ரூ. 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு (*MAGIC BOOK*)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூ. 2—4—0

VANI BOOK DEPOT (P)

No. 260, Esplanade, G. T. Madras.

'ஆர்வி' என்ற பெயரில் உலவும் தென்றல் 'கண்ணன்' பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை நிர்வகித்துவரும் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களாகும். 'யுவதி', 'நிராசை', முதலிய உன்னதமான நாவல்களையும், எண்ணிறந்த சிறு கதைகளையும் இவர் தமிழ் நாட்டுக்குக் காணிக்கை செலுத்தியுள்ளார். 'வாழ்க்கை' சிந்தனையைத் தூண்டும் உருவக்கதை.

வாழ்க்கை

'ஆர்வி'

மழை அடைத்துக்கொண்டு பெய்தது. குளம் குட்டைகள், ஏரிகள். ஓடைகள் யாவும் வழிந்தோடின. ஊரும் காடும் வெள்ளத்தில் மூழ்கின. பயிர்கள், பச்சைகள் அழிந்து நாசமாயின. மழை ஓய்ந்தது.

அந்த ஆலமரம் மட்டும் அப்படியே நிமிர்ந்து நின்றது. ஆனால் மேல் பொந்தில் இருந்த காக்கைத் தம்பதிகளின் கூடு மழையில் நனைந்து சேதமாகிவிட்டது. மூன்று நாட்களாக அவை இரண்டுக்கும் சரியான ஆகாரமே இல்லை. அதே மரத்தில் இருந்த மற்றொரு குயில் ஜோடி கூடு கட்டிக்கொள்ளாமலே இருந்தன. அந்த ஆண் குயில், ஆண் காகத்தைப் பார்த்துச் சொல்லிற்று: 'இவ்வளவு பாடுபட்டுக் கூடு கட்டினாயே. என்னைப் பார்! என்னைவிட நீ எந்தவிதத்தில் சுகப்பட்டாய்?'



காகம் பதில் சொல்லவில்லை. பேடையோ வெளிக்கிளம்பமுடியாமல் தவித்தது. அதைப் பார்த்து ஆணும் தவித்தது. அங்கும் இங்கும் பறந்தது. எங்கெங்கோ சென்று ஒடிந்த சுள்ளிகளையும் நார்களையும் சேகரித்து வந்தது. சிலந்தியைப் போல் விடா முயற்சியுடன் தம்பதிகள் மீண்டும் கூடு கட்டுவதில் முனைந்தன. கூடு கட்டி முடிந்தது.

வானம் வெளி வாங்கியது. காற்றே அசைவற்று நின்றது. இலைகூட அசங்காத புழுக்கம் நிறைந்திருந்தது. "அப்பாடா, பிழைத்தோம், சனியன் பிடித்த மழை தொலைந்தது" என்று இரண்டும் மகிழ்ச்சியுடன் முடங்கிக் கிடந்தன.



அந்தி நெருங்க நெருங்க புழுக்கம் அதிகரித்தது. இரவு சூழ்ந்ததும், சிலு சிலு என்று காற்று வீசியது.

சற்றைக்கெல்லாம் காற்று சற்றுவீசி அடித்தது. காகம் இரண்டும் நெருங்கி உட்கார்ந்துகொண்டன. அப்போது வீசிய பெருங்காற்று அவை இரண்டையுமே தள்ளிப் புரட்டப் பார்த்தன. ஆனல் எப்படியோ சமாளித்துக்கொண்டன. காற்று நிற்காமல் வீசியது; விர் விர்ரென்று சுழற்றியது. மூச்சே திணறும்படி வலுத்துப் பிரசண்ட வேகத்தில் புயலாகச் சீறிக்கொண்டிருந்தது.

காகம் இரண்டும் கண்களை மூடிக்கொண்டு ஒன்ருேடு ஒன்று கவிந்துகொண்டன. புயல் கோரதாண்டவம் புரிந்தது. அண்டமே தடதடவென்று பெயர்ந்து விழுவது போல மரங்களெல்லாம் மடமடவென்று வேரோடு சரிந்து முறிந்து விழத் தொடங்கின. வாழைத்தோட்டமே அழிந்தது. தென்னை, பனை எல்லாம் ஒடிந்து விழுந்தன. புளியமரங்கள் பூமியைப் பிளந்துகொண்டு வீழ்ந்தன. அந்த ஆலமரம் மட்டும் இப்போதும் ஆழ்ந்து பரந்த விழுதுகளால் நிமிர்ந்து நின்றது. ஆனல் கூடு சின்னபின்னமாகச் சிதைந்துபோயிற்று. பொழுது புலர்ந்தபோது இயற்கையும் அமைதியுற்றது. காக்கைகளோ கண்களைத் திறக்கவில்லை. குயில் ஜோடி என்னவாயிற்ருே, அதுவும் தெரியாது.

காலைச் சூரியனைக் கண்டதும் காகம் இரண்டும் கரையத் தொடங்கின. மீண்டும் ஏதோ அகப்பட்ட இரண்டு மண் புழுக்களைத் தின்றுவிட்டு, மீண்டும் கர்மயோகிகளின் கடமையுணர்வுடன் அவை இரண்டும் கூடுகட்டுவதில் முனைந்தன. 'சனியன் பிடித்த புயல் ஒழிந்தது' என்று கவலையற்று அதில் வசித்தன.

* * *

பேடை முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது. கூட்டில் விட்டுவிட்டு முன்போல் வெளியில் இரண்டும் இரை தேடப் பறந்து சென்றன.

இப்போது நாலு குஞ்சுகள் சிவந்த அலகைப்



பிளந்து தாய்க் காகத்தைத் தினமும் வரவேற்றன; இரை தண்டித் தின்றன. ஒன்று மட்டும் மற்ற மூன்றையும் விடத் துஷ்டத்தனம் செய்தது. தீனி தண்டித் தின்றது மற்றவற்றுடன் நெருங்காது கொத்தித் துரத்தியது. தாய் பொறுத்துக்கொண்டது.

ஒரு வாரம் ஆயிற்று. காகம் இரண்டும் ஆலமரத்துக்கு வந்தன. கூட்டைக் காணவில்லை. ஆனல் ஒன்று மட்டும் 'காகா' என்பதற்குப்

பதில் 'கூகூ' என்று கூவியது. மூன்று குஞ்சுகள் மரத்தடியில் விழுந்துகிடந்தன. பயத்தினல் 'காச்சு மூச்' சென்று துடி துடித்தன.

காக்கை ஜோடி அந்தத் திருட்டுக் குயிலை விரட்டிவிட்டு, மீண்டும் மூன்ரும் முறையாகக் கூடு கட்டுவதில் முனைந்தன.

தூரத்தில் ஒரு கொட்டப் பருந்து அந்த ஆலமரமே குறியாகச் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தது. ★

அதிசயம்!

கூட்டல் பெருக்கல் போடும் யந்திரங்கள் இப்போது பல பெரிய காரியாலயங்களில் இருக்கின்றன. இந்த இயந்திரம் வேலை செய்கையில் தவறு நேர்ந்துவிட்டால், தானே திருத்திக்கொள்ள ஓர் அமைப்பை இதில் இப்போது சேர்த்திருக்கிருர்கள். தப்பு நேர்ந்துவிட்டால் மேலேவேலை செய்யாமல், எங்கே தப்பு உண்டாயிற்ருே அதைக் கண்டு பிடிக்கத் தொடங்கித் திருத்தின பிறகே இது மேலே செல்லுமாம். பெல் டெலிபோன் கம்பெனியார் இந்த அதிசய இயந்திரத்தை அமைத்திருக்கிருர்கள்.

○

கப்பலும் கப்பலும் மோதிக் கொள்ளாமல் இருப்பதற்கு ஏற்ற கருவியை ஐக்கிய அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கின்றனர். சாதாரணமாகக் காதுக்குக் கேட்காத ஒலியை ஏற்றுப் பெரிதாக்கிக் காட்டும் ஓர் கருவியைக் கப்பலில் பொருத்துகிருர்கள். நெடுந் தூரத்தில் வேறு கப்பல் வந்தால், அது வருவதை முன்கூட்டியே இந்தக் கருவி தெரிவிக்கும். இன்ன திசையில் இவ்வளவு தூரத்தில் அந்தக் கப்பல் வருகிறதென்பதைக் காட்டும் வகையில் அக் கருவி அமைந்துள்ளது.

மாயாண்டித்தேவன்

பீ.வி. ஆர்.

மாயாண்டித் தேவனைப் பற்றிய கதையை அந்தச் சத்திரத்தில் இரவு தங்க நேர்ந்தபோது அந்தப் பிரயாணியிடம் சத்திரத்துக் காவற்காரன் சொன்னது சரி. ஆனால் அந்தப் பிரயாணியின் வாழ்வு ரகசியம் மட்டும் கருணிக்குப் புலப்பட்டிருந்தால்......!

சத்திரத்தின் தூணில் சாய்ந்தவாறு மேல் வானில் மறையும் கதிரவனின் மஞ்சள் கிரணங்களைப் பார்த்த வண்ணம் அவன் உட்கார்ந்திருந்தான். கிரணங்கள் முகத்தில் அடித்தபோது, வெளுப்பும் கறுப்புமாக வளர்ந்திருந்த தாடி பொன்னிறமாகியது. நீட்டி நின்ற கன்ன எலும்புகளுக்குப் பின்னால், குழியில் விழுந்த கோலிகள் போல, உள்ளடங்கின விழிகளில் அசாதாரண நிம்மதியும் திருப்தியும் மின்னிட்டன.

"இந்தப் பொழுதை இங்கேயே கழிச்சிட்டா, காலையிலே கிராமத்துக்குப் போய்க்கலாம்......பரியாரியைத் தேடிப் புடிச்சப்புறம்தான் மத்தவர்களைப் பார்க்கணும்..." என்று அவன் நாவு முணுமுணுத்தது.

காகிதப் பொட்டணத்திலிருந்து சீவலும் வெற்றிலையும் அவன் வாய்க்கு மாறின. அதைச் சுவைத்து உமிழ்ந்துவிட்டு, புகையிலையை விரல்களால் உள்ளங்கையில் வைத்து அணைப்பு ஒன்று அளித்துவிட்டு வாயில் போட்டுக் கொண்டபோது,

"என்னங்க, ஊருக்குப் புதுசு போலிருக்கே" என்ற குரல் கேட்டது.

கேட்டவன் சத்திரத்தின் வாயிற்படியில் நின்று கொண்டிருந்தான். அவனுக்கும் ஐம்பது வயது இருக்கலாம்.

"ஆமாம்!"– புகையிலையின் ருசியில் தான் மனம் சென்றது.

"என்ன அலுவலோ?"

தூணில் சாய்ந்தவன் இன்னும் மேல் அடிவானத்தையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான். சூரியன் மறையும் மட்டும் அதையே கவனித்துக் கொள்வது என்ற உறுதியோ என்னமோ?

"எத்தனை நாள் வாசமோ?"

"எனப்பா...நான் யார்னு தெரிஞ்சுக்க ரொம்ப ஆசைப்படுறே போலிருக்கே..."

"அதற்கில்லீங்கீங்க...இந்தச் சத்திரத்திலே ஒரு ஆடு மாடு கூட, மழைக்கும் தங்காது...நீங்க இங்கே வந்து ஒக்கார்ந்ததைப் பார்த்ததுமே திடுக்கிட்டுப் போச்சு...அதனாலே கேட்டேன்"

"ஏனாம்..."

"இங்கே ஒரு பேய் வாசம் செய்யுதுங்க..."

"அதனாலே எனக்கென்ன, ஐயா?"

"மனுசன்னா அதுக்கு ஒரே கோவம்...ரத்தத்தை உறிஞ்சிடும்..."

"நீயே என் ஒடம்பைப் பாரு, எதுனச்சியும் குடிக்க ரத்தம் இருக்கா?"

"நீங்க என்னமோ வெள்ளாட்டாப் பேசறீங்க...விஷயம் தெரியாது போலிருக்கு...மாயாண்டித் தேவன் பிசாசுன்னா அழுத கிழவர்கூட வாய் மூடணும்...பார்த்துமயக்கம் போட்டவங்க முப்பது வருஷத்திலே முன்னூறு போலவது இருக்கும்..."

"எத்தனையோ ரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்திருக்கு அது?"

"உங்களுக்கு என்னமோ அது கிள்ளுக் கீரை மாதிரி. கதையைக் கேட்டீங்கண்ணு அடுத்த நிமிஷமே இங்கிருந்துவந்தவழியைப் பார்த்துக் கிட்டுப பறந்திடுவீங்க..."

"கதையைச் சொல்லு... கேக்கிறேன். ஆனால் இங்கேதான் இன்னிக்கி ராத்திரிக் கழியணும்..."

பேய்க்கு அஞ்சாத அந்தப் பிரயாணியிடமிருந்து புகையிலையை வாங்கி வாயில் அடக்கிக் கொண்டே அவன் கதையைச் சொல்லலானான்:

"என் பேரு மருதையன். இங்கே வந்து பதினைஞ்சு வருஷம் ஆவுது. ஒரு நாள் ஒங்களை மாதிரி இங்கே வந்து ஒக்கார்ந்தேன். அடுத்த நிமிஷமே ஒரு ஆள் வந்து என்னைப் பயமுறுத்தித் துரத்தினன். 'மாயாண்டித் தேவன் ஒன் ரததத்தை உறிஞ்சி எப்பம் வட்டுடுவான். போ, கிராமத்துக்குள்ளே'ன்னு சொன்னான். எனக்கு ஒண்ணும் புரியலீங்க. அப்புறம் இரண்டு மூணு நாளுக்குள்ளே எனக்குக் கதையெல்லாம் புரிஞ்சுடுத்து...

"சுமார் பத்து வருஷம் நன்னு உழைச்சான் பண்ணையாள் ஆட்லே.. அவனுக்குப் பதினெட்டு பத்தொன்பது வயசு இருக்கச்சே, பண்ணையாள் ஆட்டுக்கு அவனுடைய ஒண்ணு விட்ட தங்கை தாலி அறுத்துக்கிட்டு வந்தது. பண்ணையாள் தங்கை தாலி அறுத்தது பத்தி நம்ம மாயாண்டிக்கு அக்கரையில்லீங்க அவ கூட ஒரு ரத்தினம் வந்ததுங்க. அதைப் பார்த்தவன் அப்படியே மயங்கி விட்டானுங்க... நல்ல மொழு மொழுன்னு, செவப்பா, மாதுளம் பழத்து மணி இருக்கு பாருங்க, அதுகணக்கா அழகா இருந்ததுங்க பொண்ணு. அது செஞ்ச ஒய்யாரமும் தளுக்கும் ஊரையே மயக்கிடிச்சு...கொணம் தங்கக் கொணம். சில சமயத்திலே மட்டும் அதுக்குக் கோவம் வரும்... அப்போ அது என்ன செய்யும்னு யாருக்குமே தெரியாது...

பண்ணைக்காரன் வீட்டிலே மாயாண்டி இருக்கானு? அந்தப் பொண்ணு—கருணிங்க அவபேரு அவளும் இருந்திச்சா...... அந்தப் பொண்ணு எப்பவாவதுதான் வெளியே போகும்...அவ அளகையும் வயசையும் கண்டு பண்ணையாள் கட்டுப் போட்டாப்பலே உள்ளேயே கட்டிப் போட்டாருங்க...அதனலே ஆட்டுக்குள்ளேயே, எலி சுத்துறாப்பலே சுத்தணுமுங்க... அதனலே மாயாண்டிக்கு ரொம்ப சௌகரியமாகப் போயிடுத்துங்க...அது வேணுமிண்ணே எதனச்சியும் கேள்வி கேக்கும்...இவன் எதாவது உளறுவான்...அதைக் கேட்டு, கொல்லு மிளகாப் பளம் எடுக்கிற மாதிரி, வெடிச்சிச் சிரிப்பா... அவமானப் பட்டாலும், மாயாண்டிக்கு அவ பேரில்ல ஆசை விளுந்திடிச்சு...

நண்பர் பி. வி. ஆர். புகழுக்குப் பாத்திரமான சிறந்த எழுத்தாளர். 'தழும்பு', 'தர்ம தரிசனம்', 'வாழ்வின் உதயம்' முதலிய கதைகள் இவரது மூன்றெழுத்துப் பெயரை என்றும் நினைவில் நிறுத்தி வைக்கத் தூண்டும் உயர் சிருஷ்டிகள். 'கனவுக் கிளி' இவரது அழகிய தத்துவங்கொண்ட குறுநாவல். 'குயில் தோட்டம்' எனும் மற்றொரு நல்ல நவீனம் அண்மையில் வெளிவர இருக்கிறது.



ரொம்ப நாளா அதை வெளியே சொல்ல பயம், வெக்கம் எல்லாம். கடைசியிலே, ஒரு நாளைக்கு கருணிக்கே இரக்கம் வந்தட்டாப்பலே தோணிச்சு......அவன்கிட்ட ஆசையாப் பேசினு...அதான் சமயம்னு நம்ம மாயாண்டியும் மனசை அப்படியே கொட்டிக் கவிழ்த்திப்பிட்டான்...

ஆனு எல்லாம் பத்து நாளைக்குத் தானுங்க...கருணியும் மாயாண்டியும் கள்ளத்தனமா, பரண் மேலேயும் வேலிக்குப் பின்னுலும், மரங்களுக்குக் கீழேயும், பேசிக்கிட்டாங்க, சிரிச்சிக்கிட்டாங்க, களிச்சுக்கிட்டாங்க. நாளைக்குச் சொல்றேன், நாளைக்குச்சொல்றேன்னு கருணி தெனுமும் சொன்னவ கடாசியில் அம்மா கிட்ட விசயத்தைச் சொன்னு...முன்னமே தம் பொண்ணு மனசு எந்தப் பாதையிலே போறதுண்ணு சந்தேகப்பட்ட அந்த அம்மாவுக்கு ஆத்திரம் மரம் முறிஞ்சி விழுறாப்பலே, வந்தது...'என்னுடி நினைச்சுக்கிட்டே நீ. பணக்கார மாமனுக்கு மருமகள்...உன் அப்பன் என்ன பவிசோட இருந்து போனவன்...ஆட்டிலே வேலைக்காரனு இருக்கிறவன் சம்பாரிச்ச மூணேமுக்கால் துட்டைப் பரிசமாப் போட்டு, கட்டிக்கிறதா? உன் மாமன் காதிலே இதைப் போட்டா, உன்னைப் பட்டினிப் போட்டு... அந்தக் கழுதையைத் துரத்திடுவான்' என்றெல்லாம் கத்தினு. ஆனுலும் பொண்ணுக்குத் திருட்டுத்தனம் சாஸ்திங்க... மாயாண்டி, மாயாண்டின்னு அது அலைஞ்சுது...

அதெல்லாம் ஒரு பக்கம் நடக்கறிச்சே, பண்ணைக்காரன் சிவனுண்டித்தேவனுக்கு மனசிலே எதோ புழு அரிக்கற மாதிரி அரிச்சுக்கிட்டே இருந்தது...அவனுக்கு ரெண்டு சம்சாரம் இருந்தும் புண்ணியமில்லே... வேளாவேளைக்குச் சோத்தை உண்ணுக்கிட்டு, ஊர் வம்பை அளந்திட்டிருந்ததே ஒளிய, வக்கணையா ரெண்டு குட்டிகளைப் போடத் தெரியலீங்க... அதுலேயே சிவனுண்டிக்குக் கொஞ்சம் ஈரல்தான். வயசு நாப்பது ஆயிடுச்சு...இன்னமே எப்போ கொளந்தை ஒண்ணு பொறந்து வளர்ந்து, நான் காணப்போறேன்னு அடிக்கடி தங்கைகிட்டே சொல்லிட்டிருந்தானுங்க.........

அதை அவளும் கேட்டுக்கிட்டே வந்தாளா...ஒருநாள் தங்கை தனியா, மனச் சங்கடம் இல்லாதபோது, அவன் சொல்லிட்டான், "உன்



பொண்ணை என் கழுத்திலே கட்டிடு''ன்னு.

"அட, பாவி...... மூணும் பொண்டாட்டியா?" ன்னு கேட்டாள் அவள்.

"அதுக்கென்ன, குழந்தை இல்லே, குட்டி இல்லே... ரெண்டுக்கும் எதையாவது கொடுத்து ஊருக்குத் தொலைச்சுடுறேன்.... இருக்குறதைக் கருணி மேலே எழுதி வைச்சுடுறேன்... இதுக்கு மேலே எவன் பரிசம் போடுவான் ஒன் பொண்ணுக்கு..."

"இதைவிட கம்மியாப் பரிசம் போட்டு வேறு யாரையாவது கட்டிக்கயேன்..."னு தங்கை சொல்லிச்சு.

"கட்டினு கருணியைக் கட்டிட்டு, என் வம்சத்தை விருத்தி பண்றது... இல்லாட்டா நல்ல மூத்துத் தேவன் தலை மொறை சிவனாண்டியோடே ஒழிஞ்சா என்ன, ஒழியாட்டி என்ன?" என்று சொன்னான் அவன்...

கருணியோடு அம்மாவும் யோசிச்சா. இந்த சன்மத்துக்கு அண்ணனைப் போல பணக்காரனை ஊர் வட்டத்துக்குள்ளே பார்க்க மாட்டா அவள். பணமும் அதிகாரமும் கிடைக்கிறப்போ அவளுக்கு என்ன கசக்குதா பொண்ணைக் கொடுக்க...கொஞ்சம் நாள் போகட்டும்னு சொல்லிட்டு பொண்ணைத் தயார்ப் படுத்தினாள்.

பொண்ணு முடியாதுன்னு சொல்லிற்று. தொந்தி விழுந்த மாமனைக் கட்டிக்கிறதுக்கு, சுண்ணாம்புப் பானையிலே மூஞ்சியை வைக்கலாம்னு சொல்லித்து. பதினாறு வயசிலே பணத்தோட அருமை அந்தக் குட்டிக்குத் தெரியல்லீங்க... மாயாண்டியைப் போய் விசாரக்கைச்

சொன்னபோது அவனுக்கு உதறல் தானுங்க கண்டது. ஆனால் கருணியை நெனைக்க நெனைக்க, பயம் கொஞ்சம் கொஞ்சமா அடங்கிப் போய், தைரியம் வர ஆரம்பிச்சுடுத்துங்க... ஆனா, வீட்டு வேலைக்காரனா இருக்கிற மூட்டும் ஒண்ணும் செய்ய முடியாதுன்னு தோணித்து... 'நீ போய் மாமாவிடம் சொல்லு... மாயாண்டியைத் தான் கட்டிப்பேன்னு' என்றான். கருணி முடியாதுண்ணு சொல்லித்து. 'நீ போய் சொல்லுன்னா...இல்லாட்டா நான் போய்ச் சொல்லுவேன்'னு பயமுறுத்தினான். அவனாகப் போய்ச் சொன்னா மாமன் கோபத்திலே கடப்பாறையைக்கூட எடுத்திக்கிடுவான்னு தெரியும் கருணிக்கு. அவ போய்ச் சொன்னா...சிவனாண்டியே கஷ்டப்பட்டு ஓடியாந்தான் தொந்தியைத் தூக்கிக்கொண்டு. மாயாண்டி கன்னத்திலே நாலு வைச்சான். 'என்னுடைய உப்பைத் தின்னுகிட்டு, கொழுப்பை என்கிட்டயாடா காட்டறே...'ன்னான். மாயாண்டி

உதையை வாங்கிக்கிட்டு, வெளியே போனான். அது தானுங்களே அவனுக்கு வேண்டியது. வெளியே போனப்புறம் சுதந்திரமா கருணியோடே பேசினான்... ஒருதரம் கிராமத்திலே சிவனாண்டி, மாயாண்டியை உதைக்க வந்தான் கையிலே இருந்த தடியைக் காட்டி, ‘டேய், இப்போ எனக்கும் இருக்குடா மீசை... என்னைத் தொட்டா, உன் பானை ஒடைஞ்சுடும்டா’ என்னு சொன்னான். ஊரே அதிசயப்பட்டுப் போயிடிச்சு. இந்தக் கோழைக்கு எப்படி இம்புட்டுத் தைரியம்னு எல்லாரும் கேட்டுக்கிட்டாங்க. எல்லாம் பொண்ணு அவன் மனசிலேவளர்த்த தைரியம்தானுங்களே...

ஆனா அவனுடைய நோக்கம் ஒண்ணும் பலிக்கில்லே. ஒருநாள் நாலு பேரிடம் சொல்லாம சிவனாண்டி கருணியின் கழுத்திலே மஞ்சக் கயித்தைக் கட்டிட்டான். அதைக் கருணியாலும் சொல்ல முடியல்லே. என்னா, முன்னாலே சொன்னா ஏதாவது விபரீதம் வரும்னு தோணிச்சு பண்ணைக் காரனுக்கு.

கல்லாணம் ஆனது தெரிஞ்சதும் மாயாண்டிக்கு மனம் பதறிப் போச்சு... என்னிக்கும் இல்லாத கோவம் வந்துடுத்து. கருணியைப் போய்ப் பார்த்தான் கொல்லைப் புறமா. அவ அளுதும் பிரயோசனமில்லாமப் போயிடிச்சு. என்னதான் சத்தியத்தைச் சொல்லியும் மாயாண்டி நம்பவில்லை.

“தெரியும்டி, ஒன்சத்தியம்... திரௌபதியாட்டம் தலை விரிச்சுக் கிட்டு, நீலிக் கண்ணீர் வடிச்சுக்கத் தாதே...நீதான் உலகம்னு நினைக்க வங்கி இருந்தவனை ஏமாத்தி, அந்தப் பானையாண்டி நீட்டின கைக்குத் தலையைக் காட்டிட்டே...அந்தக் கையை முறிச்சு, அவன் மண்டையிலே இதால் ரெண்டு போட்டுட்டா, அப்புறம் உன் தாலி தன்னைப்போல கீழே விழுந்திடப் போகிறது. அப்புறம் உன்னைச் சீண்டுவேன்னு நினைச்சுக்கிட்டாயா? நான்தான் உசிரோடு இருப்பேனா? இருந்தாத் தான் போலீசுலே சும்மா இருப்பாங்களா? வேலையை முடிச்சுக்கிட்டு அடுத்த ஊரிலே என் சவம்தானேடி கெடக்கும். அப்புறம் உன்னை வீட்டில், உன் ஜன்மத்துக்கும் தூங்க விடுவேனா? உன் ரத்தத்தை உறிஞ்ச மாட்டேன்? மாயாண்டித் தேவன் உசிரோடு இருக்கிறச்சே கோழையா இருந்தும் ஒருத்தனைக் கொன்னு தன்னையே குத்திக்கிட்டான். அவன் போனப்புறமும் விடல்லே, பேயாம் பேய்... அதெல்லாம் பேய்னு உலகம் சொல்லும்படி வைக்கிறேனா இல்லியா பாரு...”

அவள் ஓடிப்போய் விசயத்தைச் சொல்றதுக்கு முன்னால், கருணியின் வாயிலே துணியை அடைத்து தூணிலே கட்டிப் போட்டுட்டான், மாயாண்டி. அப்புறம் கொல்லைப் புறமா அவகூட கொஞ்சலாம்னு வந்த சிவனாண்டித்தேவன் தலைலேயி திடீரென்று, ஒரு கட்டப் பாறை விழுந்திச்சு. ஐயோன்னு கீழே விளுந்திட்டார்...... அப்புறம் மாயாண்டியை ஊரிலே சலிச்சுப்பார்த்தாங்க; இல்லே. ஒரு நாள் அவள்பேயைப் பார்த்திட்டாளாம், கருணி. அன்னிலிருந்து அவளுக்கு சித்தம் சரியில்லாம இருந்

நெருப்பு

“நீ யார்?” எனவே வினவிற்று,
நின்மல மனத்தோர் குழந்தைதன்
தாயார் உடலைக் கருக்கிடவே
தாவி உயர்ந்த தீக்கொழுந்தை.
“அன்னை இவளின் வயிற்றுக்குள்
அன்றொரு நாள் நடு நிசிப்பொழுதில்
உன்னை உருவாக் கிட மூண்ட
உத்வேகம்” எனப் பதில்கிட்டும்.

★

டி. வி. சுவாமிநாதன்

தது ரொம்ப நாளைக்கு... எந்தக் குட்டையில் விளுந்தானே, கோபுரத்திலே வந்து விழுந்தானே... இங்கேதான் கருணியும் சிவனாண்டியும் இருந்தது. நல்ல வேளையா, தலையில் அடியோடு தப்பிச்சிட்டான் அவன்......வேறே யாரானாச்சுமா இருந்தா அப்போதே கைலாசம்... போயிருப்பான். அப்புறமோ அவன் இங்கே இருக்கவே இல்லை... பொண்டாட்டியையும் இளுத்துக்கிட்டு வேறே வீட்டுக்குப் போயிட்டான்...'' என்று கதையை முடித்தான் கிழவன்.

"அப்போ மாயாண்டியின் பேய் அந்தப் புது வீட்டுக்குப் போகலியா கருணியை வதைக்க?''

"இல்லீங்க... இங்கேயேதான் வாசமிருக்கு ....கருணிக்கு ஒரு பொண்ணும் புள்ளையும் பொறந்தப் பிறகு, சிவனாண்டி போனானுங்க கைலாசத்துக்கு. கருணிக்கு இப்போ பேத்திகூட இருக்காங்க...பணம்கூட இப்போ பாவம், ரொம்ப முடைங்க... இந்தச் சத்திரத்தை விக்கணும் விக்கணுச்னு துடிக்கிறா.... "மாயாண்டிப் பேய் இருந்த வீடு— இப்ப சத்திரமாயிருக்கே, அதை சும்மாக் கொடுத்தாக்கூட வேணும்'னு சொல்றாங்க...''

"இங்கே பளக்கடை எதனாச்சியும் இருக்குமானா, ரெண்டு சீப்புப் பளம் வாங்கிக்கினு வாயேன் ராத்திரிக்கு. அது போதும்...'':

"இங்கே மட்டும் படுத்துக்கிடாதீங்க... உங்களுக்குப் புண்ணியமாப் போவுது...''

"கருணி எத்தனை ரூபாய்னு இதை விப்பா?''

"ஐயோ, வாங்காதீங்க... வாங்காதீங்க.... சும்மா கெடைச்சாக்கூட வேணாம்...!''

"பழைய விலை என்ன இருக்கும், மாயாண்டியின் பேய் வரத்துக்கு முன்னாலே?''

"அந்தக் காலத்து விலைக்கு அறுநூறு போகுமுங்க?''

"நீ என்னைக் கேக்கறியா?...அது சரி, நாளைக்குக் காத்தாலே நீ என்னை இங்கே வந்து கருணி வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போறியா?''

"ஆகட்டுமுங்க... என் வூட்டிலே படுத்துக்கச் சௌகரியம் இருக்குங்க...''

"நான் சொன்னதைக் கேளு, போ'' என்று மிரட்டவே, அவன் போய்விட்டான்.

* * *

மறுநாள் மருதையன் சத்திரத்துக்கு வந்து பார்த்தபோது பிரயாணி இன்னும் உயிரோடு இருப்பதைப் பார்த்து மருண்டு விட்டான். பார்ப்பது மனிதனையா அல்லது ஒரு புதுப் பேயையா என்று அவனுக்குத் தெரியவில்லை.

தாடியை எடுக்க நினைத்த பிரயாணி எடுக்காமலேயே மருதையனைப் பின் தொடர்ந்தான்.

சுமார் நாற்பத்தைந்து அல்லது நாற்பத்தாறு வயது உள்ள கருணிக்குத் தூக்கி வாரிப்போட்டது. வந்த அந்த மனிதனைக் கண்டதும் ஒருகணம் ஏதோ ஒரு சந்தேகம்! பணம் அதை மறைத்தது. இதுதான் சமயம் என்று நினைத்தான் வந்தவன். ஆறு நூறு ரூபாய் நோட்டுக்களை இரண்டு சாட்சிகளுக்கு முன்னால் அவளிடம் கொடுத்துவிட்டு, நாளைக்குக் கிராம முன்சீப்பிடம் கிரயச் சீட்டு எழுதிக்கொள்ளலாம் என்றான்.

மறுநாள் அவன் வரவில்லை. இரண்டாம் நாள், மூன்றும் நாள்— ஏன், இதுவரையில் அவன் வரவேயில்லை.

ஊரில் எல்லோரும் "பேய்க்குப் பயந்து ஓடி விட்டான்!'' என்று சொல்லிக் கொண்டார்கள். ஆனால் கருணி...? அவனிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளும்போது மின்னலைப் போல் தோன்றின சந்தேகம் தான் தீர்ந்தவிட்டதே!. ஆம்; அவன்தான் மாயாண்டித்தேவன்...!

சில மாதங்களில் தன் குடும்பத்தோடு சத்திரத்திற்குள் குடியேறி விட்டாள் கருணி! ★

உஊஹூம், சிரிக்காதே!

பாலா

ஆபிஸ் முடிந்து வீட்டிற்குள் நுழைந்த என்னை அமிர்தம் உதட்டில் புன்னகை ஏந்தி வரவேற்றாள். அவள் ஆசை காட்டி, அந்த ஆசையை யெல்லாம் ஆனந்தச் சிரிப்பாகப் பண்ட மாற்றல் செய்தவாறு ஏந்தி நின்ற காபியைக் குடிக்கவே எனக்கு ஓடவில்லை. அவள் சிரிப்பு என்னை இல்லாததும் பொல்லாததும் நினைக்கத் தூண்டியது. சோளியன் குடுமி சும்மாவா ஆடும் என்ற பயம் எனக்கு! அவளைப் பொருத்த மாத்திரத்தில் முத்துப் பல் வரிசை லேசாகப் பளிச்சிட்டு மின்னச் சிரிப்பதென்பது அடியார்க் கடியார்க்கு 'க்யூ' வில் கிடைக்கப் பேறு பெறும் தேவதரிசனம் போலத் தான். நான் சிரிக்கிறேன். அவள் என்னைத் தேடி வந்த தெய்வம். தரிசனம் எவ்களுக்குள் புஸ்வாணச் சிரிப்பிற்கும் பட்டாஸ் வெடிச் சிரிப்பிற்கும் உள்ள உறவைப்போல

"அத்தான், காபி சாப்பிடாமல் என்ன இப்படிப் பிரமாதமாக யோசிக்கிறீங்க...! புதுசா தொடர்கதைக்கு 'ப்ளாட்' போடுறீங்களா ?" — போதைப் புன்னகையும் காந்தச் சிரிப்பும் கைகொட்டிச் சிரித்தன.

அவள் இப்படி என்னைத் 'தாஜா' பண்ணுவதில் ஏதோ 'பிரகாச தந்திரம்' இருக்க வேண்டுமென்று நானும் நேருவைப்போல யோசனை செய்து அலசி ஆராய்ந்து முடிப்பதற்குள், என் மோனம் பூத்த நிலை கண்டு அவள் கண்கலங்கிவிட்டாள். சரிதான், ஆந்திரப் பிரச்சினை தான்! 'என்று தணியும் எந்தன் அமிர்தத்தின் பேசரி தாகம்' என்றேன் சிரித்துக்கொண்டு. அவள் விம்மினாள். என் சிரிப்

பும் அவள் அழுகையும் 1:2 விகிதத்தில் வளர்ந்தது. அவள் சிரிக்கச் சிரிக்கப் பேசியதன் விளைவுதானே இன்று என் பணப்பை கண்ணீர்விட்டு எங்கள் குடும்பப் பிரச்சினை ஐ. நா. சபைவரைத் தூது செல்லும் நிலையிலிருக்கிறதென்பதை நான்—அதாவது என் சுய மூளை அறிகிறது. ஆனால் அவள் பிரஸ்தாபித்த நகையை வாங்கித் தருவதாக அரிச்சந்திரன் ஸ்தானத்தில் என்னை நிறுத்தி உறுதி வழங்கினேன் என் பாதி உயிரிடம். என்னை டிசம்பர் பூப்புன்னகையால் தன் வசமாக்கிவிட்டாள். விரும்பிய நகையை அவளிடம் தண்டனிட்டுச் சமர்ப்பித்ததும் தான், அடியேன் நாடிய நகையை அவள் முகத்தில் தரிசிக்க முடிந்தது. 'சிரிக்கச் சிரிக்கப் பேசி என் கைவுயளைல் தொட்டார்...' என்ற பாட்டை அப்போது அவள் மறந்துவிட்டவரை நான் பிழைத்தேன்...!

'லோகோ பின்ன ருசி' என்னும் பழமொழி சிரிப்பவர்களையும், அந்தச் சிரிப்பை ரசிப்பவர்களையும் பொறுத்தமட்டில் மிகவும் பொருந்தும்.

அறிமுகமான நண்பர்களை வழியில் சந்திக் நேரிட்டால் முதலில் 'வணக்கம்' சொல்லி, பின் அதைத் தொடர்ந்து லேசாக 'ஸ்மைலிங்' ஒன்றையும் பரிமாறிக்கொள்ளுவதுடன் நம் குசலப் பிரசனத்தை முடித்துக்கொள்ளுகிறோம். நட்பின் பண்பாட்டுக்கு முதல்படி புன்னகை.

'சிரிப்பில் எவ்வளவு அடங்கியிருக்கிறது! மனிதனை முழுதும் அறிந்துகொள்ளுவதற்குரிய திறவுகோல் அதுவே. நகைக்க முடியாதவன் துரோகம், தந்திரம், திருட்டு முதலியனசெய்யத் தகுந்தவன்...' என்கிறார் அறிஞர் கார்லைல்.

உலகத்தில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் சிரிப்பதற்கென்றே அவனியில் பிறந்திருப்பதைப்போல, இச்சமயம் தப்பினால் மறுசமயம் வாய்ப்பதரிது என்று அப்படி ஆழ்ந்து அனுபவித்து, ராகம், தானம், பல்லவி முதலிய உபகரணங்களை உள்ளடக்கி ரசிக உள்ளத்துடன் சிரிப்பார்கள். படைப்பின் சிரிப்புக்கு இவர்கள் விதிவிலக்காகலாம்; விதியின் சிரிப்பு இவர்கள் போக்கில் விலக்கு விதியாகவும் அமையலாம். ஆனால் சிரிப்பது அவர்களுக்கு நிலாச் சோறு உண்பதுபோல. கொடுத்து வைத்தவர்கள்!

வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்களின் முகங்களில் சிரிப்பைக் காணவேண்டுமானால், சாம்பிராணி தூபம் காட்டினால் தான் முடியும். ஒருவேளை சிரிப்பிற்கும் இவர்களுக்கும் சிம்ம சொப்பனமோ என்னவோ? மற்றும் சிலர் சிரிப்பதைப்பார்த்து விட்டால், அப்புறம் நமக்கெல்லாம் இம்மைக்கும் ஏழேழு பிறப்பிற்கும் (!) சிரிக்கவே தோன்றாது. அதற்குப் பதிலாக வாய்விட்டு 'ஓ'வென்று அழுது தீர்த்துவிடத்தான் நாட்டம் கொடுக்கும். இன்னும் ஒரு 'செட்' உண்டு. புன்னகை புரிந்து முப்புரங்களையும் எரித்த ஈசனைப்போன்று இவர்கள் உதட்டின் நுனியில் விஷத்தை ஒளித்துவைத்தவண்ணம் அபாயச் சிரிப்பைச் சிரித்துவிடுவார்கள்! சில பிரகிருதிகள் அசட்டுப் பிசட்டென்று முகத்தில் எண்ணெய் வழியப் பல்

லெல்லாம் தெரியக் காட்டிச் சிரித்து, தங்கள் மேல் மாடி காலி என்பதைப் பிறருக்குத் தம்பட்டமடித்துக் காட்டிவிடத் தவறுவதுமில்லை. பைத்தியத்தின் 'ட்ரேட்மார்க்' டார்பிடோச் சிரிப்பு என்பதை மட்டும் மறந்துவிடக்கூடாது.

'சிரிக்கத் தெரிந்தவன் பாக்கியசாலி; பிறரைச் சிரிக்கப் பண்ணுபவன் பெரியவன்; தனக்குள் சிரித்துக்கொள்ளுபவன் ஈடுசோடில்லாதவன்' என்கிறது ஆராய்ச்சிப் புத்தகம்.

பெரிய மனிதர்களில் ஒன்ரண்டு பேர்வழிகள் எடுத்ததற்கெல்லாம் தங்கள் திருவாயைத் திறந்தால், எங்கே தம் பெரிய மனிதத் தன்மை மாற்றுக் குறைந்துவிடுமோ என்று பயந்து சிரிப்பு விஷயத்தில் ரொம்பவும் கட்டுச் செட்டாக இருக்கப் பிரயத்தனப்படுவார்கள். ஆனால் அவ்விதம் அவர்கள் சிரித்தாலும், சிரிக்காவிட்டாலும், உலகம் அவர்களைக் கண்டு கட்டாயம் கைகொட்டி எள்ளி நகையாடும் என்பது மட்டும் நிச்சயமே! 'சிரி! உலகம் உன்னோடு சேர்ந்து, சிரிக்கும்!' என்கிறாரே ஆசிரியர் எல்லா விலர்.

இப்போது நாட்டிலே சிரிப்பு ஒன்றுக்குத்தானே ரேஷன் இல்லை! சிரிப்பின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றும் வகையில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள் சமூக ஊழியர்கள் என்றால் நீங்கள் சிரிக்கத்தான் சிரிப்பீர்கள். அவர் கடன் களிப்பூட்டுதல்...! நாம்தான் அவருக்குக் கடன் பட்டவர்கள்—நாம் சிரிப்பதால், நமக்குச் சிரிக்கத் தெரிவதால், நம்மால் சிரிக்க முடிவதால்...! உலகின் துன்பத்தையும், மாந்தரின் பொய்க் கவலைச் சுமையையும் ஒரு நொடியேனும் போக்க உதவுபவன் போற்றப்படவேண்டியவன்.

"கொள்ளைச் சிரிப்பினிலே,
கொட்டிடுவாள் தேனமுதம்
வெள்ளைக் குதலைமொழி
விந்தைபல செய்யும்மா!"

பச்சைக் குழந்தைகள் கள்ளங்கபடமற்ற கதுப்புக் கன்னங்களில் குழிவு தோன்றச் சிரிக்கையில், அவர்களது களிதுலங்கும் வெள்ளை உள்ளத்தின் குலுங்கும் கொள்ளைச் சிரிப்பில் மனம் பறிகொடுத்துப் போகாதவர்கள் யார்தான் இருக்கமுடியும்?

"புன்னகை பூத்திடும் வேளை—ஒரு
புதுமையும் காண்பதேனோ"

என்றுதானே நமக்கும் கவிமணியைப்போல எண்ணத் தோன்றுகிறது...!

உடல் பெருக்க என்னென்னவோ விளம்பரங்கள் வருகின்றன. ஆனால் 'சிரி; பருமனடை' என்ற வாசகத்தை ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள், இன்றை

யக் காஷ்மீர் பிரச்சினையைப் போல. சந்தோஷம் பரம ஔஷதமாம்!

அமெரிக்காவுக்கும் ஐஸன்ஹோவருக்கும் உள்ள உறவு, புன்னகைக்கும் பூவையர்க்கும் இருக்கவேண்டும்.

சிரிப்பு விஷயத்தில் கொஞ்சம் கணிசமாகத்தான் இருக்க வேண்டும் பெண்கள். அதுதான் நியதியுங்கூட. சாதாரணமாகப் பெண்கள் சிரித்த முகத்துடன் காணப்பட்டால் "ஸார், அந்தப் பெண்ணைப் பார்த்தீர்களா? லட்சுமி களை நிறையத் ததும்புகிறது. களையான சிரித்த முகம்......" என்பது போன்ற இப்படிப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களை ஸ்வீகரித்துக் கொள்ளத் தூண்டுவதற்கு மூல காரணமாக இருப்பதும் இந்த இளநகையே அல்லவா? அப்புறம் அவர்களுக்கெல்லாம் 'கல்யாண மார்க்கெட்'டில் ஏற்படும் மௌசைப் பார்க்கவேண்டுமே! ஆனால் இவர்கள் மட்டும் 'அழகர்கள் போட்டி'யை மட்டும் உலக அரங்கில் பிரஸ்தாபிக்காதிருக்கவேண்டும். வேண்டுமானால், 1953ம் வருஷத்திய ஓராண்டுத் திட்டப்படி சுயம்வரம் ஏற்படுத்திக்கொள்ளட்டும்; துரைத்தனத்துக்குத் தூது அனுப்பி யதாஸ்துவிடுவோம்.

'முள்ளெடுக்கும் பாவனையில் முல்லை நகை பூத்த' சகுந்தலையின் வாரிசுக் காதலாவது புன்னகையால் பிறந்து வளரட்டும்! ஆனால்...

> பட்டிதழ்ப் புன்னகைமெட்டி
> சைந்து—காதற்
> பாட்டுக்குப் பொருளாகப்
> பின்னலிடைத்
> தொட்டுத் தொடர்ந்திடும்
> காதலெனில்—அவன்
> தூவிய குறிப்பென்ன
> புன்னகையோ!'

என்று பாட்டெழுதக் கன்னியர் குழாம்மட்டும் பேனா பிடிக்கக் கூடாது...! ஆக, புன்சிரிப்புக்குப் பதிலாக கண்களும் சேர்ந்து சிரிப்பில் லயித்துவிட்டால்...!

அத்தி பூத்த மாதிரி முத்துப் பல் ஒளி சிந்தச் சிரிக்கும் சிரிப்பு பெண்களுக்கு ஆபரணம். வேறு எந்தப் பொன் நகையும் அவர்களது புன்னகைக்கு முன் ஈடுநிற்கமுடியாது. 'புகையிலை விரிச்சாப் போச்சு; பொம்பளை சிரிச்சாப் போச்சு...

என்ற பழமொழி பெண் இனம் அளவு மீறிச் சிரிப்பில் ஈடுபாடில்லாதிருக்க எழுந்த எச்சரிகையாகத் தான் இருக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே? (அடடே, அமிர்தம், உன்னைச் சொல்லவில்லை. நீ அளவுக்கு மிஞ்சும் போதுதானே அமிர்தமாகிறாய்!) அதேசமயம், முன்பு பளிங்கு மண்டபத்திலே பொங்கி வழிந்த சிரிப்பை திரௌபதை அடக்கச் சக்தியற்றுப்போக அதன் காரணமாக, துரியோதனன் கோபங்கொண்டு பிறகு பாரத யுத்தமே பிறந்ததாகக் 'கதை' சொல்லப்படுவதைக் கேட்கும் போது, சிரிப்பு விஷயத்தில் ஒரு 'கண்' ஜாடையாக வைக்கத் தோன்றுவது சகஜம்தான்...!

ஊழித் தாண்டவத்தில் பிரமன் உதிர்த்த பேய்ச் சிரிப்புக்கு ஒப்பு உவமை இல்லையாமே! இதுகூடக் கதைதானே...!

காரிய சித்திக்குக் கைகண்ட ஆயுதம் இந்தச் சிரிப்பு. பொங்கலுக்குச் சட்டை தைத்தாக வேண்டுமானால், டெய்லர் மாவு சாகிப்பிடம் செய்தியைச் சொல்லி, அத்துடன் 'நியாய விலை ரேஷன்' ரீதியில் அளந்து முறுவல் கீற்றொன்றைச் சிந்தினால், உடனே காரியம் கைமேல் பலன். ஆபீஸ் செல்லக் கொஞ்சம் நாழி ஆகிவிட்டால், மானேஜரிடம் நீங்கள் புன்னகை மலரை உங்கள் உதட்டோரத்திலும் கண்ணோரத்திலும் தூவி விட்டு, பிறகு பெண்டிங்கில் வைத்திருக்கும் நொண்டிப் புளுகையும் ஒருமுறை ஒப்புவித்துவிட்டால் போதுமே...! சிரிப்பு உங்களை ஆபீஸ் நாற்காலியில் அலக்காகத் தூக்கி வைத்து விடாதா, விக்கிரமாதித்தன் சிம்மாசனத்தைப்போல?

குடும்பச் சச்சரவுகளால் தம்பதிகளின் மனதில் படியும் வேற்றுமை உணர்ச்சியை அலம்பித் துடைத்துவிடும் புனிதத்தன்மை பொருந்தியது, சிரிப்பு.

அந்நாளில் சிரிக்கவைப்பதற்கென்றே அரண்மனைகளில் 'விதூஷகன்' ஒருவன் நியமிக்கப் பட்டிருந்தான்...!

இந்தச் சிரிப்பிற்கும் இந்த எழுத்தாளர்களுக்கும் மட்டும் நிரம்ப நெருக்கம் இருந்து வருகிறது, கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் கை குலுக்கிக்கொள்ளுவதைப்போல. மன் காடின் வெற்றி கண்டு பாகிஸ்தான் மலைப்பதைப்போல, சிரிப்பினால் காதலைத் தோன்றச் செய்து, கல்யாணம் செய்துவைத்து, நம்மையெல்லாம் விருந்துக்கு அழைப்பார்கள் கதாசிரியர்கள். அதே சிரிப்பினால் பின் குடும்பங்கள் பிளவுபடுவதைப் படிக்கும் நாம், கிங்காங் ராட்சச மல்யுத்த மனிதனைக் கண்டு நடுங்குவதைப்போல நடுங்கவும் வேண்டி வருகிறது. ஆனால் ஒன்று...! இந்த எழுத்தாளர்கள் மட்டும் காதலி, அல்லது காதலன் உதடுகளில் சிரிப்பை மட்டும் வரவழைக்காமல் கதைக்கு 'சுபம்' போடமாட்டார்கள். வாழ்க!

'புன்னகையும் புது நிலவும் போல தாங்கள் வாழ்வீர்களாக' என்று ஓர் எழுத்தாளர் எங்களை — அதாவது என்னையும்—என் அமிர்தத்தையும் வாழ்த்தியதை நான் மறந்தாலும், அமிர்தம் மறக்கமாட்டாள். ஏனென்றால், சிரிப்பு பற்றிய இக்கட்டுரைக்கே அவள் குமிழ் சிரிப்புத்தான் காரணம். கட்டுரை வெற்றிபெற்றால் கட்டாயம் அவளுக்குத்தான் இந்தச் சிரிப்பைக் காணிக்கை செலுத்தப் போகிறேன்!

ஒரு சமயம் என் புத்தகம் ஒன்று வந்தது. 'அமிர்தம்' என்று பெயர் புத்தகத்துக்கு. இது பிரசுரத்தார்கள் இட்ட பெயர். ஆனால் இதைக் கண்டு என் மனைவி கொட்டிய கொள்ளை முறுவல் வெள்ளத்திற்குக் குவலயமே ஈடில்லை. ஏனென்றால் அவள் பெயரும் அதுதானே. நானே வேண்டுமென்று அவள் நினைவாக அவள் பெயரையே புத்தகத்துக்குச் சூட்டிவிட்டதாக அவள் நினைத்திருக்கிறாள்! நல்லவேளை, புத்தகத்தின் அட்டையையும் தனதாக்கிக் கொள்ளாமல் என்னைத் தப்புவிக்கச் செய்துவிட்டாள்...!

கலைக் கண்களுடன் உற்று நோக்கினால் வானம் சிரிப்பதையும், வையம் சிரிப்பதையும் பூ புன்னகைப்பதையும் இயற்கை சிரிப்பதையும், நிலா, அருவி சிரிப்பதையும் கண்கூடாகக் காணலாம். பூக்கள் சிரிக்கின்றன; புள்ளினங்கள் நகைக்கின்றன. தெரியாமலா அழகின் சிரிப்பைப் பாடுகிறார் நம் கவிரசர்!

'ஊஹூம் சிரிக்காதே' என்று 144 போடும் நிலையிலும்கூட—அதாவது துக்கத்தின் வரம்பு மீறிய நிலையிலுங்கூட நாமெல்லாம் சிரிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். உள நூல் இப்படிச் சொல்கிறது. பார்க்கப்போனால் சிரிப்பது ஒரு கலை என்றுதான் சொல்லவேண்டும். மனம்விட்டுச் சிரிக்கவேண்டும். விளக்கெண்ணெய் புகட்டியதற்காக அழும் குழந்தை, சர்க்கரை சாப்பிட்டதும் உடனே சிரிப்பது போல, இன்றைய இரவின் இருட் துயரில் நாளை உதயமாகும் நம்பிக்கை ஒளியை எண்ணிச் சிரிக்கவேண்டும்.

'ஹாஸ்யம்—சிரிப்பு தூய்மையான ஓர் ஆனந்தம்' என்கிறார் ஸ்ரீபிரகாசா.

போட்டோ எடுத்துக்கொள்ளப்போனால் ஸ்டுடியோவில், 'ஸார், கொஞ்சம் லேசாகச் சிரியுங்கள்' என்கிறான் காமிராக்காரன். சினிமா ஸ்டுடியோவில் நம் நடிகைகளிடம் சிரிப்பை வரவழைப்பதற்கு, கண்ணீரைக் காணிக்கை செலுத்தித் தவம் கிடக்கும் டைரக்டர்களைப் பற்றிய கதையை நாம் அறியமாட்டோமா, என்ன? பத்திரிகைகளில் 'டால்' அடிக்கும் சோப்பு விளம்பரங்களில் கோலப் புன்னகை குருத்துவிட நம் நட்சத்திரங்கள் காட்சியளிக்கிறார்கள் நம் புன்னகைக்குப் பரீட்சை வைப்பதுபோல. இவர்கட்கெல்லாம் ஏன் நம்

அரசாங்கச் சார்பிலே கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் சிரிப்புப்போட்டி வைக்கக்கூடாது அண்மைப் புயல் நிவாரணத்திற்காகிலும் பணம் சேருமே! அதைவிட, அவர்களது பூங்கரங்கள் கிரிக்கெட் மட்டை பிடிக்கும் தலையெழுத்தும் மாறிவிடும்; எக்ஸிபிஷனில் கடைகளில் உட்கார்ந்து வியாபாரம் செய்யும் தலைவலியும் எட்டிப்போய்விடும்...! சென்ற ஆண்டு நட்சத்திரங்களின் பொங்கல் தமாஷ் பலே ஜோர்! ஏன், இவர்களையெல்லாம் சேர்த்து தேர்தல் வாடையே இல்லாமல் கூட்டணியாக்கி, நம் சிரிப்பின் கலையை அயல் நாட்டுக்கும் பரப்ப ஒரு தூதுகோஷ்டி அனுப்பக்கூடாது...! நம்மிடம் தான் கலைவாணர், புளிமூட்டை...! ஊஹூம், தொடாராது இது!

“சென்னை நகரின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் வளர்ந்து இப்பொழுது யாருக்குச் சொந்தம் எனும் சர்ச்சை பிரமாதமாக நடக்கிறது. ஆனால் சென்னையை இரண்டாகப் பிரித்தால்கூட என்னையே கவர்னராக வைத்துக்கொள்வதாக எல்லோரும் கூறுகின்றனர்...”

இப்படிச் சமீபத்தில் நம் கவர்னர் ஸ்ரீபிரகாசா கூறுவதைக் கேட்க யார்தான் சிரிப்புக்கு இடம் தராதிருக்க முடியும்? இம்மாதிரிதான் நீதிபதி ஏ. எஸ். பி. ஐயரின் பேச்சு ஒவ்வொன்றிலும் நகைச்சுவையும் சிரிப்பும் இரண்டறக் கலந்திருக்கும், கொரியாவும் கொரியாப் பிரச்சினையும் மாதிரி!

என் இலக்கியத்துணை ‘பாலா’. வாழ்வின் துணையுங் கூட! என்னை அறியும், உணரும், வரவேற்கும் இலக்கிய உலகம் இக்கட்டுரையாளரையும் நன்கறிய முடியும். எங்கள் உறவு நியதி இப்படி. என்ன, சிரிக்கிறீர்களே...!

—பூவை

என்னைச் சிரிக்க வைக்க சிட்டி, பரதன், கல்கி, சுந்தா, சுகி, நாடோடி, ஸ்டீபன் லீகாக், ஷா, செஸ்டர்ட்டன் போன்றவர்கள் தினமும்—என் ஜுனு, அதாவது பங்களாவில் புடைசூழ்ந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நான் சிரிக்கிறேன்; சிரிக்கிறேன்; சிரித்துக்கொண்டே இருக்கிறேன். சிரிப்பே என் உலகம்; சிரிப்பே என் படைப்பு; நானே சிரிப்பின் படைப்பு! சிரிப்பே என் சிரிப்பு!

சிரிப்பிலே ‘குமரிச் சிரிப்பு’, ‘காந்திச் சிரிப்பு’, ‘பொங்கல் சிரிப்பு’, ‘மஞ்சிவிரட்டுச் சிரிப்பு’, ‘கன்னிச் சிரிப்பு’, ‘டார்பிடோச் சிரிப்பு’, ‘முல்லைச் சிரிப்பு’ என்று இப்படிப் பலரகம் உண்டு. பெயர்களைக் கேட்டுவிட்டு ஏன் அமிர்தம், இப்படிக் குலுங்கக் குலுங்கக் கும்மாளமிட்டுச் சிரித்துக்கொட்டுகிறாய்? உஷ்...... ஊஹூம், சிரிக்காதே...! ★

சிறுவர் அரங்கம்
உபாத்தியாயர்: (ராமுவைப் பார்த்து) கண்ணாடிச் சாமான் கீழே விழுந்தால், நாம் என்ன செய்ய வேண்டும்.
ராமு: ஓசைப்படாமல் நழுவ வேண்டும் சார்!
" பஞ்சமேதடா பசியுமேதடா? பாரினில் உயர்ந்த நம் நாட்டில் பஞ்சமேதடா...?"
"...மூன்று நாளாய்ப் பட்டினி. ஒரு கவளம் அன்னம் கொடுங்கோம்மா. புண்ணியமுண்டு."
அம்பி

மனிதரைப்போல்

அழ. வள்ளியப்பா

வில்லெடுத்துப் பூனையார்
விரைந்து ஓடும் எலிகளைக்
கொல்ல ஆசை கொள்கிறார்;
குறியும் பார்த்து எய்கிறார்!

துறட்டி ஒன்றை யானையார்
துதிக்கை நுனியில் ஆவலாய்
இறுக்கிப் பிடித்துச் செல்கிறார்;
இளநீர் யாவும் பறிக்கிறார்!

உண்டி வில்லால் மந்தியார்
உயரே உள்ள பழங்களைக்
கண்டு ஓங்கி அடிக்கிறார்;
கனிகள் தம்மை உதிர்க்கிறார்!

குட்டி நாயார் உச்சியில்
ரொட்டிப் பெட்டி இருப்பதை
எட்டி எடுத்துத் தின்னவே
ஏணி ஏறிச் செல்கிறார்!

'உங்களைப்போல் எதையுமே
யுக்தி யோடு செய்திட,
எங்க ளுக்கும் தெரியுமே!'
என்றே காட்டு கின்றன?





தியாகம்



கா. அப்பாத்துரை

பெரியவர், சிறியவர் என்பது ஒருவர் பட்டம் பதவியைப் பொறுத்ததல்ல. பணத்தையோ அதிகாரத்தையோ படிப்பையோ கூடப் பொறுத்ததல்ல. கடமை உணர்ச்சியையும் பொறுப்புணர்ச்சியையும் பொறுத்தது. கடமைக்காகவும் பொறுப்புக்காகவும் உயிரைக் கூடத் தியாகம் செய்த தியாகிகள் பலர் உண்டு.

வில்லியம் ஹேரா அத்தகைய ஒரு தியாகி என்பது எவருக்குமே தெரியாது; அவன் இறந்த பின் தான் தெரியும் அவன் நாட்டாருக்கு, எப்பேர்ப்பட்ட தியாகி தமக்குத் தெரியாமல் தம்முடன் வாழ்ந்து தியாகம் செய்து கொண்டே மௌனமாகத் தம்மை விட்டுப் போய் விட்டானென்று.

அவன் ஒரு புகை வண்டி ஓட்டி. டிலாவேரிலிருந்து ஹட்சன் நோக்கிச் செல்லும் புகை வண்டிப் பாதையில் அவன் புகை வண்டி ஓட்டிக் கொண்டிருந்தான். பாதை ஒரு மலை மீது ஏறிச் சென்றது. போகும் போது ஏற்றமாதலால் வண்டியில் இரண்டு இயந்திரம் பூட்டிச் செல்லும். திரும்பி வரும் போது இறக்கமாதலால், இயந்திரங்கள் பெரும் பாலும் மிகுதி வேலை செய்ய மாட்டா. வண்டிகள் தம் கனத்தால் தாமே உருண்டோடும்.

அன்று இரண்டு இயந்திரங்களும் தம் முழுச் சக்தியுடனும் வேகத்துடனும் வண்டிகளை இழுத்துச் சென்றன. எதிராக அடித்த காற்று புகையைப் பின்னாலுள்ள வண்டிகளை நோக்கி நேராக அடித்துச் சென்றது. இருபுறங்களிலும் அருகேயுள்ள மரங்கள், திட்டுகள் கூழாங் கற்கள், 'விர், விர்' என்று பின்நோக்கிப் பாய்ந்தன. தொலைவிலுள்ள பொருள்கள் வண்டி செல்லும் திசையில் சுழன்று ஓடிவந்து அவற்றைப் பின் தொடர்ந்து பாய்வது போலிருந்தன.

இரண்டு இயந்திரங்களும் முன்னால், ஒருங்கே இணைக்கப் பட்டிருந்தன. முன் இயந்திரத்தை யாரோ ஓட்டினான். பின் இயந்திர மோட்டியும் இயந்திரத்தை முடுக்கி விட்டு வந்து பேசிக் கொண்டிருந்தான்.

அன்று புகை வண்டித் தொடர் முழுவதும் ஈமொய்த்தது போல ஆண் பெண் குழந்தைகள் மொய்த்திருந்தனர். அவ்வளவு உயிர்களையும் ஹட்சன் கொண்டு போய் சேர்க்கும் பொறுப்பு அவனுடையது என்ற இறுமாப்பு ரோவின் அமைதியில் தொனித்தது.

அன்று அவன் பொறுப்பு பெரிது தான். அன்றே அது வகையில் சோதனையும் ஏற்பட்டது.

ஏற்றத்திலும் பாதி கழியவில்லை. ஏற்றத்தின் முகட்டில் ஒரு கரும்புள்ளி தெரிந்தது. ரோ அதை தன் தோழனுக்குச் சுட்டிக் காட்டினான். அது எதிராகத்தான் வந்து கொண்டிருக்கிறது. "இச்சமயம் எதிர் வண்டி ஏதும் இருக்க முடியாது. புறப்பட்ட பொழுதே இதை உறுதியாகத் தெரிந்துதானே புறப்பட்டோம். இது என்னவாயிருக்கும்?" என்று கேட்டான் ரோ.

தோழனுக்கு ஒன்றும் புரியவில்லை.

புரிந்தாலும் புரியாவிட்டா புள்ளி பெரிதாயிற்று. தன் பெரிய உருவத்தை ஏற்றத்தின்

மீது வெளிப்படையாகக் காட்டி எக்காளமிட்ட வண்ணம் பாய்ந்து வந்தது.

அது இன்னது என்று ஊகித்து விட்டான் ரோ. அது பெரிய ஒரு கட்டை வண்டி. காட்டுக் கட்டைகள் மலை மலை யாக அதன் மீது குவித்திருந் தது. அது கிளைப் பாதையில் முட்டுக் கொடுத்து நிறுத்தப் பட்ட தொடர் வண்டியில் ஒரு பகுதி. முன் வண்டிகளை முன் வண்டியுடன் இணைத்த இணைப்பு எப்படியோ கழன்று பின் வண்டியுடன் யாவும் இறக் கத்தில் சரிந்து வந்திருக்க வேண்டும். கிளைப்பாதை கடந்து அவை தானாகச் சறுக் கித் தலைப்பாதையில் வந்து வேகமாகச் சரிந்து பாய்ந்து வந்தன.

"ஆபத்து! ஆபத்து! கட்டை வண்டி அழிந்து நொறுங்குவது உறுதி. ஆனால் அம்மோத லால் தொடர் வண்டியில் பல் லாயிரக்கணக்கான பிரயாணி களுக்கு அதைவிடப் பெரும் ஆபத்து...!"

ரோ என்ன நினைத்தானோ, தன் தோழனிடம் "உன் இயந் திரத்தைப் பார்க்கப் போ. வண்டி வேகத்தைச் சற்று குறைக்கப் போகிறேன். நீ உன் இயந்திர இணைப்புப் பூட் டைத் தாழ்த்தி விடு" என்றான்.

'ஏன்' என்று கேட்டான் தோழன், சிறிது கவலையுடன்.

"பின்னால் சொல்கிறேன், சொன்னபடி செய்" என்றான் ரோ.

பேரிரைச்சலுடன் சக்கரங்கள் இரைந்தன. முட்டுக்கட்டை யிடப்பட்டது. வண்டி சற்று வேகம் தணியத் தொடங்கிற்று. செய்வது இன்னது என்று புரி யாமலே, பின் இயந்திரமோட்டி இணைப்பைத் தளர்த்தினான்.

புகை வண்டியும் முன் இயந் திரமும் இணைப்பில்லாததால் பின் தங்கி மெல்ல நின்றது. ஆனால் பூட்டப்பட்டிருந்த முன் இயந்திரம் தன் முழு பலமும் பெற்று முன்னோக்கி அம்பு போல் பாய்ந்து சென்றது.

ரோ செய்த செயலின் பொருள் பின் வண்டியோட்டிக்குச் சிறிது புரியத் தொடங்கிற்று. "ஆ, அண்ணா, என்ன செய்கிறாய்!" என்று அலறினான்.

அவன் அலறலுக்குப் பதில் கூற யாரும் இல்லை.

இயந்திரம் பாய்ந்து முன் சென்றது. கண்ணுக்கெட்டிய தொலைவில் கட்டை வண்டியும் பாய்ந்து வந்தது. ஒரே இடி முழக்கம். கட்டை வண்டி பாதையை விட்டு விலகிற்று. இயந்திரம் அதன் மீது பாய்ந்து நொறுங்கிற்று. கட்டை வண்டி யும் நொறுங்கிற்று. கட்டை கள் பற்றி எரிந்தன. இயந் திரம் சாய்ந்து குறுக்காக விழுந்து கிடந்தது.

ரோவின் உடல் துண்டு துண் டாயிற்று.

ஆயிரக்கணக்கான பிரயாணி கள் உயிர்களும் ஒருங்கே பாது காக்கப்பட்டு விட்டன. ரோ இறந்தது அதற்காகத் தான் என்று அவர்களுக்குத் தெரிய வர நெடு நேரமாயிற்று.

ஆம்! வண்டியோட்டும் வகுப்பு இனி தலைநிமிர்ந்து நிற் கலாம். அது ரோ போன்ற தியா கியை உண்டுபண்ணிய வகுப்பு. எந்த நேரத்திலும் எந்த வண்டி ஒட்டியும் அத்தகைய தியாகத் திற்கு உரியவன் என்ற எண் ணம் எல்லாப் புகைவண்டி ஒட் டிகளுக்கும் ஏற்பட்டது. ★

சிவாஜி கணேசன்

தயாரிப்பு: கோ. கணபதி
சி. கே. ராதாகிருஷ்ணன்

> 'பராசக்தி' திரைப்பட உலகிற்குக் காணிக்கை தந்த புகழ்க் கலைஞர் சிவாஜி கணேசன் அவர்கள் நாடக உலகிலே பதினான்கு ஆண்டு அனுபவம் வாய்ந்தவர், பாத்திரங்களை உணர்ந்து அவற்றுடன் ஒன்றிய உணர்ச்சி பூர்வமான நடிப்பு இவரது வெற்றிக்கு ஆதாரம். தமிழ் வாழவேண்டும்; தமிழ்க் கலைகள் திக்கெட்டும் பரவ வேண்டும் என்பது இவரது எண்ணம்; கனவுங்கூட!

"பட உலகிற்குத் தாங்கள் எவ்வாறு அறிமுகமானீர்கள்?"

"நான் சக்தி நாடக சபாவில் நடித்துக்கொண்டிருந்தேன். அங்கிருந்து, நேஷனல் பிக்சர்ஸ் பி. ஏ. பெருமாள் அவர்கள் என்னை சினிமாவில் நடிக்க அழைத்துக் கொண்டு வந்தார்."

"பராசக்தியில் உங்களின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தவை யாவை?"

"அப்படத்தின் டைரக்டர்களான கிருஷ்ணன் பஞ்சுவின் டைரக்ஷனும், கருணாநிதியின் அழகிய வசனங்களும்தான், நான் வெற்றியடைந்ததற்குக் காரணங்களாகும்."

"ஒரு படத்தின் முடிவு, சோக முடிவாக இருக்கவேண்டுமா, அல்லது இன்ப முடிவாக இருக்கவேண்டுமென்கிறீர்களா?"

"இரண்டுமே நன்றாக இருக்கும். படத்தின் முடிவு, கதையமைப்பைப் பொறுத்திருக்கிறது."

"தற்காலத்திற்கு எம்மாதிரிப் படங்கள் தேவை என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?"

"மக்களுக்குப் புதிய புதிய விஷயங்களைக் கூறினால்தான் பிடிக்கும். பழகிப்போன விஷயங்களைச் சொல்வதை விட, புதிய விஷயங்களைக் கூறினால், அதனை மக்கள் வரவேற்பர்."

"தமிழ்ப் படங்களில் இந்தி மெட்டுக்களைக் காப்பி அடிக்கிறார்களே, அதைப்பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?"

"மக்களுக்கு எது பிடிக்கிறதோ அதைப் புகுத்தலாம். ஜனங்களுக்கு இந்தி மெட்டுக்கள் பிடிக்கின்றன என்றால் அவைகளைப் புகுத்தலாம். அல்லது கர்நாடக சங்கீதமே பிடிக்கிறதென்றால் அதையே புகுத்தலாம்."

"பொது மக்களின் போற்றுதலை எக்காலமும் பெற நடிகன் கடைப்பிடிக்க வேண்டியவை எவை?"

"நடிகன் பொதுமக்களோடு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்—வழி எதுவாக இருந்தாலும் சரி! நாடகங்களின் மூலம் அத்தகைய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். இன்னும் எவ்வளவோ வழிகள் இருக்கின்றனவே!"

"நாடகத்தின் மூலம் நீங்கள் பெற்ற அனுபவம் யாது?"

"எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து (அதாவது பத்து வயதி

தாயும் — தனயனும்

விருந்து) நான் நாடகங்களில் நடித்துக்கொண்டிருக்கிறேன். இப்பொழுதுதான் சினிமாவிற்கு வந்திருக்கிறேன். ஒரு நாடக நடிகனாக இருந்தால்தான் சினிமாவில் நிலைத்து நிற்கலாம் என்ற அனுபவம் எனக்கு இந்தக் குறுகிய காலத்தில் கிடைத்துள்ளது.''

''திரைப்படங்களின் வளர்ச்சியால், நாடக வளர்ச்சி பாதிக்கப்படுமா?''

''கிடையாது. சினிமாப் படங்களினால், நாடகத்தை மங்கவைக்க முடியாது.''

''தாங்கள் எப்படிப்பட்ட சுவையுள்ள பாத்திரங்களைத் தாங்கி நடிக்க விரும்புகிறீர்கள்?''

''எப்படிப்பட்ட பாத்திரமாக இருந்தாலும் என்னால் நடிக்க முடியும். எந்தப் பாத்திரத்தையும் நான் வெறுக்கவில்லை. அனைத்தையும் விரும்புகின்றேன். எல்லாப் பாத்திரங்களையும் விருப்பு வெறுப்பில்லாமல் ஏற்று நடிக்கக்கூடியவன் தானே நடிகன்?''

''உங்கள் பொழுதுபோக்கு என்ன?''

''எனது அன்னையாரோடு மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருப்பதுதான் எனது இனிமையான பொழுதுபோக்கு.''

''சில மாதங்களுக்கு முன் நடந்த அகில உலகப் படவிழாவினால், இன்றையச் சினிமா உலகத்திற்கு ஏதாவது பயன் கிடைக்குமா?''

''ஓ! நன்மை ஏற்பட்டிருக்கிறதே! எல்லோருக்கும் காப்பி அடிக்க வசதியாய்ப் போயிற்று. இப்போது சொந்தக் கற்பனையை யாருமே உபயோகிப்பதில்லை.''

''கனம் கேஸ்கார் ரேடியோவில் திரைப்படச் சங்கீதத்தைக் குறைக்க வேண்டுமென்று கூறுகின்றாரே, அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''இலங்கை, கோவா, பாகிஸ்தான், பம்பாய்போன்ற இடங்களிலெல்லாம் சினிமா இசைத்தட்டுகளை வைக்கிறார்கள். இங்கு, (தென்னிந்தியாவில்) தான் வைப்பதில்லை. அப்படியே வைத்தாலும், ஏதோ ஒரு காலத்திலே, ஏதோ ஒரு வித்வான் பாடியதை வைக்கிறார்கள். சினிமா சங்கீதம் (இசைத்தட்டுகள்) கேட்கத்தானே நாம் ரேடியோ வாங்குகிறோம். சினிமா இசைத்தட்டு நிகழ்சி இல்லையென்றால், அந்த ரேடியோவையே அறவே ஒழிக்க வேண்டும் என்பதுதான் என் சொந்த அபிப்பிராயம். பல தலைவர்களின் பேச்சுக்கள் ரேடியோவில் வருகின்றனவே என்றால், அது எப்போதோ ஒருமுறைதானே! ஆகவே, தென்னிந்தியாவில் வீடுகளில் ரேடியோ வைத்திருப்பவர்களெல்லாம் சென்னையிலுள்ள ஒரு மைதானத்தில், அந்த ரேடியோக்களை வைத்துக் கொளுத்திவிடவேண்டும் என்று கூறுகிறேன்.''

''இன்றையத் திரைப்பட வசனகர்த்தாக்களில் யார்யாரை முதன்மையாகக் கருதுகின்றீர்?''

''அறிஞர் அண்ணாதுரை, மு. கருணாநிதி, இளங்கோவன்.''

''தமிழ்நாட்டு ரசிகர்களுக்குப் 'பொன்னி'யின் வாயிலாக என்ன கூற விரும்புகிறீர்கள்?''

''அடிக்கடி 'பொன்னி' பத்திரிகை மூலமாய் ரசிகர்களிடம் பேசிக் கொண்டிருப்பேன்?'' ★

திடீர் பயில்வான்

"சுதி"

காட்சி 1

[பயில்வான் பங்காரு வீட்டு முன்கூடம். கர்லா, தம்பல்ஸ், பார்...முரட்டுச் சங்கிலி, இவ்வகையிலே பல. சீடன் குண்டுச்சாமி பங்காருவுக்கு உணவு தயாரிக்கும் நேரம்]

பங்காரு: டேய் குண்டுச்சாமி! புளியங் கொட்டை...

குண்டு: (பயம்) ஊறவைச்சு விட்டேன்.

ப: ஊறின புளியங்கொட்டை திங்கிறது உன்னைப்போல நோஞ்சானுக்குச் சரி. நல்ல ஊறினு, அது பயில்வான் திங்கிற உணவாகுமா? மடையா, கொண்டாடா...

கு: வந்திட்டேன்...

[புளியங் கொட்டை இரண்டு படி ஊறியும் ஊருமலும் கொண்டு வைக்கிருன். சிஷ்யன் மாடசாமி பயந்து பயந்து வருகிருன். ஒடிசல் உடம்பு; எலும்புந் தோலுமுள்ள தோற்றம்]

மாடசாமி: வணக்கம் வருது...

பங்: (தம் பிடித்து) ஹாாது ஹது, மாடசாமி?...சாப்பிடுங்க.

மாட: புளியங்கொட்டை சுண்டலா?

பங்: பின்னே பயில்வான் வீட்டிலே கிண்டலா செய்வாங்க...டேய் குண்டுச்சாமி, இவருக்கு ..

கு: குல்கந்து கோண்டாரட்டுமா?

மாட: (ஆவல்) கொண்டாங்க ரோசாப்பூ குல்கந்து...

ப: ரோசாப்பூ (சிரிப்பு) பூ...பூ... அது உங்கமாதிரி நோஞ்சானுக்கு டேய்...

கு: உஸ்தாத், ஊமத்தம்பூ குல்கந்து இருக்குது...

மா: ஊமத்தம்பூ குல்கந்தா?

ப: உன் எலும்புக்கூடு நெறுநெறுன்னு வளருமே... ஊமத்தம்பூ குல்கந்து வேண்டாமாம்!

கு: ஹல்வா கொண்டுவரட்டுமா?

மா: அது எனக்கு உயிர் ஆச்சுதே. பாதாம் அல்வாதானே....

கு: எட்டிக்கொட்டை ஐயா... எட்டிக்கொட்டை ஹல்வா...

மா: எஞ்சாமி! நம்மை விட்டுப் போடுங்க...நமக்கும் எட்டிக்கொட்டைக்கும் எட்டாது.

ப: அவரு என்ன கண்டாரு? நம்ம காலே டிபன் என்ன தெரியுமா?

மா: புளியங்கோட்டை சுண்டல், ஊமத்தம்பூ குல்கந்து, எட்டிக் கொட்டை ஹல்வா !

ப: புளியந்தோலி கஷாய காப்பி!

மா: அம்மா...

ப: இத்தனையும் எடுத்து தம் பிடித்து, நம்ம சிஷ்ய கோடிகளுக்கு கோதாவிலே இறங்கி, நாலு பிடி ரெண்டு கும் கும். மூணு வர்மத் தட்டு, கொடுத்து...

[நெஞ்சை விம்முகிருர்

மா: எனக்குத் தலே சுத்துது, பயில்வான்ஜி!

கு: ஒண்ணும் வேண்டாமுன்ன, மல்லாக்கொட்டை மசாலவடை...

மா: கொண்டாங்க... கொண்டாங்க...

ப: பாவம், பல்லைப் பறிகொடுக்கப் போருர் மாடசாமி.

மா: ஏன்?

ப: மல்லாக்கொட்டையை நயம் தேங்காயெண்ணெ கொட்டி அரைச்சு அரைச்சு வேப்பம்பட்டை 100 பலம் சதகுப்பை 60 பலம் நைஸா பொடி பண்ணி...

மா: வேகவிடறதில்லையா? அரைக்கணுமா?

மா: (குமட்டல்)...!!

கு: சொல்லும்போதே குமட்டல் வருதே...ஐயாவுச்கு.

மா: போதும சொல்லாதிங்க பயில்வான்ஜி. எங்னோட லட்டர் கிடைச்சுதா?

ப: ஆகா, கிடைச்சுது! உங்க சம்சாரம், சீனியம்மாளும் தகப்பனார் வீட்டோடே வந்துட்டுதா?

மா: ஆமா, வந்திட்டுது. நாம் நிற்கிறோம்...

கு: என்ன, பயில்வான்ஜி! இவர் நமக்கு ஜோடியா?...

ப: உனக்கில்லேடா. குண்டு... எனக்கு ஜோடி இந்த மாடசாமி உஸ்தாத்...

கு: உஸ்தாத்! (வீரப்பார்வை)

ப: ஹா...!

கு: ஒருதரம் தலைஅசையுங்க, இந்த ஆசாமியை, நம்ம கர்லாவுக்குள் கைப்பிடியாக்கிச் செருகி வைக்கிறேன்.

மா: கபர்தார்! உஸ்தாத், சலாம்.

[மாடசாமி போகிறான்]

கு: உஸ்தாத், இந்த ஆட்டுக்குட்டி உங்களோட குஸ்தி போடவா?...

ப: கனம் சிம்மசிங்க சித்கஜமதோன்மத்த பயில்வான் பங்காருவிடம் கைகொடுக்க வந்திருக்கிறான்.

கு: (சிரிப்பு)

ப: கூப்பிடு சிஷ்யப் பயல்களை.

[கர்ஜனை கேட்டதும் போகிறான் குண்டு. பங்காரு தண்டால் போடுகிறார்]

காட்சி 2

[அதே ஊரில் எங்கோ ஒரு மூலையில் ஒரு தெருவின் முதல் வீட்டுக்கு உள்புறம் சீனியம்மா அழுகையும் கண்ணுமாக இருக்கிறாள்]

தங்கம்: இந்தா சீனு. இப்போ என்ன தலைமுழுகிப்போச்சாம். உன்னைத் துரத்திவிட முடியுமா? கை நீட்ட முடியுமா?

சீனி: பேசாதம்மா! அவரு இப்போ முன்னைப்போல சோளத் தட்டையில்லை. கசரத் தண்டால் எடுக்கிறார்!



[நல்லச்சாமி வருகிறார்]

நல்ல: யாரு எடுக்கிறார்?

த: நானும், நம்ம மகள்தான் கோவிச்சு வந்திட்டதா, ஒரு வாரமா நினைச்சேன். இப்பதான் தெரியுது உண்மை...

நல்: என்னம்மா சீனி? இப்பவே சொல்லு, உன் மாப்பிள்ளை அந்தப் பயல் பல்லைத்தட்டி உள்ளங்கையிலே.

சீனி: ஐயைய்யோ, அப்பாவேண்டாம். அவரு பழைய ஆள் இல்லே!

நல்: உன்னைக் கண்டா, தோப்புக்கர்ணம் போடுவாரா! இப்போ என்ன கேடுவந்திருக்கு உனக்கு?...

த: அது என்னமோ, தண்டால் பஸ்கி எடுக்குதாம். உடம்பிலே கறி ஏறிப்போனு (அழுகை) எம்மகளை இப்படியா விரட்டச்சொல்லுது?... கையை ஒடிச்சு எரியற அடுப்பிலே வைக்க!...

நல்: என்னது, இவதான் கோபித்துக்கொண்டு வந்ததாக நினைச்சேன்! எம்மா சீனி, உன்னை அவன் தொட்டானு?

சீ: அடிச்சு, எம்முதுகே பலகையாப் போச்சு!

த: தொட்டு அடிச்சதிலே பலகையாப் போச்சாமே...

நல்: நல்லச் சாமியை பொல்லாத சாமியாப் பார்க்கப்போறான். போய்க் கையைக் காலை வாங்கினாத்தான் சரியா வருவான்...

சீ: ஐய்யைய்யோ... வேண்டாம் அப்பா, உங்களையும் கொன்று குழியை வெட்டி...

த: எம் புருஷனைக் கொல்ல முடியுமா, சீனி? உம் புருஷன் கொத்தவரைக்காய்...

சீ: அம்மா அவருக்கு இப்போ வலுவு இருப்புக் கடப்பாறை மாதிரி இருக்கு இப்போ... இவங்க போனு அப்பாவுக்குத்தான் ஆபத்து.

நல்: (திடுக்கிட்டு)என் சீனியம்மா, கிஜமாவே, உம் புருஷன் அந்த மாட சாமி வஸ்தாத் ஆகிவிட்டானு?

[மாடசாமி வருகை. வரும் போதே தம் கட்டி பயில்வான் நடை போடுகிருன்]

சீ: (அழுகை) அய்யோ, இங்கே வந்திட்டாங்களே. அம்மா, அப்பா காப் பாத்துங்க...(உள்ளே ஓடுகிருள்)

மா: ஆகா, இங்கேயா வந்திருக் குதே...இனிமேல் சொன்னதைக் கேட்பயா?

சீ: கேட்கிறேன்... (உள்ளே யிருந்து)

நல்: (பயந்து)வாங்க, மாப்புள்ளே! நீங்க இப்போ குஸ்தி கோதா கத்துக் கிடறதாகக் கேள்வி...

மா: நீங்க நம்பலே. (கோபம்) எங்கே உங்க மக சீனி. கொண்டாங்க இப்படி...(கத்தல்)

த: இந்தா ஏ சம்பந்திமவனே, எம் புள்ளேயெக் கைவைச்சே, உங் கருமாதிக்கு எலும்பு அகப்படாது...

மா: மாமா, அத்தையை மரி யாதையா இருக்கச் சொல்லுங்க! அன் கோபம் பொல்லாதது...

[நாலைந்து குத்து நல்லசாமிக் குக் கொடுக்கிருன்]

நல்: ஏண்டா! புல் தடுக்கி நீ என்னே அடிக்கிறதாவுது? இதோ பாரு...

மா: ஆகா, பார்க்கலாம்.

[இருவரும் குஸ்திக்கு ஆயத் தம் செய்யும் கெடுபிடியில் தண்டோரா சத்தம் வரு கிறது தெருவிலிருந்து]

குரல்: இதனுல் சகலமான ஜனங் களுக்கும் தெரிவிப்பது என்னவென் ருல், அம்மாமார்களே, ஐயாமார் களே நம்மவூர் சிம்மசிங்க மத்தகஜ பங்காரு பயில்வானுக்கும், திருவூர் மாடசாமி பயில்வானுக்கும்

[ஜன்னல் வழியே பார்க் கிருள் சீனியம்மா]

சீ: என்ன, என்ன? குஸ்தியா?

[மகளோடு தாயும் பார்க் கிருள்]

தாய்: எம்மா, உம் புருஷனு அந்த யானேகிட்டே குஸ்தி செய்யப்போற தாம்...என்னம்மா, அவங்கிட்டே நிக்க முடியுமா...

சீ: என் தாலிக்கு... (விம்மல் விக்கல்)

நல்: இந்தா தள்ளு... ஏனய்யா என்ன?

[தண்டோரா குரல் ஜன்னல். பக்கம் பார்க்கிருன். மீண்டும் நல்லசாமி ''என்ன'' என் கிருர்]

குரல்: யாரோ மாடசாமிப் பயில் வானும்; அவருக்கும் பங்காரு பயில் வானுக்கும் அடுத்த வெள்ளிக்கிழமை காந்தி சவுக்கத்திலே குஸ்தி பந்தயம். ஆயிரம் ரூபாய்... வாருங்கள் வாரு ங்கள். கண்டு களி கூறுங்கள்...

****

நகைச்சுவை தூவி கட்டுரை, நாடகம், கதைகள் எழுதுவதில் ரேடியோ 'சுகி' அவர்கள் பெயர்பெற்ற தலைசிறந்த எழுத்தாளர் — ஆசிரியர். சிந்தனை யைக் கிளறும் இவரது எழுத்துக்களுக்கு தமிழ்நாட்டில் அன்றும் சரி, இன்றும் சரி நிரம்ப வரவேற்பு இருந்துவருகிறது. 'விதிவழியே', 'வாழ்க் கைப் புயல்', 'சிப்பாய் ஹிருதயம்', 'சாம்பார் சாதம்' 'நமஸ்காரம்', 'ஆசைவலை' முதலியன இவரது 'ஆல்ரவுண்ட்' திறமைக்குச் சில உதார ணங்கள். 'விதிவழியே' என்ற நவீனம் முன்னர் தமிழ்வளர்ச்சிக் கழகத்தாரின் பாராட்டுதலைப் பெற்றது.

****

[தண்டோரா "இதனல் சகலமான" என்றபடியே மறைகிருன்]

த: அய்யைய்யோ, சீனியம்மா உந் தலையிலே இப்படியா எழுதியிருக்குது !...(அழுகை)

சீ: ஐயோ அம்மா...(தாயைக் கட்டிக் கண்ணீர் சிந்தி) அப்பா நீங்களாவது மருமகனைக் கவனியுங்க...

நல்: (பணிவாக) எம் மாப்புள்ளை, நீங்க பங்காருவைப் பார்த்தீர்களா?

மா: (அலட்சியச் சிரிப்பு) இப்படி ஒரு 'டாங்'குத்து (மாமனுருக்கு) ஒரு பவலா போட்டு இப்படி ஒரு காலடி (மாமனுருச்கு வைக்கிருன்) கொடுத்தா...

நல்: அட அட...இது என்ன மாப்புள்ளே, நம்மளை நெளிசல் எடுக்கிறீங்களே! விடுங்க விடுங்க.

த: எம்மா சீனி, உங்கப்பாவையும் உன் புருசனையும் விலக்கு...

[சீனியம்மா குஸ்தியை விலக்குகிருள்]

சீ: விடுங்க, விடுங்க...

நல்: நம்மையே குத்திவிட்டீரே ஐயா...

மா: (திடுக்கிட்டு) பாருங்க உங்க மேலயா? குஸ்தியின்னு சொன்னதும் பங்காரு பயில்வான் ஞாபகம் வந்திட்டுது. விட்டேன் ஒரு குத்து (மீண்டும் மாமனுருக்கு)

த: அட பாவி மவனே, நாலு குத்து இருக்குமே...

நல்: நாலா, தங்கம்? சரி ஆறு குத்து விட்டாரு மருமகன்! ஆமா. நீங்க கேட்டிங்களா?

மா: எதை?

நல்: டண் டண் டடடண்டம்...

த: பயில்வான் பங்காருகிட்ட இவரு ஜம்பம் சாயாது; வீண எலும்பை நொறுக்கிச் சாகாம வழியா இருக்கச்சொல்லு சீனி.

மா: அத்தை! நான் அடிக்கப் போறேன் ரூபாய் ஆயிரம்!.

நல்: வே, மாப்புள்ளை! பெருமாள் கோவில் யானைக்கு நம்ம பங்காருவைக் கண்டாலே நடுக்கம்...

மா: போங்க மாமா....., யானை நம்ம கிட்டே பூனை...



த: அது நிஜந்தான் சீனியம்மா. போனமாசம் பங்காரு பயில்வான் கர்லாக் கட்டையை பெருமாள் கோவில் யானை தூக்கப்போக, தும்பிக்கை சளுக்கு விழுந்திட்டுது...

சீ: அப்படியா, அம்மா... (பயம்) அப்படிப்பட்ட பயில்வான் கிட்ட இவரு பாடு என்னுகும்?...

நல்: அப்பளமா ஆக்கிப்போடுவான் பங்காரு...

மா: அதைத்தான் நானும் பார்க்கப்போறேன். ஒரு வாரத்திலே இங்கேபோய் ஆயிரத்தோடு வருவேன்...ஆயிரம் பாருங்க.

த: வேண்டாமுன்னு சொல்லு, சீனியம்மா. எலும்புதான் பதினுயிரம் ஆகும்...

நல்: மாப்புள்ளை, நீங்க செய்றது முட்டாள்தனம். சண்டைக்கு நிற்க வேண்டாம்...

சீ: ஆமா, வேண்டாம்...

மா: நிற்கத்தான் பாறேன்!

த: எம் புள்ளை கதி என்னுகுமோ?

[மாடசாமி போய்விடுகிருன்]

சீ: இந்தாங்க...

நல்: போகட்டும் சீனியம்மா! உம் புருசன் தன்னை இருப்புலக்கையா நினைச்சுருக்கு.

சீ: இவரு குஸ்திக்கு நின்னு என்னுகும்?

த: இந்தாங்க சீனியம்மா இப்பாவே...என்னமாவது புத்தி சொல்லி பங்காருவைத் தடுத்துடுங்க.

நல்: பங்காரு குஸ்திக்கு நின்னு! வாபீஸ் வாங்கமாட்டானே...

த: என்ன செய்வீர்களோ தெரியாது...மக பொளைக்கணும்...

சீ : (அழுகை) அம்மா என் வாழ்வெல்லாம் ஒரு வாரந்தானா?

நல் : நல்லாத்தான் அழுதே போம்மா! நாங்க இருக்கிறபோது மாடசாமியை மடசாமி ஆக்கிடுவோமா?...நானும் வர்றேன்.

[போகிறார் நல்லசாமி. ஆறுதலாக மகளுக்குத் தலையைக் கோதுகிறாள் தாய் தங்கம்மா]

காட்சி 3

[அதே வீடு. காலை நேரம். குண்டுச்சாமி வருகை. எல்லோரும் வீட்டுக்குள் இருக்கிறார்கள். சிஷ்யன் கத்துகிறான்]

குண்டு : யாரம்மா, வீட்டுக்குள்ளே!

சீனி : (எட்டிப்பார்த்து நடுநடுங்கி) ஐயோ அம்மா, அம்மா...காட்டு ஆனை.

கு: இந்தஅம்மா, நம்மளேக்கண்டே பயப்படுறீங்களே! நம்ம உஸ்தாத் பங்காரு வந்தா...

சீ : உன்னைவிட பெரியவரா பங்காரு...

த : யாரப்பா நீ? (கேட்டுக் கொண்டே வாசலுக்கு வருகிறாள்) யாரைப் பார்க்கணும்?

கு : இதுதானா நல்லச்சாமி வீடு.

[வெளியே இருந்து நல்லச்சாமி வருகிறார்]

நல் : ஓகோ, நீயா! வாப்பா, நான் கடைக்குப் போயிருந்தேன். உக்கார் கட்டிலிலே...

கு : எங்க உஸ்தாத் அனுப்பினர்.

சீ : அப்பா பயமா இருக்குது, இவரைப் பார்த்தாலே!





கு : வாங்க புல்தடுக்கி பயில்வான். நீங்களா நம்ம உஸ்தாத், சிம்மசிங்க மத்கஜ பயில்வான்...

[இப்போதுதான் மாடசாமி உட்பக்கமிருந்து வருகிறான்]

மா : நான் நிற்பேண்டா, பாரு, இன்னும் ஆறே நாள்...

நல் : மாப்புள்ளே, நீங்க மடசாமியா ஆயிப் போய்ட்டீங்க? நான் போய்...

மா : எனக்குப் பதிலா நீங்க குஸ்திக்கு நிற்கவா? (சிரிப்பு) வேண்டாம், மாமா...

நல் : இல்லே மாப்புள்ளே, நான் போய்...

கு : (சிரிக்கிறான்) இது பூசனிப் பழம்...டபீர்ன்னு வெடிக்கும்!

நல் : நானாவது, பங்காருவோடே நிற்கவாவது! நீங்களும் நிற்கவேண்டாம்! நீங்க தோத்ததாக வைச்சுக்கிடுங்கன்னு சொல்லி...

மா : நானாவது தோற்பதாவது, விட்டேன்னா?

சீ : நீங்க சும்மாயிருங்க! பங்காரு மூச்சுவிட்டாலே புயல்காத்து மாதிரி சுருளுவீங்க...

மா : போ புள்ளே...அய்யாவைப் பாரு...

கு : (ஒரு உதை வைக்கிறேன்) இது சும்மா தமாஷாத் தட்டிடேன் மாடசாமி...

நல் : இந்தாப்பா குண்டுச்சாமி, சும்மா போய்ச் சேரு! எங்க மருமகப் புள்ளே அறியாத்தனமாச் சொல்லிவிட்டுது. அது குஸ்திக்கு நிற்கலே...

கு : நிற்கலேயானா? பந்தயம்.

நல் : உங்கள் வஸ்தாத்திடம் சொல்லியிருந்தேனே...

கு: சொன்னபடி தொகையை எண்ணுங்க. அதை வாங்கத்தான் அனுப்பினுர் பங்காரு.

நல்: (மடியிலிருந்த நோட்டுகளை எடுத்துக்கொடுத்து) சரியா ஆயிரம் இருக்குது. பாரு குண்டுச்சாமி...

த: இந்தப் பிள்ளையாண்டானுக்குப் பத்துரூபா சேர்த்துக் கொடுங்க. கோவத்திலே மருமவப்புள்ளையை அடிக்காம இருக்க ..

கு: (பெற்றுக்கொண்டு) குஸ்தியில்லாமலே, பணம் கெலிப்பு! பார்த்தியா அப்பேன், மாடசாமி...

மா: (சிரிக்கிருன்)

நல்: உம் புத்திக்குச் சிரிப்பா?

மா: மாமா கெலிப்புத்தான், அதனுலே சிரிச்சேன்.

நல்: நல்லவேளை மாப்புள்ளே, நீங்க பிழைச்சீங்க...எம் பணம் ஆயிரத்தைக் கொடுத்து மீட்டினேன்.

[குண்டுச்சாமி பணத்தை மாடசாமியிடம் கொடுக்கிருன். வீட்டுக்குள் நின்ற, சீனியம்மா தன் புருஷன் மாடசாமிபக்கம் ஒதுங்கி வருகிருள்]

மா: நான் மட்டுமா மாமா பிழைச்சேன். எம் பணமும் பிழைச்சுது பாருங்க...

த: என்னுது, என்னுது?

நல்: டேய், டேய் விடுடா? என்னிடமிருந்து பழையபாக்கியை பிரிக்கவா இப்படி வேஷம்? (கம்பை எடுக்கிருர்)பாரு உன்னை...உம்...விட்டேனு பாரு...

மா: குண்டுச்சாமி நம்ம ஒப்பந்தப்படி இந்தா அம்பது ரூபாய்! எங்கம்மாவைக் கவனி...உம்...

கு: (கையை ஓங்குகிருன்) நிறுத்தய்யா.

[வீறுகொண்டு நிற்கிருர் நல்லசாமி]

மா: இந்தா சீனியம்மா, என் பக்கமா வந்திடு. மாமா, நாலஞ்சு வருஷமா எம் பணத்தை வாங்கிக் கொண்டு நாமம்போடபாத்திங்களே!

த: அப்படியா சங்கதி... எடுத்தாரேன் அருவாள்மணையை...

[உள்ளே போகிருள்]

தும்பிகள் காதல்
இசைக்கட்டும்—பிறைத்
தோணியில் நிலவு
மிதக்கட்டும்.
அம்புவி மீதினில்
நாமிருவர் — நிறை
அன்பின் வெம்மையில்
உருகிடுவோம்!

டி. வி. சுவாமிநாதன்

கு: நிறுத்தம்மா! என்னமாவது கலாட்டா செய்தா வம்பு வளர்ப்பேன்!

த: எண்டி சீனி, நீயும் இந்த நாடகத்துக்குக் கூட்டா?

சீ: ஆமாம்மா, பெத்த மகவீட்டுப் பணத்தையே மோசம் செய்யலாமா, நீங்க...

மா: அட, வா புள்ளே சீனி! பயில்வான் துணையிலே வெளியே போயிடலாம்...வா... உங்கய்யா அடிக்க வந்திடுவார்.

[சீனியை இழுத்துக்கொண்டு குண்டுச்சாமியின் அருகே பதுங்குகிருர்கள்]

த: பாத்தியா, நாம எமாத்தின பணத்தைத் திரும்பி வாங்க வழி செய்ததைப் பார்த்தியா...?

நல்: உம் மகளும் ஒத்துக்கையா இருந்திருக்காளே...

த: அன்னிக்கு நீங்க மோசம் பண்ணினபோது நானும் அப்படித் தானே ஒத்துக்கையா...

[குண்டு திரும்பிப் பார்க்கிருன். இருவரும் பயம் அடைதல்)

மா: (தொலைவில்) தாயைப்போல பிள்ளை! வாராமல் இருந்த பணம் வந்ததை இந்த வருஷப் பொங்கற் படியா வைச்சுக்காலம்.

சீ: (சிரிப்பு)...அதுவும் சரிதான்!

(திரை) ★

தமிழ்ப் பாடல்

பெரி. சிவனடியான்.

தலைவன் : முட்டைவிட்டு வெளிவந்த புறவின் குஞ்சா?
முளைத்துவரும் இளந்தளிரா? மொட்டா? நீ தான்

தலைவி : பட்டுவிட்ட பாக்காஉம் விழிகள், இல்லை
பார்வையிலே பழுதெதுவும் நேர்ந்ததுண்டா?

தலைவன் : கட்டவிழ்ந்த மலைப்பழமா? அன்றி மோதும்
கடலலையா? இளம்பாம்பா? கரும்பின் நேரா?

தலைவி : விட்டெறிந்த உவமையெலாம் வீண்வீண் ஒப்பேன்
விலகிஇரும் விரைந்தெழுந்து வீடு செல்லும்.

தலைவன் : சிட்டுடலா? திருவிளக்கா? தெரிந்து சொல்லும்
செயலிழந்தேன், ஒருவேளை தெங்கின் கீற்று?

தலைவி: வெட்டரிவாள் மேற்புருவக் கண்ணி ரண்டும்
வேர்செத்துப் போயிற்று? வீட்டை நோக்கும்.

தலைவன் : கொட்டாத பொன்வண்டா? குளிர்ந்த நீரா?
குறும்பு செயும் குழவியதா? கொம்புத்தேனா?

தலைவி : "சுட்டெடுத்த செங்கல்லா" என்றுங் கூடச்
சொல்லிடுவீர் என்னுருவை வெட்கம்! வெட்கம்!

தலைவன் : பட்டுடலைச் செங்கலெனச் சொல்ல என்ன!
பைத்தியமா? பனங்கள்ளின் பண்பா கொண்
டேன்?

தலைவி : கொட்டுகிற கைநோகு தென்றல் மேலும்
குனிகின்றீர்! கொஞ்சுகிறீர்! குழைகின்றீரே!

தலைவன் : கட்டழகே! நீ விரும்பும் சொல்தான் என்ன?
கருங்குயிலா? களிமயிலா? காட்டு மானா?

தலைவி : கிட்டரிய தமிழ்ப்பாடல் என்றால் போதும்
கிறுக்காவேன், கிளர்ந்தெழுவேன், கேட்பேன்
முத்தம்!

ரோஜாத்தி!

ஜெகசிற்பியன்

வைர நிறப் பனித் துளிகளை இதழ்ச் சிரத்தில் சுமந்து நிற்கும் ஏ, ரோஜாத்தியே!

உனக்காக நான் அழுகிறேன்! என் ஒட்டி உலர்ந்த விழிவளையக் குழியிலே யிருந்து கசியும் கண்ணீரை வழித்து உனக்குக் காணிக்கையாக்குகிறேன்!

ஏன் தெரியுமா?

நீ பரிசுத்தமானவள்; உன் இதழ் பரிசுத்தமானது; உன் நிறம் பரிசுத்தமானது; உன் மணம் பரிசுத்தமானது, உன் முழுத் தோற்றமே பரிசுத்தமானது! அதனால்தான் உனக்காக அழுகிறேன்; என் கண்ணீரைக் காணிக்கையாகத் தருகிறேன்!

'பரிசுத்தத்தைக் கண்டு மனிதன் அழத்தான் வேண்டுமா?' என நீ கேட்டு, என்னைப் பார்த்துச் சிரிப்பது எனக்கு நன்றாகக் கேட்கிறது. ஆயினும் உன் கும்மாளச் சிரிப்பைக் கேட்டு நான் குழைந்து குழைந்து அழுகிறேன்!

என் வேதனைப் பொருமல் உனக்கு விளங்கவில்லையா? சொல்கிறேன், கேள்.

எனக்குப் புத்தி தெரிந்து என்றுமே நான் அழுததில்லை— அதாவது இன்றுவரை! நான் அழவேண்டிய சந்தர்ப்பத்தை இந்த உலகம் எனக்கு ஏற்படுத்தி வைக்கவே இல்லை! விசித்திரமாக இருக்கிறதா இந்த எனது கூற்று? விளக்குகிறேன், கேள்.

யாரோ ஒரு ஆணும் பெண்ணும், உணர்ச்சிப் புயலால் ஒன்றுபட்டு, என்னை இந்த உலகத்தில் உற்பத்தி செய்து போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்! அந்த விநாடி நேரம் முதல் என் அறிவு வேலைசெய்ய ஆரம்பித்த நாள்வரை, அழுதேனே என்பது எனக்குத் தெரியாது! காரணம், அதை எனக்குச் சொல்ல, அவ்விரு உணர்ச்சிப் புயல்களும், இப்போது இந்த உலகத்தில் இல்லை!

என்னுடன் பிறந்தவர்களென உறவுமுறை கூறிக்கொண்டு சில அண்ணனும் தம்பிகளும் அக்காவும், தங்கைகளும் வந்தார்கள். அந்த உறவின்பேரில், அவர்கள் எனக்குக் கடுகத்தனை நன்மையும் செய்யவில்லை. அதற்கு மாறாக, தீங்கும் தீவினையுமே தேடிவைத்தார்கள்! அவையெல்லாம் கண்டு, அவற்றையெல்லாம் அனுபவித்த நான் அழ முயன்றேன்; அழுகை வரவில்லை! சிரித்தேன்; விலாவெலும்பு முறியும் வண்ணம் சிரித்தேன்!

நண்பர்கள் என்றும் நட்புறவினர் என்றும் சிலர் எனக்கு வாய்த்தார்கள். அவர்கள் மூலமாவது அழுது பார்க்கலாம் என ஆசித்தேன். அது நடக்கவில்லை. அவர்கள் முன்னவர்களைவிட முழு வீரர்களாய் இருந்தார்கள்! ஆதலால் என்னால் அழ முடியவில்லை; சிரித்தேன்; பல்லுதிர்ந்து போகும் வண்ணம் சிரித்தேன்!

கலைகளைக் கற்றுத் தெளிந்தாலாவது, கண்ணீர்விட்டுப் பார்க்கலாமே என, அவற்றைக் குற்றமறப் பயின்று தேறி

****

நண்பர் ஜெகசிற்பியன் அவர்களின் சிந்தனைப்பேறு புகழுக்குரியது; போற்றப்படுகிறது. 'சிரஞ்சீவி' ஆசிரியரின் கற்பனைக் கடலினின்றும் பிறந்த கடல் முத்துக்களாக, வாழும் காதலையும், காதல்மாயை விளக்கத்தையும், அடித்தளமாகக்கொண்டு ஒற்றை ரோஜாக்களாகப் பல சிறு கதைகள், பல குறு நாவல்கள் அமிர்தமென ஒளி சிந்திச் சிரிக்கின்றன. 'நீல ரோஜா' 'உறவு முள்' இவரின் சிறந்த படைப்புக்கள்!

****

னேன். அந்தக் கலைகளும் என் கனவாசையை நினைவாசையாக ஆக்கவில்லை! காரணம், அக் கலைகள் எனக்குப் பட்டினியையும், பசியையும், எதிர்ப்பையும், தூற்றலையும், அவமதிப்பையுமே ஏற்படுத்தி வைத்தன! ஆதலால், அவற்றை அனுபவித்த எனக்கு அழுகை வரவில்லை. சிரித்தேன்; குடல் அறுந்து போகும் வண்ணம் சிரித்தேன்!

அரசியல் தலைவனாகி, ஆக்க வேலை புரிந்து, அதன்வாயிலாக அழுது பார்க்கலாமே என முனைந்தேன். அந்த அரசியல், என் நேர்மைத் தொண்டைக் கண்டு நெற்றி சுருங்கச் சிரித்து கல்லடியும் சொல்லடியும் தந்து, காராக்கிரகத்தில் தள்ளி, களேபரம் செய்தது! அவற்றையெல்லாம்அனுபவித்த எனக்கு அழுகை எப்படி வரும்? சிரித்தேன்; சிரம் வெடித்துப்போகும் வண்ணம் சிரித்தேன்!

மதங்களைப் பயின்று, அவற்றின் மாபெரும் கடவுளர்களைப் பூஜித்து, அந்தப் பூஜா புண்ணியத்திலாவது சிறிது நேரம் புலம்பிப் பார்க்கலாமே என முனைந்தேன். ஆனால் அந்தக் கடவுளர்கள் என்னிடம் மனிதர்களுக்கும் மிகக் கீழான முறையில் தான் நடந்துகொண்டார்கள்! என் நேர்மையான பூஜை, அவர்களின் செவிகளை நிமிர்த்தவில்லை; என் பக்தித் தோற்றம்,அவர்களின் பார்வையைத் திருப்பவில்லை; என் உண்மை வேண்டுதல், அவர்களின் உள்ளத்தில் பாயவில்லை! ஆதலால், இந்த அவமான வேதனைகளை அனுபவித்த எனக்கு அழுகை வரவில்லை! சிரித்தேன்;நெஞ்சீரல் நெளிந்து போகும் வண்ணம் சிரித்தேன்!

சிரித்தேன், சிரித்தேன்,சிரித்துக்கொண்டே இருக்கிறேன்! இந்தத் தொண்ணூற்றொன்பது வயதுவரை சிரித்தவாறே இருக்கிறேன்! ஒரு நாளில், அந்த ஒரு நாளின் ஒருமணி நேரத்தில்,அந்த ஒருமணி நேரத்தின் ஒரு விநாடியில்—அழுது பார்க்கலாமென ஆற்றாத ஆசை கொண்டேன்— கொள்கிறேன்; அது முடியவில்லை!

இன்னும் சிறிது நேரத்தில் என் உயிர் எனும் மலரை, 'மளுக்' கென முறித்துக்கொண்டு போகப்போகிறான் காலன்! அவனின் அந்தக் கர்ண கடூரச் செயலைக் காணும் சமயத்தில் கூட எனக்கு அழுகை வராது என்றே கருதுகிறேன்! காரணம், வேதனையைக் கண்டு விம்ம எனக்குத் தெரிவதில்லை- முடிவதில்லை! சிரிக்கத்தான் தெரியும்—முடியும்! சிரிக்கிறேன்; சிரிப்பேன்!

அழுகையற்ற இந்த உலகத்தில் நான் ஏன் பிறந்தேன்? நான் அழக் கொடுத்துவைக்கவில்லையே! இன்றுவரை நான் அழவில்லையே! அழுது பார்க்

காமலே நான் சாகவேண்டுமா? நான் ஏன் அழவில்லை?

அதற்கு ஒரு சில வார்த்தைகளில், ஒரே ஒரு காரணந்தான் இருக்கிறது—அந்தக் காரணம்?

இந்தஉலகம் தூய்மையற்றுத் துருவேறி இருக்கிறது! அதன் பரிசுத்தத்தனம் பறந்து பல லட்ச ஆண்டுகளாகிவிட்டன! ஆதலால்,இந்தத்தூய்மையற்ற உலகம், என்னைத் துக்கப்படவைக்க இயலவில்லை! ஆனந்தமாக என்னை அழ வைக்க அதனல் முடியவில்லை!

அதனல்தான் நான் சிரித்தேன்; சிரிக்கிறேன்!— அழவில்லை!

இந்த என் பரிதாப நிலையைக் கண்டு மனமிரங்க உன் ஒருத்தியால்தான் முடிந்தது; அது உன் ஒருத்தியால்தான் முடியும்!

ஏன்?

நீ தூய்மையானவள்; உன் இதழ் தூய்மையானது; உன் நிறம் தூய்மையானது; உன் மணம் தூய்மையானது; உன் முழு உருவே தூய்மையானது! சென்ற தொண்ணூற்றென்பது ஆண்டுகளாக இந்தத் தூய்மையற்ற உலகில் வாழ்ந்த நான், இன்றுதான் தூய்மையைக் கண்டேன்! அதுவும் அதை உன்னிடம் தான் காண்கிறேன்!

ஆதலால்—

இதோ, அழுகிறேன்! முதல் முறையாக அழுகிறேன்! சாகிறேன்!!

பொங்கல் தினத்தன்று
உங்கள்
குடும்பத் தேவைக்கு
கோ–ஆப் டெக்ஸ்
கைத்தறி
ஜவுளிகளையே
வாங்குங்கள்
★

சென்னை மாகாணம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.
48-1, ராயப்பேட்டை ஹைரோட், மயிலாப்பூர், சென்னை-4.

சிந்தனை தரும் எழுத்துக்களுக்கு இலக்கியச் சந்தையில் என்றுமே நல்ல வரவேற்பு உண்டு. பி. எல். சாமியின் எழுத்துக்கள் அத்தகையன. ஆராய்ச்சிக் கட்டுரை, சிறுகதை, நாடகம் முதலிய பல துறைகளில் புகழ்பெற்ற ஆசிரியர். 'கள்ளும் காமமும்' தெவிட்டாத அமுதம்!

கள்ளும் காமமும்

பி.எல்.சாமி

'நவில்தொறும் நூல் நயம்போல' என்று வள்ளுவர் கூறியபடி வள்ளுவர் குறளும் படிக்கப்படிக்கக் காலம், இடம், சூழ்நிலைக்கேற்ப புதுப்புது நயங்களை நல்குகிறது. எடுத்துக் கொண்ட இரு பொருட்களைப் பொருத்தியும் பிரித்தும், ஒற்றுமைப் படுத்தியும், வேற்றுமைப் படுத்தியும் காட்டுவது வள்ளுவர் குறளின் ஒரு சிறந்த நயமாகும். இம்முறையாகக் கள்ளையும், காமத்தையும் வள்ளுவர் பொருத்தியும் பிரித்தும்காட்டுவதைக் கவனிப்போம்.

கள்ளும் காமமும்:- கள் அல்லது மதுவுக்குள்ள முக்கிய குணங்களில் ஒன்று குடித்துப் போதையேற யேற அதன்மேல் மேலும் மேலும் ஆசை உண்டாகும்படி செய்தல். வள்ளுவர் 'களித்தொறும் கள்ளுண்டல்' என்று அதைப்பற்றிக் கூறுகிறார். இக்குணத்தை ஒரு ஜப்பானியப் பழமொழிமிகவும் அழகாகக் கூறுகிறது. ,முதலில் மனிதன் கள் குடிக்கிறான். அடுத்து கள்ளே தான்குடிக்கக் கள் வேண்டுகின்றது. இறுதியில் கள்ளே மனிதனைக் குடித்துவிடுகிறது' (*First the man takes a drink. Then drink takes a drink. Lastly drink takes the man.*)

குடித்தவனிடமிருக்கும் ரகசியங்களை வெளிப்படுத்துவது மதுவின் மற்றொருதன்மை. கள் உள்ளே சென்றதும் ரகசியங்கள் வெளியே வந்துவிடும். அதனால்தான் 'சாராயம் கொடுத்துப் பூராயம் வாங்கவேண்டும்' என்று கூறுவர். 'களித்தோனவி நயங் கழறுங்காலை யொளித்தவை யொளியான்' என்ற சிலப்பதிகார உரையில் காணும் செய்யுள் வரியும் இதையே கூறுகின்றது.

"உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள் ஒற்றிக் கண்சாய் பவர்"

என்ற குறளில் வள்ளுவர் அழகாக இத்தன்மையை விளக்கியுள்ளார். "இரகசியங்களைத் தவிர நெஞ்சில் உள்ளதெல்லாம் வைத்திருக்கும் திரவமே மது" என்று ஒரு அயர்லாந்து பழமொழி நகைச் சுவையொடு கூறும். இப்படி நெஞ்சில் உள்ளதெல்லாம் வெளியாகி, சிரிப்புக்கிடமானாலும் 'ஈன்றாள்முகத்தேயும்' இழிவானாலும், இக் கள்ளின்மேல் ஆசையென்னமோ குறைவதில்லை. இதைக் கள்ளுக்குள்ள மூன்றாம் தன்மையாகக் கூறலாம்.

இத்தனை குணங்களும் காதலுக்கும் உண்டு என்று வள்ளுவர் காட்டுகிறார். காதல் காதலர் சந்திப்பால் பெருகுகின்றதே ஒழியக் குறைவதில்லை. காமம் மிகுந்த வழி காதல் 'மறையிறந்து மன்றுபடும்.' ஊரார் காதலரைப்பற்றிப் பல முறையாகப் பேசப் பேச நெருப்பில் நெய்விட்டு அவிக்க முயன்றது போல காதல் மிகுந்துகொண்டே செல்கிறது. சிரிப்புக்கிடமாகி, பலருந் துன்பந்தரினும் காதல் வளர்ந்துகொண்டே செல்கின்றது. காமத்துக்கும் கள்ளுக்கும் காணப்படும் இவ் வொற்றுமைகளை வள்ளுவர் அழகாக இரு குறள்களில் கூறுகிறார்.

"களிதொறும் கள்ளுண்டல் வேட்
[டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது".

"இளித்தக்க இன்னா செயினும் களித்
[தார்க்குக்
கள்ளற்றே கள்வ நின் மார்பு"

சூதாடுதலும் இக் கள்ளுண்ணல் போன்றதுதான். பொருளை இழக்க இழக்க, சூதாட்டத்தின்மேல் சூதாடிக்கு ஆசை குறைவதில்லை. இழிவு, துன்பம் ஆகியவைகளைப் பொருட்படுத்துவதில்லை.

"இழத்தொறூஉம் காதலிக்கும் சூதே
[போல் துன்பம்
உழத்தொறூம் காதற் றுயிர்"

துன்பத்தில் உழய உழய, மனிதனுக்கு உயிர்மேல் பற்றுதல் குறைவதில்லை. கழுவேற நிற்கும் குற்றவாளிக்குக் கூட உயிர்மேல் நம்பிக்கை, ஆசை கடைசி வினாடிவரையில் போவதில்லை. இதையே உள நூலார் 'உயிர்ப்பற்று' (*Life instinct*) என்பர்.

அரண்—முரண் என்பதே வள்ளுவருடைய போக்கு. ஒற்றுமை காட்டிய போக்கு. ஒற்றுமை காட்டியவர் வேற்றுமையும் காட்டி ஒன்றை உயர்த்திப் பேசுகிறார். தெனாலி ராமன் குதிரைக்குத் தண்ணீர் காட்டியதுபோல் 'இக் கள்ளுத் தண்ணீரைக்' காட்டினால், கண்டு மகிழும் குடிகாரர்களில்லை. கள்ளை நினைத்துக் களிப்புப் பெறுவோரும் கிடையாது. ஆனால் காதலுக்கு இவ்விரு தன்மையும் உண்டு. கண்டும் நினைத்தும் மகிழ்தல் காதலில் செம்பாகமாகும்.

"உள்ளக் களித்தலும் காண மகிழ்த
[லும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு"

"உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்
[தலால்
கள்ளினும் காமம் இனிது"

'ஓமியோபதி' என்பது மேலை வைத்திய முறைகளில் ஒன்று. 'நஞ்சினால் நஞ்சை முறித்தல்,' 'முள்ளினால் முள்ளெடுத்தல்' என்று சொல்வது போல் நோய்க்குக் காரணமான பொருளையே நோயை நீக்கப் பயன்படுத்துவது இம்முறை. வள்ளுவர் இந்த முறையையே காதல்நோய்க்கு மிகச் சிறந்த மருத்துவமுறை என்று கருதுகிறார்.

"பிணிக்கு மருந்து பிறமன் அணி
[யிழை
தன்நோய்க்குந் தானே மருந்து"

"இருநோக் கிவளுண்கண் உள்ள
[தொருநோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து"

ஒரு கண் நோய் தந்தாலும் மறு கண் மருந்து தரும் என்று பெண்டிர் கண்ணைப்பற்றிக் கூறுகிறார். அவள் தந்த நோய்க்கு அவளே மருந்து என்றும் கூறுகிறார்.

இதிலும் கள்ளுக்கும் காதலுக்கும் ஒற்றுமை உண்டென்று சங்கப்புலவர் ஒருவர் கூறுகிறார். 'தான் செய் நோய்க்குத் தான் மருந்தாகிய தேனிமிர் நறவின் தேறல் போல' அவள் செய்த நோய்க்கு அவளே மருந்து என்கிறார்.

காதலும் தீயும் : தீயையும் அரசனையும் வள்ளுவர் ஓரிடத்தில் ஒற்றுமைப்படுத்திக் காட்டியிருக்கிறார். நெருங்கினால் சுடும், நீங்கினால் குளிரும் தீ போன்றவன் அரசன் என்கிறார். ஆதலின் அகல இருத்தலும் கூடாது. அருகே பழகுதலும் ஆபத்து என்று வள்ளுவர் கூறுகிறார்.

'காமத்தீ' என்று காமத்தையும் தீயையும் ஒன்றாகப் பேசுவது வழக்கமானாலும், காதலுக்கும் நெருப்பிற்கும் முக்கிய வேற்றுமை உண்டு என்பதை வள்ளுவர் காட்டுகின்றார். தொட்டால் சுடுவது தீ. ஆனால் காதல் தீ விட்டால் சுடும் என்று வள்ளுவர் கூறுகிறார். ஆனால் இக் காதல் தீ மிகவும் பொல்லாதது.

"தொடிற்சுடின் அல்லது காமநோய் [காமநோய்போல
விடிற்சுடின் ஆற்றுமோ தீ"
"நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் [தண்ணெனும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்"

இத்தீயை எங்கிருந்து பெற்றாள் இப்பெண் என்று வியப்பொடு கேட்கிறார். பிறிதோரிடத்தில் தீயினால் வந்த வடுவுக்கும் உள்ள வேற்றுமையை வள்ளுவர் கூறுவதைக் காண்க.

இக் காதல் தீயையே வள்ளுவர் "மலரினும் மெல்லிது' என்று கூறுகிறார். காதல் உணர்வு ஒரு மெல்லிய நுட்பமான மலர். தொட்டால் கூடக் கசங்கிவிடும், அவ்வளவு மெல்லியது என்று பால்சக் கூறுகின்றார். (Love is like a delicate flower. It crumbles at the slightest touch)

இக் காதலை ஆராய்ந்து அறிந்தவர் சிலரே. அதன்'செவ்வி தலைப்படுவார்' மிக மிகச் சிலரே. இந்த உண்மையை வள்ளுவர் காமத்துப்பாலில் நயமாக எடுத்துக்காட்டுகிறார். புலவி, ஊடல் நுணுக்கம், ஊடல் உவகை ஆகிய இயல்கள் காதலைப்பற்றி அறிய உதவும் நுண்ணிய அளவுகோலாகும். 'பழகப்பழகப்பாலும்புளிக்கும்'என்ற பழமொழி ஒரு ஆழ்ந்த உண்மையை விளக்குகின்றது. உயிர்கூட ஒரு சிலருக்குப் பழக்கத்தால் புளித்துவிடுகின்றது. காதல்மட்டும் இவ் வுண்மைக்கு விலக்கல்ல. காதல் வாழ்வில் 'காலம்' 'பழக்கம்' ஆகியவை செய்யும் பெருங் கேடுகளை வெல்லுவதே காதலின் செவ்வி தலைப்படுவார் செயலாகும். இம்முறையாக 'பழக்கம்' 'காலம்' ஆகியவைகளால் அசைக்க முடியாத

"கேசரியின்"

மூன்று பிரசித்த மருந்துகள்

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

சங்காதோஷம், கீல் வாய்வு, தூக்கமின்மை, அஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றைக் குணப்படுத்தும்.

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்தசோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண்பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

அர்க்கா

சிறந்த ஜ்வர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட் மலேரியா முதலான ஜ்வரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

கேசரி குடீரம் லிமிடெட்

ராயப்பேட்டை, மதராஸ்–14

மனிதனுடைய விருப்பம் என்பது தேவலோகத்துக் கற்பகக் கொடி அல்ல; பாலைவனத்திலே தென்படும் பசுமை அது.

—காண்டேகர்

காதல் வாழ்வைப் பெற்று இன்புற்றவர் மிகச் சிலரே. காதற்கலையைக் கற்றுத் துறைபோகிய கிளியோபத்ரா அல்லது மாதவிபோன்று சிலர் இலக்கியங்களில் வருகின்றனர். காலம், பழக்கம் ஆகியவைகள் காதல் வாழ்வைப் புளிக்காதிருக்கச் செய்வதற்கு ஊடல், புலவி, துனி முதலிய பல வழிகளை வள்ளுவர் காட்டுகின்றார். ஊடல் முதலியவற்றைக் கற்றுக் கரைகண்டவள் கிளியோபத்ரா என்பதையே செகப்பிரியர் தனது நாடகத்தில் பல இடங்களில் குறிப்பிடுகிறார். 'கருக்காயும் கனியும்' அதுவே என்று வள்ளுவர் கூறுவதைக் கவனிக்கவும். ஊடல் முதலியவைகளை உணராதவருடைய காதல் பிஞ்சிலே பழுத்த பழமாகிச் சுவையற்றதாகிவிடுகின்றது. உலகில் பாதிக்குப்பாதி மணந்தோரின் வாழ்க்கை துன்பியலாக (*Tragedy*) இருப்பதற்கு இதுதான் காரணம். மாதவி இந்த இரகசியத்தை நன்கு அறிந்தவள். ஆடல் பாடல் முதலிய நுண்கலைகளில் ஈடுபாடுள்ள நாகரிகக் கோவலனைத் திருப்திப்படுத்த மாதவிக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. இதில் கண்ணகி தோற்றாள். இதுவே கண்ணகியின் அவல வாழ்வுக்கு அடிப்படைக் காரணமாகும். அதனால்தான் மாதவியை எவரும் குறை கூற முடிவதில்லை. 'டடுக்கையில் தாசியைப்போல மனைவி நடக்க வேண்டும்' என்று காமசூத்திரம் முதல் மேரிஸ்டோப்ஸ் வரை வற்புறுத்துகிறார்கள். இக் கருத்துக்களையெல்லாம் சுருக்கொண்டுள்ள மூன்று குறள்களைக் காமத்துப் பாலில் காண்கிறோம்.

ஆராய ஆராய அறியமுடியா மறைபொருளாகக் காதலி இருக்கவேண்டும். ஒருவன் ஆசைபபடும் ஒவ்வொன்று போலவும் அவள் திகழ வேண்டும். 'நவில்தொறும் நூல்நயம்' போல் பயில்தொறும் புத்தின்பம் ஈந்து, முற்றிலும் உணரமுடியா இன்ப அமிழ்தமாகி மகிழ்விக்க வேண்டும்.

"உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்ட
[லால் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்"

தொடுந்தோறும் உயிருக்குப் புத்தின்பம் தருதலால், உயிர்களைத் தளிர்த்தும் தளிர்த்தும் செய்துவரும் மழையாகின்றாள் என்று கூறுகிறார்.

"வேட்ட பொழுதி னவையவை
[போலுமே
தோட்டார் கதுப்பினள் தோள்"

எவைகளை விரும்பி எதிர்பார்க்கின்றோமோ, அவள் அத்தனையும் ஆகி, அவை அவையுமாகி, விரும்பிய பொழுது விருந்தாகி நிற்கின்றாள் என்று இக் குறளில் கூறுகிறார்.

அறிய அறிய, அறியாமையை உணர்த்தும் அரியநூலாய் உள்ளாள். முற்றிலும் உணரும் காலமுமில்லை. புளிக்கப்போவதுமில்லை. இதைத்தான் செகப்பிரியர் கிளியோபத்ராவைப் பற்றி வர்ணிக்கும்போது கூறுவார். "அவளைப் பழக்கம் புளிக்கவைக்காது. மாறிமாறி அவள் தரும் புத்தின்பத்தைக் காலம் கருகவைக்காது. பிற பெண்கள் சலிக்கலாம்; வெறுப்பூட்டலாம். ஆனால் அவள் எப்பொழுது முழுவதும் திருப்திப்படுத்துகிறாளோ, அப்பொழுதே மிகுந்த காதற்பசியையும் உண்டாக்குகிறாள்" என்று வெகு அழகாகக் கூறியிருக்கிறார். பட்டதும் தளிர்ப்பிக்கும் மழைநீர்போலவும், வேட்டதும் கிட்டவைக்கும் மந்திரக்கோல் போலவும், அறிய அறியாமையைக் காட்டும் அறிய நூல் போலவும் 'காதலி' திகழவேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. 'நவில்தொறும் நூல் நயம் தந்து, அறிதொறும் அறியாமையை ஊட்டும் இக் குறளே உண்மையில் பெண்ணுக்கும், காதலுக்கும் ஏற்ற ஒப்புமையாம்! ★

208419

ரெஜினா

மூட்டை பூச்சி பவுடர்

நித்திரைக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது.

உபயோகிக்கும் விதம் :—

படுக்கையைச் சுற்றிலும் ரெஜினா மூட்டைப் பூச்சி பவுடரைத் தூவ வேண்டும். ஷை பவுடரின் மணத்தினால் மூட்டைப் பூச்சி, எறும்பு, ஈ, பேன், கரப்பான் பூச்சி முதலியவைகள் மடிந்து விடுகின்றன. பவுடரின் மணத்தால் மக்களுக்குக் கெடுதல் இல்லை.

ரெஜினா

அரோ ரூட் மாவு

★ சுகாதார முறைப்படி தயாரிக்கப்படுகிறது.

★ குழந்தை முதல் வயோதிகர் வரையில அனைவருக்கும் கொடுக்கலாம்.

★ நல்ல சத்துள்ள ஆகாரம்.

தயாரிப்பவர் :—

G. பழனியப்ப முதலியார்,
மதுரை.

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :—

1 கோயமுத்தூர் சேல்ஸ் & ஏஜன்சீஸ், P. B. 536, கோயமுத்தூர்.
2 கோல்டுவின் & கோ., 50, பந்தர் தெரு, சென்னை—1.
3 சிட்டி டுபாகோ மார்ட், அவின்யூ ரோடு, பெங்களூர் சிட்டி.
4 M. A. R. S. மனுவேல் நாடார் & கோ., 34, செட்டி தெரு, கொழும்பு.

Printed and Published by PR. AL. M. N. Narayanan for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21.
Editor : K. Appadurai M. A.

அலர்ந்த மலர்போல்
புதுமையாகவும் மோகன
காந்தியுடனும் விளங்குங்கள்...

ஹமாம்

டாய்லட் ஸோப்பு
உபயோகியுங்கள்

ஹமாம் புதிய
வாசனே பொருந்தியது...
அதிக நாள் வரவும்
செய்கிறது!

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்

A TATA PRODUCT

டாடா தயாரிப்பு

TS6928